அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை

தொகுதி 4

பதிப்பாசிரியர்கள்

டாக்டர் ஆ. தசரதன்

மொ. மருதமுத்து

மூ. பரிமணன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை

தொகுதி 4

பதிப்பாசிரியர்கள்
டாக்டர் ஆ. தசரதன்
மொ. மருதமுத்து
மூ. பரிமணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Aracin̲ar Kil̲tticaic Cuvaṭikaḷ Nūlakat Tamil̲c Cuvaṭikaḷ Viḷakka Aṭṭavaṇai - Tokuti 4 (A Descriptive Catalogue of the Tamil Manuscripts in the Government Oriental Manuscripts Library, Chennai, Volume 4)
Editors	:	Dr. A. Thasarathan M. Maruthamuthu M. Parimanan
Publisher & ©	:	International Institute of Tamil Studies C.P.T. Campus, Chennai 600 113.
First Edition	:	2000
Publication No	:	357
Language	:	Tamil
Paper Used	:	18.6 kg TNPL Super Printing
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	11 points
No. of Pages	:	xxxii + 468
No. of Copies	:	1000
Price	:	Rs. 110/-
Printing	:	United Bind Graphics, 189, (101-D), Royapettah High Road, Mylapore, Luz, Chennai - 600 004.
Subject	:	Catalogue of Tamil Manuscripts

Printed and Published with the Financial Assistance from the Government of India, Ministry of Education & Culture, National Archives, Janpath, New Delhi, Vide Sanction letter F.No.31-1(99)/98 Grants dt. 31.05.1999 and copyright vests with the Director, International Institute of Tamil Studies, Chennai-113.

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழாய்வுகளில் சுவடியியல் ஆய்வும் அடங்கும். தமிழ் ஓலைச்சுவடிகளின் பெருமைகளை உலகிற்கு உணர்த்தும் வகையில் 1979 முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சுவடியியல் பட்டய வகுப்பைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. சுவடியியல் பட்டய வகுப்பு மாணவர்கள் ஆண்டு இறுதியில் நிறுவனச் சுவடியில் ஒன்றையோ அல்லது பிற சுவடி நூலகங்களிலுள்ள ஒரு சுவடியையோ பெயர்த்தெழுதி, ஆய்வு செய்து நிறுவனத்திற்கு ஆய்வேடாக வழங்கி வருகின்றனர். இவ்வாய்வு ஏடுகளில் சில இந்நிறுவன வெளியீடுகளாக வந்துள்ளன. மேலும், சுவடிகள் தொடர்பான கருத்தரங்குகளும், பயிலரங்குகளும் இந்நிறுவனத்தில் நடைபெற்று வருகின்றன.

டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகத்துடன் இணைந்து திங்கள்தோறும் சுவடியியல் கருத்தரங்கைத் தொடக்க காலத்தில் இந்நிறுவனம் நடத்திவந்தது. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்துடன் இணைந்து சுவடியியல் கருத்தரங்கினை 1997இல், இந்நிறுவனம் நடத்தியுள்ளது. 1980முதல் இந்நிறுவனம் சுவடிப் பதிப்புகளை வெளியிடத் தொடங்கியது. இதுவரை 42 சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

சுவடிகளை விளக்க அட்டவணை செய்து வெளியிடும் திட்டப்பணி இந்நிறுவனத்தில் 1983இல் தொடங்கப்பெற்றது. இத்திட்டத்தின் பயனாகத் 'தமிழ்ச் சுவடிகள் அட்டவணை' என்னும் நூல் 1983இல் இரா. நிர்மலாதேவி அவர்களாலும், **'Siddha Medical Manuscripts in Tamil'** என்ற நூல் 1989இல் வே.இரா. மாதவன் அவர்களாலும் பதிப்பிக்கப் பெற்று நிறுவனத்தில் வெளியிடப்பெற்றன. மேலும், இத்திட்டத்தின் பயனாகக் கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள், முனைவர் சு. நிர்மலாதேவி அவர்களால் அட்டவணை செய்யப் பெற்று, 'கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை (முதல் தொகுதி)' என்ற தலைப்பில் 1995இல் வெளிவந்தது.

தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரிக்கும் பணியின் தொடர்ச்சியாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணைகள் தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்குத் தில்லித் தேசிய ஆவணக்காப்பகம் 1995-96இல் ரூ. 30,000/- வழங்கியது. அதன் பயனாக,

'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை' என்ற பெயரில் மூன்று தொகுதிகள் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களால் 1998இல் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அந்நல்கையைத் தொடர்ந்து, 1996-97இல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகளை விரிவாக விளக்க அட்டவணை செய்து நூலாக அச்சிட்டு வெளியிட ரூ. 40,000/-ஐ, தில்லித் தேசிய ஆவணக் காப்பகம் வழங்கியது. அதைத் தொடர்ந்து, 1998இல் 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை'யின் முதல்தொகுதி வெளிவந்தது. இந்த அட்டவணைப் பணிகள் தொடர்ந்து நடைபெற, தில்லித் தேசிய ஆவணக் காப்பகம் 1998-99க்காக ரூ. 2,00,000-ஐ நல்கியது. அதன் பயனாக 1999இல் இவ் அட்டவணையின் இரண்டாம் தொகுதியும், அண்மையில் மூன்றாம் தொகுதியும் வெளிவந்தன. இப்பொழுது அட்டவணையின் நான்காம் தொகுதி வெளிவருகிறது. மிகவும் குறுகிய காலத்தில் விரிவாக இவ்விளக்க அட்டவணையின் நான்காம் தொகுதியைப் பதிப்பித்து வெளியிட்ட இதன் பதிப்பாசிரியர்களான முனைவர் ஆ. தசரதன், திரு. மொ. மருதமுத்து, திரு. மூ. பரிமணன் ஆகியோரை மனமுவந்து பாராட்டுகிறேன்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகளை விரிவாக விளக்க அட்டவணை செய்து இந்நிறுவன வெளியீடாக வெளியிடுவதற்கு அனுமதி நல்கிய தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இயக்குநர் அவர்களுக்கும், பல்லாற்றானும் இந்த அட்டவணைப் பதிப்புக்கு உதவிகளை நல்கிய அந்நூலகக் காப்பாட்சியர் அவர்களுக்கும், அந்நூலகப் பணியாளர்களுக்கும் நிறுவனம் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணைகளின் பதிப்புத் திட்டப்பணிக்கு மிகச் சிறப்பாக வழிகாட்டிவரும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் பொற்கோ அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கும், பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் நன்றி. இத்திட்டப்பணி தொடங்குவதற்கு அனுமதி அளித்தும் இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டியும் வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. சு. இராம கிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதி நல்கிய தில்லித் தேசிய ஆவணக் காப்பகத்தாருக்கும் நன்றி. இந்த அட்டவணையைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த யுனைட்டெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் நன்றி.

இயக்குநர்

பதிப்புரை

சங்கப் பாடல்கள் முதலாகப் பல்வேறு காலங்களிலும் தோன்றிய தமிழ் நூல்களை நாம் இன்றும் பெறுவதற்குத் துணைபுரிபவை காலந்தோறும் எழுதப்பெற்று வந்த தமிழ் ஓலைச் சுவடிகளேயாகும். பல புலவர்களும் அவர்களிடம் பயின்ற மாணவர்களும் நூல்களை எழுதிப் படித்து வந்ததனால்தான் நூல்களுக்குப் பற்பல சுவடிகள் அமைவனவாயின.

சுவடி

சுவடி என்பது ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பெற்ற நூல்களையே குறிக்கும். முற்காலத்தில் பனை ஓலை ஒன்றே நம் நாட்டில் எழுது பொருளாய்ப் பயன்பட்டவற்றுள் சிறப்பிடம் பெறுகிறது. குருத்து அல்லது முற்றிய ஓலைகள் அல்லாது இடைப்பட்ட தன்மையுடைய பனையோலைகளைக் கொண்டு வந்து அவற்றைப் பதப்படுத்திப் பின்பு நீண்ட தனியோலைகளின் குறுகிய அடி நுனிகளை நீக்கி, ஓலைகளின் நரம்பைக் கிழித்து, ஒரே அளவாக ஓலைகளை அமைத்துக் கொள்வர். இதனை 'ஓலை வாருதல்' என்று சொல்லுவர். இவ்வாறு அமைக்கப்பெறும் ஓலைகளின் தொகுப்பே சுவடியாகும்.

சுவடிப் புத்தகம்

வெற்றோலைகளில் கயிறு கோர்ப்பதற்காக வட்டவடிவத்தில் துளையிடுவர். சிறிய சுவடியாயின் மூன்றிலொரு பாகத்தில் இடப்பக்கம் அமைப்பர். நீண்ட சுவடியாயின் மையத்தைக் கணக்கிட்டு அதன் இடப்பக்கமும் வலப்பக்கமும் இரு துளையிடுவர். இதழ்களை ஒன்று சேர்க்க நூல்கயிற்றால் அவற்றைக் கோர்ப்பர். இதழ்கள் நழுவி விழுந்து விடாமல் தடுக்க கயிற்றின் மேற்பக்கம் பனையோலை ஈர்க்குத் தண்டினைப் பிணைப்பர். இதற்குக் 'கிளிமூக்கு' என்று பெயர். பட்டன்கள், துளையிட்ட செப்புக் காசுகள் அல்லது சோழிகளைப் பயன்படுத்துவதும் உண்டு. பின்பு இதழ்களை ஒன்று கூட்டி அக்கயிற்றால் ஏட்டின் அடிமுதல் நுனி வரை சுற்றிக்கட்டுவர். இதனைச் 'சுவடிப் பொத்தகம்' என்று கூறுவர்.

"பலவி னியைந்தவும் ஒன்றெனப் படுமே
அடிசில் பொத்தகம் சேனை யமைந்த
கதவம் மாலை கம்பல மனைய"

என்ற பழம் பாடலும் இதனை உணர்த்துகின்றது. பல சுவடிகளைக்

கட்டிக் கொண்டு மாணவர்கள் தம் முதுகில் சுமந்து செல்வர். இது சுவடித் தூக்கு எனப்பெறும்.

இருதுளையிடும் சுவடிகளில் இடப்பக்கம் நூல்கயிறு கோர்த்து வலப்பக்கம் மெல்லிய குச்சியைச் செருகிச் சுவடி தொய்யாமல் கட்டுவர். குச்சிக்குப் பதிலாக இரும்பினாலாகிய நீண்ட கம்பியையும் பயன்படுத்துவதுண்டு. இதற்கு 'நாராசம்' என்று பெயர்.

சுவடியின் முன்னும் பின்னும் சில வெற்றோலைகளைக் காப்பாகக் கோர்ப்பர். இதனால் இருபுறத்தும் எழுதப்பட்ட ஓலைகள் பழுது படாமல் இருக்கும். இந்த நாளில் புத்தகங்களுக்குக் கட்டுமானம் செய்வது போலச் சுவடிகளின் இருபுறமும் அதே அளவான மரச்சட்டங்களைத் துளையிட்டுச் சேர்ப்பர். இச்சட்டங்களில் பூவேலைப்பாடு போன்ற உருவங்களைப் பொறித்தலும் உண்டு.

எழுத்தாணி

ஓலையில் எழுதுவதற்கு அடி பருத்தும் நுனி சிறுத்தும் கூராயுள்ள எழுத்தாணியையே பெரிதும் பயன்படுத்துவர். இது குண்டெழுத்தாணி என்று பெயர்பெறும். மடக்குக் கத்தியுடன் சிறிய எழுத்தானியையும் சேர்த்து மடக்கி வைத்து வேண்டும்போது நிமிர்த்தி எழுதப்பயன்படும் எழுத்தாணியும் நடைமுறையிலிருந்தது. இதற்கு 'மடக்கு எழுத்தாணி' என்று பெயர். இதுபோல் இன்னும் பல எழுத்தாணிகள் இருந்துள்ளதாகத் தெரிகிறது.

சுவடிகளில் எழுதும் முறை

காகிதத்தில் எழுதும்போது ஓரங்களில் இடம்விட்டு எழுதுதல் போல் ஓலையில் எழுதும் போதும் இடமும், வலமும் சிறிது இடம்விட்டு எழுதுவர். இடக்கையால் சுவடியைப் பிடித்துக் கொண்டு வலக்கையால் எழுத்தாணி பிடித்து எழுதும் முறையே பின்பற்றப்பட்டிருக்கிறது. எழுத்தாணி நகராது. ஓலை மட்டுமே நகரும். பெரும்பாலும் பனையோலைகளில் இருபக்கங்களிலும் எழுதுவர். ஓலையின் இடப்பக்க வெற்றிடத்தில் ஏடுகளின் வரிசையைக் குறிக்க எண்ணிடுவர். தொடக்கத்தில் சுவடியின் இடப்பக்கத்தில் ஹரிஓம் நன்றாக என்று எழுதப்பட்டு, பின்பு நூலாசிரியர் பெயர், நூலின்பெயர் ஆகியவை இடம்பெறும். பின்பு நூலின் உட்தலைப்புகள், படலம், சருக்கம் போன்றவை இடப்பக்க இதழ்களில் தொடர்ச்சியாகக் கொடுக்கப்படும், நூற்பகுதிகளின் முடிவில் இன்ன பகுதி முடிந்தது என்றும், நூல் முடிவில் இன்ன நூல் முற்றுப் பெற்றது என்றும் குறிப்பிடுவர்.

மேலும் ஏடெழுதுவோர் தனக்குப் பிடித்த கடவுளைப் பற்றிய பாடல்களை நூலின் முன்பு தனியேட்டிலும் எழுதிவைத்தல் உண்டு. தொடர்ந்து பாடல்களை எழுதிச் செல்லும்போது ஒவ்வொரு பாடலுக்கும் தொடர் எண் தருகின்றனர். இதன் மூலம் பாடல்களின் முதல் இறுதிகளை எளிதில் காண இயலும். நூலின் ஒரு பகுதி முடிந்ததும் இன்னபகுதி முற்றும் என்றும் குறிப்பிடுவர்.

சுவடிக் குறிப்பு (Colophon)

நூலின் முடிவில் நூல் முடிந்தது என்னும் குறிப்புடன் யாரால் யாருக்காக, எந்தநாளில் எழுதி முற்றுவிக்கப்பட்டது என்னும் குறிப்புக்களும் பெரும்பான்மைச் சுவடிகளில் ஏடெழுதுவோரால் தரப்படுகின்றன. நூல் முடிவுக் குறிப்பில் நூற்பெயருடன் ஆசிரியர் பெயரும் தரப்படுதல் உண்டு. சிலர் இன்ன நாளில் தொடங்கி இன்ன நாளில் முற்றுப் பெற்றது என்னும் காலக் கணக்கும் தருகின்றனர். காலக் கணக்கில் ஆண்டு, மாதம், திதி, கிழமை முதலியவை இடம்பெறுகின்றன. இதன்மூலம் ஏடு எழுதப்பெற்ற காலம் அறிய முடிகிறது. மேலும் அந்தச் சுவடிபற்றிய வரலாற்றோடு நூலாசிரியர், ஏடெழுதியோர் வரலாறும் அறிய முடிகிறது. இறுதியில் இன்ன தெய்வம் துணை, இன்ன தெய்வம் சகாயம் என்றவாறுள்ள குறிப்புகளும் பல சுவடிகளில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தமிழ்ச்சுவடிகள்

கர்னல் மெக்கன்சி (1782-1821). டாக்டர் லெயிடன், வில்சன், சி.பி.பிரௌன் போன்ற அதிகாரிகளால் சேகரிக்கப்பெற்ற ஓலைச்சுவடிகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளன. இவை ஏறத்தாழ 66000 சுவடிகள். இவற்றில் தமிழ்ச் சுவடிகள் மட்டும் 16,500 என்று கணக்கிடப்பட்டுள்ளது. தஞ்சை சரசுவதி மகால், மதுரைத் தமிழ்ச் சங்கம், சென்னை உ. வே. சாமிநாதையர் நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பேரூர் தமிழ்க்கல்லூரி, சென்னை ஆசியவியல் நிறுவனம், தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் தமிழ்ச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ள தமிழ்ச் சுவடிகள்

தமிழ்ச்சுவடிகள் அண்டை மாநிலங்களான கேரளம், கருநாடகம், ஆந்திரம் போன்ற இடங்களிலும் இருப்பது தெரியவருகின்றது. கேரளப் பல்கலைக் கழக நூலகத்தில் ஏறத்தாழ மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சுவடிகளும் கருநாடகத்தில் மேல் கோட்டை சமசுகிருத ஆராய்ச்சி நிலையத்திலும் இன்னும்

பிற நூலகங்களிலும் தமிழ்ச் சுவடிகள் இருப்பது தெரியவருகிறது. ஆந்திராவில் திருப்பதி வெங்கடேசுவரப் பல்கலைக் கழகம், ஆந்திரப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிலும் தமிழ்ச் சுவடிகள் உள்ளன. கல்கத்தா தேசிய நூலகத்தில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த சுவடிகளும் இடம்பெற்றுள்ளன. இலங்கை, மலேசியா முதலிய கீழை நாடுகளிலும், பிரிட்டன், பிரான்சு, டென்மார்க், கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி, போர்த்துக்கல், இத்தாலி, நெதர்லாண்ட், ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, நார்வே, சுவீடன், உருசியா ஆகிய பல்வேறு நாடுகளில் உள்ள நூலகங்களில் ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கும் அதிகமான தமிழ்ச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்று டாக்டர் அ. தாமோதரன் அவர்கள் கூறுகின்றார்.

சுவடி விளக்க அட்டவணைகள் வரலாறு

தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணைகள் தயாரிக்கும் முயற்சி இந்நூற்றாண்டின் முதலில் ஏற்பட்டது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் கி.பி. 1912 முதல் விளக்க அட்டவணை செய்யப்பெற்றன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கி.பி. 1911-க்கு முன்பு அந்நூலகத்திற்கு வந்தடைந்த தமிழ்ச் சுவடிகள் அட்டவணை செய்யப்பெற்று "A Descriptive Catalogue of Tamil Manuscripts in the Government Oriental Manuscripts" என்ற பெயரில் பதினோரு தொகுதிகளில் வெளியிடப்பெற்றுள்ளன. கி.பி.1911க்குப் பிறகு 1959 வரையில் அந்நூலகத்திற்கு வந்தடைந்த ஓலைச் சுவடிகள் A Triennial Catalogue of Manuscripts (மூவருட சுவடி விளக்க அட்டவணை) என்ற தலைப்பில் 13 தொகுதிகளில் வெளிவந்தன. அதன்பிறகு தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை எனப் பெயர் பெற்று வெளியிடப்பெற்று வருகின்றன. இவ்வாறு இதுவரை 30 தொகுதிகள் அட்டவணை நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. 1956, 1961, 1962, 1977 எனும் ஆண்டுகளில் உ.வே.சாமிநாதையர் நூலகத் தமிழ் ஓலைச் சுவடிகள் ஆறு தொகுதிகளில் விளக்க அட்டவணை செய்யப்பெற்று அந்நூலக வெளியீடுகளாக வந்துள்ளன. அதன் பின் தஞ்சை சரசுவதி மகால் நூலகத் தமிழ்ச் சுவடிகளும் விளக்க அட்டவணை பெறத் தொடங்கின. கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் அட்டவணை செய்யப்பட்டன. இதே காலகட்டத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடிகளும் விளக்க அட்டவணை செய்யப்பெற்றுத் தொடர்ந்து அப்பணி நடந்து வருகின்றது. கல்கத்தா தேசிய நூலகத்திலுள்ள

தமிழ்ச் சுவடிகளும், பேரூர் சாந்தலிங்க அடிகளார் மடத்துச் சுவடிகளும் அட்டவணை செய்யப்பெற்றன. ஆசியவியல் நிறுவனம் அந்நிறுவனச் சுவடிகளையும் உ.வே.சாமிநாதையர் நூலகத் தமிழ்ச் சுவடிகளையும்,. திருவாவடுதுறை ஆதினச் சுவடிகளையும், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையத்தின் மருத்துவச் சுவடிகளையும் அட்டவணை செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டு வருகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகளும் மூன்று தொகுதிகளில் அட்டவணைகளாக வந்துள்ளன. அண்மையில் அடையாறு நூலகச் சுவடிகளும் அட்டவணை செய்யப்பெற்றுள்ளன. இவ்வாறு நூலகங்களிலும் நிறுவனங்களிலுமுள்ள தமிழ்ச் சுவடிகள் அட்டவணை செய்யப் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

வெளிநாடுகளிலுள்ள தமிழ்ச் சுவடிகள், அந்நாட்டவர்களாலும், பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்களாலும் தொகுக்கப்பெற்றன. பேராசிரியர் அ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் ஏறத்தாழ மூவாயிரம் சுவடிகளைக் கண்டறிந்து ஐந்து தொகுதிகளாகப் பகுத்து வைத்துள்ளார். மேலும் சில தன்னார்வ அமைப்புகளும் தனியார்களும் தமிழ்ச் சுவடிகளைத் தொகுத்து வைத்துள்ளமையும் தெரியவருகிறது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வரலாறு

கர்னல் மெக்கன்சி, டாக்டர் லெயிடன், வில்சன், சி.பி. பிரௌன் போன்ற அதிகாரிகளால், சேகரிக்கப்பெற்றவை 'சுவடிகள் நூலகமாக' 1870-ல் சென்னை மாநிலக் கல்லூரியில் முதலில் இடம்பெற்று, பின்பு 1939-இல் சென்னைப் பல்கலைக் கழக நூலக வளாகத்தில் தற்போதுள்ள பெயரில் அமைந்துள்ளன. காலந்தோறும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்குச் சுவடிகள் வந்த வண்ணமிருப்பதாலும், அந்நூலகம் 1980-க்குப் பின் இருக்கும் தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழ் வருவதால் அத்துறையில் பணியாற்றும் மாவட்ட அலுவலர்கள் சேகரிக்கும் சுவடிகளும் இந்நூலகத்திற்கு அனுப்பப்பெறுவதாலும் வேறு எங்கும் இடம்பெறாத அளவுக்கு அதிகமான சுவடிகளை இந்நூலகம் பெற்றுள்ளது. இங்குள்ள 16,500க்கும் அதிகமான தமிழ்ச் சுவடிகளில் சில சுவடிகள் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணைகளின் அமைப்பும் சிறப்பும்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணைகள் வடமொழிச் சுவடிகளின் விளக்க

அட்டவணைகள் அமைப்பிலேயே அமைந்துள்ளன என அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணையின் முதல் தொகுதியின் முகவுரை தெரிவிக்கின்றது.

> "It has been prepared mainly on the lines of the Sanskrit descriptive catalogue. To a brief description of the manuscript containing the work under notice is added a very brief indication of the nature of the subject dealt with in the work and extracts from the work itself are given to enable one to obtain an idea of its nature, style and value. In order to make the catalogue useful even to those who have not much knowledge of English a brief description of every work in Tamil is also given after the extracts"

[Preface : p.iii, A Descriptive Catalogue of Tamil Manuscripts in the G.O.M.L. Vol.1, 1912.]

தொடக்க காலத்தில் மேற்காணுமாறு அமைந்திருந்தாலும் அதற்கடுத்த காலகட்டங்களில் வெளியிடப்பெற்ற அட்டவணைகளில் பொருள்வகைப் பாகுபாடும், சுவடிகள் பெருகப்பெருக தொடர்ச்சியாக அவற்றை அட்டவணை செய்தலும் காணமுடிகிறது. சுவடிகள் D எண்/R எண் என எண்கள் இடப்பெற்று, தலைப்புகள் தமிழிலும் ஆங்கில எழுத்திலும் கொடுக்கப்பெற்றுள்ளன. 1. Substance. 2. Size, 3. Pages, 4. Lines, 5. Character, 6. Condition, 7. Appearance, complete summary, beginning, ending, 8. குறிப்பு என்ற அடிப்படையில் தமிழ்ச் சுவடிகள் விளக்கம் பெறுகின்றன.

நூல் தலைப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும், உரோமன் எழுத்துப் பெயர்ப்பிலும் அமைந்துள்ளன. சுவடி யாரிடமிருந்து எக்காலத்தில் வாங்கப்பட்டது என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. தொடக்கப் பாடல்களும், முடிவுப் பாடல்களும் ஒன்றுக்கு மேலாக எழுதப்பட்டிருப்பதும், குறிப்பு என்ற பகுதியில் மாற்றுச் சுவடிகள் அந்நூலகத்திலிருந்தால் அதன் விவரமும், சுவடிக் குறிப்பும் (Colophon) பல நூல்கள் ஒரு சுவடிக் கட்டில் இருந்தால் அவற்றின் பெயர்களும், அவை இடம்பெறும் இதழ்களின் எண்ணிக்கை, பக்க எண்கள், ஆங்கிலத்தில் குறிப்புகள் என இந்நூலகச் சுவடி விளக்க அட்டவணைகள் அமைந்துள்ளன. அவ்வட்டவணைகள் பெரும்பாலும் ஒரே கட்டமைப்பைப் பெற்று இராயல் அளவில் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் நூற்பெயர்களின் அகர வரிசைகளை உரோமன் எழுத்துப் பெயர்ப்பில் இட்டிருப்பதும், அட்டவணையில் எடுத்தாளப்பெற்றுள்ள சுவடிகளிலும், விளக்கங்களிலுமுள்ள ஆசிரியர் பெயர் அகராதி, பொருளகராதி அல்லது பொதுஅகராதி (General Index) போன்றவற்றை

அமைத்திருப்பதும் அவ்வட்டவணைகளின் சிறப்பம்சமாகும், அவ்வட்டவணைகளில் குறிப்பிடப்பெறும் D எண்கள் கி.பி.1912 முதல் வெளியிடப்பெற்ற பதினொரு தொகுதிகளிலுள்ள தமிழ்ச் சுவடிகளைக் குறிக்கும் தொடர் எண்களாகும். அதைப் போன்று 'R' எண்கள் மூவருட சுவடி விளக்க அட்டவணை (Triennial Catalogue)யில் வரும் தமிழச் சுவடிகளின் எண்களாகும். ஆயினும் அண்மைக் காலத்திலிருந்து வெளிவரும் அட்டவணைகளில் D/R வேறுபாடின்றித் தொடர் எண்கள் பெற்றுச் சுவடிகள் வருவது குறிப்பிடத்தக்கது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை அமைப்பு

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் கி.பி.1911, 12லிருந்து தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்க அட்டவணை தயாரித்து நூலாக வெளியிட்டு வருகிறது. இக்கால கட்டங்களில் வெளியிடப்பட்ட சில தொகுதிகள் தற்போது கையிருப்பில் இல்லை. சுவடி விளக்க அட்டவணை தயாரிப்பில் அண்மையில் ஏற்பட்டுள்ள விரிந்த ஆய்வின் காரணமாக அச்சுவடிகள் தொடர்புடைய பல செய்திகளையும் ஒருங்கே கொடுக்க வேண்டுமென்ற காரணத்தாலும், ஏற்கெனவே அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தால் அட்டவணை செய்யப்பட்ட தமிழ்ச் சுவடிகளுக்கு விரிந்த அளவில் விளக்கம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தாலும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடிவிளக்க அட்டவணை தாயரிக்கும் திட்டப்பணி தொடங்கப்பட்டது. இப்பணிக்கான சுவடிகள் விளக்க அட்டவணை மாதிரிப்படிவம் கீழ்வருமாறு தயாரிக்கப்பட்டது.

மாதிரிப் படிவம்

I. சுவடி பற்றிய பொதுச் செய்திகள்

1. வரிசை எண் :
2. (அ) சுவடி எண் :
   (ஆ) சுவடிக்கட்டு எண் :
   (இ) புத்தாக்கத்தாள் சுவடி எண் :
   (ஈ) தாள் சுவடி எண் :
3. தலைப்பு

(அ) தமிழில் :

(ஆ) உரோமன் எழுத்துப் பெயர்ப்பில் :

(இ) சுவடியில் உள்ள தலைப்பு :

4. நூலாசிரியர் :

5. காலம் :

6. படியெடுத்தவர் :

(அ) இடம் :

(ஆ) காலம் :

7. உரையாசிரியர்

(அ) இடம்

(ஆ) காலம்

8. சுவடி உள்ள நிறுவனம்/நூலகம் :

9. சுவடியை வழங்கியவர் :

10. சுவடியைப் பெற்றுக் கொண்டவர் :

(அ) இடம் :

(ஆ) காலம் :

II. சுவடி அமைப்பு

அ. ஓலைச் சுவடி அமைப்பு

1. தனிக்கட்டு/உட்கட்டு/தனி இதழ் :

2. மொழி : தமிழ்/கிரந்தம்/பிறமொழி :

3. எழுத்து நிலை :

4. இதழ்களின் எண்ணிக்கை :

5. அளவு :

6. துளை விவரம் :

7. சுவடிக் கட்டுமானம்

மூக்கு/கயிறு/நாராசம் :

8. சுவடிக் கட்டை :

9. ஓலையின் வகை :

10. நரம்பு உள்ளது/இல்லாதது :

11. சுவடி நிலை நன்று/சிதைவு/நொறுங்கியது :

12. பக்கம் (பக்கங்களில் எழுத்துக்களின் நிலை) :

ஒரு பக்கத்தில் எழுதப்பட்டுள்ளதா?

இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளதா?

13. வரிகள்/பத்திகள் :

14. பா நடை/உரைநடை/பிற :

15. ஓலைகள் விடுபாடு முதல்/நடு/இறுதி :

16. நூல் முழுமை/குறை :

17. மொத்த வரிகள்/பாடல்கள்/வேறு :

ஆ. தாள் சுவடி அமைப்பு

1. அளவு
2. பக்கங்கள்
3. வரிகள்
4. எழுத்து நிலை
5. படிஎடுத்த நாள்
6. படி எடுத்தவர் பெயர்
7. திருத்தம் செய்யப்பட்ட விவரம்
8. புத்தாக்கம் செய்யப்பட்ட விவரம் (Restored)

III. நூல் அமைப்பு

1. நூல் பொருண்மைப் பிரிவு
2. இலக்கிய வகை

3. நூற்செய்தி

4. ஏட்டின் தொடக்கம்

5. நூல் தொடக்கம்

6. நூல் முடிவு

7. ஏட்டின் முடிவு

8. மூலம்/தழுவல்/மொழிபெயர்ப்பு

9. மொழிநடை

10. இலக்கிய/சமூக/வரலாற்றுச் சிறப்புச் செய்திகள்

11. சுவடிக் குறிப்பு (Colophon)

IV. மாற்றுச் சுவடிகள்/வேறு படிகள் (Variations)

1. இந்நூலகத்தில் மாற்றுச் சுவடிகள்
2. பிற நூலகங்கள்/நிறுவனங்களில் உள்ள மாற்றுச் சுவடிகள்
3. சார்புச் சுவடிகள்

V. அச்சிட்ட விவரம்

1. இந்தச் சுவடி அச்சிடப்பெற்ற விவரம்
2. வேறு பதிப்புகள் விவரம்
3. இந்தச் சுவடி அச்சிற்குப் பயன்பட்ட விவரம்

VI. சிறப்புச் செய்திகள்

இவ்வாறாக ஆறு பெரும்பிரிவுகளில் சுவடி விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

மாதிரிப் படிவம் விளக்கம்

முதலாவதாக அமையும் சுவடி பற்றிய பொதுச் செய்திகள் என்ற பிரிவில் பத்துப் பிரிவுகளில் செய்திகள் அமைக்கப் பட்டுள்ளன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக D எண்கள் பெற்ற சுவடிகள், R எண்கள் பெற்ற சுவடிகள், சில புத்தாக்கத் தாள் சுவடிகள், ஓலைச் சுவடிகளாக இல்லாமல் தாள் சுவடிகளாக இடம் பெறுபவை என நான்கு வகையான சுவடிகள் இருப்பதால்

நான்கு வகையான எண்கள் தரப்பட்டுள்ளன. சுவடிகளின் நூல் தலைப்புகள் தமிழிலும், உரோமன் எழுத்துப் பெயர்ப்பிலும் இடம்பெறுவதோடன்றிச் சுவடியில் முதலிலும், இறுதியிலும், தலைப்புகள் எழுதப்பெற்றிருந்தால் அவை அவ்வாறே இவ்வட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. படியெடுத்தவர் பெயர், காலம், இடம் ஆகியவை சுவடிக் குறிப்பில் (Colophon) இருக்கின்றவாறு இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ளன. இவ்வட்டவணையில் இடம்பெறும் எல்லாத் தமிழ்ச் சுவடிகளும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளனவாதலாலும், அச்சுவடியிலேயோ, அந்நூலகச் சுவடிகள் விளக்க அட்டவணை களிலேயோ சுவடிக் குரியவர், இடம், அதை இந்நூலகத்திற்காகப் பெற்றுக்கொண்ட காலம் இருந்தால் அவையும் இவ்வட்டவணையில் இடம்பெறும்.

சுவடி அமைப்பு என்ற இரண்டாவது பகுதியில் ஓலைச் சுவடி, தாள் சுவடி, புத்தாக்கத்தாள் சுவடி (Restored) ஆகியவற்றின் புற அமைப்புகள் 17/8 உட்பிரிவுகளில் தரப்பெற்றிருக்கின்றன.

மூன்றாவதாக அமையும் நூல் அமைப்பு என்ற பகுதியில் பதினொரு பிரிவுகளில் நூலின் உள்ளமைப்புகள் விளக்கப்பட்டுள்ளள. மாற்றுச் சுவடிகள், வேறுபடிகள் என்ற நான்காவது பிரிவில் எடுத்துக் கொண்ட சுவடியின் மாற்றுச் சுவடிகள் இந்நூலகத்தில் இருப்பின் அவற்றின் விவரமும், பிற நூலகங்கள், நிறுவனங்களில் இருப்பின் அவற்றின் விவரமும் தெரிந்த அளவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

அச்சிட்ட விவரம் என்ற ஐந்தாவது பகுதியில் தெரிந்த அளவிற்குச் சுவடியின் பதிப்பு விவரம் தரப்பட்டுள்ளது.

இறுதியாக உள்ள சிறப்புச் செய்திகள் என்ற பகுதியில் எடுத்துக் கொண்ட சுவடி தொடர்பான நூற் செய்திகள், நூற் தலைப்புகள், அதனுடன் சேர்ந்துள்ள சுவடிகளின் பெயர்கள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

அட்டவணை செய்முறை விளக்கம்

இதுவரை வெளியிடப்பெற்றுள்ள மூன்று தொகுதிகளில் முதல் தொகுதி வரிசை எண் 1 முதல் 255 வரையிலும், இரண்டாம் தொகுதி வரிசை எண் 256 முதல் 510 வரையிலும், மூன்றாம் தொகுதி வரிசை எண் 511 முதல் 760 வரையிலும், நான்காம் தொகுதியான இந்நூலில் 761 முதல் 974 வரையிலும் அகத்தியர் பெயரில் இடம்பெற்றுள்ள சுவடிகளின் விளக்கங்கள்

கொடுக்கப்பட்டுள்ளன. இச்சுவடிகளின் முறை வைப்பில் ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுவடி நூற்பொருள் அடிப்படையிலும் அவ்வப்போது கிடைக்கும் சுவடிகளின் தொடர்ச்சி அடிப்படையிலும் விளக்க அட்டவணைகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் தயாரிக்கப்பெற்றுள்ள நிலையிலிருந்து சற்று மாறுபட்டு, சுவடி நூற்பெயர்கள் அகர வரிசையில் முறைவைக்கப் பெற்றிருக்கின்றன. அதிலும் பாட்டு முதல் தொடர் அடிப்படையிலும், பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் நூல்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அகர வரிசையில் அமையும் சுவடிகள் அனைத்தும் அகத்தியர் பெயரிலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நான்காம் தொகுதியிலுள்ள சுவடி நூல்கள் பெரும்பாலும் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. இது பற்றிய விளக்கங்களைச் சித்த வைத்தியம் என்ற பகுதியில் காணலாம். நூற்பெயரகராதி, பொதுச் சொல்லகராதி எனும் பகுதிகள் உள்ள இணைப்புகள் அந்நூலக அட்டவணைகளில் இடம்பெற்றதைப் போன்றே இந்நூலிலும் இடம்பெற்றிருக்கின்றன. மேலும் சுவடி நூல்களின் தொடக்கப்பாட்டு, பாட்டு முதல் தொடர் அகராதி எனும் தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

சித்த வைத்தியம்

சித்த வைத்தியம் நான்கு பிரிவுகளை உடையது; அவை வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்பன. இவற்றில் வாதம், வைத்தியம் இரண்டையும் ஏம வைத்தியம் என்றும்; யோகம், ஞானம் இரண்டையும் பிரம்ம வைத்தியம் என்றும் கூறுவர். வாதம் என்பது இரசவாதம் (Alchemy). இரசவாதம் மூலம் தங்கத்தை உற்பத்தி செய்து வசதியாக வாழ்வது இதன் பயன் ஆகும். தன்னைக் காத்துக் கொள்ளவும் ஒருவனைக் காப்பாற்றவும் வாதம் முக்கியமானதால் இவ்வாதம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், வைத்தியமோ நோய்களைத் தகுந்தபடி நிவர்த்திக்கவும், தடுக்கவும், வேண்டிய காலமட்டும் உடம்பை நிலைக்கச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டது. சித்தர்கள் இவற்றை முதன்மையாகக் கொண்டு நோய் தங்களைத் தாக்காமலிருக்கவும், மரணத்திற்கு அஞ்சாமலிருக்கவும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அடுத்த நிலையில் அவர்கள் முதுமைத் தன்மை அடையாமலிருக்க வேண்டி, உலோக வகைகள் கலந்த பற்பம், செந்தூரம், சுண்ணம் ஆகிய மருந்துகளைச் சாப்பிட்டு உடம்பைப் பலப்படுத்தியும், ஆன்மாவை ஒருமைப்படுத்தியும் கொண்டார்கள். ஏனெனில், இடைவிடா யோக சாதனையால்

தங்கள் ஆயுளை விருத்தி செய்து கொண்டு, மனித சிருட்டியையும் உலகப் போக்கையும் செவ்வையாகத் தெரிந்து கொண்டு பிறகு தன்னைத்தான் அறிந்தவுடன் மோட்ச சாதனையில் சித்தி பெறுவதற்கு ஈடுபட்டார்கள். ஆகவே அவர்கள் சித்தர்கள் நூல்கள் முழுமையும், அவர்கள் சித்தியடைந்த பிறகு, தான் கண்டறிந்த கருத்துக்களை அவர்கள் சந்ததியினர் எழுதி வைத்தனர். ஆகையால் இவ்வித சித்தர்களுடைய வாத வைத்தியமானது, கிரேக்கர்களுடைய நான்கு விதமான ஞான போதனை சாதனைகளுக்கும், ஆறுவிதமான இந்திய ஞான சபைகளுக்கும் தற்காலத்தில் ஆதாரமாகக் கருதப்படுகின்றன.

சித்த வைத்திய முறை (The Siddha Medical System)

மனிதரின் நோய்க்காகச் சித்த வைத்திய முறையில் வைப்புச் சரக்கு நூல்களின் உதவியைக் கொண்டு தயாரிக்கும் மருந்துகளும், முறைகளும் வருமாறு:

1. இரசம், சாறு முதலியன - இவை, பாதரசம், இலைச்சாறு, பழச்சாறு, பட்டைச்சாறு முதலியன
2. பாகு(Syrup) - வெல்லப்பாகு அல்லது சீனிப்பாகு முதலியன.
3. சத்து (Extracts) - அப்பிரகச்சத்து முதலியன.
4. எண்ணெய் (Oil) - விதைகளிலிருந்து எடுக்கப்பெறுவன. சாதிக்காய் எண்ணெய் முதலியன.
5. தைலம் (Medicated oil) - சந்தனாதித் தைலம் முதலியன.
6. நெய் (Ghee) - ஆநெய், குமட்டிக்காய் நெய் முதலியன.
7. குழம்பு (Semi-Solid extracts) - இரசக் குழம்பு, குமட்டிக்காய் குழம்பு முதலியன.
8. சூரணம் (Medicinal Powder) - சீந்தில் சூரணம் முதலியன.
9. திராவகம் அல்லது வாலைநீர் - தீநீர், கந்தகத் திராவகம் முதலியன.
10. நீறு, பற்பம் - பூநீறு, வெள்ளி பற்பம் முதலியன.
11. செந்தூரம் (Sulphides) - இரச செந்தூரம் முதலியன.
12. காரமருந்து அல்லது சுண்ணம் - காடி காரம், முத்துச் சுண்ணம் முதலியன.

13. மாத்திரை (Medicated Pill) - கோரோசனை மாத்திரை முதலியன.

14. மெழுகு - நாகரச மெழுகு முதலியன.

15. உப்பு (Salt) - கந்தக உப்பு முதலியன.

16. பதங்கள் (Suplimation) - இரசப் பதங்கள் முதலியன.

வாதவர்க்கம் (The Process of alchemy)

வைத்தியம், யோகம், ஞானம் இவற்றுக்கு வாதம் மூலமாக இருப்பதால் முதற்கண் அது வைக்கப்பட்டது. இவற்றைக் கொண்டு பொருள்களையும், அவைகளின் தன்மைகளைப் பிரிக்கவும் மறுபடியும் ஒன்று சேர்க்கவும், இழிந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றவும்; மேலும், வைத்தியம், யோகம் முதலிய சித்திகளுக்கு வழியும் காண்பிக்கும். ஆகையால் வாதமானது தாது, தாவர, சீவ வர்க்கங்களின் உதவியைக் கொண்டு இரும்பு, செம்பு முதலியவைகளைப் பொன்னாக மாற்றக் கூடிய முறையை விவரமாகச் சொல்லும் வைப்புச் சரக்கு முறையின் ஒரு பாகமாகக் கருதப்படும்.

பொன் செய்வதற்கு உரிய வேதை முறைகள்

இவ்வேதை முறைகளாவன : 1. சிடிகை வேதை, 2. மாற்றுயர்வு வேதை, 3. கட்டு வேதை, 4. தாம்பிர வேதை, 5. மாரண வேதை, 6. குருவேதை, 7. குளிகை வேதை, 8. பரிசன வேதை, 9. தொந்த வேதை, 10. பச்சைவெட்டு வேதை, 11. களங்கு வேதை ஆகியன.

மேலும், புடமிடுகை, பதங்கம், வாலையிடல், கரைத்தல், உருக்கல், பிரித்தல், உறவாக்கல், உறையச் செய்தல், ஊட்டங்கொடுத்தல், புளிக்கவைத்தல், மாற்றுயர்வு, கட்டுதல், சுத்தி செய்தல், வடித்தல், நீற்றல், சாரணை ஏற்றல் அல்லது உயிர் கொடுத்தல், நீராக்கல், வைப்பு, பிரித்தெடுத்தல், பற்பமாக்கல், செந்தூரித்தல், சுண்ண மாக்கல் ஆகிய முறையிலும் இரசவாதம் செய்வார்கள். வாதத்திற்குப் பயன்படுத்தும் பொருள்கள் இரசம், நிமளை, காந்தம், செம்பு, உப்பு, உலோகம், நாகம், வங்கம், பொன், வீரம், கல்லுப்பு, மிருதாரசிங்கி, குளவி மெழுகு, பாசாணம், கந்தகம், மணி, வெள்ளி, அப்பிரகம், வெடியுப்பு ஆகியன.

வைத்திய வகைகள் : நாடி

வைத்திய வகைகளில் நாடி என்பது முக்கியமானதாகும். நாடி என்பது வாதபித்த சிலேட்டுமங்களைக் குறிக்கும் தாது

நரம்பாகும். நாடி அழுந்தலை அற்று நிற்றல், சுழன்று காணல், அழுந்தி நிற்றல், உதறி நிற்றல், கதிப்போடு துடித்து நிற்றல், தணித்துத் தளரல், துரிதமாய் ஓடல், மாறி ஓடல், நடுங்கி ஓடல், இரண்டுற ஓடல், அடுத்தடுத்தோடல், விரிந்து ஓடல், கூர்மையாய் ஓடல், புழுப்போலூர்தல், வலித்து ஓடல் என்று பதினாறு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

நாடிகளின் தொகைகளாக சிரசில் 7000, இரண்டு செவிகளில் 310, இரண்டு விழிகளில் 4000, மூக்கில் 3330, இரு கன்னங்களில் 5000, தோள்களில் 1000, கண்டப் பகுதியில் 1000, இரண்டு கைகளில் 3000, தொண்டை கொப்பூழ் 916, பிடரியின் கீழ் 8000, விலாவில் 3000, லிங்கம், யோனி, அடிவயிறு இவைகளில் 7000, மூலத்தில் 3000, இடைசந்தில் 2000, பாதங்களில் 1000 என்று சித்தர்கள் நாடிகளைக் கணக்கிட்டுள்ளனர்.

நாடிநடை

உடம்பில் இருதயத்தின் இடது சடரம் குவியும்போது கண்டறையின் வழியாகச் சென்று சகலநாடிகளுக்கும் இரத்தம் பரவும். அப்போது நாடிகள் விரியும். மறுபடியும் இடதுசடரம் விரியும்போது நாடி நரம்பிலிருக்கும். இரத்தம் குறைந்து நாடி சுருங்கும் இவ்விதமாக இருதயம் விரியவும் சுருங்கவுமாக இருத்தலால் அதனுடன் சேர்ந்த நாடி நரம்புகளுக்கும் இவ்விரண்டு தன்மையுமுண்டு. இச்செய்கைதான் நாடிநடை என்று சொல்லப்படும். ஆகவே நாடிநடை என்பது செவ்விரத்தக் குழல்களின் துடிப்பேயொழிய வேறல்ல. இத்துடிப்பு, குழாயின் நெடுக அலையைப்போல் மேன்மேலும் விரிந்துழலும் விம்மலே உடம்பின் பல இடங்களில் காணலாம். எவ்வெவ்விடங்களில் எலும்பை ஒட்டி சருமத்திற்கடுத்தாற்போல் நாடிக்குழல்கள் ஓடுகின்றனவோ அவ்வவ்விடங்களிலெல்லாம் இதன் துடிப்பை எளிதில் அறியலாம். குழல் கனத்தில் குறையக் குறைய நாடி நடையும் குறையும். இது ஒருஇமைப்பொழுதில் 30 அடிதூரம் வீதம் பாய்ந்து ஓடும். வைத்திய முறைப்படி நாடி நடையைச் சரியானபடி அறிய வேண்டின் கணுக்கை அருகில் உள்ள மணிக்கட்டில் பார்க்க வேண்டும். இது, வாதநாடி பித்தநாடி, சிலேட்டும நாடி, சாத்திய நாடி, அசாத்தியநாடி, வாதபித்தநாடி, பித்த சிலேட்டுமநாடி, சன்னி நாடி, மரண நாடி என 9 வகைப்படும்.

நாடிப் பரிட்சை

நாடிப்பரிட்சை என்பது நோயாளியின் வலது அல்லது இடது கையைப் பிடித்து நெட்டைவாங்கி, அனல் பிறக்கத்

தேய்த்து, பெருவிரல் பக்கமாக ஆரையெலும்பின் மேலோடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓரங்குலம் மேலாக மூன்று விரல்களால் சமமாக, மெதுவாக அழுத்தியும் விரல்களை மாறிமாறி அழுத்தியும், தளர்த்தியும் பார்த்துப் பின் நாடிநடையின் முறை கிரமமாக இருக்கிறதாவெனத் தெளிதல், நோயின் மாறுபாடுகளையும், விருத்தியையும், நாடிப் பரிசோதனையினால் அறியவேண்டும். அதுதான் தகுந்த முறை, ஆகவே மணிக்கட்டு மேலோடும் நாடி குழல்தான் நாடிநடையைக் கிரமமாகக் காட்டும். கைபிடித்து நாடி பார்க்கும் போது வைத்தியன் நாடியின் அழுத்தமும் விரைவும் கிரமும் மற்றுமுண்டான வேறுவித இலட்சணங்களையும் விரல்களில் காணப்படும் உணர்ச்சியைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம், ஆட்காட்டி விரல் உணர்வது வாதம், நடுவிரல் உணர்வது பித்தம், மோதிரவிரலால் உணர்வது ஐயம் ஆகும். நாடி ஓட்டங்களாக எலிவாலைப்போல் குறைந்து கொண்டே போகும் நாடி, எறும்பூருவதைப்போல் அறியக்கூடாத நாடி, வெள்ளாடு துள்ளுவதைப் போல் துள்ளக் கூடிய நாடி, எழும்பியும், அழுந்தியும் காணப்படும் நாடி என நான்கு வகையாகப் பகுத்துள்ளனர்.

நோய்கள் (Disease)

சித்தர் முறைப்படி மூன்றுவித அறிவுப் பேதங்களும், ஐம்புலக் கருவிகளையும், பன்னிரண்டு விதத் தேகக் கூறுபாடுகளையும் பெற்றுள்ள விந்து நாதத்தையும், சீரணித்த வஸ்துகளையும் தாக்குதலினால் அவைகளின் இயல்பான தொழிலியற்றும் செயல்கள் மாறுபடும்; இதுதான் வியாதி அல்லது நோய் எனக் கூறப்படுகிறது. காலம், அறிவு, புலன் இவைகள் தொழிலியற்றும் செய்கைகளில் குறைவின்றி இருந்தால் அதையே ஆரோக்கியம் என்று கூறப்படும். எனவே, நோய் என்பது உடம்பையடுத்த தொழிலின் பேதத்தினாலு மாத்திரமல்ல மனோவிகற்பத்தையும் சார்ந்ததாகும். ஆகவே, நோய் என்பது தேகவியாதி மனோவியாதி என இரண்டு வகைப்படும்.

கர்மவியாதிகளைப் பற்றிய விதிகள்

கர்மானு சாரம் என்பது, அடுத்த பிறவியின் தீக்கரும காரணத்தினால் சூக்கும தேகத்திற்கு ஏற்படும் ஒரு கெடுதி. இத்தகைய எல்லா நோய்களும் முற்பிறவியின் கரும காரணத்தால் ஏற்பட்டது. அதிற்சில இயற்கையான காரணத்தினாலும், சில தெய்வக் குற்றத்தினாலும் உண்டானவை. இவ்வித மூல காரணங்கள் காலப் போக்கினால்தான் நிவர்த்தியாகும். இயற்கையாலும், கிரகத்

தொடர்பாலும் ஏற்பட்ட கெடுதிகள் தீரும் வரையிலும் வினைப் பயன்களுக்குண்டாகும் பிராயச்சித்தமும் ஏற்படும் வரைக்கும் இது இருக்கும். மேலும், பரம்பரை வழியாகவும் வியாதிகள் ஏற்படும். இது சித்த முறைப்படி முற்பிறவி அல்லது கன்மங்களின் வினைப் பயன்கள் காலச் சக்கரத்தில் அறியக் கூடாத காரணங்களினால் தாய் தந்தையருக்குச் சில கோளாறுகள் ஏற்பட்டுக் குழந்தைகளைப் பிற்காலத்தில் தாக்கும். இதன் காரணங்களெல்லாம் அகத்தியர் கரும காண்டத்தில் கூறப்படும் செய்திகளாகும்.

நோயின் காரணங்கள் (Causation of Diseases)

நோயானது தாதுக்களின் தோசங்களின் கோளாறுகளினால் ஏற்படும். அவை உள் அல்லது வெளிக்காரணங்களினாலுண்டாகும். உடம்பை அடுத்த நோய்கள் அல்லது கர்ம நோய்கள் உட்காரணத்தினாலென்றும், அடியிற் கண்ட செய்திகளின் கோளாறுகளினால் தோசத்திற்கு ஏற்பட்ட நோய்கள் என்றும் கூறப்படும்.

1. தாதுக்கள் - முத்தோசம்.
2. தாதுப்பிரிவு - 7 வகை தாதுக்கள்
3. குணம் - மனத்தை நடத்தும் விதிகள்
4. மலம் - கசிவுகள், கழிவுகள்

சீவ அணுக்களும் கண்ணறைகளின் நடையும் முறையாக இருந்தால்தான் தாதுக்களின் சமநிலைக்கு யாதொரு இடையூறும் ஏற்படாது. இவ்விதமாகவே இருப்பதற்கு உணவுப் பகுதி கணக்குப்படி இருக்க வேண்டும். அதைச் சுற்றிலுமுள்ள செயல்களும் அப்படியே சரசமாய் இருக்க வேண்டும். இவ்விதமாக நடக்கத் தவறினால் நோய்களுக்கிடமுண்டாகும்.

வாதபித்த சிலேட்டுமம் என்னும் திரிதோசம்

வாதபித்த சிலேட்டுமந்தான் மனிதவுடம்புக்கு ஆதாரமாக உள்ளன. நாம் உட்கொள்ளும் உணவு, நீர், காற்று இவைகள் உட்கருவிகளினால் சீரணமாகி உடம்பை வளர்க்கும். ஆகவே, உடம்பைக் காத்தலால் சித்தவைத்தியத்தில் இவைகளை ஆதார தாதுக்களெனச் சொல்லப்படும். இத்தத்துவங்களின் கெடுதிதான் திரிதோசம்.

மனிதனுக்குள் சூக்கும சக்திகள் மூளையிலும், வீணாத்தண்டின் கயிறுக்குள்ளும் அமைந்திருக்கும். இதுவே

மனிதனுக்குள்ள பிராண சக்தியாகும். இப்பிராண சக்தியாகிய வாதத்தோடு பித்த சிலேட்டுமம் கூடிடில் முப்பிணி எனப்படும். ஆகவே, இம்முப்பிணி நிலையையே ஆரோக்கிய காலத்திலும், நோய்கண்ட வேளையிலும் கவனிக்க வேண்டிய முறைகளாகும். ஒருவன் நோய்வாய்ப்படும் காலத்தையும், அதற்குப்பின் நோய்ப் பிரிவினையும் தெரிந்து கொள்வதற்கு இம்முத்தோசத்தின் காரணம், குறிகள், குணங்கள் ஆகிய இவைகள் இன்றியமையாதவையாகும். இம்முத்தோசமும் முறையாக தன்னிலையில் இருந்தால்தான் உடம்பில் ஆரோக்கியத்தையும், பலத்தையும் நிலை நிறுத்தமுடியும். அவ்வாறு இல்லாமல் அதிகமானாலும் குறைந்தாலும் உடல்நலம் கெட்டு நோய்களுக்கு இடம் கொடுக்கும்.

வாதம் அல்லது வாயு (Vatha or vayu)

வாதம் உடம்பில் உள்ள சீவாணுக்களுக்கு அசைவு, சக்தி, உணர்ச்சி இவைகளைக் கொடுக்கக் கூடியது. வாத பேதத்தினால் வாதநோய்கள் உண்டாகும். மூச்சு விடுவதும், இரத்தம் உடம்பில் சுழலுவதும், உடம்பின் கழிவுகளும் மேலும் காது கேட்பது பார்ப்பது, ருசிப்பது முதலானவைகளுக்கும் வாதத்தின் நரம்புத் தொழிலே காரணமாகும். தாமத குணத்தினால் வாதம் கருப்பு நிறமெனப்படும். வாதமே மிகவும் முக்கியமான நரம்பு சக்தியாகும். அணுக்களுக்கும் தாதுக்களுக்கும் வலிவைக் கொடுக்கத்தக்கதாகும்.

தொழிலியற்றுவதில் வாதத்தின் முக்கிய குணங்கள்

வரட்சி, இலேசு, சுத்தம், குளிர்ச்சி, அசைவு, சூக்குமம் ஆகியவை வாதத்தின் முக்கிய குணங்களாம்.

தொழில்களாவன : அசைவுண்டாக்கல், உதானவாயுவாக நின்று பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சிகளை அறிவிப்பது, நாம்கொள்ளும் உணவைச் சரியான முறையில் வயிற்றில் கொண்டுபோய்ச் சேர்ப்பது. சீரணித்த அன்னக் குழம்பினின்று கழிவுப் பொருள்களைப் பிரித்தல், மூத்திரத்தையும், விந்து முதலானதையும் நிறுத்தி வைப்பது ஆகியனவாகும்.

வாதம் அதிகரித்தால் : பின்னால் உள்ள உடம்பு தசையின் சொரசொரப்பு, கருநிறம், இளைப்பு, கை, கால் நடுக்கம், சூடான பொருள்களில் விருப்பம், தூக்கமின்மை, பலக்குறைவும் உண்டாகும்.

வாதம் குறைவுபட்டால் : களைப்பு, பேச்சுக் குறைவு, அறிவீனம் முதலானவையும் ஏற்படும், இது உடம்பின் கீழ்ப்பாகமாகிய இடுப்புப் பாகத்தில் அமைந்துள்ளது. இதன் தொழில் இயற்றும் சக்தி நரம்புப் பகுதியில் உள்ளது.

பித்தம் (Bile)

பித்தம் உடம்பிற்கு வெப்பத்தை உண்டாக்கும் தன்மையிலும் உண்ணும் உணவு செரிப்பதற்கும், பிறகு இரத்தமாக மாறி நிறம் கொடுப்பதற்கும் மற்றும் செரியாநீர், கணையத்திரவம் முதலியவைகளுக்கும் உடம்பின் தசை மூலத்திற்கும் காரணமாக விருப்பதாகும். பித்த தேகியானவன் சாதாரண பலமும், வயதும் உடையவனாகிறான். இது பஞ்ச பூதங்களில் மூன்றாவது பகுதியான நெருப்பிடமாகவுள்ள வெப்பத்தை உடம்பு கிரகித்துக் கொள்ளும். ஏனெனில், எல்லாச் சீவன்களுக்கும் சிறிது வெப்பம் வேண்டியிருக்கிறது. நாம் உட்கொள்ளும் உணவைச் செரிக்க வைக்கவும் பிறகு நல்ல சத்திற்காக அப்பொருளினிடமிருந்து சத்துவைக் கிரகித்துச் செய்வதும்தான் இதன் தொழிலாகும். பித்தம் அதிகரித்தால் ஈரல்நோய் வரும். பித்தத்தின் இராசசம் என்னும் குணத்தினால் உடம்பின் அழகிற்கும், சிவப்பு நிறத்திற்கும் காரணமாகும். பித்தத்தினால் தேகத்தில் அணுக்கலுண்டாகும். ஆகவே, இது உடம்பில் எங்கும் பரவி சுழலும் தொழிலைச் செய்யும்.

உடம்பில் பிண்டோற்பத்திக்கு உதவியாக நின்று கருவியற்றும் தொழிலினால் தனிப்பட்ட முறைமையில் பிண்டத்தை உருவப்படுத்துதற்குக் காரணமாயுள்ளது. இந்த பித்தம்தான் அன்னரசத்தை மாற்றி, சீரணித்த உணவின் சத்தை அனேக உறுப்புக்களில் ஏற்றி, உடம்பு வளர்ச்சிக்கு ஒரு மூலப்பொருளைக் கொடுப்பதுமாகும். இது இரத்தத்தெளிவு, இரத்தம், அன்னரசச்சத்து, விந்துச்சத்து இவைகளில் மறைந்து நிற்கும். அன்றியும் பரிசம், பார்வை, வெப்பம், நுட்பம், இலேசுத்தன்மை முதலியவைகளும் பித்தத்தின் கூறேயாகும். மேலும், உடம்புச் சூடு, சீரண சக்தி, பார்வை, தாகம், பசி, உணவு விருப்பம், நிறம், அறிவு, ஞாபக சக்தி, சுறுசுறுப்பு, உடம்பு மிருது முதலியவைகளை உண்டாக்கி உடம்பைக் காப்பாற்றும்.

சிலேட்டுமம் அல்லது கபம் (Phlegm)

சிலேட்டுமம் உடம்பிலுள்ள வெப்பத்தைச் சமரசப்படுத்தும் தொழிலும், உடம்புக்கு ஆதாரமாக உள்ள சளிசவ்வு, எலும்பு மூட்டுகளை காக்கும் சளித்திரவம் முதலியவைகளை உண்டாக்கும் தன்மை உடையது. சாதாரணமாக வாத தேகியானவன் பலமுள்ளவனாகவும், நீண்டகாலம் வாழக் கூடியவனாவான். இது பிருதிவி என்ற பூதத்தில் அமைந்துள்ளதால் இதைச் சிலேட்டுமம் என்றும் கூறுவதுண்டு. உடம்பிலுள்ள ஒவ்வொரு சாலம் அல்லது கண்ணறைகளுக்கும் ஊட்டம் கொடுத்து உடம்பை வளரச் செய்யும்.

கபம் கோளாறடைந்தால் நுரையீரல் நோய் ஏற்படும். மேலும் உடம்பின் தசைமூலம், சளி, சவ்வு இவைகளுக்குக் கசிவுண்டாக்கி, ஈரந்தாங்கச் செய்யும். இது சத்துவகுண கூறுபாடானதால் நிறம் வெண்மையெனக் கருதப்படும். இது உடம்பின் அணுவாதித் தத்துவங்களைக் காப்பாற்றும் உடம்பின் தசைப்பாகத்தை ஒன்று சேர்த்துக் கட்டுக்கோப்பாய் இருக்கச் செய்யும். வாயுவின் சக்தியே கபமாகவும், பித்தமாகவும் மாறுதலையடைந்து தனித்தனியாகப் பிரிகிற தென்பதையும் உணரவேண்டும்.

மேலும், இச்சிலேட்டுமம் உடல் உறுப்புகள் சரிவரப் பக்குவமடைவதற்கும் உடம்பின் வலிவு சுறுசுறுப்பு, குளிர்ச்சி முதலானவையுண்டாக்குவதற்கும் இடம்கொடுக்கும். அன்றியும் இதன் தொழிலினால் உடம்பின் அமைப்பு ஒழுங்குபடுத்தப்படுவதுமல்லாமல் பருமன் இவ்வளவென்றும், கழிவுப் பொருளும் உடம்பில் கிரகிக்கக்கூடிய செரிமானப் பொருள்கள் இவ்வளவு என்கிற முறையையும் நிர்ணயிக்கும். இது சாலம் அல்லது கண்ணறைகளின் இடைவெளிகளை நிரப்பச் செய்து சீதள வழியாய் ஒன்று படுத்தும். உடம்பின் உறுப்புக்களில் வெப்பத்தினால் ஏற்படும் தகிப்பைத் தடுக்கும். உடம்பிற்குக் குளிர்ச்சி எண்ணெய்ப் பசையுள்ளதாயும், கைகால்களுக்குச் சக்தியும் வலிவும் மிருதுத்தன்மையையும் கொடுக்கும்.

யோகம்

சித்தர்களின் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றுள் யோகம் மூன்றாமிடத்தில் வைக்கப் பட்டுள்ளது. யோகம் என்பதன் முதலாவது அங்கம் சுவாசப் பயிற்சி. இரண்டாவது அங்கம் மனதைக் கட்டுப்படுத்துதல். யோகம் செய்தால் உடலை அழியாமல் பாதுகாக்க முடியும் என்பது பழங்கால சித்தர் மற்றும் ஞானிகளின் கருத்தாகும்.

ஒரு யோகியானவன் பிறருடைய உடம்பிற்குள் புகுந்து விடக்கூடும். இறந்த பிரேதத்தில் கூடப் பிரவேசிக்கலாம். பிறகு இவ்வுடம்போடு எழுந்து இங்கும் அங்கும் கூடத்திரியலாம். மேலும் புதிதாக மனிதரை சிருட்டிக்கலாம். மனதையும் உண்டாக்கலாம். இதனை ‘சிருட்டித்த உடம்பு’, ‘உண்டாக்கின மனது’ என்று கூறப்படும்.

யோகாப்பியாசம் ஒன்றினால்தான் பிறப்பு இறப்பை வெகு விரைவாகவும், சுருக்கமாகவும் முடித்துக் கொள்வதற்கு உரிய வழி. இத்தகைய யோகம் ஒரு குருவிருந்து தொட்டுக்காட்ட வேண்டும். அப்படியில்லாவிட்டால் உடம்பிற்குக் கெடுதி ஏற்படும்.

பரிசுத்தமான மனதே யோக நிலையில் குருவாகத் தனக்குள் நின்று காட்டிக் கொடுக்கும். ஏனெனில், தெய்வபக்தி மேலுக்கு ஓங்க, தன்னைத் தானறிவதற்குண்டான அறிவு விளக்கமும் மேம்பட விருத்தியாகும், அப்போது அந்த உயர்நிலை பெற்ற மனதே குருவாக நிற்கும்.

இதுபற்றிய விரிவான செய்திகளை இந்நூலின் யோகம் பற்றிய பகுதிகளில் காணலாம்.

ஞானம்

அறிவானது நான் என்ற அகங்காரம் கொண்டு எழாதபடி அடங்கித் தற்பரத்தில் பொருந்தி நிற்பது ஞானமாகும். இஞ்ஞானத்தை அடைய வேண்டுமென்றால் முதலாவதாக உடம்பைப் பல கற்பமூலிகைகளால் சித்தி செய்து கொள்ள வேண்டும். மேலும், சூக்குமகாரணசரீரங்கள் நான் அல்லவென்றும். அறிவே தனது சொரூபமென்றும் தெளிந்து சமநிலைபெற்று, இன்பதுன்பங்களற்று, செய்கையற்று, நினைவற்று இருக்கும் திருவிகற்ப நிலையை அடைந்து சிற்சொரூபத்தில் வயப்பட்டிருத்தலாகும்.

சித்தர் ஞானம்

தன்னைத்தான் அறியும் சித்தர்களின் பேரறிவு அல்லது ஆத்ம ஞானம் சிவனால் அளிக்கப்பட்டது. பொதுவாக, மனிதன் தன்னையும் ஆத்மாவையும் அல்லாமல் தன்னைச் சுற்றியுள்ள மற்ற மனிதர்கள், பொருள்கள் தன்மையையும் எங்கும் நிறைந்த ஈசனையும் விவேகத்தால் அறிந்து தெளிவடைவதினால் ஏற்பட்ட ஞானம், இதனால் அவர்கள் நோக்கம் என்னவெனில், உயிர் இருக்கும் போதே முக்திக்கு வேண்டிய சாதன வழிகளைத் தேடிவிட வேண்டும் என்பது தான். இவ்வித நிலையை ஆத்ம ஞானத்தினால்தான் அடையக் கூடுமென்பது அவர்கள் துணிபு. இதற்கு யோகம் முக்கிய ஆதாரமாகும்.

பஞ்சபூத தத்துவம்

சித்தர் நூலின்படி உலகத்திலுள்ள சடப்பொருளான பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்துமே பஞ்சபூதமாகச் சுட்டப்பட்டுள்ளன. சடமிறந்தால் அல்லது அழிந்தால் மேற்கண்ட ஐம்பூதங்களும் வெவ்வேறாய்ப் பிரிந்து போகும். ஆகவே மனித உடம்பும் மேற்கண்ட ஐம்பூதங்களினால் ஆக்கப்பட்டவை யாதலால், மனிதன் இறந்தவுடன் அவனினின்று பிரிந்துவிடும்.

பஞ்சபூதங்களும் - மனிதவுடம்பும்

1. பிரிதிவி - மண் - எலும்பு, தசை, நரம்பு, தோல், மயிர்

2. அப்பு - தண்ணீர் - பித்தம், இரத்தம், விந்து

3. தேயு - நெருப்பு - பசி, தாகம், தூக்கம், அழகு, சோம்பல்

4. வாயு - காற்று - சுருக்கம், விரிவு, அசைவு.

5. ஆகாயம் - வயிறு, இருதயம், கழுத்து, தலை இவைகளுக்குள்ள இடைவெளிகள்.

ஆக, மேற்கண்டபடி உலகப் பொருள்களெல்லாம் தோன்றலும், சீவித்தலும், அசைவதும், வளர்வதும், கடைசியாக அழிவதும் பழையபடி பஞ்சபூதங்களாக மாறுகின்றன என்பது இதனால் விளங்குகிறது. எனவே, உலகத்தில் முத்தொழில்களான சிருட்டி, காப்பு, சங்காரம் இவைகளுக்கு பஞ்சபூதமே காரணமாக உள்ளது.

முப்பு (முப்பூ)

சலவுப்பு (பூநீர்) + வாயுவுப்பு (நவச்சாரம்) + அக்கினியுப்பு (வெடியுப்பு) ஆகிய மூன்றும் கலந்து செய்யுமோர் உப்பு முப்பு என்று சொல்லப்படுகிறது. மேலும், இந்திரகோபம் ஒரு விராகனெடை, துருசு 2 விராகனெடை, பூநீறு ஒருவிராகனெடை, கடல்நுரை 5 விராகனெடை, நவச்சாரம் ஒரு விராகனெடை, வெள்ளி நிமிளை 8 விராகனெடை, இந்துப்பு ஒரு விராகனெடை, வெடியுப்பு 3 விராகனெடை, தாளகம் 3 விராகனெடை, கல்நார் 2 விராகனெடை, குருவண்டு ஒரு விராகனெடை, பொன்னம்பர் 5 விராகனெடை, ஆக இவ்வனைத்தையும் சேர்த்து திருநீற்றுப் பச்சை இலைச்சார் விட்டரைத்துப் பின்பு கருப்புவட்டக் கிலுகிலுப்பை, செங்கீரைச்சாறு, எருக்கம்பால், ஆண்பிள்ளைச் சிறுநீர், முலைப்பால் ஆகியவற்றில் சேர்த்து அரைத்து அம்மருந்தைப் பனியில் பூரணை தொடங்கி இரவெல்லாம் வைத்துக் கொண்டு இதுபோல் 10 நாட்கள் வரை செய்து கடைசியாக வெள்ளைப்புனுகைக் கரைத்து எலும்பிச்சம் பழச்சாறு கலந்து 10 நாள் வரை முன்சொன்னபடி பனியில் வைத்து எடுக்கவும். இது தினையைப் போல் சிறிது பெரிதாகிக் கடுகளவாய்ப் பிரகாசிக்கும், காயசித்திக்கும், இரசத்தைக் கட்டி கவுன குளிகை செய்வதற்கும் மருந்துகளுக்கு உயிரைப் போலவும் உதவியாக உள்ளது. மருந்துகளை ஒரேபுடத்தில் செந்தூரமாகவும், பற்பமாகவும் செய்யும் தன்மையுடையது. இது பதினெண்வகைக் குட்டரோகங்களையும் இன்னும் பல நோய்களையும் குணமாக்கும் வலிமையுடையது.

சிலநோய்களின் பெயர்களும் விளக்கங்களும்

பாலகிரகணி தோசம் : இது குழந்தைகளைத் தாக்கும் ஒரு கழிச்சல் ரோகமாகும். சாதாரணமாக வேனிற் காலத்தின் வெப்பத்தினாலும், அசீரணத்தால் வெள்ளோட்டக் கழிச்சலாகவும், பற்கள் முளைக்கும் போதும்; பால் அல்லது உணவு குற்றம், சீதோசண நிலை, கக்குவான் நேர்ந்த போதும் பாலகிரகணி தோசம் உண்டாகலாம்.

பாலகிரக தோசம் : குழந்தைகளைத் தாக்கும் நவக்கிரக தோசமாகும். இது குழந்தைகள் பால் குடிக்கும் போது தாய் கிரமப்படி நடவாத குற்றத்தினால் கிரகங்களின் ஏவலினால் பேய், பூதங்கள் குழந்தைகளைத் தாக்கும். அப்போது நோய்கள் பலவிதமாகக் காணும் இவற்றில் சில நோய்கள் அசாத்தியமாகவே காணப்படும்.

பால குரண்டகம் : பித்த தோசத்தினால் பிள்ளை அல்லது குழந்தைகளுக்கு உண்டாகும் ஓதம். இது இடது பக்கம் இருந்தால் இடது காதையும், வலது பக்கம் இருந்தால் வலது காதையும் நிவர்த்திக்காகத் துளை செய்யப்படும் ஒருவித மருத்துவ முறையாகும்.

பால சஞ்சீவிக் குளிகை : திரிகடுகு, ஓமம், இலிங்கம், வெண்காரம், கிராம்பு இவைகளைச் சமனெடை கொண்டு எலும்பிச்சம் பழச் சாற்றினால் அரைத்து உருவாக்கிய மாத்திரை. இதை குழந்தைகளுக்கு முலைப் பாலில் கொடுக்க சன்னி சுரம் போகும். பெரியவர்களுக்கு வெற்றிலையில் கொடுக்க சலதோசம், தலைபாரம் போகும்.

பால சஞ்சீவி எண்ணெய் : குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் ஒரு மாந்த எண்ணெய். இதனால் கண்சூடு, காய்ச்சல், அட்சரங்கள் குணமாகும்.

சூலை : நரம்பின் வழியாய்க்கெட்ட நீர் சென்று உடம்பில் பரவி வீங்கி, கைகால் பொருந்துகளில் கரடுகட்டி உடம்பெல்லாம் தடித்துப் புண்ணாகும். மேலும். வெடித்துச் சீழும் நீரும்வடியும். புறங்காலில் நமைச்சல் ஏற்படும். வீங்கிக் கொப்புளம் போல் திரண்டு உடையும். இதில் கைகால், பொருத்துகளில் வீக்கமுண்டாகி வலியும் ஏற்படும். இது வெடிசூலை, நீர்ச்சூலை, வெறிச்சூலை, சுரச்சூலை, தண்டுச் சூலை, இரணச் சூலை, உட்டுச் சூலை, இரத்தச் சூலை, அண்டச் சூலை, குதிகரட்டுச் சூலை, புண்சூலை, வறட்சூலை, புத்துச் சூலை, கபாலசூலை, அடிநாக்குச் சூலை, வாதபித்தசூலை, கரட்டுச்சூலை, அத்திசூலை, அடிவயிற்றுச் சூலை, சயகணச்சூலை, சிலேட்டும பித்தசூலை, விலாச்சூலை, தொந்தசூலை, அட்சசூலை, வற்கார சூலை, கற்சூலை, சுன்னச்சூலை, திரிதோச சூலை,

நாபிச்சூலை, வடிசூலை, இடிசூலை, நேத்திரசூலை, முடக்குசூலை, கிருமிசூலை என முப்பத்து நான்கு வகைப்படும்.

பெரும்பாடு : பெண்களின் மாதவிடாய் ஆகுங்காலத்தில் ஒழுகும் இரத்தம் சரிவர வராது தடைபடுவதினால் பெரும்பாடு உண்டாகும். கருப்பையின் நுனியிலுள்ள இரத்த சரங்கள் பலம் குறைந்து நார்கள் தளர்ச்சியாகி கருப்பை கன்றி உடம்பில் இரத்தம் உபரியாகிக் காணும் இரத்தத்திற்குப் பெரும்பாடு என்று பெயர்.

பேய்நாய்க்கடி சன்னி : வெறிகொண்ட நாயின் வாய்நீர், கடித்த காலத்தில் இறங்கி இரத்தத்தில் சென்று நரம்புகளுக்குப் பரவும் ஒருவகை நோயாகும். இதனால் விரணமுண்டாகி கண் மயக்கம் கால்பிடிப்பு, வாய் நீருறல், சுரம், தாகம், மூர்ச்சை, மார்பு வலி முதலிய குணங்களுண்டாகும்.

பைத்திய சன்னி : அடிக்கடி எழுந்து ஓடி தரையிற் புரண்டு வாய்விட்டலறிச் சீலையையுரித்துக் கிழித்து, ஆடிப்பாடிக் கைக்கொட்டும் ஒருவித சன்னி நோய்.

பைத்திய சுரம் : பித்தத்தினால் வெறியையுண்டாக்கும் ஒருவகைச் சுரம்.

பைத்தியம் : பித்தமானது சிரசின் மேலேறி அகங்காரத்தை எழுப்புவதினால் புத்திக்குப் பிரமை தோன்றி மனம்விட்டுக் கூத்தாடி, வெளிவந்து பிசாசு கொண்டவன் போல் திரியும் ஒருவித நோய்.

பௌத்திர ரோகம் : போகத்தினால் கனல்மிஞ்சி மேகமுண்டாகி பீசத்திற்கும் அபானத்திற்கும் இடையில் கொடியின் அடிநரம்பில் மேலாவது அதன் இருபக்கத்திலாவது அண்டம் அபானவாயு ஆகிய இவைகளிலாவது நமைச்சலெடுத்து வீங்கி நொந்து கொப்பளித்துச் சீழும்சலமும் வடிந்து பிறகு, புரையோடி நரம்பழுகிக் கண்கள் உண்டாகி அதன் வழியே மூத்திரமும், மலமும் இறங்கி அதனால் உடம்பு மெலிந்து சாப்பாடு செல்லாது ஆயாசத்தையும், களைப்பையும் உண்டாக்கும் ஒருவகை நோயாகும்.

மஞ்சட்காமாலை : அக்கினி மந்தித்து அன்னம் ஒழித்து கண், மலம், நீர் மஞ்சணித்து இருக்கும் ஒருவகை காமாலை நோய்.

மண்குத்து நோய் : பெண்கள் பிரசவித்தவுடனே அழுக்கினால் மார்பு, தலை, கீழ்வயறு இவ்விடங்களில் காணும் பொறுக்க முடியாத குத்தல் நோயாகும்.

மண்டல குட்டம் : கொப்புளங்கள் வட்டவட்டமாகப் பச்சை அல்லது சிவப்பு நிறமாகக் கண்டு நாளுக்குநாள் அதிகமாய்

எழும்பி உடைந்து ஒன்றோடொன்று சேர்ந்து வேதனையை உண்டாக்குமோர் குட்டநோயாகும்.

மகோதரம் : உடம்பில் வெப்பம் அதிகரித்து நீருண்டாகி உடம்பு கனத்து வயிற்றில் வாயுவும் நீரும் கோர்த்துப் பெருக்கும். இரவுக் காலத்தில் வாயு கலைந்து வாதை மிகவுண்டாக்கி நெஞ்சுலர்ந்து தாகம், ஆயாசம் உண்டாக்கும் ஒருவகை நோயாகும்.

மந்தாக்கினி : உண்டவுணவை உடனே தகிகாமல் வயிற்றிரைச்சல், வயிற்றுப்பிசம் முதலிய குணங்களை உண்டாக்கி வெகு நேரத்திற்குப்பின் செரிக்கும் தன்மையை உண்டாக்கும் நோய்.

மந்தாக்கினி வாயு : பசிமிகவுண்டாகிக் கண்டதைத்தின்ன விரும்பி, அதனை உட்கொள்ள மாட்டாது வாந்தியெடுத்து, வயிற்றில் எரிச்சல்கண்டு, பலங்குறைந்து உடம்புவெளுக்கும் ஒருநோயாகும்.

பற்றுப்போடும் முறை

அரையாப்புக் கட்டிக்கு - பால் சாம்பிராணித் தூள், கற்பூரம் மூசாம்பரம், பெருங்காயம் இவைகளை நன்றாக அரைத்துப் பூசும் பற்று.

கிளிஞ்சல் சுண்ணாம்பு, கோழிமுட்டை வெள்ளைக் கரு இவ்விரண்டையும் கூட்டி அரைத்துப் பூசும் பற்று.

தேன் மெழுகு, வெள்ளைப் பாசாணம் இவ்விரண்டையும் அரைத்துப் போடும் பற்று.

சித்திரமூல வேர்ப்பட்டையும் கற்சுண்ணாம்பும் அரைத்துப் போடும் பற்று எனப் பலவகைப் பற்று முறைகளை அரையாப்புக் கட்டிக்குக் கூறலாம்.

சாதாரண கட்டி உடைவதற்குப் போடும் பற்று

ஆளிவிதையும், அரிசிமாவும் கூட்டிக் கொதிக்க வைத்துக் கட்டும் பற்று ஒருமுறை.

துத்தியிலையும், துத்தமும் சேர்த்துக் கட்டும் பற்று ஒருமுறை.

குதிரைக் குளம்படி இலை, பிரமியிலை, பிரமதண்டு இலை, சிறுபசளியிலை, இதில் ஏதாவது ஒன்றை எண்ணெயில் வதக்கி அரைத்துக் கட்டும் பற்று.

அடிபட்ட காயம், வீக்கத்திற்குக் கட்டித்தயிர், கோழி முட்டை மஞ்சள் கரு, கற்சுண்ணாம்பு, நாட்டுச் சவுக்காரம் இவைகளை அரைத்துப் பூசினால் குணமாகும்.

நரம்புச் சிலந்திக்கு அரிசிச்சோறு, பாதரசம் இரண்டையும் அரைத்துக் கட்டினால் கட்டி உடையும். வாழைப்பழம், பெருங்காயம் இவ்விரண்டையும் மதித்துப் புண்மேல் பற்றுப் போட்டால் ஆறிவிடும்.

பிளவை, பவுத்திரம், அரையாப்பு, கண்டமாலை இவற்றுக்கு அவரியிலை, மருதோன்றியிலை, குன்றிமணி, கலப்பைக் கிழங்கு, எட்டி விதை, பெருமரத்துப்பட்டை, கஞ்சாப் பூண்டு, பெருங்காயம் இவைகளைத் தண்ணீர் விட்டரைத்துக் கொதிக்க வைத்துப் பூசினால் நோய் குணமாகும்.

தேள், பூரான் இவைகள் கடித்து வீங்கிய இடத்தில் கல்சுண்ணாம்பு, முருங்கப்பட்டை, வெங்காயம், வசம்பு, பேய்ப்பீர்க்கு இவைகளைப் பால்விட்டரைத்துப் பூசினால் விச குணம் நீங்கி வீக்கம் வற்றிக் குணமாகும்.

ஆக, பதிப்புரை என்ற இப்பகுதியில் தமிழ் ஓலைச்சுவடிகள் பற்றிய பொதுவான செய்திகளும், சுவடி விளக்க அட்டவணை பற்றிய செய்திகளும், அமைப்பு முறை, மாதிரிப் படிவம் போன்றவற்றிற்கு விளக்கமும், சித்தமருத்துவம் பற்றியே இந்நூல் பேசப்படுவதால் அவைபற்றிய பொதுவான விளக்கமும் மேற்கண்டவாறு தரப்பட்டுள்ளன.

நன்றியுரை

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணைத் தயாரிப்புத் திட்டப்பணியை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கி, அப்பணிக்காக மத்திய அரசின் நல்கையைப் பெற்று, அத்திட்டப்பணி தொடங்குவதற்காக நிறுவனத் தலைவரின் அனுமதியையும் பெற்று எங்களை இப்பணியில் ஈடுபடுத்திய நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு நாங்கள் என்றும் நன்றிக் கடப்பாடுடையோம். ஓலைச் சுவடிகளைப் பார்வையிடத் தந்தும், பல ஆக்கப் பூர்வமான கருத்துக்களை நல்கியும் எங்களுக்கு உதவி புரிந்த அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் காப்பாட்சியர் முனைவர் சு. சௌந்தரபாண்டியன் அவர்களுக்கும், அந்நூலக அனைத்து நண்பர்களுக்கும் எங்கள் நன்றி. இத்திட்டப்பணியின் போது எங்களுக்கு அனைத்து வகையிலும் உதவி புரிந்த நிறுவன நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

பதிப்பாசிரியர்கள்

பொருளடக்கம்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அ.கீ.சு.நூ.	-	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
ஆ.நி.	-	ஆசியவியல் நிறுவனம்
உ.த.நி.	-	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ம.மை.ஆ.நி.	-	சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்
த.ச.ம.நூ.	-	தஞ்சை சரசுவதி மகால் நூலகம்
த.ப.க.	-	தமிழ்ப் பல்கலைக் கழகம்
தி.ஆ.	-	திருவாவடுதுறை ஆதீனம்
இ.R.No.	-	புத்தாக்கத் தாள் சுவடி எண் (Restored Manuscripts)
ஈ. R.No.	-	தாள் சுவடி எண் (Paper Manuscripts)
D.	-	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள ('D' எண்கள் பெற்ற) தமிழ்ச்சுவடி (Manuscript No. (in the Descriptive Catalogues of the Tamil Manuscripts) in the Government Oriental Manuscripts Library, Chennai.)
R.	-	அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள (மூவருட விளக்க அட்டவணைகளில் 'R' எண்கள் பெற்ற) தமிழ்ச் சுவடி (Manuscript No. in the Triennial Catalogues of Manuscripts in the Government Oriental Manuscripts Library, Chennai.)
T.D.	-	தமிழ்ச் சுவடிகள் கட்டு எண்
T.R.	-	தமிழ்ச் சுவடிகள் கட்டு எண்
—.	-	இல்லை
(பதி.)	-	பதிப்பு

அகத்தியர் 1

I. 1. **761.** 2. அ. R.7017. ஆ. T.R.2825. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஒன்று. ஆ. Akattiyar Oṉṟul. இ. அகஸ்தீஸ்பரர் அருளிச்செய்த ஞான விளக்கம் 1. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 22x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பு இல்லாதது. 11. சிதைவு. 12. ஒரு பக்கம் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. மொத்த வரிகள் 6. 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1 பாடல்.

ஆ. —.

III. 1. ஞான விளக்கம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் அருளிச்செய்த ஞான விளக்கம் என்ற இந்நூலில், உண்ணும்போது உயிர் எழுத்து அடங்கி நிற்கும், உறங்குகின்றபோதும் அவ்வாறே நிற்கும், பெண்ணின் பால் இன்பமாக இருக்கும்போது அவ்வுயிர்க் காற்று மேல் வாங்கி அறிவறிந்து நிற்கும். மேலும் இலை, காய், பழம் இவைகளைத் தின்னும் போதும், தினம் தினம் உள்ளே செல்லும் அக்காற்றானது மண்ணின் மேல் பல ஊழிக்காலம் இருக்கும். இத்தத்துவத்தை அறிந்தால் மரணமில்லாப் பெருவாழ்வு வாழலாம் என்று இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தீஸ்பரர் அருளிச்செய்த ஞான விளக்கம் 1.

5,6. **ஒ(உ)ண்ணும்போ துயிரெழுத் தடங்கி நிற்கும்**
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகும்
பெண்ணும்பா லிந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணியுயிர் மேல்வாங்கி அறிவ றிந்து
திண்ணம்மா யிலைபூண்டு யருந்தும் போதெல்லாந்
தினந்தினமு நாள்தோறுஞ் செலுத்து வார்க்கு
மண்ணின்மே லினியூழி காலம் வாழ்ந்து
வருங்கால மறிந்திடினும் மரண மாகார். 1

7. தெட்சிணாமூர்த்தி துணை.

8. மூலம். 9. பாடல் எளிய நடையில் சிறு பிழைகளுடன் அமைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 3630. 2. த.ப.க. எண் 574, சி.ம.மை.ஆ.நி.எண் 1340(d). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகஸ்தியர் ஞானச் சுருக்கம் 1,** 'அகஸ்தியர் ஞான அமுதம்', தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. அ.கீ.சு. நூலகச் சுவடி எண் R.3630 இல் இந்நூலின் தொடக்கம் உண்ணும்போது என்றும், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிறுவனச் சுவடியில் 'உண்ணும்போதுயிரெழுத்தை உயர வாங்கி' என்றும், தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடியில் 'ஓர் எழுத்தை உயர ஏத்தி' என்றும் பல பாடபேதங்களுடன் இப்பாடல் காணப்படுகிறது.

அகத்தியர் 1

I. 1. **762.** 2. அ. R.7014. ஆ. T.R.2825. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஒன்று. ஆ. Akattiyar o<u>nr</u>u. இ. அகஸ்தியர். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம் கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 22x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. இரண்டு பக்கத்திலும் 4 வரிகள் மட்டும் எழுதப்பட்டுள்ளன. 13. 3+1 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1 பாடல்.

ஆ. —.

III. 1. ஞானம் பற்றிய செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் ஒன்று என்ற இந்நூலில் 'அ'

என்ற உயிரெழுத்தைக் கம்பத்தெழுத்து என்றும், கடையெழுத்து என்றும், கால்மேலாகக் கடந்த எழுத்தென்றும், உம்பர்குரிய உயிரெழுத்து என்றும், செம்பொற் கிரியைச் சேர்ந்தெழுத் தென்றும், எல்லோருக்கும் அருள்புரியும் எழுத்து என்றும், ஐம்பத்தொரு அட்சரத்திற்கும் இது முதல் எழுத்து என்றும் கூறப்படுகிறது.

4. அகஸ்தியர்.

5. **கம்பத் தெழுத்தோ கடையெ ழுத்தோ**
கால்மே லாக கடந்தெ ழுத்தோ
உம்பர்க் குரிய உயிரெ ழுத்தோ
ஒருகா லிருகா உணர்ந்தெ ழுத்தோ
செம்பொற் கபாடந் திறந்தெ ழுத்தோ
சேர்ந்தோர்க் கெல்லாஞ் செயல் புரியும்
அன்பத் தோரெழுத் தாய்நம் மய்யா
அகார முதலவ் வெழுத்தென் றாரே.

7. —.

8. மூலம். 9. பாடல் எளிய நடையில் அமைந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 254(a). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகஸ்தியர் **மெய்ஞான சூத்திரம் 33**, அகஸ்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. எஸ்.பி. ராமச்சந்திரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட தாமரை நூலகத்தார் வெளியிட்டுள்ள 'அகஸ்தியர் ஞான அமுதம்' என்ற நூலில் 'அகஸ்தியர் மெய்ஞான சூத்திரம் 33' என்ற நூலின் காப்புப் பாடலாக இப்பாடல் அமைந்துள்ளது.

அகத்தியர் 5

I. 1. **763.** 2. அ. R.1814(a). ஆ. T.R.1039. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 5. ஆ. Akattiyar 5. இ. அகஸ்தியர் அஞ்சு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு 4. 1. 5. 34x5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 2; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 16 முதல் 18 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 5 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருந்து வகைக்கும், பத்திய முறைகளுக்குமான முறிவு வகையினைப்(மாற்று மருந்து) பற்றி இந்நூல் கூறுகிறது. 2. மருத்துவம். 3. பல்வேறு நோய்களுக்கான முறிவுவகை பற்றிக் கூறும் இந்நூல். நோய்களுக்குத் தகுந்தவாறு மருந்துகளைப் பயன்படுத்தும் விதமும், பத்தியம் இருக்கும்முறையும், அப்பத்தியத்தின்போது மாற்று மருந்துகள் என்னவற்றைப் பயன்படுத்தவேண்டும் என்பதையும் கூறுகின்றது. பாசாணம், ஊமத்தை, சேற்றாங்கொட்டை, அரளிவிதை, எட்டி விதை, கள்ளிப்பால், தேன், சுண்ணாம்பு, இஞ்சி, நாகப்பழம், சீந்திக்கொடி, நெல்லிக்காய், குளிர்ந்த நீர் ஆகியவை முறிவுக்குரிய மருந்துப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் அஞ்சு.

5. ஆகமாய் தெட்சிணா மூர்த்தி சொன்ன
அப்பனே முறிவுவகை யென்ன வென்றால்
பாகமாய் யன்னாவி பாஷா ணந்தான்
பாங்கான ஊமத்தை சேற்றாங் கொட்டை
வாகமாய் அரளியொடு யெட்டி வித்து
மைந்தனே கள்ளிப்பால் தேன்சுண் ணாம்பு
தாகமாய் அஞ்சுவகை யெல்லாத் துக்கும்
சாத்தினேன் அஞ்சிலே பாரு பாரே. 1

6. போமப்பா சுண்ணாம்பு மிஞ்சி தானால்
புகழாக சீந்திக்கொடி மென்னால் போகும்
....
....
சேமப்பா னாகப்பழம் முறிவ தாக
செப்புகிறேன் நெல்லிக்காய் தின்ன வேணும்

சாமப்பா தேனுக்கு குளிர்ந்த சலங் குடிக்க
சாடியே போகுமடா அஞ்சு முற்றே. 5

7. அகத்தியர் அஞ்சு முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகஸ்தியர் நஞ்சுமுறிவு 5,** அகஸ்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் வைத்திய நூல் (R.1808) என்ற நூலும் அமைந்துள்ளது. தாமரை நூலகம் வெளியிட்டுள்ள பதிப்பில் இந்நூல், மிகுந்த பாடவேறுபாடுகளுடன் காணப்படுகிறது.

அகத்தியர் 5

I. 1. **764.** 2. அ. R.6971(b). ஆ. T.R.2803. இ. —. ஈ. —. 3. —. ஆ. —. இ. அகஷ்த்தியர் சூஷ்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையகவுண்டன் பட்டி எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 36x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 3; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 5 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்ட சித்திகள், இரசவாத மருந்துகள், யோகசித்திகள் போன்றவற்றைக் கூறும் நூல். 2. இரசவாதம் - அட்டசித்தி. 3. எண்வகைகளான அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனும் சித்திகளை

யோகியோர்க்குக் கூறுவதாக இந்நூல் தொடங்குகிறது. ஐம்புலன் ஒடுக்கத்துடன் மருந்துகள் தயாரித்தல் பற்றியும், நோயின்றி மானிடர்கள் வாழ்வதற்கு வழிமுறைகள் கூறுவது பற்றியும், சில மந்திர உச்சாடனங்கள் பற்றியும், தங்க பற்பம் செய்யும் முறைபற்றியும், இரசவாதம் செய்தல் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. இறுதியில், இவற்றை வேறுயார்க்கும் கூறாதே எனவும் பாடப்பெற்றுள்ளது.

4. —.

5. நாடியதோர் தந்திமுகன் தனைப்ப ணிந்து
    நயமாக உரைத்திடுவேன் நந்தி பின்னும்
தேடியதோர் மந்திரத்தால் அஷ்ட சித்தி
    திறமாக உரைக்குறேன் யோகி யோர்க்கும்
கூடியதோர் கெந்தமதை சிதம்ப ரத்தில்
    குணமான கால்தன்னை கூட்டி மூட்டி
ஆடியதோர் ஐம்புலனை மூலத் துள்ளே
    அரகரா மூல க்ணபதியே காப்பு. 1

6. தோஷமது தீர்வதற்கு குலிசம் கேளு
    சொல்லுகுறேன் அகாரமொடு உகாரஞ் சேரு
வாசமுடன் மார்க்கமது சிகாரம்ந் தானும்
    வகாரமுடன் பிரணவந்தான் நிலையே யாகும்
பாசமுடன் நீசேர்ந்து மவுன மாகி
    பாங்கான நாதவோசை சிதம்ப ரத்தில்
ஓசையுடன் உறுதியாய்தி யானித் தேதான்
    வொருவருக்கும் வில்லாதே அஞ்சும் முத்தே. 5

7. —.

8. மூலம். 9. ர/ற, ழ/ள, ன/ந வேறுபாடின்றி ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. இரு மெல்லின ஒற்றுகள் வருதல் (எ.டு. தந்திமுகன்ந் தனைப்பணிந்து) காண்க. 'உரைக்கிறேன்' என்பது பேச்சுவழக்கில் 'உரைக்குறேன்' என எழுதப்பட்டுள்ளது. வட எழுத்துக்கள் வந்துள்ளன. பாடபேதங்களும் உள்ளன. 'விள்ளாதே' என்பது 'வில்லாதே' என்றும், 'ஐந்து' என்பது 'அஞ்சு' என்றும் பிற பேச்சுவழக்குகளும் வருதல் காண்க. 10. நந்தி முனி குறிப்பிடப்படுகிறார். 11. இல்லை.

IV. 1. T.D. 623, R. 238(e), R. 9230. 2. ஆ.நி. எண்கள் 524, 656(i), த.ச.ம.நூ.எண்கள் 236(h), 267(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சித்த வைத்தியர்கள் சில முக்கிய மருத்துவ முறைகளைப் பிறர்க்கும் கூறாது மறைபொருளாக வைத்திருந்தனர். ஏட்டில் கூட எழுதிவைத்தலைத் தவிர்த்தனர். அதனால் பல முக்கிய மருத்துவமுறைகள் இழந்துபட்டன.

அகத்தியர் 8

I. 1. **765.** 2. அ. R.6861(d). ஆ.T.R.2781. இ. —. ஈ. —. 3. வைத்தியம் பலதிரட்டுச் சூத்திரம். ஆ. Vaittiyam palattiraṭṭuc cūttiram. இ. கும்ப முனி பாடல். சிசுகள் தோசம் 108க்கும் மருந்து வகைக் குளுகை பாட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையகவுண்டன் பட்டி எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து வாங்கப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 5; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. குறை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. குழந்தை நோய்களுக்குச் சிவ குளிகையின் பலன் கூறும் நூல். 2. மருத்துவம். 3. மாந்தம், கணை, மயக்கம், வாந்தி இவற்றுக்கு மருந்துகள் குறிப்பிடப்படுகின்றன. சித்தர்கள் கண்ட மருந்துகள் எனவும், குழந்தைகளுக்குக் கணை, தோசம் ஏற்பட்டால், நொச்சியிலைச்சாறு பிழிந்து கொடுத்தால் அவை நீங்கும் எனவும், சளி, இருமல், கரப்பன், கிரந்தி போன்ற நோய்கள், மருந்துச்சாறுகளால் தீரும் என்றும், குழந்தைகள் நோய்கள் சிவகுளிகையால் குணமாகும் என்றும் கூறப்படுகிறது.

4. பண்டித ஆறுமுக மணியக்காரன் ஏடு.

5. **பாரப்பா சித்தரெல்லாம் சொன்ன மார்க்கம்**
பாங்கான வயித்தியரே யின்நூல்(ப்) பாரு

வாரப்பா மாந்தமொடு கணைபிறளி மயக்கம் சத்தி
வந்தவந்த பிணி(க்)கெல்லாம் வகைவிபரம்
சொல்லுறேன் மகிழ்ந்துகேளு
சொன்னார் கணபதி நென்பெருமகூடித் துரையாக
ஒருகொற்றவை பாடினார்கள் அன்னையல்லா
யெனை(ப்)பார்த்து அகஷ்த்தியரே நீர்தாமும்
அரைநொடியில் பாடென்றார்கள்
அப்பனே சிவகலையாய் பாடி னேனே. 1

6. கேளப்பா யெங்களொடு கணைகள் கெல்லாம்
கெட்டியடா னொச்சி சாத்தில் லோரும்
வாழ்அப்பா சளியிரும லுக்கு மைந்தனே
வேனயுட சாத்தில்(ப் போமே
வீழப்பா கரப்பன் கிரந்திக் கெல்லாம்
விதமான அமுக்கலாயிலைச் சாத்தில்(ப்) போமே
ஆளப்பா குழந்தைகளுக்கு நோய்தான் வந்தால்
அகலுமே சிவகுளுகையாள் அடக்கம் முற்றே. 8

7. சிவமயம். ஆறுமுகமணியக்காரன் ஏடு.

8. மூலம். 9. பிழைகள் மிகுதி. 'லகரத்'திற்குப் பதிலாக 'ளகரம்' பயன்பட்டுள்ளது. (எ-டு) 'யெங்கலொடு', 'சளியிருளுக்கு', 'அகளுமே', சிவகுளுகையாள்' என வந்திருக்கின்றன. ஒற்றெழுத்து மிகுதல், பிழைகள் காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல், 108 தோசங்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் என்கிறது. இந்நூல், பிற 8 பாடல்கள் கொண்ட நூல்களினின்றும் வேறுபடுகிறது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இதன் இறுதியேட்டின் மறுபக்கத்தில் மருத்துவக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

அகத்தியர் 8

I. 1. **766.** 2. அ. R.6253. ஆ. T.R.2649. இ. —. ஈ. —.
3. அ. அகத்தியர் சோதிமணிச் சுருக்கம். ஆ. Akattiyar cōtimaṇic

curukkam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்புச் செய்த சுவடி. 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 29x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. இடது ஓரங்கள் முறிந்துள்ளன; சிதைவு. 12. 4; இறுதிப்பக்கத்தில் 1 வரி மட்டுமே இடம் பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூலில் சரியை, கிரியை, ஞானம் பற்றியும், 'சிவாயநம' எனும் மந்திர எழுத்துக்களை உச்சரிப்பதால் ஏற்படும் நன்மை பற்றியும், மருத்துவ உப்புவகைகளுள் பாறை உப்புப் பற்றியும் கூறுகிறது. 2. மந்திரம் - மருத்துவம். 3. சித்தர்கள் கொள்கைகளான சரியை, கிரியை, ஞான மார்க்கம் பற்றியும் 'சிவாயநம' எனும் ஐந்தெழுத்துக்களை, அம்மார்க்கங்களைக் கடைப்பிடிக்கும்போது உச்சரித்தால் ஏற்படும் நன்மை பற்றியும், இந்நூல் எடுத்துரைக்கின்றது. அவற்றுடன் துரியம், அப்பு, உப்பு, பாறையுப்பு என்பன பற்றியும் கூறுகின்றது. அகார உகாரங்களுள் அனைத்தும் அடங்கும் என்றும், இத்தத் துவங்களைச் சித்தர் அறிந்தனர் என்றும், அறியாதவர் மூடர் என்றும் கூறுகின்றது. இவ்வாறு, சித்தர்கள் கண்டறிந்த மார்க்கங்களையும், 'சிவாயநம' மந்திரங்களை உச்சரித்தும், இங்கே கூறப்படும் மருந்துகளை உண்டும் வாழ்வோர் 125 ஆண்டுகள் வாழ்வர் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. —.

5. சிவசிவசிங் அங்க உங்கென்று
 திரும்பவே அறிகிலியு மங்கென் றோது
சரிதையொடு கிரிகையிது ஞான மப்பா
 தப்பாது உங்கிலியுஞ் சவ்வென் றோது
பரிசமொடு பூரணத்தி லியங்கும் வாய்வு
 பார்(க்)கையிலே ஓம்சிவய வசியென் றோது
துரியமடா துரியத்தில் அப்பு உப்புஞ்
 சூட்டுறேன் பாறையுப்பைச் சொல்லு றேனே. 1

6. குறியான அகாரமே உகார மாச்சுக்
குத்தமில்லா.... ழுத்து மிதனுள் ளாச்சு
அறியாத பொருளாவி யிதனுள் ளாச்சு
அனைத்துயிர்க்கும் பிறப்பிறப்பு ...ள் ளாச்சு
வழியாக யிதுமூன்றுஞ் சேத்தோர் சித்தன்
வழியறியான் மூடனென்ற கழுதை.....
ஒளியாகுஞ் சோதிமணி யிதுவே யாகும்
உயரவைத்த நாகமணிக் கிரீடன் றானே. 8

7. —.

8. மூலம். 9. பேச்சுவழக்குச் சொற்கள் வந்துள்ளன. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 'தெரிசனம்' எனும் சொல் இந்நூலில் இல்லை; இதுபோன்ற பாடவேறுபாடுகள் பல வந்துள்ளன. ற/ர, ழ/ள வேற்றுமையின்றி எழுதப்பட்டுள்ளது. 10. தத்துவம், மந்திரம், மருத்துவம் எனும் மூன்றையும் ஒருங்கே கூறும் அரியநூல் இது. 11. இல்லை.

IV. 1. T.D. 623, R. 238(h), R. 2485, R. 4859, R. 6861(b), R. 10658(c). 2. ஆ.நி.எண் 656(h), த.ப.க. எண்கள் 734, 1903. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (1). சி. சபாபதிபிள்ளை (பதி.), **அகத்தியர் சோதிமணி சூத்திரம் 8,** ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக் கூடம், சென்னை, 1880, (2) எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் சோதிமணிச் சூத்திரம் 8,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை (முதல்தொகுதி), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு 'அகத்தியர் சோதிமணி சூத்திரம் (சுருக்கம்) எனும் பெயரும் இருப்பது தெரியவருகின்றது.

அகத்தியர் 8

I. 1. **767.** 2. அ. R.6861 (b). ஆ.T.R.2781. இ. —. ஈ. —. 3. அ. வைத்தியம் பலதிரட்டுச் சூத்திரம். ஆ. Vaittiyam palatiraṭṭuc cūttiram. இ. அகத்தியர் பாடல் வகார உப்புகட்டு 8.

4. —. 5. —. 6. ஆறுமுக மணியக்காரன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையக்கவுண்டன் பட்டி எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து வாங்கப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 5; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சித்தர்களின் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன பற்றியும், 'சிவாயநம' எனும் ஐந்தெழுத்து மந்திரச் சிறப்புப் பற்றியும், சில மருத்துவக் குறிப்புகளையும் கூறும் நூல். 2. மந்திரம் - மருத்துவம். 3. வரிசை எண் 766 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவேதுணை.

5. சிவாய வசிங்அங் உங்கென்று
திரும்பவே அரிகிலியுங் அங்கென் றோது
சரிதையொடு கிரிகையது ஞான மப்பா
தப்பாது உங்கிலியும் சவ்வென் றோது
பரிசமொடு பூரணத்தி லியங்கும் வாய்வு
பார்க்கயிலே ஓம்சிவய வசியென் றோது
துரியாமடா சரியத்தில் அப்பும் உப்பும்
சூட்டுகிறேன் பாறைஉப்பைச் சொல்லு றேனே. 1

6. குறியான அகாரமொடு உகார மாச்சு
குத்தமில்லா முதலெழுத்து யிதுக்குள் ளாச்சு
அழியாத பொருளாயி பாருக்குள் ளாச்சு
அனைத்திருக்கும் பிறப்பிறப்பும் பரத்துள் ளாச்சு
வழியாக யிதுமூன்றும் சேத்தோர் கப்பா
வழியறியார் மாடென்ற கழுதை மாடு
ஒளியாகும் சோதிமணி யிதுவே ஆகும்
உயரவைத்த னாகமணிக் கிரீடந் தானே. 8

7. சோதிமணிகிரீடமுற்றும். பண்டித ஆறுமுக மணியக்காரன் ஏடு. வாலசுப்பிரமணியர் துணை. மதுரை வீரய்யன் துணை.

8. மூலம். 9. பாடபேதங்கள் காணப்படுகின்றன. 'தெரிசனமாம்' எனவும், 'சிவாய' எனவும் 'சிவசிங் அங்உங்' எனவும் இவ்வகை நூல்கள் தொடக்க அடிகொண்டுள்ளன. 10. இவ்வகைநூல்கள் 'சோதிமணி கிரீடம்' எனவும் பெயர் பெறும். 11. பண்டித ஆறுமுக மணியக்காரன் ஏடு.

IV. 1. T.D. 623, R. 238(d), R. 2485, R. 4859, R. 6253, R. 10658(c). 2. ஆ.நி.எண் 656(h); த.ப.க. எண்கள் 734, 1903. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (1). சி. சபாபதிபிள்ளை (பதி.), **அகத்தியர் சோதிமணி சூத்திரம் 8,** ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக் கூடம், சென்னை, 1880, (2). எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் சோதிமணிச் சூத்திரம் 8,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை (முதல்தொகுதி), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்த நூலின் பிறகு ஒரு பக்கத்தில் மருத்துவ முறைகள் எழுதப்பட்டுள்ள ஏடு உள்ளது.

அகத்தியர் 10

I. 1. **768**. 2. அ. R.6861(c). ஆ. T.R.2781. இ. —. ஈ. —. 3. அ. வைத்தியம் பலதிரட்டுச் சூத்திரம். ஆ. Vaittiyam palatiraṭṭuc cūttiram. இ. அகத்தியர் பாடல் வயித்தியம் வாதம் 10. 4. —. 5.—. 6. பண்டித ஆறுமுக மணியக்காரன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையக்கவுண்டன் பட்டி, எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து வாங்கப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 6. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்கான முப்பு மருந்து தயாரித்தல் பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இரசவாதத்தைச் செய்பவன் இரசவாதி ஆவான். அவ் இரசவாதத்தின்போது, சிவத்தைப் பூசைசெய்து, நினைந்து, யோக நிலைநின்று அதன் பின்னே தொடங்கவேண்டும் என இந்நூல் கூறுகின்றது. இலட்சம் பாடல்களைக் குறுக்கி 300 பாடல்களாகவும், பின்பு 50 பாடல்களாகவும், மேலும் 16 பாடல்களாகவும், அதற்கும் மேலாக 13 பாடல்களாகவும் இறுதியில் 10 பாடல்களாகவும் பாடியதாகக் கூறப்படுகிறது. அண்டஓட்டுடன் கல் சுண்ணம், அமுரி, படிகம், உப்பு, காரம், சாரம், வெள்ளை இவற்றைச் சேர்த்து, கல்வத்தில் இட்டு அவற்றுடன் எருக்கம் பாலைச் சேர்த்து, அரைத்து வில்லை செய்து, உலரவைத்துப் புடம் போடவேண்டும். மீண்டும் அதைக் காயவைத்து, நாகம், செம்பு, வெள்ளி இவற்றுடன் வங்கத்தையும் சேர்த்தால் அம் மருந்து கிடைக்கும் என இந்நூல் கூறுகிறது.

4. பண்டித ஆறுமுகமணியக்காரன் ஏடு.

5. பாரப்பா வாதியென்றால்(ப்) பூசை வேணும்
பரிவான சிவம்வேணும் தியானம் வேணும்
நேரப்பா வாசியென்ற யோகம் வேணும்
நேராக நெஷ்ட்டைதவம் திறக்க வேணும்
காரப்பா குருபதத்தை கார்க்க வேணும்
கைகாட்டித் தொழில்முறை யறிய வேணும்
சாரப்பா சாஷ்த்திரமும் சூஷ்த்திரமுங் கண்டு
சார்வாக பாத்திருந்து வாதம் பாரே. 1

6. போமடா கரியோட்டில் ஊதும் போது
போக்காக கண்விட்டு ஆடும் ஆடும்
ஆமடா நல்லுப்புக் கூட்டி ஊது
நலமாக வயிரமணி போலே ஆடும்
னாமடா ஆணுவத்தான் வெளியில்(ப்) போட்டேன்
னாட்டாதே கள்ளனென்ற மனித ருக்கு
தாமடா யிதுவெல்லாம் அறிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே அடக்கம் முற்றே. 10

7. பண்டித ஆறுமுக மணியகாரன் ஏடு. குருபாதம் துணை.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. ற/ர, ழ/ள வேறுபாடின்றி ஏடு எழுதப்பட்டுள்ளது. ஒற்றுமிகுதி, பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட இந்நூலுக்குச் சூத்திரம் என்ற பெயரும் உள்ளது. 11. பண்டித ஆறுமுக மணியக்காரன் ஏடு.

IV. 1. R. 623(d), R. 7876, R. 2486, R. 10530(a), D. 2319. 2. ஆ.நி.எண் 656(g). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. இராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் முப்பு சூத்திரம்,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலில் கூறப்பெறும் மருத்துவப்பொருளை 13 பாடல்களிலும் 16 பாடல்களிலும் 50 பாடல்களிலும் 300 பாடல்களிலும் பாடப்படும் வழக்கம் இருக்கும்போலும்.

அகத்தியர் 14

I. 1. **769**. 2. அ. R.6252. ஆ. T.R.2649. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ரசகுளிகை 14. ஆ. Akattiyar racakuḷikai 14. இ. அகத்தீஷர் ரசகுளிகை 14. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்புச் செய்த சுவடி. 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 29x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி ஏடு இல்லை. 16. குறை. 17. 9 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞானமார்க்கங்களும், இரசவாதத்திற்கான இரசமணி செய்யும் மருத்துவமுறையும் கூறும் நூல். 2. யோகம், மருத்துவம். 3. இரசம் எனப்படும் திரவப்பொருளிலிருந்து, குளிகை செய்யும் மருத்துவமுறை இந்நூலில் கூறப்படுகின்றது.

அவ்வாறான குளிகையை, சரியை, கிரியை, யோக, ஞானமார்க்கங்களைக் கடைப்பிடிக்கும் போது உண்டு, தெய்வங்களை வணங்கி முறையாகப் பயிற்சி செய்தால் உயர்ந்த ஒளி பெறலாம் என இந்நூல் கூறுகின்றது. இவ்வாறான மருத்துவ முறைகளிலும், பயிற்சி முறைகளிலும் நம்பிக்கை கொண்டோர்க்கு மட்டுமே இவ்வொளிநிலை கூடும் என்று இந்நூலாசிரியர் கூறுவதோடு, இவற்றை நம்புவோர்க்கே இம்முறையைப் பயிற்றுவிக்க வேண்டுமென்று எச்சரிக்கையும் செய்கின்றார்.

4. ஹரிஓம்.

5. ஆதியந்த மேய்நிறைந்தசின் மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமா யாத்தாள் பாதம்
சோதிநிற மாகநின்ற கிணேசன் பாதம்
சொல்வதற்கு யெட்டாத சூஷ்சா சூஷ்சம்
வீதியென்ற பராபரத்தில் நந்தி பாதம்
வேதாந்த சாஷ்திரத்தின் வழியின் மார்(க்)கஞ்
சோதியெனும் பராபரத்தில் நடனஞ் செய்த
சுடரொளியின் பாதமது காப்புத் தானே. 1

6. அதிகமென்ற அக்கினியே கதிரோ கோடி
அய்யயோ கண்நிமைக்கு ளடங்கு மோசொல்
பதிகமென்ற விந்துவைத்தான் வாசி தானும்
பம்பரம்போல் சுத்தியல்லோ மணிபோல்(ச்) செய்யும்
கதிகமென்ற விந்துமணி சாரணை செய்ய
காட்டுகிறேன் புலத்தியனே கருத்தைக் கேளு
உதிகமென்ற முனிநாக்கு அதுப்போல் நிற்க
உளுண்டுவளு.. 9

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன; பாடபேதங்கள் காணப்படுகின்றன. வடமொழி எழுத்துக்கள் பயன்பட்டுள்ளன. ற/ர, ழ/ள வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. பேச்சுவழக்குச் சொற்கள் பயின்றுள்ளன. பிழைகளும் உள்ளன. 10. இந்நூல் 'இரசகுளிகை', 'இரசமணி' எனப்பெயர் பெறுகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 175(g), R. 199(h), R. 280(k), R. 9232. 2. த.ப.க. எண் 970, ஆ.நி.எண் 509(e), த.ச.ம.நூ.எண் 469(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (1). தி. கந்தசாமி பிள்ளை (பதி.), **அகத்தியர் ஞானோபதேசம் 14,** ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக் கூடம், சென்னை, 1880, (2). எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் பாடிய வைத்திய சில்லறைக்கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிநூலுடன் 1. நத்திகடி சூத்திரம் (R.6250), 2. சட்டை முனி சூத்திரம் (R.6251), 3. அகத்தியர் சோதிமணிச் சுருக்கம் எனும் மூன்று நூல்களும் உள்ளதாக அ.கீ.சு.நூ. விளக்க அட்டவணையிலிருந்து தெரிகிறது. ஆயின், அதற்குப்பின் R.6263 எண் உள்ள சுவடி நூல் தொடங்குகிறது. சுவடிக்கட்டு ஒன்றாயினும் (R.2649) முதல் பகுதியில் R.6250 முதல் R.6253 வரை நான்கு நூல்கள் கண்டறியப்பட்டு அ.கீ.சு. நூலகச் சுவடி விளக்க அட்டவணையில் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் 14

I. 1. **770.** 2. அ. R.4211. ஆ.T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணாமூர்த்தி சூத்திரக் குளிகை அல்லது ரசமணி 14. ஆ. Taṭcinạmūrtti cūttirak kuḷikai allatu racamaṇi 14. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N.லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-1953.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞானமார்க்கங்களும், இரசவாதத்திற்கான இரசமணி செய்யும் மருத்துவமுறையும் கூறும் நூல். 2. யோகம், இரசவாதம். 3. வரிசை எண் 769ஐப் போன்றது.

4. தக்ஷிணாமூர்த்தி சூஷ்த்திரக் குளிகை 14.

5. ஆதியந்த மில்லாதசின் மயத்தின் பாதம்
அகண்டபரி பூரணமாம் ஆத்தாள் பாதம்
சோதிநிறம் ஆகிநின்ற கிணேசன் பாதம்
சொல்தனக்கு எட்டாத சூஷ்மா சூஷ்மம்
வீதியென்ற பராபரத்தின் னந்தி பாதம்
வேதாந்த சாஷ்த்திரத்தின் வெளியின் மார்க்கஞ்
சோதியென்னும் பராபரத்தின் நடனஞ் செய்த
சுடரொளியின் பாதமது காப்புத் தானே. 1

6. பார்க்கவே யிம்முறையைச் சொன்னா யானால்
பாழான நரகமது யெய்தும் பாரு
காக்கவே சீஷனுட மனத்தைக் கண்டு
கைமுறையாய்ச் சொல்லிவிடு ஞான மார்க்கம்
ஏற்கவே ரசமணியின் மார்க்கந் தானும்
யென்மக்காள் சொல்லிவிட்டேன் யோக மார்க்கம்
சேர்க்கவே யிம்முறையை யுனக்குச் சொன்னேன்
செழுங்கருணைப் பதினான்கு சிறக்க முற்றே. 14

7. தக்ஷிணாமூர்த்தி சூஷ்த்திரக் குளிகை 14 முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 175(g), R. 199(h), R. 9232, R. 6252. 2. த.ப.க. எண் 970, ஆ.நி.எண் 509(e), த.ச.ம.நூ.எண் 469(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் ஞானோபதேசம் 14,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் இந்நூலுடன், அகத்தியர் உட்கரு சூத்திரம் (R.4218), அகத்தியர் கலைஞானம் 12(R.4208) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் 16

I. 1. **771.** 2. அ. R.6430. ஆ. T.R.2679. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணாமூர்த்தி 16. ஆ. Taṭciṇamūrtti 16. இ. தெட்சிணாமூர்த்தி 16. 4. —. 5. —. 6. —. 7. —.

8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தாரிமிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 6. 5. 25x2 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பெருஞ் சிதைவு. 12. 11; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 4 முதல் 5 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் இரசவாதம் தொடர்பானது. 2. மருத்துவம். 3. இந்நூலில் இரசவாதத்திற்கான சுரோணிதம், செயநீர், பூநீர் என்பன விளக்கப்படுகின்றன. இரசவாதத்தில், இந்நூல் கூறும் செய்திகள் மூன்றாம் காண்டத்தைச் சேர்ந்தவை என்றும், இவ் இரசவாதம் சித்தர்களால் மட்டுமே செய்யக்கூடியது என்றும் இந்நூலில் கூறப்படுகிறது. மேலும், இவ் இரசவாதவித்தையை வண்டருக்கும், கசடருக்கும், பாவியர்க்கும் சொல்ல வேண்டாம் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. —.

5. முத்திபெற்ற வைத்தியர்க்கு மோட்சம் மோட்சம்
மூலமென்ற ரசவாதம் மூன்றாம் காண்டம்
சத்தியமாய்(ச்) சொல்லுகிறேன் சுந்தரமே கேளு
தாரணியில் சொன்னார்கள் முதல்சாதி யென்று
சித்தர்கள்க்கு கிட்டுமடா மத்தோர்க் கில்லை
செகப்பியென்ற சக்தியெல்லா மாகு மாகும்
குத்தமில்லை கன்னியழியார் மங்கை யென்றால்
குணமான முதல்சாதி யென்ன லாமே. 1

6. மணியான ரசவித்தை சுருக்கு மெத்த
வண்டருக்கும் கசடருக்கும் இயம்ப வேண்டாம்
கெணியான பாவியர்க்கு ஈய்ந்தா யானால்
கிலேசமுள்ள பாவிநோய்க் கொண்டு சாவாய்
அணிவார்கள் சிவசத்தி பூசை செய்து
அம்புடையோர் தவமுடையோர் பெரியோர்க் காகும்
துணிகரமாய் சித்தரைநீ வாழ்த்திக் கொண்டு
சூத்திரமாய் ரசவாதம் காண்ட முத்தே. 16

7. ரசவாதம் காண்டம் முற்றும்.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள் கலந்துள்ளன. தெளிவில்லாத கையெழுத்தும், தெளிவான கையெழுத்துமாக இருவகை உள்ளன. 10. அகத்தியர் 16 எனப்படும் இந்நூல், 'அரிதாரம்' எனத்தொடங்கும் பாடலடி கொண்ட அகத்தியர் 16 நூல்களினின்றும் வேறானது. 11. இல்லை.

IV. 1. R. 6216. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிநூலுடன் 1. கொங்கணவர் பாடல் (R.6423), 2. இலேபனம் வகை (R.6424), 3. கொங்கணவர் வசீகரச் சூத்திரம் (R.6425), 4. வைத்தியம் (R.6426), 5. சூதமுனிச் சூத்திரம் (R.6428), 6. தட்சிணாமூர்த்தி வைத்தியம் 80 (R.6427), 7. அகத்தியர் 51 (R.6429) எனும் நூல்களும் உள்ளன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் பட்டியலில் இது அகத்தியர் பெயரில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அகத்தியர் 16

I. 1. 772. 2. அ. R.6971. ஆ. T.R.2803. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பச்சை. ஆ. Akattiyar paccai. இ. அகஷ்த்தியர் சுவாமி அருளிச்செய்த பச்சை 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரைமாவட்டம், கம்பம், கொம்மையக் கவுண்டன்பட்டி எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 36x3 செ.மீ. 6. இரு துளைக்ள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பித்தம், ஈளை, காசநோய், விசகடி போன்றவற்றுக்கு மருந்துகள் செய்யும் முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், முதலில் பஞ்ச பூதங்களான நிலம், நீர், வானம், வாயு, தீ என்பன முறையே அரிதாரம், சவ்வீரம், இலிங்கம், வெள்ளை, கெவுரி ஆகியவற்றுடன் இணையாகக் கூறப்படுகின்றன. அரிதாரம் என்பது, ஈளை, காசம், பித்தம், விசகடிகள், குளிர்காய்ச்சல், மகோதரம் போன்ற நோய்களைத் தீர்ப்பதாகும். சவ்வீரமான சுவாச காசம், நீராமை, வீக்கம், எண்வகைக் குன்மங்கள், இளைப்பு நோய், நெஞ்சு நோய் போன்றவற்றை நீக்குவதாகும். கெவுரியானது வயிற்று நோய், தோல் நோய் என்பவற்றைக் குணப்படுத்தவல்லது. வெள்ளை என்பது சோகை நோய்களை நீக்கவல்லது. சன்னி, காமாலை, வயிற்று வலிகளைத் தீர்க்கவல்லது. இவற்றுடன் வேறுசில பற்ப வகைகள், செந்தூர வகைகளும் கூறப்படுகின்றன.

4. —.

5. அரிதாரம் பிரிதிவி யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு மாகும்
பெரிதான கெவுரிதான் தேய்வு மாகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாய்வு மாகும்
அரிதான லிங்கமது ஆகாச மாகும்
அருந்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே யென்னூல் பாரு
சித்தரய்யா சொன்னவித்தை சிகத்தில் பாரே. 1

6. யேத்திடில் சன்னி தோஷம்
யெழும்பிடில் குளிர்ச்சி ரோகம்
பாத்திட்ட பரங்கி சூலை
பலகடி முதலாய் யுள்ள
தோத்திடும் கண்ட மாலை
குன்மங்க ளான துக்கும்
யேத்திடும் வியாதி யெல்லாம்
யேழுநாள் பத்திய மாமே. 16

7. அகஷ்த்தியர் அருளிச்செய்த பச்சை முற்றும் 16.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் உள்ளன. பாடபேதங்கள், வடமொழி எழுத்துக்கள் வந்துள்ளன.

10 அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூல் 'சித்தரய்யர் சொன்னநூல்' என்றும் கூறப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1902, D. 1903, R. 145(e), R. 163(d), R. 261(i), R. 280(k), R. 945(e), R. 1079, R. 2541, R. 3713, R. 3723, R. 4715, R. 4731, R. 8984, R. 9052, R. 9272, R. 9623, R. 10,078, R. 10584. 2. த.ப.க. எண் 734, த.ச.ம.நூ. எண் 185(b), உ.த.நி. எண் 487 : 742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பச்சை வெட்டு வைத்திய சூத்திரம் 16,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இப்படியான நூலைப் பலர் பதிப்பித்து வெளியிட்டுள்ளதிலிருந்து இதன் சிறப்பு நன்கு தெரிகின்றது.

அகத்தியர் 16

I. 1. **773.** 2. அ. R.4501. ஆ. T.R.1988. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பச்சை 16. ஆ. Akattiyar paccai 16. இ. அகஷ்த்தியர் பச்சைப் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி S. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1953-1954.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 5; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பித்தம், ஈளை, காசநோய், விசக்கடி போன்றவற்றிற்கு மருந்துகள் செய்யும் முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 772ஐப் போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஷ்த்தியர் பச்சைப் பதினாறு.

5. அரிதாரம் பிரிதிபூவு ஆகி நிற்கும்
ஆனதொரு சவ்வீர மப்பு வாகும்
பெரிதான கெவுரிதான் தேய்வு மகும்
பின்னுமொரு வெள்ளைதான் வாய்வு மாகும்
வரிதான லிங்கமா காச மாகும்
வருந்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வயித்தியரே தேறியின் னூலப்பா
சித்தரய்யா சொன்னவித்தை சிகத்தில் பாரே. 1

6. யேற்றிடில் சன்னி தோசம்
யெழும்பிய குட்ட ரோகம்
பாற்றிடில் பரங்கி சூலை
பலகடி முதலா யுள்ள
பூத்திடும் புண்கள் தானும்
புகைபடித் தீரு மென்றே
ஆத்தியே பொதிகை மேலே
யிருக்கின்ற சித்தர் சொன்னார். 16

7. பச்சைப் பதினாறும் முகிந்தது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10.அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1902, D. 1903, R. 2541, R. 3713, R. 3692, R. 3723, R. 4731, R. 6971, R. 8984, R. 9052, R. 9272. 2. த.ப.க. எண் 734, த.ச.ம.நூ.எண் 185(b), உ.த.நி. எண் 487 : 742. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ். பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பச்சை வெட்டு வைத்திய சூத்திரம் 16,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், ‘அகத்தியர் வழலை 30’ (R.4503), அகத்தியர் சூத்திரம் 12 (R.4503(a)) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் 35

I. 1. **774.** 2. அ. R.6861(e). ஆ.T.R.2781. இ. —. ஈ. —. 3. அ. வைத்தியம் பலதிரட்டுச் சூத்திரம். ஆ. Vaittiyam palatiraṭṭuc cūttiram. இ. அகஷ்த்தியர் பாடல் வைத்தியம் 35.

4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையக் கவுண்டன்பட்டி எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து வாங்கப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 10. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 19; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 35 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகை நோய்களுக்குரிய மருந்துகள் செய்முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், விடத்துக்கு மருந்துக் குளிகை, இரசமணி கட்ட, இரசவசியம் செய்ய மருந்துகளும், சக்கரம் அடைக்க விபரம், அப்பிரக செந்தூரம் செய்பாகம், நோய்களுக்கு அனுப்பானம் அறிவது, பத்திய முறைகள் சஞ்சீவி சூரணம், மேகத்துக்கு எண்ணெய் போன்றன கூறப்படுகின்றன.

4. பண்டித ஆறுமுக மணியக்காரன் ஏடு.

5. சாத்துகிறேன் சகலசனம் பிழைக்க வென்று
தவம்மிகுந்த ஆறுமுகசுவாமி பாதம் போற்றி
யேத்தமுள்ள பத.....ளுகை ரசகுளுகை மார்க்கம்
யியல்பான நாற்(ப்)பத்தி முக்கோ பூசை
வார்த்தவரை நீராக்கும் வஷ்த்து பூசை
வளம்மிகுந்த செந்தூரம்மருந்து வகைகள் கெல்லாம்
தேர்ந்தமனம் பெரியோர்கள் பிழைக்க வேண்டி
செய்தொழில்கள் முப்பதிலே தெளிந்து கொள்ளே. 1

6. பாரிந்த னூலதிலே சகலசன வசியம்
பாத்தவர்(க்)கு சித்திக்கும் விட்டகுறை வேணும்
யேரிசள்ளவாசி சுகிவளி தெரிந்தாள்
விளையாட்டுப் போலேஆகும் அஷ்டதிசையங்கும்
பேர்கொண்டாடும் கீர்த்திநதிக் காந்தம் அவ்வொளிவாம்
துரத்திவிட்டறிந்து கேளுசுவாமி சொன்னமுப்பதிலே
சூஷ்த்திரம் முற்றே. 16

7. குருபாதம் துணை சிவமயம். பண்டித ஆறுமுக மணியக்காரர் ஏடு.

8. மூலம். 9. ன/ள, ன/ண வேறுபாடின்மை இந்த ஏட்டில் தெரியவருகின்றது. சான்று : தெரிந்தால் - தெரிந்தாள்; சகலசனம் - சகல சணம். அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூலில் 35 பாடல்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தகுந்தது. 11. பண்டித ஆறுமுக மணியக்காரர் ஏடு.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் முதல் ஏடு உதிரி ஏடு. இரண்டாம் ஏட்டிலிருந்து (ஏட்டு எண் 15 முதல் 52 வரை) மருத்துவக் குறிப்புகள் அடங்கிய 1. சொக்கயர் சாஷ்திரம் என்ற நூல் உள்ளது. அதைத் தொடர்ந்து தனி எண்கள் பெற்று ஏடுகள் தொடங்குகின்றன. முதலில் 2. தன்வந்திரி பாடல்கள் 17 ஏடுகள்

3. அகத்தியர் பாடல் வகார உப்புக்கட்டு (29 முதல் 31 ஆம் ஏடுகள் வரை)

4. அகத்தியர் பாடல் வைத்தியம் வாதம் (32 " 34 ")

5. கொங்கணர் பாடல் 8 (35 " 36 ")

6. கும்பமுனி பாடல் 8 (37 " 39 ")

7. சூதமுனி பாடல் 8 (40 " 42 ")

8. வாதம் 80ல் யோக பூரணாதி (43 " 44 ")

9. திருமூலர் பாடல் (45 முதல் 47)

10. மச்சமுனி பாடல் (47 முதல் 49)

11. நந்தி பாடல் (50 முதல் 52)

12. அகத்தியர் பாடல் 35 வைத்தியம் (60 " 75 ")

13. அட்டகரும அச்சர விதிப்பு (மீதமுள்ள ஏடுகள்)

அகத்தியர் அட்டகரும சாந்திமுறை 19

I. 1. 775. 2. அ. R.6120(a). ஆ. T.R. 2574. இ. —. ஈ. —. 3. அ. —. ஆ. —. இ. அஷ்ட்ட கரும சாந்தி முறை 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார். 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 6. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகச் சிதைவு. 12. 12; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6-7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 19 பாடல்கள்.

ஆ. —.

III. 1. எண்வகைக் கருமங்களின் சாந்திமார்க்கம் கூறுவது. 2. அட்ட கருமம் - மருத்துவம். 3. வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம், ஆகர்சணம், வித்து வேசணம், மாரணம் எனும் எண்வகைக் கருமங்களின் அடிப்படையில் சாந்தி செய்யும் வழி முறைகளை இந்நூல் கூறுகின்றது. மேலும், நவக்கிரங்களின் பலன்களும் கூறப்படுகின்றன.

4. சிவமயம். குருவேதுணை.

5. சீரான வராகிதன் பாதம் போற்றி
செ .... அஷ்டகரும ......
கூரான........................தான்
குறியங்கண..........................
சாரான...............................
பிரித்துரைக்கப் பெரியோர்கள் பாதம் போற்றி
வேரான நவக்கிரக கும்பத் துக்கு
விபரமினி சொல்லுகிறேன் விரைந்து பாரே. 1

பாரப்பா கலசமது ஒன்ப துக்கு
பதிவான வென்நூலில் சதிரம்ஞ் சுத்தி
சீரப்பா பச்சருசி பரவி யேதான்
திறமாகச் சதிர்போல உண்டு பண்ணி
கூறப்பா நாலுவரை நேரே கிட்டி
குறுக்காக நாலுவரை பின்னுங் கீரி

மாரப்பா நவக்கிரக.....வதையின் பீசம்
மாறியே சுத்திரயே பாருசல் போடே. 2

6. யெழுதியே சிவஞ்செயிது கட்டிப் பாரு
யென்னசொல்வேன் அஷ்டகர்ம சாந்தி மார்க்கம்
பழுதொன்று வாராது கருவு சேர்ந்தால்
பத்திமுத்தி வயிறாக்கியம் வையா தப்பா
குழு...............ன்னா னறியேன் யென்ந்தாய் வாலை
முன்னின்று சொன்னபடி யானு சொன்னேன்
யெழுதியிந்தப் படிசெயிதால் சித்தி யாகும்
யென்குருவாம் பொதிகைமுனி யியல்பு தானே. 19

7. அஷ்ட்டகர்ம சாந்தி முற்றும். தெச்சணாமூர்த்தி துணையாக வேண்டியது.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் இந்நூற்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. போற்றி என்பது போத்தி என வருகின்றது. பேச்சுவழக்குச் சொற்கள், பிழையான சொல்லாட்சிகள் வந்துள்ளன. 10. அகத்தியர்க்குப் பொதிகைமுனி என்ற பெயரும் வழக்கிலிருந்துள்ளது இந்நூல் மூலமும் தெரிகின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வராகி எனும் தெய்வ வணக்கம் கூறப்பட்டுள்ளது. இது சித்தர்களின் மருத்துவ நூல்களில் உள்ள அரிய செய்தியாகும். வராகியை வாலை என்று சொல்வதும் உண்டு.

அகத்தியர் அனுபவ வைத்தியம்

I. 1. 776. 2. அ. D.2425. ஆ. T.D.947. இ. R. 4427. ஈ. —. 3. அ. அனுபவ வைத்திய முறை வசனம். ஆ. A<u>n</u>upava vaittiyamu<u>r</u>ai vaca<u>n</u>am. இ. —. 4. —. 5. — 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 27. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 53; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. வசனப் பகுதி பத்தி

பத்திகளாகப்பிரித்து எழுதப்பட்டுள்ளது. பத்தியாகப்பிரிக்காமல் நெடுகிலும் எழுதப்பட்ட ஏடுகளும் உள. 13. பக்கத்திற்கு 3 முதல் 4 பத்திகளும் ஏழு வரிகளும் உள்ளன. 14. விருத்தம், உரைநடை. 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்களும் பிற உரைநடைப் பகுதிகளும் உள்ளன.

ஆ. 1. 28x34 செ.மீ. 2. 28 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4. தெளிவான கையெழுத்து. 5. 11.4.1953 முதல் 16.4.1953 முடிய. எஸ்.டி. ஹைதர். 7. —. 8. கி.பி.1953-54 இல் புத்தாக்கம் செய்யப்பட்டது.

III. 1. பலவகை நோய்க்குரிய மருந்துகளையும் சில மாந்திரீக முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம் - மாந்திரீகம். 3. இந்நூலில் பலவகை நோய்களைப் போக்கக் கூடிய மருந்துகள், பேய் பிடித்துத் துன்புறுவோரைக் குணப்படுத்தும் மந்திர முறைகள், தேள்விடம் போன்ற விடங்கட்கு மருந்துகள், நாடியின் இயல்புகள் ஆகியன கூறப்பட்டுள்ளன. பீனிசத்துக்கு மருந்து, மூலத்துக்குப் பயனாகும் மருந்து, தாது புஷ்டிக்குரிய மருந்து, வில்வவேர் தைலம், சாம்பிராணி செய்யும் வகை, கற்பூரம் செய்யும் வகை, அரையாப்புக் கட்டிக்கு மருந்து, பாசாண முறிவுக்கும் நீர், பல்வலிக்கு மருந்து, சன்னிக்கு மருந்து, வாய்வுக்கு, பிளாஸ்திரி பண்ணும் வகை, பெண் ருதுவாக, பவுத்திரத்துக்கு, அண்டவாதத்துக்கு, குழந்தைகளுக்கு உண்டாகும் சுரத்துக்கு, காமாலை, ஒற்றைத் தலைவலி, இருமல், சன்னி, கர்ப்பம் தரிக்க, வயிற்றுக் கடுப்புக்கு மருந்து, வாதத்துக்கு மருந்து, வால்மீகர் சூரணம், தேள்கடிவிடத்துக்கு மந்திரம், மந்திர எழுத்துகளும் படங்களும் அடங்கியுள்ளன. இறுதியில் பூத நாடியின் இயல்புகள் 8 பாடல்களில் சொல்லப் பட்டிருக்கின்றன.

4. கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனும் கைதொழும்
கணபதி யென்றிடக் கரும மாதலால்
கணபதி யென்றிடக் கரும மில்லையே. 1

5. **கழற்சிக் காயிலைச்சாறுபடி1 வெங்காயச் சாறுபடி1 எண்ணெய் படி1 ரசகற்பூரம் விராகனெடை2 நேர்வாளம் சுத்திபண்ணினதுபலம்2 மெழுகுபதமாகக் காய்ச்சிக் கரண்டி எண்ணெய் கொடுக்கச் சகல வாயுவும் அண்டவாதமும் தீரும்.**

6. சடுதியில் பூத நாடி
தடதட நடக்கு மாகில்
கெடுதியில் கருப்பு நொண்டி
வீரன் கிளம்பி(த்) தோன்றும்
பிடரியும் வலிக்கும் நெஞ்சும்
பின்பிரயாடிக் கொள்ளும்
சுடிதிசைப் போல திரசேஞ்
சூட்டிடு முதிரங் கூறு. **8**

7. —.

8. மூலம். 9. சில சித்திரங்கள் வரையப் பெற்றுள்ளன. நிறுத்தல் அளவைக் குறியீடுகள் வந்துள்ளன. தமிழ் எண்கள் பயன்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயர் நூலில் இல்லை. ஆயினும் அகத்தியர் பெயரில் இதற்கு முன் உள்ள இரு சுவடிகளும் சுட்டப்பட்டதால் இந்த உரைநடை நூலும் அகத்தியர் பெயரிலேயே குறிப்பிடப் பட்டது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சுவடிக்கட்டு எண் T.D.947இல் முதலில் உள்ள **அகத்தியர் வாகடம்** (D.2424) என்பதைத் தொடர்ந்து 'பூதலத்தில் தென்பொதிகை' என்ற தொடக்க அடிகொண்ட **அகத்தியர் வைத்திய செந்தூரம் 300** என்ற நூலின் (D.2424(a)) 10 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதே சுவடிக் கட்டில் இறுதியிலுள்ள 27 ஏடுகளில் **அனுபவ வைத்திய முறை வசனம்** (D.2425) இருக்கிறது. ஆகவே, இச் சுவடிக் கட்டிலுள்ள முதலிரு நூல்களும் அகத்தியர் பேரில் எழுதப்பட்டுள்ளதால் இம் மூன்றாவது நூலும் அகத்தியர் பெயரிலேயே இங்கு இடப்பட்டுள்ளது.

அகத்தியர் அனுபவ வைத்தியம்

I. 1. 777. 2. அ. R.5851. ஆ. T.R.2506. இ. R. 6536. ஈ. —. 3. அ. அனுபவ வைத்திய வசனம். ஆ. Anupava vaittiya vacanam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பொள்ளாச்சி, உதையகுளம் பி. தாமோதரத்திடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1955-1956.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 270. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிவு. 12. 540; இருபக்கங்களிலும் எழுதப்பெற்றுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. ஆசிரியப்பா & வசனம். 15. இல்லை. 16. முழுமை. 17. கணக்கிடவியலவில்லை.

ஆ. 1. 32x18 செ.மீ. 2. 258 பக்கங்கள். 3. பக்கத்திற்கு 26 வரிகள். 4. தெளிவு. 5. R.5851 இலிருந்து புத்தாக்கம் செய்யப்பெற்றது. 6. கே. சாரதா. 7. ஜெ. சந்திரமௌலீசுவரன். 8. 1956-57 ல் புத்தாக்கம் செய்யப்பெற்றது.

III. 1. அனுபவமுறையில் கண்ட மருத்துவ முறைகளை வசனத்தில் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், மூக்கிலிருந்து, வாயிலிருந்து இரத்தம் விழுவது நிற்பதற்கு மருந்தும், இருமல், விக்கல், கண்நோய், மாலைக்கண், கண்ணில் மங்கு படர்ந்திருப்பதற்கும் மருந்துகள் கூறப்படுகின்றன. காமாலை, பேதி, காது நோய்கள், பிள்ளை பெறுவதற்கும் மருந்துகள் குறிக்கப்பட்டுள்ளன. பித்தம், வெட்டுக்காயம், உடம்பில் சூடு ஏற்படாமலிருக்க மருந்துகள், பேதிநிற்க மருந்துகளும் கூறப்படுகின்றன. கல்லடைப்பு, பெரும்பாடு, கால் கை எரிப்பு, மேகம், மூலநோய் இவற்றுக்கும் மருந்துகள் செய்முறைகள் தரப்பெற்றுள்ளன. நெய் வகைகள், விடமுறிவு மருந்துகள், சுரம், பட நோய்கள், பலவகைச் சூரணங்கள், இலேகியங்கள், உப்பு வகைகள், தைல வகைகள், வயிற்றுக் கடுப்புக்குரிய மருந்துகள், குளிகைவகைகள் போன்ற பல மருந்துகளின் இயல்புகளும் செய்முறைகளும் குறிக்கப்பெற்றுள்ளன. வயிற்றுக் கடுப்பு, பேதி ஆதல், இரத்த பேதி ஆதல், வாய்வு போன்றவற்றுக்கு மருந்துகள் எழுதப்பட்டுள்ளன. குன்மம், குடைச்சல் நோய், சுரநோய் வகைகள், பித்த வகைகள், சன்னி வகைகள் போன்றவற்றுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

கண்டங்கத்திரி லேகியம், பீனிச மருந்துகள், சுத்தி மருந்துகள், வாதம் - பித்தம் - சிலேற்றும நோய்களுக்கும் மருந்துகள், பலவகை வயிற்று நோய், கண் நோய்கள், குடல் நோய்கள், மூட்டு நோய்கள் போன்றவற்றுக்கான பலவகை மருந்துகள் கூறப்பட்டுள்ளன. வாத வகைகள், அவற்றுக்கான மருந்துகள், குழம்பு வகைகள் போன்றனவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலின் இறுதியில் மருந்துகள் செய்முறைகள் விளக்கப் பட்டுள்ளன.

4. ஹரி ஓம் குரு வாழ்க. குருவே துணை.
மூசிக வாகன மோதுக அஸ்த்த
சாமரகர்னவிலம்பித சூத்ரா
விகனவினாயக பாத நமஸ்தே.
வேதம் படைத்த மெய்ய தன்னில்
வாத பித்த மருவிய சிலேற்றுமம்
மூன்று நாடியில் முக்குண மாகி
தோன்றும் வினையே துன்ப மறுத்து
நாலாயிரத்தி னானூற்று னாற்பத் தெட்டில்
மேலான வினையே வேரே கிளைத்து
பஞ்சாட் சரனிலை பாலித் தெனக்கு
செல்வமுங் கல்வியுஞ் சீரு முதலி
யேழை யடியேன் அன்பர்த் தொழ
ரார்நடை யவ்வ னல்லவார மேதரும்
நல்லவிக் னேஸ்வர னாயகர் சுவாமி.

5. சுக்கு மிளகு திப்பிலி திப்பிலி மூலம் செவியம் சித்திரமூலம் சிறுநாகப்பூ கோரை கிழங்கு கரும்சீரகம் சீனி சக்கரை சமன்கொண்டு வென்னீரில் கொடுக்க பேதியாகும். பின்பு குளிர்ந்த தண்ணியில் குளிக்க மிளகு நீர் சோறு சாப்பிடவும். இந்த அவிழ்தம் கொடைச்சல் நிற்கும். பேதியாகாது.

ஹரி ஓம் நற்குரு வாழ்க. குருவே துணை.

6. சூலை கட்டுதீர பேதிகொடுக்க: பூவரசன் பட்டைமோர் வார்த்து துவைத்து கால்படி ரசம் குடிக்க பேதியாகும். மிளகு வெள்ளை வெங்காயம் சோறு சாப்பிடவும். அதிகமானால் தயிரு ஈர் வெண்காயம் சோறு சாப்பிடவும். சூலை தீரும். முற்றும்.

7. —.

8. மூலம். 9. ஆசிரியப்பாவில் பல வரிகள் அமைந்துள்ளன. வடமொழி எழுத்துக்கள் பயின்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் சில அனுபவ வைத்திய நூல்கள் அமைந்துள்ளன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அனுபவ வைத்தியம் என்ற பெயரில் சில வசன நூல்கள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் வெளியிடப்பெற்றுள்ளன.

அகத்தியர் அனுபவ வைத்தியம்

I. 1. **778.** 2. அ. R.5850. ஆ. T.R.2505. இ. R.6372. ஈ. —. 3. அ. அனுபவ வைத்திய வசனம். ஆ. Anupava vaittiya vacanam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பொள்ளாச்சி, உதையகுளம் பி. தாமோதரத்திடமிருந்து வாங்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி. 1955-1956.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவில்லை. 4. தெரியமுடியவில்லை. 5. 36x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. மொத்த ஓலைகளின் எண்ணிக்கையை அறிய முடியவில்லை. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. உரைநடை. (வசனம்) 15. ஓலைகள் விடுபடவில்லை. ஆயினும் பல ஓலைகள் முறிந்துள்ளன. 16. முழுமை. 17. நொறுங்கியும் தெளிவில்லாதுமுள்ளதால் அறியமுடியவில்லை.

ஆ. 1. 32x18 செ.மீ. 2. 241. 3. பக்கத்திற்கு 26 வரிகள். 4. தெளிவு. 5. R.5850இலிருந்து 5.9.1956 முதல் 20.9.1956 வரை புத்தாக்கம் செய்யப்பட்டது. 6. கே. சாரதா. 7. எம்.ஆ.எஸ். 8. 29.9.1956.

III. 1. இந்நூலில் பல்வேறு நோய்களுக்குரிய மருந்துகளை அனுபவத்திலிருந்து கண்டறிந்து கூறப்பட்டுள்ளது. 2. மருத்துவம். 3. பாம்புக் கடிக்கு மருந்துச்சாறு, ரோகத்துக்கு எண்ணெய், தோசத்துக்கு எண்ணெய், கையாந்த கரை எண்ணெய் போன்ற எண்ணெய்க்கும், கெந்தக சுத்தி, அரிதார சுத்தி, எலிப்பாசாண சுத்தி போன்ற சுத்திகளும், நாககண்ட விபரம், கற்பம், குடிநீர், வாந்திக்கு மருந்து, விக்கலுக்கு, செரியாகுணத்துக்கு மருந்தும் கசாயமும், குன்ம-வாயுவுக்கு மருந்து, மலட்டுக்குறி

ஏற்படும் நிலைகள் போன்றவை கூறப்படுகின்றன. காசம், சுவாசம், வெட்டைக்கு மருந்து, போன்றனவும் கூறப்படுகின்றன. வெவ்வேறு வகையான தயிலங்கள், செந்தூர வகைகள், எண்ணெய் வகைகள், பற்ப வகைகள், பேசப்படுகின்றன. வசிய மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. சுரம், தலைவலி, குக்குலுநோய் போன்றவற்றுக்கு மருந்தும் அனுபானமும் கூறப்பட்டுள்ளன. வலிப்பு நோய், நீரிழிவு நோய், சன்னிநோய், கண், காது நோய்கள், மேகநோய்கள் போன்ற பலவகை நோய்களுக்கு மருந்துகள் கூறப்படுகின்றன.

அனுபவமுறை மருத்துவத்தில் இச் சுவடிக் கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை.

4. ....தெளிவுற அறியவேண்டி
கோதில்லா நல்லோர்.....................
.................பாடல்தன்னை...................
நீதி சொட்டியின் மீதே
நெறியுடன் உரைத்தார் மேலோர். 1

சொன்னதோர் குணங்கள் தன்னை
தொகுத்து நீரறிய வேண்டி
......ணையும் குணவா னாகி
......பேசி .... குணப்பாடத்தை
.......ழைங் குணப்பாட.................
.........பிப்பூனால் அறிந்து கொள்ளே. 2

ஹரிஓம். குருவாழ்க. வாகடசிகாமணி குணவாகடம்...........
லட்சணம். "வாக்குண்டாம்..........." குருவேதுணை. "தான
மாங் குணமாந் நாடி லக்கணம், தாது லக்கணம்
ஆன சாந்தியத்துடன் அளவு............
கும் முற்பத்தில்லக்கம், தானமும் தன்குணமின்றி யேவி
தம்பலபிரயோக லக்கணம், பான்பத்தியத்துடன்
பத்து லக்கணமும், உரைத்தான் பழம்மா முனிவன்.

5. **ஆதியாங் கடவு ளானை**
அடியினைப் போற்றி
...

......ங்காய் எண்ணெய் பிடி ஒன்னுக்கு.......சூரியபுடம் மிட்டு......டிவேர் பொடித்து எல்லாப் பொடியும் கலந்து

எண்ணெயில் போட்டு, காய்ச்சி.....லுட்டில் போட புண்ணாரும். பாம்பு கடித்து செத்தால் அடக்கரனுப்பு-மட்டி எருக்கிலைச்சாறு வத்து பொடி தனைசருவத்து காரியால் கண்ணி சருவத்துக்கு கை சற்றில் உரைத்து காதில்விட.............

6. செங்கொட்டை பலம்3, பறங்கிப்பட்டை பலம் 2, அமுக்கிறாக்கிழங்கு பலம்2, சுக்கு மிளகு பலம் 1, வெள்ளுள்ளி பலம்1, மஞ்சள் பலம் 1, ஓமம் பலம்1, பனைவெல்லம் பலம் 2 இவை இடித்து நெல்லிக் காயளவு இருபது நாள் இரண்டு நேரமும் கொள்ளவும். பத்தியம்: பசுவின் பால் வென்னீர் கூட்டவும். இதுக்கு செங்கிராந்தி முதலான பதினெட்டுச் சூலையுந் தீரும்.

கல்லுக்கு மேனியால் கம்பிக்குக் காளியாந்
தொல்லை நெடுமான் மனைக்குச் சுக்காட்டி–புல்லுக்கு
ளோட்டுவது முசிப்பூவுந் தாடியுஞ் சீவன்பேற
காட்டுவதும் பூசுகூடங் காண்.

7. —.

8. மூலம். 9. பிழைகள் மலிந்த நடை. பேச்சு வழக்குச் சொற்கள் கலந்த வசனம். 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற மற்றொரு அனுபவமுறை வைத்திய நூல் இது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடி நூல் போன்றுள்ள மற்றொரு சுவடி நூல் **அகத்தியர் வாகடம்** (D. 2424). (வரிசை எண் 478) என்பது அது 'எட்டிப் பழஞ்சாறு' எனத் தொடங்குவது. பல்வேறு வகையான நோய்களுக்கு மருந்துகளைக்கூறுவது. அதுவும் அனுபவ வைத்திய முறைகளையே கூறுவது. இவற்றைப் போன்றே, **அனுபவ வைத்தியம்** வசனம் (R. 5851) என்ற மற்றொரு நூல் அனுபவ வைத்திய முறைகளை வசனத்தில் சொல்லுகின்றது.

அகத்தியர் அனுபவ வைத்தியம்

I. 1. **779**. 2. அ. R.7719. ஆ.T.R.2987. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அனுபவ வைத்தியம். ஆ. Akattiyar Anupava vaittiyam. இ. சாக்குக்கட்டுயிரும்பு சங்கிலி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பாலக்காடு நெல்லிச்சேரி அனந்தநாராயண அய்யர் பேரர் என். எஸ். நாராயண மூர்த்தி ஐயர் அன்பளிப்பாகக் கொடுத்த ஏடு. 10. கி.பி.1962-1963.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 13. 5. 24x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 25; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. உரைநடை. 15. இறுதியில் உள்ள ஏட்டில் பாதியோடு நிறுத்தப்பட்டுள்ளது. 16. குறை. 17. 700க்கு மேலான வரிகள்.

ஆ. —.

III. 1. இந்நூலில் மருந்துகளின் இயல்பும், இரசவாத முறைகளும் கூறப்பட்டுள்ளன. 2. மருத்துவம் - இரசவாதம். 3. அனுபவ வைத்தியம் எனப்பெயர் கொடுக்கப்பெற்றுள்ள இந்நூலில் சில மருந்துகள் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. அம் மருந்துகளைத் தயாரிக்கும்போது எவ்வளவு பொருள்கள் எந்த அளவில் கலக்கவேண்டும் என்று துல்லியமாகக் கணக்கிடப் பெற்றுள்ளது. அரைத்தல், கலத்தல், புடம் போடுதல், எரித்தல், ஊதுதல் போன்ற பல செய்முறைகள் இந்நூலில் கூறப்படுகின்றன.

4. நன்றாக குருவே துணை.

5. **கல்(ப்) பாசியும் யிரும்புச் சல்லியும் சரி சரி நிறுத்துக் குகையிலூதிக்க வெள்ளிமேல்(த்)தலையுதிக்கும் வேறு. இரும்புச்சல்லி தட்டி கடுக்காய் தாளியிலே மூன்று நாள்(ப்) போட்டு ஊறினதின்பின் அரைத்துக் கழுவிக்கடுக்காய் கவுதும்பையிலையும் மருதோன்றி வேரு மரைத்துக் கழுவிப் போட்டு அங்கோலம் வேர்ப்பட்டை யரைத்துச் சல்லிய.............**

6. ......உழக்குப் புளியும்பொருக்கு ஒரு சட்டியிலிட்டு அதில் மேலேயிந்த அடையைவைத்து அதன்மேலேயும் உழக்குப் புளியம் பொருக்கு யிட்டு அதின்மேலே ஓடு கொண்டுமூடி சீலை மண்செய்து எருவட்டதாக்கி முன்புடமிடவும். பிறகு அந்தக் களங்கத்தை யெடுத்து செம்பில் மூன்று கொன்று களங்கம் குடுத்து பிறகு வெள்ளியேழும் செம்பு மூன்றுங் கொடுத்து ஊதியெடுத்துக் கொள்ளவும்.

7. —.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள், பிழைகள் வந்துள்ளன. ல,ளகர ஒற்றுகளுக்குப்பின் க்,ச்,த்,ப் மிகுந்து வருதல் காணப்படுகிறது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெறும் ஒவ்வொரு அனுபவ வைத்திய முறையும் வேறுபட்டுள்ளமை அறியப்படுகின்றது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அனுபவ வைத்திய முறைகள் யாவராலும் எளிதில் பின்பற்றக்கூடியவை.

அகத்தியர் அனுபோக சூத்திரம்

I. 1. **780**. 2. அ. R.6092. ஆ.T.R.2558. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அனுபோக சூத்திரம். ஆ. Akattiyar a<u>n</u>upōka cūttiram. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தாரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 1. 5. 20x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. உரைநடை. 15. இல்லை. 16. முழுமை. 17. 14 வரிகள்.

ஆ. —.

III. 1. இந்நூல் சில மருத்துவக் குறிப்புகளடங்கியது. 2. மருத்துவம். 3. இந்நூலில் சில மருந்துகள் தயாரிக்க உதவும் பொருள்கள் குறிக்கப்படுகின்றன. அவற்றை எவ்வளவு அளவு சேர்க்கவேண்டுமென்ற குறிப்பும் உள்ளது.

4. 022ல் - 105ல் - 166ல் - 171 பா.

5. **கடுக்காய் யொன்று நன்றாக நல்லெண்ணை யிறுத்து.....சுறுக்கான யெண்ணை வைத்து ......யெண்ணை ஒன்று சாதகமாய் சொல்லுகிறேன் யெறுக்கின்றபூவும் முத்தெறுத்தின் செவியுடனே....கதிரெண்டு களஞ்சு வாங்கி நறுநெய்தான்.........யஞ்சு பால் பொங்கல் நெய் வெத்திலையும் சிறந்.........வைய்யப்பாமுட்டை யொடு குடங்கள் ...மாங்கிஸங்களொடு செயப் பூபாருத்தி.**

6. **சிதம்பரத்தை பூசித்து சுளன்று தடாயோனிபுத்து லிங்கபுத்து. தளண்டுடலில் திரண்டு வந்த.......நீர்வர்த்திபோம் முளண்டு நின்று புளுகு......உடல்வச்சிர காயம் அளன்ற கெர்ப்பமது.**

7. —.

8. மூலம். 9. ற/ர வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. பிழைகள் மிகுதி. 10. அகத்தியர் பெயர் குறிக்கப்படவில்லை. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணையில் R.6092 என்ற எண்ணின் கீழ் **அகத்தியர் அனுபோக சூத்திரம்** என்ற தலைப்பில் 1 முதல் 30 ஏடுகளில் இந்நூல் இருப்பதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. மேலும் R.6093 என்ற எண்ணின் கீழ் **அகத்தியர் நடுக்காண்டம்** என்ற நூல் இருப்பதாகக் கூறி அந்நூல் 30ஆம் ஏட்டின் மறுபக்கத்திலிருந்து தொடங்கி 66ஆம் ஏட்டில் முடிவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயின், 1 முதல் 66 வரை உள்ள ஏடுகளில் அகத்தியர் நடுக்காண்டம் எனப்பெறும் அகத்தியர் கர்ம காண்டம் 300 என்ற நூல் மட்டுமே உள்ளது. இந்நூல், 'பூரணமாய் மூலமுதலாறாதாரம்' எனும் தொடக்கஅடிப்

பாடலைக்கொண்டு தொடங்கி, 'வரிசையாய்ச் சொல்லுகிறேன்' எனும் தொடக்க அடிகொண்ட முடிவுப் பாடலில் (301) 'கர்ம காண்டம் முற்றே' என முடிவதைக் காணலாம். பார்க்க வரிசை எண் 69.

அகத்தியர் ஆறாதாரம் 8

I. 1. **781.** 2. அ. R.6945. ஆ. T.R.2793. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஆறாதாரம் 8. ஆ. Akattiyar arātāram 8. இ. அகஸ்தீசர் அஷ்டாங்கம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 26x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6-7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானமார்க்கம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் ஆறாதாரம் எட்டு என்ற இந்நூலில் தேவி, நந்தி, சிவன் ஆகிய தெய்வங்கள் முதலாவதாகத் துதிக்கப்படுகின்றன. பின்பு நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றைப்பற்றிப் பேசப்படுகின்றன. ஓம் மூலாதாரம் -கணபதி, வல்லபை; ந-சுவாதிட்டானம், பிரம்மா-சரஸ்வதி; ம-மணிப்பூரகம்- விஷ்ணு, லட்சுமி; சி-அனாகதம்- ருத்திரன், பார்வதி; வ-விசுத்தி-மகேஸ்வரன்-மகேஸ்வரி; ய-ஆஞ்ஞை- சதாசிவம், மனோன்மணி. இம்முறையிலேயே ஆறு ஆதாரங்களில் மனம்வைத்து அந்தந்த தேவதைகளைப் பூசித்து இட்ட சித்திகளைப் பெறவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. கணபதி முதல் சதாசிவம் ஈறாக உள்ளதெய்வங்கள் ஆண்டவனின் ஆணையால் உயிரைச் செலுத்தும் வல்லமை பெற்றவை என்றும் இவை இயங்கும்

பூத தத்துவங்களை யார் புரிந்து கொண்டார்களோ அவர்களே தத்துவங்களைக் கடந்து ஆத்துமாவாகிய தன்னைத் தெரிந்து, தானாகவே நின்று ஆண்டவனை அறிந்து சிவ ஞானத்தை எய்துவர் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை. அகஸ்தீசர் அஷ்டாங்கம்.

5. சோதியெனும் பராபரையாள் தேவி பாதம்
சொற்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி
நீதியெனும் யெனையாண்ட னந்தி பாதம்
நின்னகத்தில் வைத்துனான் போற்றி றைஞ்சி
பாதிமதி தரித்தசிவ நின்ற மார்க்கம்
பார்மக்கா ளுன்னுள்ளே பரிந்து காட்ட
ஆதியெனும் நின்றபர மூலத் துள்ளே
ஆத்துமாவாய் நின்றகண பதியே காப்பாம். 1

6. பாரப்பா சடலத்தி லொண்ணீர் பற்றி
பரவியே கெட்டலைந்து போக வேண்டாம்
ஆரப்பா வாதமாவே சூட்சப் பார்வை
அப்பனே அதிலிருக்கும் விவர மெல்லா
சேரப்பா வொன்றுமில்லை வீடு மாகும்
சிறந்துநின்ற தந்தியதோர் வீடு மாகும்
வீரப்பா வொன்றுமில்லை நந்தி கண்டால்
மெய்ஞான போதகமும் அமுத முற்றே. 8

7. குரு முன்னிற்க வேண்டியது.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ர,ற வேறுபாடில்லாமல் முன்னிலையாரை அழைக்கும் பாங்கில் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். 11. இல்லை.

IV. 1. R.199(i), R.199(j), R.280(n). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல்பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அகஸ்த்தியர் ஆறாதாரம் எட்டு என்ற இந்நூல் தாமரை நூலகத்தார் வெளியிட்டுள்ள 'பதினெண்சித்தர்கள் வைத்திய

சில்லறைக் கோவை' (முதல்பாகம்) என்ற நூலில் 'அகத்தியர் ஞானம் 8' என்ற பெயரில் பதிப்பாகியிருக்கிறது.

அகத்தியர் இரச செந்தூரம் முதலியன

I. 1. **782.** 2. அ. R.1882. ஆ.T.R.1059. இ. —. ஈ. —. 3. அ. —. ஆ. —. இ. ரச செந்தூரம். 4. —. 5. —. 6. —. 7. — 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், பழநி வட்டம், புளியம்பட்டி பழனி சாமிக் கவுண்டர் அன்பளிப்பாக அளித்த சுவடிக் கட்டு. 10. கி.பி.1949-1950.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 23x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 9; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. இருபத்திகளாகவும் நெட்டுக்கும் எழுதப்பட்டுள்ளது. 14. உரைநடை. 15. இல்லை. 16. முழுமை. 17. உரைநடைப் பகுதிகள் குறைவாக உள்ளன.

ஆ. —.

III. 1. இச்சுவடி நூலில் இரச செந்தூரம், உப்பு வகைகள், பற்பங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 2. மருத்துவம். 3. இந்நூலில் இரசசெந்தூரம் உட்பட்ட பல செந்தூர வகைகளும், உப்புக் கட்டு வகைகளும், சரமாத்திரைகளும், பற்பவகைகளும் கூறப்பட்டுள்ளன. உப்பு வகைகளில், பொட்டு செம்பு, கல்லுப்பு, இந்துப்பு, கரியுப்பு, வளையலுப்பு என்பவையாம். மேகசூலை பற்றி எழுதப்பட்டுள்ளது. வெள்ளை, கெவுரி, லிங்கம் எனும் இவற்றைச் சமஎடையாக எடுத்து அவற்றுடன் வேறு மருந்துப்பொருள்களையும் சேர்த்துச் சரமாத்திரை செய்தலும் கூறப்பட்டுள்ளது.

4. —.

5. ரசம் பெரியபலம் 1, கெந்திபலம் 2, வெத்திலை சார்விட்டு அரைத்த குடுவாயில்(ப்) போட்டு முன்னமும் கெந்தியை வெத்திலைச் சார்விட்டு அரைக்கால் (ப்) பலக் கெந்தியை அரைத்துக் கலையத்தில்(த்) தடவி அதற்குள் அரைத்த ரசத்தை வைத்து மேல்ஓடு போட்டுச் சீலை செய்து ஒரு சட்டியில் வைத்து ஒரு சமாம் காடாக்கினியாய் யெரித்து ஆரவிட்டு யெடுக்கச் செந்தூரம்.

6. **மசீ நசீ வமநமசிவா எநமசிவா சிவயநம யென்று இந்த மந்திரத்தை பூவினால் உருச்செய்து வரவும். தினம் ஒன்றுக்கு 100 தரம் அல்லது 1000 திறமாக லட்சம் செபஞ் செய்ய சித்தியாம். சாப நிவர்த்தியாம் சகலத்துக்குஞ்.**

7. —.

8. மூலம். 9. பிழைகள் மிகுதி. பேச்சுவழக்குச் சொற்கள் மிகுதி. 10. இரசசெந்தூரம் தயாரிப்பதற்குப் பொதுவாகப் பாடல்களே பாடப்பட்டுள்ளன; இந்நிலையில் உரைநடையில் இந்நூல் அமைந்திருப்பது சிறப்பு. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடியின் இறுதியில் 'மாத்திரைக்கட்டு' என்ற தலைப்பில் மருந்துகள் எழுதப்பெற்ற ஓர் ஓலை உள்ளது. அ.கீ.சு. நூலகச் சுவடி விளக்க அட்டவணையில் R.1882 ஆம் எண்ணின் கீழ் 'அகத்தியர் குளிர்ச்சி எண்ணெய் என்ற நூலும் விளக்கம் பெற்றுள்ளது. ஆனால், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணையில் வரிசை எண் 132இல் **அகத்தியர் சிந்தாதி எண்ணெய்** (R.1883(a)), வரிசைஎண் 119இல் **அகத்தியர் குளிர்ச்சியெண்ணெய்** (R.1883(b)) ஆகிய இருநூல்களும் விளக்கம் பெற்றுள்ளன. அச்சுவடிக் கட்டில் விளக்கம் பெறாதன இங்கே விளக்கப் பெற்றுள்ளன.

அகத்தியர் இரத்தினச் சுருக்கம்

I. 1. **783.** 2. அ. R.6120. ஆ. T.R.2574. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம். ஆ. Akattiyar ṉāṉam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்புச் செய்த ஏடு. 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு ஆயினும் சிதைவு. 4. 93. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது.

11. மிகச்சிதிலம். 12. 186; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 106 முதல் 329 பாடல்கள் வரை.

ஆ. —.

III. 1. பலவகை நோய்களுக்கான இலேகியம், தைலம், குளிகைகள் போன்றனவற்றில் செய்முறைகளும் பயனும் கூறும் நூல். நாடிகளின் இயல்பும் பேசப்பட்டுள்ளது. 2. மருத்துவம். 3. இந்நூலில், சில நோய்களுக்கான கபாட மாத்திரை, பூபதி உருண்டை, இரச சிந்தாமணி, கோரோசினை மாத்திரை, கரிசாலை இலேகியம், பஞ்சதீபாக்கினி இலேகியம், சிந்தாதி இலேகியம், மகாவில்வாதி, கபாட இலேகியம், திப்பிலி இரசாயனம், அக்கினிச் சூரணம், அசுவகெந்தி சூரணம், கண்டங்கத்திரி சூரணம், தாளிசபத்திரி சூரணம், பஞ்சதீபாக்கினி சூரணம், நிலவாகை சூரணம், வல்லாரை சூரணம், அமுர்த சஞ்சீவி சூரணம், அசுவகெந்தித் தயிலம், வில்வாதித் தயிலம், குமரித் தயிலம், கொம்பராக்குத் தயிலம், சந்தனாதித் தயிலம், பொன்னாங்கணித் தயிலம், கீழாநெல்லித் தயிலம், நிலப்பனைக் கிருதம், பொன்னாங்காணிக் கிருதம், புளியாரை கிருதம், வல்லாரைக் கிருதம், தூதுவளைக் கிருதம், கண்டங்கத்திரி நெய், வெள்ளி பற்பம், நாக பற்பம், இரச செந்தூரம், காரீய செந்தூரம், தலைச் சூலைக்கு எண்ணெய், மேகத்துக்கு எண்ணெய், கெர்ப்பநோய்க்கு வீழி யெண்ணெய், மேகத்துக்கு நல்லெண்ணெய், வாதத்துக்கு எண்ணெய், சுகசீதபேதிக்கு எண்ணெய் போன்ற மருந்துப் பொருள்களின் இயல்பும் பயனும் கூறப்பட்டுள்ளன.

4. புலிப்பாணியார் அறுநூலில்.

5. வானுகந்த தெங்காயின் பாளை யுண்டு
வகையாகக் கம்பளிமேல் படுக்கச் சொல்லே. 105
சொல்லப்பா முறுங்கையானந்த கரையிளையே யாடிங்கி
செறிவேலக்......யதைச் சாறு பிளிஞ்சு
அல்லப்பா சாறுபடி காலே யாகும்
அடவான ஆவின்பால் நேரே சேர்த்து
அல்லப்பா காலமே கொடுத்த போது
அடவாகப் பேதியிலே மருந்து வீழும்

நல்லப்பா விழுந்தவுடன் வித்தானம் பண்ண
நலமாக சிவரைதெல்லா மாட்டிக் கொள்ளே. 106

6. மூழ்கவே வியாதியெல்லாங் கடலே புக்கும்
முக்கியமாம் அகஷ்தியர்க்குச் சிபந்தான் பண்ணு
நெகிழவே தியானமது யென்னேரம் பண்ணு
நேரான தேவியெத்தான் தியானம் பண்ணு
தகிழவே சிவன்றனையே பூசை பண்ணு
தவறாது வியாதியெல்லாந் தவறுண் டேபோம்
மகிழவே......வயித்தியஞ் செயிதா னாகில்
வைய்யகத்தி லொப்பாரு யீசன் முற்றே. 329

7. முகிந்தது முற்றும். தெக்சணாமூர்த்தி சுவாமியார் அருளிய ரெட்டி..........

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றுள்ளன. ற/ர, ழ/ள வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. பிழைகள் மலிந்துள்ளன. பாடபேதங்கள் மிகுதி. 10. மருந்துகள் தயாரிக்கும் முறைகளை மிகச் சுருக்கமாக இந்நூல் தருவதால் இப்பெயர் பெறுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 8951. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (1). ஆறுமுக சுவாமிகள் (பதி.), **'அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360'**, பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெற்றியூர், 1867. (2). கே. இராதாகிருஷ்ணன்(பதி.), **'அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360'** திருமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை, 1955. (3) கே.பி. தியாகராசன்(பதி.), **'அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360'**, சண்முகானந்தா புக் டிப்போ, சென்னை. 3. இல்லை.

VI. அ.கீ.சு.நூ. விளக்க அட்டவணையில் இந்நூல் 'அகத்தியர் ஞானம்' என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆயினும் இறுதிப்பாடலால் இது 'அகத்தியர் இரத்தினச் சுருக்கம்' ஆகும். இதன்பின் 6 ஓலைகளில் 'அஷ்ட கர்ம சாந்திமுறை' என்ற நூல் உள்ளது.

அகத்தியர் உட்கரு சூத்திரம் 48

I. 1. **784.** 2. அ. R.6203. ஆ. T.R.2624. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் உட்கரு சூத்திரம் 48. ஆ. Akattiyar uṭkaru

cūttiram 48. இ. அகத்தீசர் கருக்கிடைச் சூத்திரம் 48. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-1957.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 14. 5. 38x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 28; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7-8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்குரிய முறைகளையும் சில மருத்துவ முறைகளையும் கூறும் நூல். 2. இரசவாதம், மருத்துவம். 3. அகத்தீசர் கருக்கிடைச்சூத்திரம் என்ற இந்நூல் முதலாவதாகச் சிவன், கணபதி, உமை, மனோன்மணி, கந்தன் முதலான தெய்வங்களை வணங்கி வகார மார்க்கம் பற்றிக் கூறுகின்றது. இதற்கு அண்டபிண்ட வளமை அறியவேண்டும் என்றும், அண்டம் என்றால் ஒவ்வொருவரும் ஒரு பொருளைச் சொல்கின்றனர் என்றும், அவர்கள் கொள்ளும் பொருள் வகைகள் பற்றியும் ஆசிரியர் கூறுகின்றார். எழுத்தில் வகாரம், சிகாரம் போன்றது. ஆகாசம் நெருப்பு போன்றது. நாதாந்தம் வெளி போன்றது, பூநீறைச் சிறுநீரில் கலக்கி அதைத் தெளிவாக இறுத்துத் தீயெரிக்க வேண்டும்; இது வகாரம் பெறவழியாகும். அப்போது காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் பூசையில் அமர வேண்டும். வகார மார்க்கத்தால் யோகசித்தி, ஞானசித்தி பெறுவர். வகார மார்க்கம் செய்யத் தவநெறி, சிவத்தின் தயவு, கூர்ந்த மதி, வெற்றிக்குரிய விதி, ஆணவமின்மை, குருவை மதித்துப் போற்றுதல் போன்றவை இருக்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. மேலும், பிண்டம் பற்றியும் அதனால் வழலை முடித்துக் கருக்கள் கூட்டுதலும், செயனீர்கட்டு, பொற்குதிரை, சுண்ணம் ஆகியவை பற்றியும் கூறுகின்றது. ஆறாதார யோகத்தில் நின்று முப்பு எடுக்கும் விவரம், யோகம் கை கூடியதால் யோகிகள் செய்யும் வித்தைகள் பற்றிய குறிப்புகளும் கூறப்படுகின்றன. கருவழலை, தெரிவு, வேதைக்குப் பிண்டமாவி அறிதல், பல்வகைக் கருக்கள், கொங்கணர் மறைப்பு, கோசபீசம், பல்சுண்ணம், உப்புக்கட்டு, வீரம், புடம்போடும் முறை ஆகியன இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

4. அகத்தீசர் கருக்கிடைச் சூத்திரம் 48.

5. வாதமென்ற நூல்களெல்லா மொடுங்கி யொன்றாய்
மாட்டவே சிவன்மைந்தன் கணபதியுங் காப்பு
நாதமெனும் வுமையவளுஞ் சிவனுங் காப்பு
னாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
வேதமென்ற பொருள்களெல்லா மொடுக்க மாக்கி
வேதாந்த சொரூபமாங் கந்தன் காப்பு
ஆதியந்த மாகிநின்ற வொடுக்க மெல்லாம்
அடிமுடியி லொடிங்கிசைத் தானு மாமே. 1

6. கூட்டுகின்ற கருவறிந்து கூட்ட வேணுங்
கூடாவிட்டால் குலையுண்டு திரிய வேணும்
மாட்டுகின்ற யினமறிந்து மாட்ட வேணும்
மடக்குவழி யறிந்தல்லோ மடக்க வேணும்
நாட்டுகின்ற வித்தையெல்லாம் பாம்பு நஞ்சு
நலமான கருவிதுதான் நன்றாய்ப் பாரு
பூட்டுகின்ற பூட்டெல்லாம் மிதுதா னென்று
புகழ்ந்திட்டே னுட்கருச் சூத்திரந்தான் முற்றே. 48

7. வேலும் மயிலும் துணை செய்ய வேண்டியது.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாடபேதங்கள் உள்ள நூல். பேச்சு வழக்கும் பயின்று வருகின்றது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 168(i), R. 265, R. 4746, R. 4218. 2. த.ப.க. எண்கள் 289, 514, 901. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் உட்கரு சூத்திரம் என்ற இந்நூலுக்கு அகத்தீசர் கருக்கிடைச் சூத்திரம், அகத்தியர் சூத்திரம் நாற்பத்தெட்டு, தெட்சிணாமூர்த்தி நாற்பத்தெட்டு என்று பல பெயர்கள் உள்ளன.

அகத்தியர் உட்கரு சூத்திரம் 48

I. 1. 785. 2. அ. R.4218. ஆ. T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் உட்கருச் சூத்திரம். ஆ. Akattiyar uṭkaru cūttiram. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —.

8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்பா கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 13. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 25; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்குரிய முறைகளையும் சில மருத்துவ முறைகளையும் கூறும் நூல். 2. இரசவாதம், மருத்துவம். 3. வரிசைஎண் 784ஐப் போன்றது.

4. —.

5. வாதமென்ற னூல்களெல்லா மொடுக்கி யொன்றில்
மாட்டவே சிவன்மைந்தன் கணபதியுங் காப்பு
நாதமென்ற வுமையவளுஞ் சிவனுங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
வேதமென்ற பொருள்களெல்லா மொடுக்க மாகி
வேதாந்த சொரூபமாம் வடுகன் காப்பு
ஆதியந்த மாகிநின்ற வொடுக்க மெல்லாம்
அடிமுடிவி லொடிங்கினது தானு மாமே. 1

6. கூட்டுகிற கருவறிந்து கூட்ட வேணுங்
கூட்டாவிட்டால் குலையுண்டு திரிய வேணும்
மாட்டுகிற யினமறிந்து மாட்ட வேணும்
மடக்குவழி யறிந்தல்லோ மடக்க வேணும்
நாட்டுகிற வித்தையெல்லாம் பாம்பு நஞ்சு
நலமான கருவிதுதான் நன்றாய்ப் பாரு
பூட்டுகிற பூட்டெல்லா மிதுதா னென்று
புகழ்ந்திட்டேன் உட்கருசூஷ்த் திரந்தான் முற்றே. 48

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 168(i), R. 265(e), R. 4746, R. 6203. 2. த.ப.க. எண்கள் 289, 514, 901, 1041(a), 82 (a), 1137. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் கலைஞானம் 12 (R. 4214), அகத்தியர் கற்பம் 10 (R. 4215) முதலான நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம்

I. 1. **786.** 2. அ. R.6970. ஆ.T.R.2803. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணாமூர்த்தி சப்த காண்டத்தின் விவரம். ஆ. **Taṭciṇāmūrtti capta kāṉṭattiṉ vivaram.** இ. தெஷ்சணாமூர்த்தி சத்த காண்டத்தில் ஆழிக்காத்தின் விபரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம் கம்பம், கொம்மையகவுண்டன்பட்டி, எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 36x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 11; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் ஏற்படும் ஊழி எனும் நச்சுக்காற்றின் இயல்பைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. ஊழி எனும் நச்சுக்காற்றானது, மனித உடம்பில் மை போலக் கருமையாகத் தோற்றம் பெற்று உருவாகும். ஆனால் அது கண்ணுக்குப் புலப்படாது. அது சிறிது சிறிதாகப் பெருகி வெளிப்படும். அதன் போக்கையும் இயல்பையும் அறிவது அரிது. அது உடம்புக்கு அழிவை ஏற்படுத்தும் என இந்நூலில் கூறப்படுகிறது. இதனுடன், கசாயங்கள், சுண்ணங்கள் செய்யும் முறையும் கூறப்படுகிறது. சியாமளாதேவி பேரில் வசியம் செய்வதற்கான மருந்துச் சொற்களும் நச்சுக்கொடி, தாக வறட்சி என்பனவும் இந்நூலில் கூறப்படுகின்றன.

4. —.

5. கேளப்பா ஆழியென்ற காத்தைச் சொல்வேன்
   கெடியான சாமளா தேவி யாலே
காழப்பா மைபோலே கருத்து நிற்கும்
   கண்ணுக்குத் தோத்தாது கடினம் மெத்த
வாழப்பா காத்தினுட விபர மெல்லாம்
   மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்க் கேளு
பாழப்பா பண்ணிவிடும் உலக மெல்லாம்
   பரிசுத்த மாயிருந்தால் பறக்கும் பாரே. 1

6. ....
   தன்மையுடன் அவிழ்த்து தயவாய் செய்து
....கருத்தாய் செய்து
மானான சாந்தியுடன் செபமும் செய்து
   மயங்காமல் தயிரியத்தை மனதில் வைத்து
தேனான மனோன்மணியைத் தியானம் செய்ய
   பறக்குமடா ஊழிவகை மூன்றும் தானே. 14

7. —.

8. மூலம். 9. 'ஊழி' என்பது 'ஆழி' எனக் குறிக்கப்படுகிறது. பாடபேதங்கள் உள்ளன. 'காத்து', 'அப்பா', 'தோத்தாது' எனும் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூலில், சியாமளாதேவி வழிபாடு குறிக்கப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 2453, R. 168(f), R.6107, R. 6920, R.6986. R. 8997(a). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு முன் ஞானவெட்டியான் (R.6969) என்ற நூல் 103 ஏடுகளில் உள்ளது. பின்பகுதியில், குமரி கல்பம் என்ற உரைநடை நூல் (120 முதல் 122) மூன்று ஏடுகளில் உள்ளது. இதுபற்றிய ஒரு குறிப்பு, இங்கே விளக்கப்பட்ட அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரத்துடன் இணைத்து அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்பின் அகத்தியர் பச்சை (R.6971) என்ற நூல் 3 ஏடுகளில் உள்ளது. அகத்தியர் நாடிப்பச்சை

என்ற நூல் (11 ஏடுகளில்) உள்ளது. **அகத்தியர் சூத்திரம்** எனும் நூல் ஐந்து பாடல்கள் பெற்று 3 ஏடுகளில் அடுத்து அமைந்துள்ளது. **சுக்கிலசித்து** என்ற தலைப்பில் 3 பக்கங்களில் ஒரு நூல் உள்ளது. **ஞானவெட்டியான்** (R.6972) என்ற மற்றொரு நூல் 12 ஏடுகளில் உள்ளது. **சூடன் வைப்பு** என்ற தலைப்பில் மற்றொரு ஏடும், அதன்பின், **சாம்பிராணி உப்பு, கண்ணாடிக்கு செம்பு கூட்ட** போன்ற தலைப்புகளில் மருத்துவக் குறிப்புகள் உரை நடையில் எழுதப்பெற்ற சுவடிகளும் உள்ளன.

அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம்

I. 1. **787**. 2. அ. R.6107. ஆ. T.R.2566. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம். ஆ. Akattiyar ū̱likkā̱ṟṟu cūttiram. இ. அகத்தியர் ஊழிக்காத்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-1957.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 18x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 10; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7-8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் ஏற்படும் ஊழி என்ற காற்றின் இயல்பு பற்றிக் கூறும்நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 786 போன்றது.

4. அண்டரண்டங் கடந்துநின்ற வருளே காப்பு
    ....நின்ற அறிவே காப்பு
குண்டமென்ற குண்டலி...................................
    குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்ட..............................நிறைந்து நின்ற
    ....
சண்டமெனும் மாருதம்போல் ஊழி தன்னை
    சாத்தக்கேள் சாமளைதான் பாதங் காப்பே.

5. கேளப்பா ஊழியென்ற காத்தே தன்னில்
 கெடியான சாமளா தேவி யாலே
காளப்பா மைபோலே கறுத்து ருக்கும்
 கண்ணுக்குத் தோத்தாது கடின மேத்தும்
வாளப்பா காத்தினுட விபர மெல்லாம்
 மைந்தனே சொல்லுகிறேன் வண்மை யாய்க்கேள்
பாழப்பா பன்றிவிடு முலக மெல்லாம்
 பரிசுத்த மாயிருந்தால் பறக்கும் பாரே. 1

6. செப்புவோர் முனியேயென்றும் ஊழி யென்றும்
 சினந்தகன்னி மாரியென்றும் சிவனோ யென்றும்
அப்புவார் சீதத்தால் வந்த னோய்தான்
 அப்பனே..........ச்சல் லென்றுஞ் சொல்வார்
தப்புவார் துர்க்கையென்று கூறு வார்கள்
 தாயான சாமளாவை அறிய மாட்டார்
ஒப்புவார் பன்னிரெண்டைக் கண்ட போது
 ஒழிவான ஊழியது ஒடுக்க முற்றே. 12

7. குறிப்பு மிகவும் சிதைந்துள்ளது.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் எளிய நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. மிகவும் சிதைந்துள்ளது.

IV. 1. D. 2453, R. 168(f), R. 6970, R.6986, R.6920, R.8997(a). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. ஊழிக்காற்று என்பது உலக முடிவில் வீசக்கூடிய காற்று என்று பொருள் கொள்ளலாம். ஆனால் இங்கு நம் உடம்பை முறையாகப் பேணாவிட்டால் ஊழிக்காற்று உலகை அழிப்பதுபோல் நோயான ஊழி நம் உடம்பை அழித்து விடும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம்

I. 1. **788.** 2. அ. R.6986. ஆ. T.R.2809. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம். ஆ. Akattiyar

ūḻikkāṟṟu cūttiram. இ. அகத்தியர் சாஸ்திரம் ஊழிக்காற்றின் பேதி சாஷ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 19. 5. 18.5x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 38; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 73 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் ஏற்படும் ஊழி என்ற காற்றின் இயல்பு பற்றிக் கூறும்நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 786 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தியர் சாஷ்த்திரம் ஊழிக்காற்றின் பேதி சாஷ்திரம்.

5. கேளப்பா ஊழியென்ற காற்றைச் சொல்வேன்
கெடியான சாமளா தேவி யாலே
காரப்பா மைப்போலே கருத்து நிற்கும்
கண்ணுக்குத் தோன்றாது கடின மேத்தும்
வாளப்பா காத்தினுட விபர மெல்லாம்
மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்க் கேளு
பாழப்பா பண்ணிவிடும் முலக மெல்லாம்
பரிசுத்த மாயிருந்தால் பறக்கும் பாரே. 1

6. போமென்ற லத்தி தாறும்
புகழ்பட அன்றைக் கித்தான்
தாமென்ற புதுச்சாய்ச் செய்து
தயங்காமல் அருந்து நன்றாய்
வாமென்ற வசூரி வந்து
வாஷ்த்தானஞ் செய்ய மட்டும்
பொமென்ற தாகத் துக்குப்
பொருந்திய மருந்து சேரே. 72

சேருபத்தி யத்தைக் கேளு
    திறமதாய் சாதஞ் செய்து
ஆருமே அறுசு வைத்து
    அடவுடன் மிளகு சேரு
பாருமு வகையே யான.......... **73**

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ர/ற, ல/ள ஆகிய எழுத்துக்கள் வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 2453, R. 168(f), R.6107, R. 6970, R.6920, R.8997(a). 2. —.3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் ஊழிக்காத்து, அகத்தியர் ஊழிக் காற்றின் பேதி சாத்திரம், அகத்தியர் ஊழிக்காற்று விபரம் ஆகிய பெயர்களில் அமைந்துள்ளது.

அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம்

I. 1. **789**. 2. அ. R.6920. ஆ. T.R.2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம். ஆ. Akattiyar ūḻikkāṟṟu cūttiram. இ. ஊழிக்காற்றின் விபரம் அதுக்குமருந்து. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-1958.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 3; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. நடு, இறுதி. 16. குறை. 17. 7 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் ஏற்படும் ஊழி என்ற காற்றின் இயல்பு பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 786 போன்றது.

4. ஊழிக்காற்றினுடைய விபரம் அதற்கு மருந்து.

5. கேளப்பா ஊழியென்ற காற்றைச் சொல்வேன்
கெடியான சாமளா தேவி யாலே
காணப்பா மைபோலே கருத்து நிற்கும்
கண்ணுக்குத் தெரியாது கடின மேத்த
மாளப்பா காத்தினுடைய விபர மெல்லாம்
மைந்தனே சொல்லுகிறேன் வகையைக் கேளு
பாளப்பா பண்ணிவைக்கும் உலக மெல்லாம்
பரிசுத்த மாயிருந்தால் பறக்கும் பாரே. 1

6. அரைத்ததனை முழக்களவு உண்டை செய்து
அழகான னஞ்சுகொடி சுண்ணம் செய்து
திரைத்துடனே ஒருகௌஞ்சு சூடஞ் சேர்த்து
திரமாக அரைத்துஉண்டை செய்து கொண்டு
கரைக்கட்டாங் காசாயம் உரைத்து யேத்து
சண்ணுமடா ஊழியென்ற வியாதி தீ..........
நிரைக்கடங்கா தாகபது யெடுத்து தானால்
நேராகக் கருக்குத்தான் சொல்லக் கேளு. 7

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. கேளு என்பது கெளு என்றும் நேராக என்பது நேறாக என்றும் எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 2453, R. 168(f), R.6107, R. 6970 R.8997(a). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் 'ஊழி' என்பதை 'ஊழி என்ற வியாதித்தீ', என்று குறிப்பிடுவது ஆராயத்தக்கது.

அகத்தியர் ஊழிக்காற்று சூத்திரம்

I. 1. **790**. 2. அ. R.8997(a). ஆ.T.R.3249. இ. —. ஈ. —. 3. —. ஆ. —. இ. ஊழிக்காற்று விபரம் கொம்பன் குணம் குடல்(ப்)படுகன் குணம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 6. 5. 27x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 11; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. உரைநடை.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் ஊழி எனும் நச்சுக்காற்று பற்றிய செய்திகளை உரைநடையில் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 786 போன்றது.

4. —.

5. **கொம்ப னென்றபேதி கண்டால் வாந்திபிராந்தி குளிர்கசிவேர்வை தோத்தில் நடுபரவுளைவு நாவறஷ்சி விக்கல் வயிறுவலி சன்னி தோன்றும் தேகமெல்லாம் பிசின்போலிக்கும் நாடியடங்கும் முப்பது நாழிகையிற்(க்) கொல்லும்.**

6. **வேறுதயிலம் : திரேகத்தில் குளிர்ச்சி கொண்டிருந்தால் பிடரியில் அடிக்கடிப்பூசவும் கடுகு பூண்டு சூடன் முருபட்டை சாரை அரைத்து.......தடவவும் கைகா லெங்கும் தடவவும் கம்பிளியால் போற் சூடுஉண்டாகும் வேறு பத்தியம் அரிசியைப்பொரித்துக் கஞ்சி செய்து கறிவேப் பிலைபூண்டு உப்பு இவைகளைப் பொடித்துப் பத்தியம் கொடுக்கவும்.**

7. —.

8. மூலம். 9. பிழைகள் மலிந்த உரைநடை. பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த இந்நூல் 'ஊழிக்காற்று சூத்திரம்' என்ற பெயரில் பாடல்கள் பெற்றும் அமைந்துள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் சேர்ந்துள்ள சுவடிக்கட்டில், அமிர்த சஞ்சீவிக்குழம்பு, காலம் அறியும் வகை எனும் இரு நூல்களும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு:

அமுர்த சஞ்சீவிக் குழம்பு

சீர்பெருகுந் தஷ்ஷணந் தன்னில் வாழுஞ்
செகம்புகழும் கும்பமுனி பாதம் போற்றி
கார்பெருகுங் கந்தன்முனி தன்னில் வாழும்
கவனமத ஞானசித்தன் னாமத்தன் மோகனப்
பேர்பெருகும் அகமது வயித்தி யந்தன்(ப்)
பிரபஞ்ச மனிதருக்குப் பலம தான
ஆர்பெருகு விஷங்கள்சன்னி சுரங்கள் தீர
அமுர்த சஞ்சீவிக் குழம்பு சொன்னார்.

நாட்டப்பா அமுத்த மதயானை சித்தன்ம் பேரும்
நல்லபாம்பு விஷங்களெல்லாம் நடுநடுங்கி ஓடும்
கூட்டப்பா(க்) கொம்பேறி மூக்கன் வழலை
கோடிவிதியான் மதிமயக்கும் ஊது சுருட்டை
தேன்நண்டு வாக்காலி நேமித்தப் நீட்டு முன்னே
நீங்காத விஷங்களெல்லாம் நீங்கும் பாரே.

அரசினர் கீழ்த்திசைச் சுடிகள் நூலகம் வெளியிட்டுள்ள அட்டவணையில் இந்நூல் குழம்பு வகைகள் (R.9002) என்பதின் கீழ் வந்துள்ளது.

கருங்குதிரை புணர கங்கை சூழ கிடந்தகாசிதனி
விறந்து படுநாள் ணித்தாயி
யேயிது துளியாயினும் சொல்கென
தறந்தனை மற்றதலை தெளியும் மாநினி
தின் ணடறை கின்னான்
சிறந்த முனி வர்கங்கேள்ப்ப
சூர்கடிந்தோம் செப்பமால்.

நாற்றிசையு மிரவிற்றோன்றிடினின்
பகலிடைபுயிர் ற னேற்றுர சிவமே யாடிந்

துரு அல்லினூரபாமாளி
லேற்றுயகாந் தீருவக ரேற்றிடுவோர் திங்களதனில்
கூத்தம் வனாவிதனைக் குடியாரும் லொழியமோ 20

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியிட்டுள்ள அட்டவணையில் **காலம் அறியும் அத்தியாயம்** எனும் நூல் இடம் பெற்றிலது.

அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **791.** 2. அ. R.6470. ஆ. T.R.2699. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கர்ம காண்டம் 300. ஆ. Akattiyar karma kāṇṭam 300. இ. அகஸ்தியர் கர்ம நிவர்த்தி நடுக்காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 60. 5. 22x4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 120; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9-13 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 301 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முற்பிறவியில் அல்லது இப்பிறப்பின் முற்பகுதியில் நாம் செய்த தீய வினையின் காரணமாக நோய்கள் உண்டாகும் என்றும், அந்நோய்கள் என்னென்ன என்பதும்,அந்நோய்களைத் தீர்க்க வழி என்ன என்பதையும் விரிவாகக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் கர்ம நிவர்த்தி நடுக்காண்டம் என்ற இந்நூலில் உயிர்வதை செய்தால் மேகநோய் உண்டாகும் என்றும், இதற்குக் கன்ம நிவர்த்தி 100 குடம் நீர் எடுத்து நந்திக்கும், கணேசனுக்கும், அரசமரத்தின் வேருக்கும் அபிசேகம் செய்து 100 முறை வலம்வந்து, சிவபூசை, விட்ணு பூசை, பசுதானம், ஓமம், சாந்தி ஆகியவற்றைத் தினம் 10 முறை செய்ய வேண்டும் என்று முதலில் கூறப்படுகிறது. அடுத்து மேகராசாங்கமும் அப்பிரக செந்தூரம் தயாரிக்கும் முறையும், தலை முழுக எண்ணெய் தயாரிக்கும் முறையும்

கூறப்படுகின்றன. மேலும், நீரின் வகைகள் இருபதும், அந்நீரின் வாசனையும், சுவையும், அதனில் வரும் நோயும் இடம் பெற்றுள்ளன. வாங்கிய கடனைக் கொடுக்காததால் காசம் உண்டாகும் என்றும், அதற்கு நிவர்த்தி ஒரு மண்டலம் கன்னியர்க்கு அன்னதானம், வஸ்திர தானம் செய்தல் வேண்டும் என்றும், அதற்கு மருந்து தாளக பற்பம், இரசபற்பம், வேப்பரிசி, அழிஞ்சி வகை, பேய்ச்சுரை வித்து, வசம்பு, கொடிவேலி போன்ற பல பொருள்களால் செய்யும் தைலம் என்றும் சொல்லப்படுகிறது. இதை ஒரு மண்டலம் பூச 18 வகைக்குட்டம் தீரும் என்றும் கூறப்படுகிறது. இந்நோய் வரக்காரணம் தாய் தந்தையை நோகச் செய்தல், தெய்வவடிவை அழித்தல் போன்றவையாம். அடுத்தவன் குடியைக் கெடுத்தல், பிறர் பசித்திருக்க உண்ணுதல், நல்லோரைப் பழித்தல் ஆகியவற்றால் எட்டுவகைக் குன்மம் வரும் என்றும், அவற்றை நீக்க வழிவகைகளும் கூறப்பட்டுள்ளன. ஊர்வன, பறப்பனவற்றைக் கொல்வதால் வலிப்பு வரும் என்றும் இதற்கு நாக பிரதிட்டை செய்து சிவனுக்கும், நந்திக்கும் தலந்தோறும் ஒரு மண்டலம் பூசைசெய்து அன்னதானம், ஆடைதானம், கோதானம் முதலியவற்றைச் செய்ய வேண்டும் என்றும் கூறுகின்றது. இன்னும் பல்வேறு செய்திகளையும் இந்நூல் கூறிச் செல்கின்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் கர்மநிவர்த்தி நடுக்காண்டம்.

5. பூரணமா மூலமுத லாறா தாரம்
 புரியட்டம் திசவாய்வு நாடி மூன்று
காரணமாய் யிடைபின்னாய்ச் சுழினை யாகிக்
 கலந்துநின்ற வாதபித்தஞ் சிலேற்பனமு மாக
வாரணமாய்ச் சடத்தினுள்ளே தத்து வங்கள்
 மனம்புத்தி யாங்காரச் சித்தத் தாலே
மாரணமாய் நடத்திவைத்த கர்மத் தாலே
 வந்துதடா நோய்களெல்லாம் மானுடர்க் காமே. 1

6. வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைக ளேது
 மாந்தமோ சுளிதுரப்பு வலிக ளேது
பரிசனமாய்க் கரப்பனொடு பரங்கி யேது
 பட்சியொடு பறவையது தோச மேது
தெரிசனமாய் கண்களீவை வருவ தேது
 தீர்க்கமடா சிறுவருக்குத் தேவா மிர்தம்

கரிசனமா மின்னூல் கர்மங் கர்மங்
கட்டான மருந்துவகை கணக்கு முற்றே. 301

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடபேதங்கள் மிகுந்து காணப்படுகின்றன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 246(b), R. 3674, R. 4455, R. 5831, R. 6093. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 147(b), 158, உ.த.நி.எண் 512:785, த.ப.க.எண் 2409, தி.ஆ.எண் 359(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் கர்மகாண்டம் 300,** தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூல், 'பூரணமாம் மும்மூலப் பொறியிற் சூடாம்' எனத் தொடங்கும் கர்மகாண்டம் 300 என்ற நூலினின்று வேறானது.

அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **792.** 2. அ. R.4502. ஆ.T.R.1988. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 300. ஆ. Akattiyar cūttiram 300. இ. அகத்தீசுபரர் கர்ம சூத்திரம் முன்னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி எஸ். மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1953-1954.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 29. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 58; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. நடு மற்றும் இறுதி. 16. குறை. 17. 163 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முற்பிறவியில் அல்லது இப்பிறப்பில் நாம் செய்த தீவினைகளின் காரணமாக நோய்கள் உண்டாகின்றன என்றும், அந்நோய்களைக் குணப்படுத்தும் வழிகளையும் கூறும் நூல்.

2. மருத்துவம். 3. வரிசை எண் 791 ஐப் போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகத்தீசுபரர் கர்ம சூஷ்த்திரம் முன்னூறு.

5. **பூரணமாய் மூலமுதல் ஆறா தாரம்**
புரியட்டந் திசைவாய்வு நாடி மூன்று
காரணமாய் யிடைபின்னாஞ் சுழினை யாகிக்
கலந்துநின்ற வாதபித்தம் சிலேற்ப னமுமாய்
வாரணமாய்ச் சடத்தினுள்ளே தத்து வங்கள்
மனம்புத்தி யாங்காரம் சித்தத் தாலே
மாரணமாய் நடத்திவைத்த கர்மத் தாலே
வந்துதடா னோய்கஎெல்லாம் மனுடர்க் காமே. 1

6. **வாறான நீர்விசம்போல் வந்த தோஷம்**
மாறவொரு நிவர்த்திசொல்வேன் மருவிக் கேளு
கூறான கெணபதிக்கும் பொறித்தான் வேணுங்
கொட்டையென்ற தேங்காய்தான் பத்து நூறும்
வீறான யிளனியது பத்து நுறும்
வெள்ளியென்ற கிழமையிலே பழந்தா னூறு
சாறான யிளனியிலே பழம்பி சைந்து
சண்முகனார் தமையனுக்கு அபிசேகஞ் செய்யே. 163

7. செய்தபின்பு தேங்காயை எடுத்தெ றிந்து
சிதறவே உடைத்திடுவாய் ஆயி ரந்தான்
கொய்தமலர் பொரியதனை சிரசில் கொட்டு
கூட்டியெல்லாம் வாரியே கொள்ளை செய்து
பைய்தலர்கள் தானரு..
....

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.246(b), R.3674, R.4455, R.5831, R.6093, R.6470. 2. தி.ஆ.எண் 359(a), த.ப.க. எண் 2409, சி.ம.மை.ஆ.நி.எண்கள் 158, 147(b), உ.த.நி. எண் 512 : 785, த.ச.ம.நூ.எண் 8, 382(f), 413(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் கன்ம காண்டம் 300,** தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன் அகத்தியர் 16 (R.4501), அகத்தியர் சூத்திரம் 12 (R.4503(a)) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் கர்ம காண்டம் 300

I. 1. **793.** 2. அ. R.7019. ஆ.T.R.2826. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கர்ம காண்டம். ஆ. Akattiyar karma kāṇṭam. இ. அகஸ்தியர் கர்ம காண்டம் முன்னூறு. 4. —. 5. —. 6. சிதம்பரம் செட்டியார். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையக்கவுண்டன்பட்டி, எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து வாங்கப்பட்ட சுவடி. 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 55. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 110; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்து செய்முறைகளும் பயனும் கூறும்நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியவைகளும், நாடிகளை அறியும் முறைகளும் முதலில் கூறப்படுகின்றன. நோய்களின் மிகுதியால் ஏற்படும் விளைவுகள், நோய்களின் தன்மைகளை நாடி பார்த்து அறிதலோடு உமிழ்நீர், மலம், சிறுநீர் ஆகியவற்றாலும் நோய்களை அறியும் முறைகளும் விளக்கப்படுகின்றன. 21 வகை மேக நோய்கள், மகோதரம், பெரும்பாடு, சூலை, குன்மம், கெர்ப்ப வாய்வு, கெர்ப்ப சன்னி போன்ற நோய்களின் பொதுக்குணங்களும் கூறப்படுகின்றன. மேலும், அரப்பொடி, அப்பிரகம், தாம்பிரம், காந்தம், நிமிளை, துத்தம், குக்கல், நேர்வாளம் போன்ற சரக்குகளின் சுத்திமுறைகளும் கூறப்பட்டுள்ளன. உள்மாந்தையைத் தீர்க்கும் கண்டாத்திரி நெய், பெரும்பாட்டு

நோயைத் தீர்க்கும் நிலப்பனை நெய், குன்மநோயைத் தீர்க்கும் கொம்மட்டிக் குழம்பு, சன்னிக்கான ஆனந்த வயிரவன் மாத்திரை, கரப்பான் நோய்க்கான பரங்கிப்பட்டை இரசாயனம், நீர்க்கோவ்வ நோய்க்கான சிலேதாரை உருண்டை, பிளவை நோய்க்கான அருளாதி கசாயம், தாபசுரம், வாந்தி, பித்தம், நெஞ்செரிப்பு, கிறுகிறுப்பு, தலைநோவு, மலக்கட்டு போன்ற பல்வேறு நோய்களுக்கான நாரத்தங்காய் இலேகியம் போன்ற பல மருந்துகளும், அவற்றின் செய்முறைகளும் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக குருவாழ்க. குருவே துணை.

சீரணி கொன்றை சூடுஞ்
சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தோன் பாதம்
வணங்கி நூற்றன் பதுஞ்சொல்ல
பூரண வாலை ஞான
சரசுபதி பாதம் போற்றிக்
காரண மான செஞ்சொல்(க்)
கர்ம சூஷ்த்திரங் காப்பாமே.

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்-வெள்ளை
யரியாசனத்தி லரசரோ டென்னைச்
சரியாசனத்தில் வைத்த தாய்.

5. பூரணமா மும்மூலப் பொறியிற் சூடாய்ப்
புகையெழும்பி மேகமதாய்ச் சிரசில்(ச்) சூடாய்
காரணமாய் நீரேற்கும் பீனிசம் போற்கொள்ளுங்
கனலெழுந்தே வாயுவதாங் கபால மெல்லாஞ்
சீரணமாய்ப் போகாது வாத பித்தஞ்
சிலேற்பனந்தான் மூன்றாலே னோய்க ளெல்லாந்
தாரணையாய்த் திசைவாய்வில் மூன்று வாய்வுச்
சமானனொடு பிராணனொடு அபானன் றானே.

6. வாரான கர்மபாத கத்தைச் சொன்னேன்
வருசையுடன் சிவதவங்கள் அனுட்டா னங்கள்
கூரான குருதங்கனலே குயங்கள்
கோடான கோடிசெந் தூரஞ் சொன்னேன்
பேரான சூரணம் ரஷா யணங்கள்
பிழைப்பதற்கு நோய்தீரப் பிரத்து மாற்றி

நீரான நீற்றினமுங் குருவும் சொன்னேன்
நிசமாகப் பிடித்தவனே சித்த னாமே. 300

7. ஆதி நாயன்துணை. அகத்திய மாமுனி கிடாட்ச முன்னிற்க. குருகிடாட்சமுன்னிற்க. சரசுபதி. முன்னிற்க. வினாயகன் முன்னிற்க.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள், பாடபேதங்கள் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. சித்தம்பலம் செட்டியார் குமாரன் சிதம்பரஞ் செட்டியார் ஏடு. முதற்காண்டமுன்னூறு கர்ம நிமிர்த்தி எழுதினது கட்டயகான் பேரன் உசனுபண்டுதன்நீட்டெழுத்து. நீடுழிவாழ்க. நாயமாருதவியுண்டாவதாகவும்.

IV. 1. R.5(b), R.75(a), R.923, R.1081, R.4683, R.9041, D.1871. 2. தி.ஆ.எண். 359(a), த.ப.க. எண் 2409, சி.ம.மை.ஆ.நி.எண்கள் 751(i), 258, உ.த.நி.எண் 487 : 740. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் கர்ம காண்டம் 300,** தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. 300 பாடல்கள் பெற்ற கர்ம காண்டநூல்கள் இருவகை உள்ளமை தெரியவருகின்றது.

அகத்தியர் கருக்கிடைச் சூத்திரம் 345

I. 1. **794.** 2. அ. R.4667. ஆ. T.R.2057. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் அட்ட கர்ம விவரம். ஆ. Akattiyar aṭṭakarma vivaram. இ. அட்டகர்ம விவரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பரமசிவம் பிள்ளை, கவரைப்பட்டி, நாகைய்யநல்லூர் அஞ்சல், திருச்சி மாவட்டம். 10. கி.பி.1953-1954.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 64. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 128; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. முதல் 75 பாடல்கள் இல்லை. 16. குறை. 17. 271 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம், மந்திரமுறைகளைக் கூறும்நூல். 2. யோகம், ஞானம், மந்திரம். 3. இந்நூல் அட்டகர்மங்களான மாரணம், வசியம், தம்பனம், மோகனம் முதலான எட்டுவகைகள் பற்றியும், அவற்றைச் செய்யும் முறைபற்றியும் விளக்குகிறது. கிரிகை, யோகம், ஞானம் ஆகியவை பற்றியும் கூறுகிறது. அட்டகர்ம விவரம், அட்டாங்க வாலை, கிரிகை, சுழினை, யோகநூலின் பெருமை, வெள்ளை ஆவாரை, வசியமூலிகை, அஞ்சனம், கணபதி செபம், சொக்குப்பொடி, சிமிழ்வித்தை, சர்வ அஞ்சனம், உருமாற்றம், கரும்பூனை, கருங்குரங்கு, மோடி வித்தை, ஆகாச மோடி, வாரி மோடி, அக்கினி மோடி, அழைப்பு வித்தை, சாபநிவர்த்தி, தெரிசனம் முதலான பல்வேறு செய்திகளைப் பற்றியும் இந்நூல் விரிவாகக் கூறுகின்றது.

4. —.

5. நீக்கவே வாதமுறை கருவை யெல்லாம்
நிகழ்த்தினேன் அட்டகர்மம் நிலைக்கச் சொல்வேன்
தாக்கவே எட்டெட்டுக் கர்மத் துக்கும்
சாற்றுகிறேன் அட்சரமும் சக்கரமும் பாரும்
ஆக்கவே ஆதார மாறுக் குள்ளே
அம(ர்)ந்ததொரு அஞ்செழுத்து மட்டு ரண்டும்
தீ(ர்)க்கமாம் பன்னிரெண்டும் அன்பத் தொன்றுஞ்
சிக்கிநின்ற மூலமொன்று திறந்திட் டேனே. 76

6. வையப்பா சகலகலை செய்தி யெல்லாம்
வளமாக மதிமடக்கி தெளிவாய்ச் சொன்னேன்
அய்யமென்று நினையாதே பொய்பே சாதே
ஆத்தாளே அனுதினமும் மறவாதே தான்நீ
செய்யாதே தீவினைதாய் கோடி பாவஞ்
சேர்ந்துவெல்லா மீசனென்று தெளிந்து காணும்
மெய்யான குருபதத்தை பணிந்து போற்றி
விளக்கினேன் கருக்கிடைச்சூத் திரந்தான் முற்றே. 346

7. மீனாட்சியம்மன் துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. மன்மத

வருடம் மாசிமாதம் 11ம் தேதி வெள்ளிக்கிழமை................சுக்கிரவார நாள் நவமி கூடின சுபதினத்தில் கருக்கிடை சூஷ்த்திரம் எழுதி முகிந்தது. முற்றும்.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலின் சுருக்கமாக **அகத்தியர் கருக்கிடை 12** என்ற நூல் அமைந்துள்ளது அறிய வருகின்றது. இச்சுவடிக் கட்டில் இந்நூலுடன், போகர் பூசாவிதி 44, கருவூரார் சூத்திரம் 16, சிதம்பரச் சக்கரம் முதலிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் கருப்பக்கோள்

I. 1. **795.** 2. அ. R.7910. ஆ. T.R.2998. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருப்பக்கோள். ஆ. Akattiyar karuppakkōḷ. இ. கொங்கணர் கெர்ப்ப உற்பத்தி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 27x2 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 24; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 4 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத் தன்மைகளின் இயல்புகளைக் கூறி, அவற்றைப் போக்கும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. பெண்களின் கருப்பக்குழிக்குள் வாயு நிரம்பியிருந்தாலோ, தசை வளர்ந்திருந்தாலோ, கிருமிகள் இருந்தாலோ, சோறை கட்டியிருந்தாலோ, மதித்திருந்தாலோ ஆண்களின் விந்துகள் அங்குச் சென்று முட்டையுடன் சேரா. இதனால் கருத்தரிக்கும் நிலை ஏற்படாது. இம்மலட்டுத் தன்மையைப் போக்க, கோழியின் பித்து வாங்கி, அதனுடன் பருத்தி விரைப் பருப்புச் சேர்த்து ஆட்டி, அவளுடைய மாதவிடாய் நீங்கிய மூன்றுநாள் கழித்து அம்மருந்தை அவள்

யோனிக்குள் தேய்த்த பின்னர், கணவனைக் கூடினால் கருத்தரிக்கும் என இந்நூல் கூறுகின்றது. இவ்வாறு பலவகை மருந்து முறைகளை எடுத்தோதுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக.

5. பாரப்பா பெண்மலடாங் கெற்பக் கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய் தானே
ஆரப்பா ஆண்மலடே ஆகு மல்லால்
அப்பனே பெண்மலடு ஆரு மில்லை
நேரப்பா தவசிருந்து பொருளை யீய்ந்தும்
நேரான தில்லையறு சூலை தானும்
வேரப்பா தேவதையல்லோ யேழாங் கற்பம்
விருந்துநன்றாய் புகலுகிறோம் விரும்பிக் கேளு. 1

6. மதுவாகுங் குளிர்ந்தசிலங் கிட்ட வாகா
மைந்தனே கொதிதண்ணீர் மிகவு மாகும்
சதிரவாகும் வேதமுறை கண்டு சொன்னேன்
சத்தியந்தா னிந்தனூல் சார்ந்து பாரு
அதுவாகு மிதுவாகு மென்று யெண்ணி
அலைந்தலைந்து திரியாமல் அருளை நோக்கி
பொதுவாகும் நினைவுகொண்டு யிருப்பா ராகில்
புத்திசித்தி முத்திமுதல் புனித மாமே. 16

7. ....கெற்ப உற்பத்தி கெற்பக்கோளின் சாஷ்த்திரம் முத்தும். குருவேதுணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.1079(g), R.5812(b), R.7032, R.9082, R.10366(a), D.2400. 2. த.ச.ம.நூ.எண்கள் 131, 243(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (அ) டாக்டர் எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை, (பதி.), கருப்பக்கோள் மருத்துவம், சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், சென்னை, 1991, (ஆ) எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), 'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை', முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. கர்ப்பம், கருப்பம், கற்பம், கெற்பம், கெர்ப்பம் எனப் பலவாறு இச்சுவடியில் கருப்பக்கோள் தொடர்பான சொற்கள் உள்ளன.

அகத்தியர் கருமறைப்பு

I. 1. **796.** 2. அ. R.6912. ஆ. T.R.2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருமறைப்பு. ஆ. Akattiyar karumaraippu. இ. அகஸ்தியர் கருமறைப்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம்(வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 3; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் கருமறைப்பு என்ற இந்நூல், ஞானம் செய்பவர்கள் மேற்கொள்ளவேண்டிய நிலைகளை விளக்கிக் கூறுகிறது. மேலும் இது சித்தர்களுக்காகச் சொல்லப்பட்ட நூல் போல் தெரிகிறது. முதலாவதாக ஞானம் செய்பவர்கள் ஞானத்தின் பெருமைகளை அறியவேண்டும். பிறகு பஞ்சாக்கினி என்ற ஐந்துவகை அக்கினியை வளர்த்து அதன் நிலையில் நின்று கோடிதரம் செபம் செய்யவேண்டும். மூலவர் முதற்கொண்டு கடைப்பிடித்த முறைகளும் கூறப்பட்டு இப்படிச் செய்தால்தான் ஞானதிட்டை அடையமுடியும் என்றும் கூறுகிறது. மேலும், ஞானம் தொடர்பான செய்திகளையும் மனம் நிலைப்பதற்கும் ஞானம் கைகூடுவதற்குமுரிய செயல்முறைகளையும் விளக்குகிறது.

4. அகஸ்தியர் கருமறைப்பு.

5. தானென்ற ஞானத்தின் பெருமை கேளு
தலைகீழாய் பஞ்சாக்கினி இடையில் நின்று
கோனென்ற கோடிதரம் தபஞ்செய்த பல ....
.............மேதியாக நூறு கோடி
தேனென்று செய்தபல மூவர்க்குச்
சிகந்தனிலோர் நூறுகற்பம் ரஷ்தம் பண்ணும்
வானென்ற ஞானநிஷ்டை தான்செய்த பலத்துக்
கொவ்வாறு யென்றுமறைப் புகழக் கேளே.

6. போமப்பா உலகத்தே யுரைத்தோர் கோடி
புகழாக மலைத்தோடு மலக்கோயி லில்லை
ஆமப்பா யுலத்தோர் மலையிற் சேர்ந்து
அடுத்தவர்க ளேதிணையோ கொடிக ளெண்ணு
மாமப்பா மறைபுகழில் சீஷன் கோடி
மற்றுநின்ற திருவிகற்ப வுரைத்தோர் கோடி
சோமப்பா லுண்டுநின்ற மவுளி கோடி
சொருபசித்தி யாகிநின்றோர் துகைகா ணேளே. 10

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. ஞானயோக மார்க்கத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறும் சிறந்த நூலாக இந்நூலைக் கொள்ளலாம். அகத்தியர் தத்துவம் 315 என்ற நூலின் சுருக்கமாக இந்நூல் திகழ்வதை, 'தானென்ற ஞானத்தின் பெருமை கேளு' என்று தொடங்கும் பாடலடியின் மூலம் அறியமுடிகின்றது.

அகத்தியர் கருமானம்

I. 1. **797**. 2. அ. R.6452. ஆ. T.R.2417. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருமானம். ஆ. Akattiyar karumāṉam. இ. அகத்தியர் கருமானச் சூத்திரம். 4. —. 5. —. 6. —.

7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. மகாலிங்கம் பிள்ளை (சோதிடர், மாந்திரீகர்), வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம். 10. கி.பி.1954-55.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 28. 5. 24x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 56; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6-7 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி. 17. 73 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பில்லி சூனியத்திற்கு மந்திரம் ஓதுதல், மருத்துவ முறை ஆகியவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம்-மந்திரம். 3. அகத்தியர் கருமானச் சூத்திரம் என்ற இந்நூலில் சூனியத்தின் இயல்பும், அதனை நீக்கும் வழிகளும் முதலில் கூறப்படுகின்றன. அழிஞ்சிப்பட்டை, உப்பிலிவேர் இவற்றைக் கூட்டி, காடிவார்த்து அரைத்துக் கொடுத்தால் சூனியத்தால் வரும் தசவில் பூட்டு என்னும் நோய் குணமாகும். அழிஞ்சில் என்பது ஒரு மரம். இது கிராணித் திரவியம் தயாரிக்க உதவுகிறது. உப்பிலி என்பது செடியாகும். மேலும் வாலை, மூலம், வில்பூட்டு, தந்திரம், வில்பூட்டைத் திறக்கும் வித்தை ஆகியனவும், மூலவாய்வு, மூலாக்கினி, மூலக்கிராணி, இரத்தமூலம், உள்மூலம், கீழ்மூலம், வறள்மூலம் எனப்படும் மூலநோய்களைக் குணப்படுத்துவதற்குரிய மருந்து வகைகளும், சூனியத்தின் வகைகளான வாகாதிசாரம், பித்தாதிசாரம், சிலேத்துமாதி சாரம், திரிதோசாதி சாரம் ஆகியவற்றுக்கு மருந்தும் மந்திரமும் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தியர் கருமானச் சூத்திரம்.

5. கருமானச் சாத்தாவின் கோயில் தன்னில்
காரிகையே சூனியத்தின் குணமே தன்னில்
சுருபமது பூனைபோல் நாய்போல் காணும்
சுரம்பிடிக்கும் கண்குழியும் கண்பஞ் சாகும்
கருமந்திப் போல்காணும் கைகால் காந்தும்
கண்மஞ்சள் பூத்திருக்கும் வெளுக்கு மேனி
குருவான நாக்கதுதான் குழறிப் பேசும்
குறிப்பறிய செவியோசை கேளா தாமே. 1

6. கேழ்க்கவே பின்னுமந்த செய்தி கேளு
 கெதியாக மதப்பேறித் துடிக்கும் தேகம்
ஆக்கையது நீரேற்றுக் குத்தி நோவும்
 அறையிறேன் சொறித்தவளை மேல்போ லாகும்
தாக்குடனே சரீரமது தடிக்கும் காந்தும்
 சாதகமா யொருகாது மந்த மாகும்
பாக்குறதில் இருநயனம் பார்வை குன்றி(முகம்)
 பரிவாகும் மண்டையிடி படைக்கும் நெஞ்சில். 73

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ர/ற வேறுபாடின்றி அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R.4546, R.4146, R.6146, R.6222, R.6113, D.2400. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பில்லி சூனியம் தொடர்பான வில்பூட்டுதந்திரம், தசவில்பூட்டு, அதிசாரத்துக்குச் சூனிய மந்திரம், தேங்காய் சூத்திரம், அடைப்புச் சூனிய மந்திரம் போன்ற பகுதிகள் எல்லாம் ஆராய்ச்சிக்குரியன.

அகத்தியர் கருமானம்

I. 1. 798. 2. அ. R.6113. ஆ. T.R.2568. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருமானம். ஆ. Akattiyar karumāṉam. இ. அகஸ்தியர் சூனியத் திறவுகோல் சாஸ்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 22x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 18; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி. 17. 34 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரித்தல், மந்திரம் ஓதும் முறை, மருத்துவமுறை ஆகியவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம், மந்திரம். 3. வரிசைஎண் 797ஐப் போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை
அகஸ்தியர் சூனியத்திறவுகோல் சாஸ்த்திரம்.

5. கருமானச் சாத்தாவின் கோவில் வைத்த
காரிகையே சூனியத்தின் குணமே தென்னில்
சுருபமது பூனைபோல் நாய்போல் காணும்
சுரம்பிடிக்கும் கண்குழியும் கண்பஞ் சாகும்
கருமந்திப் போல்காணும் கைகால் காந்தும்
கண்மஞ்சள் பூத்திருக்கும் வெளுக்கு மேனி
குருவான நாக்கதுதான் குழறிப் பேசும்
குறிப்பறிய செவியோசை கேளா தாமே. 1

6. வாங்கிடுவாய் நாய்ப்பாகல் குப்பை மேனி
வகையான யிலைக்கள்ளிச் சீனிச் சாறும்
ஓங்கிடுவாய் ஆவின்பால் ஆவின் நீறும்
உறுதியுள்ள ஆவின்நெய் வகைவ கைக்கிப்
............ல்லாப் பழச்சாறும் அய்ந்துவீசம் படிதான்
சேரவே கலக்கியொன்றாய் வைத்துக் கொள்ள
தூங்கவே துவந்துபோடு மூன்று நாள்தான்
திறமாக உள்ளுக்கும் சீட்சை சொல்வாம். 34

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பேச்சு வழக்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R.4546, R.6146, R.6222, R.6452, R.6113. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பில்லி சூனியம்பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவோருக்கும் இந்நூல் பெரிதும் துணை நிற்கும்.

அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **799.** 2. அ. R.4513. ஆ.T.R.1489. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானம் 12. ஆ. Akattiyar kalaiṉāṉam 12. இ. தெட்சிணாமூர்த்தி 12. 4. —. 5. —. 6. வேங்கிடசுப்பன் என்கிற சோமசுந்தரதாசன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி மகாலிங்கம் பிள்ளை (சோதிடர், மாந்திரீகர்), வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம். 10. கி.பி.1954-55.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 19x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 4; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. அகத்தியர் கலைஞானம் என்ற இந்நூல் முதலாவதாக மனோன்மணித்தாயை வணங்கி வகார மார்க்கம், சவரம், துருசு, சவுக்காரம், நவலோகச் சத்து, வெடியுப்பு, கரியுப்பு, விசநீர், பஞ்சபூதம், வன்னி பீசம், சமாதி நிலை ஆகியவற்றைக் கூறுவதாக அமைகிறது. மேலும், மண்ணைப் பிண்டம் என்றும், வன்னிதான் பூமியின் கீழுண்டாயிற்று என்றும், அதன்பிறகு அக்கினியும் வாயும் கூடிப் பெண்ணாக மாறியன என்றும், நீரான தண்ணீருடன் மண்ணுங் கூடி நின்றதனாலும் பெண்ணாச்சு என்றும் இதனால் பெரிதான வாதசித்தி உண்டாயிற்று என்றும் கூறுகிறது. தீட்சை விளக்கங்கள் ஞான சித்தி, யோக சித்தி, அண்ட பிண்ட குரு செய்ய தவம், சிவம் தயவு வேண்டும் என்றும், இவற்றை வள்ளி உமையாள் காண மதி வேண்டும், விதி வேண்டும் வைராக்கியம் வேண்டும், நானென்ற ஆணவத்தை ஒடுக்க வேண்டும், நலமான சிவயோகம் நாட்டவேண்டும், தேனென்ற கருக்குருவைக் காத்தல் எல்லாம் சித்தியாகும் என்று இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. தெட்சிணாமூர்த்தி.

5. **தாயான தாயனையாள் பாதம் போற்றி**
சாஸ்திரமோ யாயிரத்தி யிருநூ றுக்குள்

தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகு மிதைக்குறுக்கி யிருநூறுஞ் சொன்னேன்
கனிபோல் யிந்தனூல் பன்னிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்ட வளமை கேளே. 1

6. தானென்ற யண்டபிண்ட கருவைச் செய்ய
தவம்வேணும் சிவம்வேணும் தயவு வேணும்
மானென்ற அக்கினியா முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணவத்தை ஒடுக்க வேணும்
நலமான சிவயோகம் நாட்ட வேணும்
தேனென்ற சர்க்குருவைக் காக்க வேணும்
சித்தியாம் பனிரெண்டுஞ் சிறக்க முற்றே. 12

7. பிலவங்க வருசம் மாசிமாதம் 7 குருவாரத்தில் அகத்தியர் வயத்தியம் பன்னிரெண்டு எழுதினேன்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பரிபாசையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. கல்க்குறிச்சி முத்தைய்யன் குமாரன் வேங்கிடசுப்பனாகிய சோமசுந்தரதாசன் தனது குறித்துக்கொண்டேன். மகாலிங்கசாமி துணை. வேல் முருகசாமி துணை, வீரபத்திர சாமி துணை.

IV. 1. R.280(a), R.267(i), R.3633, R.3693, R.289(b), R.4882, R.6214(e), R.10660(a), R.175(b-1), R.8876, R.10539, R.4208, R.4214, R.5847, R.5847(a), R.3693. 2. த.ச.ம.நூ. எண்கள் 120(a), 226(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் வழலை சூத்திரம் 12, பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல், அகத்தீசர் குளிகை 12, அகத்தியர் கலை ஞானச் சுருக்கம் 12, அகத்தியர் சூத்திரம் 12 போன்ற பல பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றது.

அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **800.** 2. அ. R.4208. ஆ.T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானச் சுருக்கம். ஆ. Akattiyar kalaiañā̱nac curukkam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி. 1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. வரிசை எண் 799 ஐப் போன்றது.

4. —.

5. தாயான வுன்மனையாள் பாதம் போத்தி
சாஸ்திரமோ ராயிரத்திரு நூறுக் குள்ளே
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகு மதைக்குறுக்கி யிருனூறு சொன்னேன்
கனிபோலே யிந்தனூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்டம் வகைமைக் கேளே. 1

6. தானென்ற வண்டபிண்டங் கருவைச் செய்யத்
தவம்வேணுஞ் சிவம்வேணுந் தயவு வேணும்
வானென்ற அக்கினியா முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணுவத்தை யொடுக்க வேணும்
நலமான சிவயோகம் னாட்டம் வேணுந்
தேனென்ற சற்குருவைக் காக்க வேணுஞ்
சித்தியாம் பனிரெண்டு சிறக்க முத்தே. 12

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. 175(b-1), R.267(i), R.280(a), R.289(b), R.3633, R.3693, R.4882, R.6214(e), R.4214, R.5847, R.5847(a), R.8876, R.10539, R.10660(a). 2. த.ச.ம.நூ. எண்கள் 120(a), 226(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வழலை சூத்திரம் 12,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் 14, அகத்தியர் உட்கரு சூத்திரம் 48, அகத்தியர் கற்பம், உரோமரிஷி குறுநூல் 50, உரோம ரிஷி சூத்திரம் 16, உரோமரிஷி வகாரத் திறவு கோல் 16 முதலான நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **801.** 2. அ. R.4214. ஆ. T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானச் சுருக்கம் 12. ஆ. Akattiyar ñāṉac curukkam 12. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான, யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. வரிசை எண் 799 ஐப் போன்றது.

4. —.

5. தாயான மனத்தாயி பாதம் போற்றி
சாஸ்திரமோ ஆயிரத்திரு னூறுக் குள்ளே
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகி மதைக்குறுக்கி யிருனூறுஞ் சொன்னேன்
கனிபோலே யிந்தனூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி அண்டபிண்டம் வளமைக் கேளே. 1

6. தானென்ற அண்டபிண்டக் கருவைச் செய்ய
தவம்வேணும் சிவம்வேணும் தயவு வேணும்
வானென்ற அக்கினியா முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
நானென்ற ஆணவத்தை யொடுக்க வேணும்
நலமாகச் சிவயோகம் நாட்டம் வேணும்
தேனென்ற சற்குருவைக் காக்க வேணும்
சித்தியாம் பன்னிரெண்டுச் சிறக்க முற்றே. 12

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 175(b-1), R.267(i), R.280(a), R.289(b), R.3633, R.3693, R. 4208, R.4882, R.5847, R.5847(a), R.4513, R.6214(e), R.8876, R.10539, R.10660(a). 2. த.ச.ம.நூ. எண்கள் 120(a), 226(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் வழலை சூத்திரம் 12, பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், தன்வந்திரி வாக்கியம் 30 (R.4223), சட்டைமுனி கருமான சூத்திரம் (R.4224), இராமதேவர் சூத்திரம் (R.4225) முதலான பல நூல்களும் உள்ளன.

அகத்தியர் கலைஞானம் 12

I. 1. 802. 2. அ. R.5847. ஆ.T.R.2503. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருமுறை 12. ஆ. Akattiyar kurumurai 12. இ. அகஷ்த்தியர் வகார முறை. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பொள்ளாச்சி உதையகுளம் பி. தாமோதரமிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1955-56.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிதைவு ஆதலால், ஓரளவே தெளிவு. 4. 2. 5. 37x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நொறுங்கியுள்ளது. 12. 3; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக மார்க்கத்தையும் இரசவாதத்தில் வகாரத்தின் இயல்புகளையும் கூறும் நூல். 2. யோகம்-இரசவாதம். 3. வரிசை எண் 799ஐப் போன்றது.

4. —.

5. தாயான உன்மனையாள் பாதம் போற்றி
சாற்றுகிறேன் ஆயிரத்தி யிருனூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாகு மிதைக்குருக்கி யிருநூற் றுக்குள்
கனிபோலே யிந்தனூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லிவிட்டேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்ட வழலை கேளே. 1

6. சிதைவு.

7. சற்குருவே..............

8. மூலம். 9. பாடபேதங்கள் உள்ளன; பேச்சு வழக்குச் சொற்கள் உள்ளன. சிதைவு ஆயினும் பிழையில்லாத நடை. 10. வகார வகை, கலைஞானம் என்பனவெல்லாம் இரசவாதம் செய்யும் முறைகள் கூறுவன. 11. இல்லை.

IV. 1. R. 175(b-1), R.267(i), R.280(a), R.289(b), R.3633, R.3693, R. 4208, R. 4513, R.4882, R. 5847, R. 5847(a), R.6214(e), R. 8876, R. 10539, R. 10660(a). 2. த.ச.ம.நூ.எண்கள் 120(a), 226(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வழலை சூத்திரம் 12** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலுக்குப்பின் **வகாரவகை** என்ற தலைப்பிட்ட ஓர் ஏடு உள்ளது. அதில் 'துத்தநாகமதை யிலுப்பெண்ணெயில் நாலுதிரம் உருக்கிச்........' என்ற உரைநடைப் பகுதி வருகிறது. வகார முறை 'குருமுறை' எனக் குறிப்பிட்டிருப்பதையும் காண்க. 'கலைஞானச் சுருக்கம் 12' என்ற பெயரும் முதல் ஏட்டில் வருதல் காண்க.

அகத்தியர் கலைஞானம் 12

I. 1. **803.** 2. அ. R.5847(a). ஆ. T.R.2503. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானம் 12. ஆ. Akattiyar kalaiñāṉam 12. இ. அகஸ்தியர் குருமுறை 12. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு.பி. தாமோதரம், உடையாக் குளம் (அஞ்சல்), பொள்ளாச்சி. 10. கி.பி.1955-56.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 38x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான, யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. வரிசை எண் 799ஐப் போன்றது.

4. ஹரிஓம் நன்றாக, அகஸ்தியர் குருமுறை.

5. **தாயான மனையாள்தன் பாதம் போற்றி**
சாஸ்திரமோ ஆயிரத்து யிருநூ றுக்குள்

தோயாத கருவொன்று யில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைத்தேன் வழலை யொன்று
காயாக யிதைக்குறுக்கி நூறு சொன்னேன்
கனிபோலே யின்னூல்தான் பன்னிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்ட வளமைக் கேளே. 1

6. தானென்ற அண்டபிண்ட கருவைச் செய்ய
தவம்வேணும் சிவம்வேணும் தானம் வேணும்
வானென்ற அக்கினியா முப்பைக் காண
மதிவேணும் விதிவேணும் வாசம் வேணும்
தானென்ற யாணுவத்தை யொடுக்க வேணும்
நலமான சிவயோகம் நாட்ட வேணும்
தேனென்ற சற்குருவை காக்க வேணும்
சித்தியாம் பனிரெண்டும் சிறக்க முற்றே. 12

7. சற்குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R.267(i), R.280(a), R.289(b), R.3633, R.3693, R.4882, R.6214(a), R. 175(b-1), R.8876, R.10539, R.10660(a), R.4513. 2. த.ச.ம.நூ.எண்கள் 120(a), 226(c), ஆ.நி.எண் 65ப(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் வழலை சூத்திரம் 12, பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலிற்கு, அகத்தியர் குருமுறை 12 என்ற பெயரும் உண்டு என்பதைச் சுவடித் தலைப்பின் மூலம் அறியமுடிகின்றது.

அகத்தியர் கலைஞானம் 12

I. 1. 804. 2. அ. R.3693. ஆ. T.R.1800. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 12. ஆ. Akattiyar cūttiram 12. இ. அகத்தியர் பனிரெண்டு. 4. —. 5. —. 6. —. 7. —.

8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. வத்திராயிருப்பு மருத்துவர், சோதிடர் எஸ். மகாலிங்கம் பிள்ளை அன்பளிப்புச் செய்த சுவடிக்கட்டு. 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 4. 5. 13x2 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் 6 பாடல்கள் எழுதப்பெறவில்லை. 16. குறை. 17. 6 பாடல்களும் ஏழாம்பாடலின் ஒரு வரியும் உள்ளன.

ஆ. —.

III. 1. இரசவாதத்தில் வகார மார்க்கத்தையும் யோக மார்க்கத்தையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 799ஐப் போன்றது.

4. —.

5. தாயான உன்மனத்தாய் பாதம் போற்றி
சாத்திரமோ ஆயிரத்தின் இருநூ றுக்குள்
தோயாத கருவொன்று மில்லை யில்லை
சொல்லடக்க மாயுரைந்தேன் வழலை யொன்று
காயாகு மிதைக்குறுக்கி யிருநூறுஞ் சொன்னேன்
கனிபோலே யிந்தநூல் பனிரெண் டுக்குள்
வாயாரச் சொல்லுகிறேன் வகார மார்க்கம்
மதியிரவி யண்டபிண்டம் வளமை கேளே. 1

6. பாரப்பா பிண்டத்தைச் சொல்ல வென்றால்
பாரமில்லை(ச்) சாரமில்லை(ப்) பான மில்லை
பேரப்பா பெண்ணில்லை(ப்) பெண்ணாள் பெத்த
பிள்ளையில்லை(க்) கருவில்லை(ப்)பாச மில்லை
கூறப்பா மங்கைபங்கன் தூர மான
குருதியில்லை கரும்பிடுகல கருணை பூடில்லை
வாரப்பா பலசீவ செந்து மில்லை
மதுவில்லை மலமில்லை வகையைக் கேளே. 6

வகையான மன்னென்று மசிதானென்று................

7. —.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள், பாடபேதங்கள் வந்துள்ளன. ற/ர, ழ/ள வேறுபாடில்லாமல் ஏடுகள் எழுதப்பெற்றுள்ளன. அந்தாதியில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல் அகத்தியர் குருமுறை என்றும் கூறப்படும். 11. இல்லை.

IV. 1. R. 267(i), R. 280(a), R. 289(b), R. 3633, R. 3693, R. 4513, R.4882, R.5847, R. 6214(a), R. 8876, R. 10539, R. 10660(a). 2. த.ச.ம.நூ.எண்கள் 120(a), 226(c), ஆ.நி.எண் 656(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வழலை சூத்திரம் 12,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல் R.175(b)ஐப் போன்றது என அ.கீ.சு.நூ. விளக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது 'நேசிப்பாய் பத்தான.......' எனும் தொடக்க அடிகொண்ட **அகத்தியர் சூத்திரம் 12** என்ற நூலாகும். இச்சுவடிக்கட்டு, இந்நூலுடன், 'அகத்தியர் சூத்திரம் 16'(R.3692) உரோமரிஷி சுருக்கம் 16 (R.3693(a)) எனும் வேறு நூல்களும் உள்ளன.

அகத்தியர் கலைஞானம் 1200ல் சில

I. 1. **805**. 2. அ. R.6879. ஆ. T.R.2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைக்கியானம் 1200ல் சில. ஆ. Akattiyar kalaikkiyāṉam 1200 cila. இ. அகத்தியர் கலைக்கியானம் 1200ல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 4. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 4; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 21 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மலையின் வளப்பங்களும், வீடு எரிந்தால் அதை அணைக்க கூட்டு மந்திரமும் கூறும் நூல். 2. ஞானம், மந்திரம். 3. அகத்தியர் கலைஞானம் 1200ல் சில என்ற இந்நூலில் மயேந்திரகிரி வளப்பம், வெண்சாரை, ஆதிபன்னிரெண்டு காண்டம், சுவேதகிரி, நாதகிரி, அகிலகிரி, போதகிரி, வீடு எரிந்தால் அதற்கு அக்கினி கூட்டு மந்திரம் போன்ற தலைப்புகளில் செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. மயேந்திரகிரி என்னும் பகுதியில் மயேந்திரகிரிக்குத் தெற்கே ஒரு நாழிகைப் பொழுது நடந்தால் பொன்மலை என்ற இடம் வரும். அம்மலையில் ஒரு குகையுண்டு, அதில் ஆயிரம் சித்தர்கள் தவம் செய்கிறார்கள், அவர்களையும் பார்த்து நமக்கு வேண்டும் பொருள் கேட்டால் தருவார்கள். மேலும், குளிகை, கற்பம் போன்ற உயர்ந்த பொருள்களும் தருவார்கள் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் கலைக்கியானம் 1200-ல்.

5. பாரப்பா மயேந்திரகிரி தன்னிற் சென்று
பருவ.......................றும் போது மைந்தா
நேரப்பா வெண்சாரை..............................
செயமான சாரையும் கொண்டா யானால்
கூரப்பா உம்மென்று கும்பித் தேக்காண்
கூவுடன் பொசித்துவிடு பொருந்து போகும்
...............பெருஞ்சாரை வருக்கும் பாரு
கண்டவுடன் நடுமைய்யம் வடித்தி டாயே. 272

6. நெறிவிக்க மண்டையிடி வயித்துக் குன்மம்
நேத்திர வியாதிவலி யிதற்கு எல்லாம்
அறிவிக்கப் பிணிவிவரம் பிரித்திட் டோதில்
நாலாறுஞ் சுரமாற்று மதுபோ லப்பா
குறிவிக்க யிவ்வண்ணம் பிணியுங் கூட
கோபமற்று குணமாகுங் கூறிப் பாரு
செறிவிக்க யக்கினிமந் திரமி தாச்சு
திட்டிபிணி ஏவலெல்லாந் தீய்க்கும் பாரே. 292

7. 396 பாட்டு.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ர/ற வேறுபாடின்றி அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பல மலைகளின் வளமைகளையும், அங்குத் தவம் செய்யும் முனிவர்களையும் இந்நூல் குறிப்பிடுவது ஆய்வுக்குரியது.

அகத்தியர் கலைஞானம் 1200ல் சில

I. 1. **806.** 2. அ. R.6871. ஆ. T.R.2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கலைஞானம் 1200ல் சில. ஆ. Akattiyar kalaiñāṉam 1200 cila. இ. அகத்தியர் கலைக்கியானம் 1200ல் சிவவேடமறிய. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன் பட்டி (அஞ்சல்) கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. ஒரு பக்கத்தில் 6 வரி மட்டும் எழுதப்பட்டுள்ளது. 13. 6 வரி மட்டும். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 2 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவ வேடம் பற்றிக் கூறும் நூல். 2. தத்துவம். 3. அகத்தியர் சிவவேடமறிய என்ற இந்நூலில் இரண்டு பாடல்கள் மட்டும் உள்ளன. இப்பாடலின் பொருளே இந்நூலின் முழுமைத் தன்மையாகும்.

4. அகஸ்தியர் கலைக்கியானம் 1200-ல் சிவ வேடமறிய.

5. **ஊணடா சிவவேட மார்க்கந் தன்னை**
உறுதியாய்ச் சொல்லுகிறேன் உனக்காய் மைந்தா
காணடா செபமாலை அன்பத் தொன்று
கணக்காக ருத்திராட்சம் கையி லேந்து

தாணடா யோகதண்டு அளவைக் கேளு
தனக்காக ஆணிவிரல் முப்பத் திரண்டு
பேணடா அளவாகச் செய்து கொண்டு
பேணியே கைதனிலே எடுத்துக் கொள்ளே. 1

6. கொள்ளடா விபூதியும் தளமாய்ப் பூசிக்
கொண்டபின்பு வேட்டியுட அளவைக் கேளு
நள்ளடா அகலமது மூன்றுமுழ மாகும்
நலமான நீளமது ஆறு மாகும்
உள்ளடா பீசனந்தான் சரணகல மாகும்
உத்தமனே நீளமதுநால் சாணு மாகும்
அள்ளடா காவியிலே நீர்க்காவி யாகும்
அரகரா சிவவேட மார்க்கந் தானே. 2

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சிவ வேடத்தைப் பற்றிக் கூறும், இரண்டு விருத்தப் பாடல்களால் அமைந்த தத்துவ நூலாக அமைந்துள்ளது.

அகத்தியர் கற்பம் 10

I. 1. **807**. 2. அ. R.4215. ஆ.T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கற்பமுறை சூத்திரம் 10. ஆ. Akattiyar kaṟpa cūttiram 10. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. உ.ச. லிங்கப்பா கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7

வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் சில நோய்களைக் குணப்படுத்த உதவும் கற்பங்களைத் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் கற்பம் என்ற இந்நூலில் கருநெல்லிக்கற்பம், வெண்சாரைக் கற்பம், அமுக்குரா கற்பம், ஆதண்டைக் கற்பம், ஆதளைக் கற்பம், ஆலம்பால் கற்பம், சிவப்புக் கற்றாழைக் கற்பம், குமரிக் கற்பம், கொன்றைக் கற்பம், சித்திரமூலக் கற்பம், சீந்திக் கற்பம், தூதுவளைக் கற்பம் போன்ற பலவிதமான கற்ப வகைகள் செய்யும் முறையும் பயனும் கூறப்படுகின்றன. தூதுவளை இலையோடு தக்கோலம், சாதிக்காய் ஆகியவற்றின் விதைகளைச் சேர்த்து மேலும், கொடிவேலியின் வேர், நிலப்பனைக் கிழங்கு, பொன் கொன்றைப் பூ, ஐங்கோலவிதை இவைகளைச் சமமாகச் சேர்த்துக் கொண்டு நன்றாக இடித்துப் பொடியாக்கி ஒரு மண்டலம் காசிடை உண்ண வேண்டும். இதனால் உடல் நல்ல வலிமையைப் பெறும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. —.

5. கற்பமென்ன வெகுதூரம் போக வேண்டாம்
கல்மலைகள் குவடுகளில் அலைய வேண்டாம்
சர்ப்பமென்ற நாகத்தொடு தலையி னின்று
சாகாத கால்கண்டு மலையி லேறி
நிற்பமென்று மனமுறுத்து மனதி னின்றால்
நிசமான கருநெல்லிவெண் சாரைக் காணுஞ்
சொற்பமென்று விட்டுவிட்டால் அலைந்து போவாய்த்
தூரியமென்ற பராபரத்திற் சென்று கூடே. 1

6. உணர்வென்ன சந்திரனி லேறிப் பாரு
ஓடியங்கே தலையென்ற எழுத்தி நில்லு
அணுவென்ன மலையாகுஞ் சிவமே யுச்சி
அகாரமென்ன பதியுமென்ன சூட்ச மாகும்
கணுவென்ன விற்புருவங் கண்ட பீதி
கைலாய மென்றதென்ன பரத்தின் வீடு
துணுவென்ன சூரியன்றன் நெருப்பைக் கண்டு
தூணென்ற பிடரியிலே தூங்கு தூங்கே. 10

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 280(m). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் ஞானம் 13,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதற் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், இராமதேவர் சூத்திரம் 16 (R. 4226), இராமதேவர் சோசியம் 10 (R. 4227) முதலான பல நூல்களும் உள்ளன.

அகத்தியர் குருநாடி

I. 1. **808.** 2. அ. D.1920. ஆ. T.D.756. இ. —. ஈ. —. 3. அ. குருநாடி. ஆ. Kurunāṭi. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 18. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 36; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 9 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 107 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்று நாடிகளின் மாறுபாட்டால் ஏற்படும் நோய்கள் பற்றியும், அவற்றைக் குணப்படுத்தும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. உடம்பில் ஏற்படும் நோய்களுக்குக் காரணமான வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்றுவகை தோசங்களின் அளவுகளைக் கண்டறிவதற்கான நாடி பார்க்கும் முறை, மற்றும் அந்நாடிகளில் மேலோங்கி நிற்கும் தோசத்தின்

குணம், அதற்குரிய பரிகாரம் முதலியவற்றை இந்நூல் மிகவும் விரித்துக் கூறுகிறது. மேலும், திசை நாடி, பூத நாடி, நாடிநிதானம் முதலான செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

4. குருநாடி.

5. சீர்பெறு முனிவர் வேதந்
 தெளிந்தபின் னுலகத் தோர்கள்
பேர்பெறுங் கருவி லுத்த
 பிணிபல துணர்ந்து தேர்ந்து
யூர்பல நாடிக் கெல்லாம்
 உயர்பெறு நாடி மூன்றில்
சேர்குரு நாடி நேர்மை
 செயலுடன் கூற லுற்றாம். 1

6. கூட்டிவகைக் கொருகழஞ்சாய்ப் பொடியுடனே சேர்த்துக்
 குறுகநெய்யுந் தேனுஞ்சீனி விட்டுநன்றாய் குழைத்து
நீட்டுவெரு கடியெடுத்து அரிதாரப் பற்பம்
 நிறையாய்ப் பணவெடை சேர்த்து நித்தமிரு நேரம்
தாட்டிகமாய் மண்டலங்கால் கொண்டுவந் தாயானால்
 சயங்கள் சலப்படுத்தும் விஷநீர்கள் சண்டாள சயந்தான்
ஓட்டிவிடுந் தலையிடிப்பும் ஒருத்தலை யிடியும்
 உற்றசய மெட்டும் ஓடிப்போகும் பற்பொடியில். 107

7. ஸ்ரீ ராமசெயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 1804, R. 7053, R. 9711. 2. த.ச.ம.நூ.எண்கள் 439(b), 451, சி.ம.மை.ஆ.நி.எண் 936. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (அ). அருணாசல முதலியார் (பதி.), **அகத்தியர் குருநாடி சாத்திரம் 235,** கலைக்கியான முத்திராக்ஷரசாலை, திருப்பதி, 1910. (ஆ). ஆறுமுக சுவாமிகள் (பதி.), **அகத்தியர் குருநாடி சாத்திரம் 235,** பரப்பிரம்ம முத்திரக்ஷரசாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. அகத்தியர் குருநாடி 235 என்ற நூலின் சுருக்கமாக இந்நூல் இருக்கலாம் எனத் தெரிகிறது.

அகத்தியர் குருநாடி

I. 1. **809.** 2. அ. R.7053. ஆ. T.R.2848. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநாடி. ஆ. Akattiyar kurunāṭi. இ. அகஷ்த்தியர் குருனாடி சாஷ்த்திரம். 4. —. 5. —. 6. சுப்பையா வாத்தியார். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 37. 5. 19x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 73; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 92 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்று நாடிகளின் மாறுபாட்டால் ஏற்படும் நோய்கள் பற்றியும், அவற்றைக் குணப்படுத்தும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 808 ஐப் போன்றது.

4. குருவே துணை. அகஷ்த்தியர் குருனாடி சாஷ்த்திரம்.

5. சீர்பெறு முனிவர் வேதந்
தெளிந்துபின் னூல்கற் றோர்கள்
பேர்பெறுங் கருவி லுதித்த
பிணிபல துணர்ந்து தேர்ந்து
ஊர்பல னாடிக் கெல்லா
முயர்பெறு னாடி மூன்றில்
சேர்குரு னாடி நேர்மை
சியலுடன் கூற லுற்றார். 1

6. தானான வாயுவங்கே சீறிச் சீறித்
தத்துவங்க ளைக்குறுக்கியே யுகரிக் கொண்டு
தேனான அக்கினியை யூதி ஊதி
சீக்கிரத்தில் கொள்ளையிட்டுச் சடத்தை யோட்டப்

பானான அப்புவிலே தண்ணீ ரிட்டுப்
பார்க்குமுன்னே யவனைத்தான் பறிக்கும் பாரு
யேனான தாதுவங்கே யில்லா விட்டால்
இயல்பான சீவன்தா னிறந்து போச்சே. 92

7. ....வேலுண்டு வினையில்லை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. நள வருடம் ஆனி மாதம் 11ம் தேதியில் பவகொம்பையிலிருக்கும் முத்தெகவுண்டர் குமாரன் சுப்பய்ய வாத்தியார் கனமாமனாராகிய ராசுகவுண்டர்க்கு எழுதிக்கொடுத்தது. குரு கிடாட்சியம் உண்டாகவும்.

IV. 1. R. 1804, R. 9711, D. 1920. 2. த.ச.ம.நூ.எண்கள் 439(b), 451, சி.ம.மை.ஆ.நி.எண் 936. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (அ). அருணாசல முதலியார் (பதி.), **அகத்தியர் குருநாடி சாத்திரம் 235,** கலைக்கியான முத்திராக்ஷரசாலை, திருப்பதி, 1910. (ஆ). ஆறுமுக சுவாமிகள் (பதி.), **அகத்தியர் குருநாடி சாத்திரம் 235,** பரப்பிரம்ம முத்திரக்ஷரசாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சூத்திரம் 48 (R.7054) என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் குருநாடி

I. 1. **810.** 2. அ. R.1804. ஆ. T.R.1039. இ. —. ஈ. —. 3. அ. குருநாடி. ஆ. Kurunāṭi. இ. குருனாடி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மிருதங்கம் சுப்பய்யர், சாத்தபுரம் கிராமம், கல்பதி அஞ்சல், பாலக்காடு. 10. கி.பி.1948-49.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 8. 5. 34x5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 15; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 13 முதல் 18 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 86 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாதம், பித்தம், சிலேத்துமம் என்னும் மூன்று நாடிகளின் மாறுபாட்டால் ஏற்படும் நோய்கள் பற்றியும், அவற்றைக் குணப்படுத்தும் முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 808ஐப் போன்றது.

4. ஹரிஓம் குருனாடி.

5. சீர்பெரும் முனிவர் வேதம்
    தெளிந்துபின் னூல்கள் தோரும்
பேர்பெரு கருவி லுற்ற
    பிணிபல துணர்ந்து தோய்ந்து
ஊர்பல னாடிக் கெல்லாம்
    உயர்பெரு நாடி மூன்றில்
சேர்குரு னாடி நேர்மை
    செயலுடன் கூற லுற்றார். 1

6. நல்லதோர் னாடி தானும்
    யிடையொடு சுழினை பத்தி
சொல்லிய பருத்தி னூடே
    சூட்ச மாய்வினை யோடு
வல்லஞ் சார்ந்து வன்னி
    வாயுவே கெற்பஞ் சேறில்
சொல்லியே அறிந்து சொன்னோம்
    சோர்ந்திடும் தொந்த ரோகம். 86

7. தெட்சணாமூர்த்தி கிருபை. கோதண்டபாணி துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1920, R. 7053, R. 9711. 2. த.ச.ம.நூ.எண்கள் 439(b), 451. சி.ம.மை.ஆ.நி.எண் 936. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (அ). அருணாசல முதலியார் (பதி.), **அகத்தியர் குருநாடி சாத்திரம் 235**, கலைக்கியான முத்திராக்ஷரசாலை, திருப்பதி, 1910. (ஆ). ஆறுமுக சுவாமிகள் (பதி.), **அகத்தியர் குருநாடி சாத்திரம் 235**, பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் நேத்திர வாகடம் (R.1803), அகத்தியர் முப்பு 50 (R.1814), அகத்தியர் விநோதம் (R.1816) முதலிய நூல்களும் இடம் பெற்றுள்ளன.

அகத்தியர் குருநாடி

I. 1. **811.** 2. அ. R.1081(c). ஆ. T.R.797. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநாடி. ஆ. Akattiyar Kurunāṭi. இ. குருனாடி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மருத்துவர் சாகீர் உசேன், புதுப்பேட்டை, சென்னை. 10. கி.பி.1935-36.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 16. 5. 34x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 32; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் இயங்குகின்ற வாத, பித்த, சிலேத்தும நாடிகளின் செயல்பாடுகளையும், மருத்துவமும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் குருநாடி என்ற இந்நூல் மனித உடம்பில் இயங்கும் வாத, பித்த, சிலேத்துமம் என்னும் மூன்று வகை தோசங்களின் அளவைக் கண்டறிவதற்கான நாடிபார்க்கும் முறையும், அந்நாடிகளில் மேலோங்கி நிற்கும் தோசத்தின் குணங்களும், அதற்குரிய மருத்துவ முறைகளையும் விளக்கிக் கூறுகிறது. அன்னம், கோழி, மயில்போல நடப்பது வாத நாடி என்றும்; ஆமை, அட்டை போல நடப்பது பித்தநாடி என்றும்; தவளை, பாம்பு போல நடப்பது சிலேத்தும நாடி என்றும் இந்நூல் கூறுகின்றது. மேலும், குருநாடி என்பது பித்தத்திற்கும், வாதத்திற்கும் இடைப்பட்டது என்றும் கூறுகிறது. சிரசு சூலை குணம், நீரிழிவு குணம், பீனிச குணம், சயரோக குணம், குன்ம குணம், குருநாடி குணம், வாசி நிலை குணம், பித்த குணம், சூட்டு குணம், சோகை குணம் முதலான பல்வேறு குணங்களைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் குருனாடி.

5. ஓங்காரங் கொண்டெழுந்த பிரணவத்தின் செய்கை
யுடநிந்தச் சூத்திரமா யுரைத்த வாறும்
மாங்காரங் கொண்டதொரு மனத்தைத் தேர்ந்து
மருவுருவே சுருபமென்ற மாந்த நேர்மை
பாங்கார னாடிநரம் பான வாறும்
பழமறைதா னாராய்ந்து பாடி வைத்தேன்
நீங்காத கணபதியுங் கந்தன் தானும்
நிசமாக வந்துதவுங் காப்புத் தானே. 1

6. செய்யடா புலத்தியனே உனக்குச் சொன்னேன்
திறமாகக் குருனாடி கருவை யெல்லாம்
அய்யடா அறிந்துகொண்டு வயித்தியஞ் செய்து
ஆகாகா விஷமாடிக் கீய வேண்டாம்
யெய்யடா திசைநாடி பத்துஞ் சார்ந்து
உய்த்துமுறை தப்பாம வண்ணா னய்யா
செய்யடா வயித்தியத்தில் ரெண்டு லட்சம்
சாடவே விவரமாக .... விதிசாத்தி னேனே. 100

7. குருநாடி முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 2326, D. 2420, R. 7685, R. 9711, R. 1920, R. 1804, R. 7053. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 1355(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் குருநாடி என்ற இந்நூல் 100 பாடல்கள் கொண்டும் 250 பாடல்கள் கொண்டும் அமைந்துள்ளது.

அகத்தியர் குழம்பு

I. 1. 812. 2. அ. R. 1869. ஆ. T.R. 1050. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குழம்பு. ஆ. Akattiyar kulampu. இ. அகஸ்தியர் குழம்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனிச்சாமி கவுண்டர், புளியம்பட்டி, பழனி தாலுக்கா, மதுரை மாவட்டம். 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4. 5. 33x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பத்திபத்தியாக எழுதப்பட்டுள்ளது. 14. உரைநடை. 15. குறை. 16. இறுதி. 17. மொத்தம் 50 வரிகள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் உண்டாகும் வயிற்று வலி, வாய்வு, ஒருதலைவலி போன்றவற்றுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் குழம்பு என்ற இந்நூலில் பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், பொரிகாரம், மனோசீலை, அரிதாரம், கருஞ்சீரகம் போன்ற சரக்குகளை எடுத்துக் கல்வத்தில் போட்டு அரைத்து அதிலிருந்து எடுக்கப்படும் மருந்தை நெல்லிக்காய் பிரமாணம் நாற்பது நாள் சாப்பிட்டு வந்தால் உடம்பில் உண்டாகும் அனைத்து வியாதிகளும் நீங்கும் என்று கூறுகிறது. மேலும், வாய்வுக்கு, வயிற்றுவலிக்குக் கிசாயம் செய்யும் முறையும் ஒருதலைவலி, குட்டத்தின் குணத்திற்கு நசியமும், பித்தம், சூடு, இருமல், இளைப்பு, குன்மம், வயிற்றுவலி இவற்றுக்கு மருந்துகள் செய்யும் முறையும், அனைத்து விதமான இரணங்களுக்கும் எண்ணெய் தயாரிக்கும் முறையும் அரிதாரபற்பம் செய்யும் முறைகளும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் குழம்பு.

5. பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், பொரிகாரம் விசம், மனோசீலை, அத்தித்திப்பிலி, அரிதாரம், கருஞ்சீரகம், மேற்படி மருந்துக்குச் சமனாய் நேர்வாளம் வயித்துச் சமபாதி கல்வத்திலிட்டு மோரும் சோறும் உண்டு உடன் அரைத்து கூட்டி சீவக்காய் ஒருபங்கு ....

6. ....ஆட்டுப்பால் விட்டு அரைத்துக் கவசம் செய்துக் காயவைத்து சுண்ணாம்புச் சீலைசெய்து...........த்து புரசஞ்சாம்பல் ஒரு சட்டியில் அரைத்த படிக்கில் போட்டு அதின்பேரில் கவசம்கட்டி............அதின் பேரில் சாம்பல் போட்டு அமுக்கி அதின் பேரில் சட்டி கவிழ்த்தி சீலைமண் செய்து...........போத்தி

தென்னம் மட்டை கொண்டு நாலுசாமம் கமலாக் கினியாய் யெரிக்கவும் பற்ப..........................

7. —.

8. மூலம். 9. எளிய உரைநடையில் அமைந்த நூல். பேச்சு வழக்கும் பயின்று வருகின்றது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் அமைந்த குழம்பு நூல்களில் இது உரைநடையில் அமைந்த மிகவும் எளிய நூலாகும். இங்கே சொல்லப்படுகின்ற மருத்துவ முறைகள் எளிய முறையில் செய்யக்கூடிய நிலையில் கூறப்பட்டுள்ளதே இந்நூலின் சிறப்பாகக் கொள்ளலாம்.

அகத்தியர் குளிகை 8

I. 1. **813**. 2. அ. R. 6940. ஆ. T.R. 2793. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குளிகை 8. ஆ. Akattiyar kuḷikai 8. இ. அகஸ்தியர் குளிகை 8. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 26x3.3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களுக்குக் கருக்குளிகை செய்யும் முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம்.

3. அகத்தியர் குளிகை எட்டு என்ற இந்நூல், கருத்தயிலம், கருக்குளிகை, காயாதிகற்பம், யோகநித்திரை, மேல் மூல சுத்தி, கீழ் மூல சுத்தி, சுப்பிரமணியர் தியானம், பத்தியம், வெண்சாரைக் கற்பம், தீட்சை போன்ற பலவகையான செய்திகளைக் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.

5. பாடுகிறேன் பார்வைக்கு ஐங்கரனே காப்பு
பரிவான சின்மயத்தின் பாதங் காப்பு
நாடுகிறேன் சித்தருடைய பாதங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
தேடுகிறேன் என்னைப்போல் நூல்கள் தோறும்
செப்பார்கள் பார்வைக்கு சித்த ரப்பா
கூடுகிறேன் பார்வைக்கு நூல்கள் தோறும்
சுருக்கியே சொல்லுகிறேன் கேளு கேளே. 1

6. பாரடா தீட்சைநீ நி......................விட்டால்
பாங்கான கருக்குளிகை பொய்யாய்ப் போகும்
ஆரடா யிப்படிநீ யறிந்து கொண்டு
அப்பனே கொடுத்தாக்கால் சித்தி யாகும்
சேரடா கருக்குளிகை சித்தர் தானும்
திறமாக நூல்களிடையே சொல்ல வில்லை
வாரடா யெட்டுக்குள் கருக்குளிகை யாக
மைந்தனே அடக்கமே ஆச்சு முற்றும். 8

7. அகஸ்த்தியர் கருக்குளிகை முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன.
10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், கருக்குளிகை விவரம் பற்றிக் கூறும் சிறந்த நூலாகும்.

அகத்தியர் குறுநூல் 600

I. 1. **814.** 2. அ. R.7051. ஆ.T.R. 2846. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குறுநூல் வைத்தியம் 600. ஆ. Akattiyar kuruṉūl vaittiyam 600. இ. —. 4. —. 5. —. 6. மொள்ளுசாமி. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன் பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 160. 5. 26x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 320; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 622 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவத்திற்கும் இரசவாதத்திற்கும் பயன்படும் வழலை உப்புகளைத் தயாரித்தல் பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. இந்நூல் அஞ்சனம், பற்பம், செயநீர், கற்பம், தயிலம், மாத்திரை, இலேகியம் போன்ற மருந்துகளின் செய்முறைகளை விரிவாகக் கூறுகின்றது. மேலும், வழலைப்புடம், அப்பிரகச் சுத்தி செந்தூரம், காந்த செந்தூரம், சிந்தாமணி மாத்திரை, ஆனந்த வயிரவன் மாத்திரை, சஞ்சீவி மாத்திரை, தங்க பற்பம், வெள்ளி பற்பம், முத்து பற்பம், பவள பற்பம், வங்க பற்பம் போன்ற மருந்துகளின் செய்முறைகள் கூறப்படுகின்றன. மேக ராசங்கத் தயிலம், மகாசந்தனாதித் தயிலம், பெருங்கமலாதித் தயிலம், வில்வாதித் தயிலம், வேப்பெண்ணெய்த் தயிலம் போன்ற தயில வகைகளும், பஞ்ச தீபாக்கினி இலேகியம், கண்டங்கத்திரி இலேகியம், பாண்டுக்குக் கரிசாலை இலேகியம், குண்டாக்கினி இலேகியம் முதலிய இலேகிய வகைகளின் செய்முறையும் பயனும் இந்நூலில் கூறப்படுகின்றன.

4. —.

5. ....மைங்கரனே காப்பு வாணி
கலந்துயிந்தச் சூத்திரந்தான் கருவாய்ப் பாட
.............யாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டுத்
தெளிந்தகுறு னூலாகத் திரட்டிப் பாடக்

குருமகிமை சிற்றியுண்டாம் ஞானம் வாய்க்கும்
............னென நிதிமருந்து கூடுங் கூடும்
பெருமைமிக்க கீர்த்தியுண்டாஞ்..........கெல்லாம்
பெருநூலைக் குறுக்கியிந்த அறுநூறு தானே. 1

6. உண்டாமே எழுநூறு வயித்தி யத்தில்
ஒடுக்கஞ் சூத்திர மன்ப துண்டு
பண்டாங் கருவோனூற் றன்பதும் பாரும்
............வழலைப்போக் கன்ப துண்டு
வேண்டாம் நூல்களிது போதும்
விடாதே னூல்களொ ருத்த ருக்கும்
கண்டா லறுநூறு வெளிவி டாதே
காட்சி யெழுதி முகிந்ததுவே. 622

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. சுபானு வருடம் பங்குனி மாதம் 25ஆம் தேதி ரோகிணி நட்சத்திரமும் பஞ்சமியுங் கூடின சுபயோகச் சுவகரணஞ் சுபதினத்தில் மொள்ளு சாமி ஏடு, அறுநூறு சாத்திரம் ஞாயிற்றுக்கிழமை எழுதி முகிந்தது. முற்றும். இதை எழுதினது மொள்ளுசாமி சாத்திரக்குறிப்பு.

IV. 1. R.948, R.3726, R. 2316, R. 6935, R. 892, R. 10481, D. 2326, D. 2420. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் குறுநூல் 600 என்னும் இந்நூல், ‘குறுநூல் வைத்தியம் 600’ என்ற பெயரிலும் வழங்கப்படும் என்பதைச் சுவடியிலுள்ள தலைப்பின்வழி அறியமுடிகின்றது.

அகத்தியர் சக்கரவிதி

I. 1. **815.** 2. அ. R.8837. ஆ. T.R.3152. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சக்கரவிதி. ஆ. Akattiyar cakkaraviti. இ. அகஷ்த்திய நாயன் சக்கரவிதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 11. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 21; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 முதல் 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 47 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம் ஆகியவற்றைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. அகத்தியர் தீட்சை விதி 200 என்ற நூலின் சுருக்கமாக இந்நூல் திகழ்வதை 'தீட்சை விதி இருநூற்றில் திறமாய்ப் பாரு' என்ற பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது. இந்நூல் யோகம், ஞானம் ஆகியவற்றைப் பேசுகின்றது. நாற்பத்து முக்கோணம், துரியாதீதம், பொன்னைத் தகடாக்குதல், வெள்ளி, செம்பு ஆகியவற்றில் எழுதுதல், அட்டகர்மங்கள், பூசை செய்யும் முறை, பதஞ்சலி, கமலமுனி, பிரம்மமுனி, வியாக்கிரமர், கொங்கணர், சட்டைமுனி, திருமூலர் ஆகியோரின் நூல் விவரங்கள் ஆகியவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக.

5. சொல்லாதே நாற்பத்தி முக்கோ ணந்தான்
துரியாதீ தங்கடந்த சோதி யப்பா
சொல்லாதே யொருத்தருக்கும் வெளியாய்ச் சொல்வேன்
சொர்னத்தின் தகடானால் மெத்த நன்று
சொல்லாதே வெள்ளிசெம்பி லெழுத லாங்கேள்
சுத்தித்தா லட்டகருமே மெட்டு மாடுஞ்
சொல்லாதே பிரமாண மெவ்வளவு மாகுஞ்
சூட்சமாய் நாற்பத்திமுக் கோணஞ் செய்யே. 1

6. ஓதுநீ தூபமொடுநெய் வேத்திய தீபம்
உத்தமனே மண்டலந்தான் செய்தா யானால்
கோதிவிடு மாவிநெய்யும் அக்கினி யும்போல்
கொடுமை............மட்டங் கூறி னேன்கேள்
பேதியா மனதொருமை யாக நின்று
பித்தத்தாலப் படியே செய்தோற் கெய்துஞ்
சோதியா யென்மகனே யென்றாள்................
சோதித்து யாடினேன்காண் சூத்திர முற்றே. 47

7. அகஷ்த்திய நாயன் சக்கரவிதி முற்றும். வாலைத்தாய் போத்தி. 8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 4712(a), R.7527. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன் அகத்தியர் பூசாவிதி (R.8838) என்ற நூலும் இடம்பெற்றுள்ளது.

அகத்தியர் சர்வ பட்சணி

I. 1. **816.** 2. அ. R.6987. ஆ. T.R.2809. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சருவ பட்சணி. ஆ. Akattiyar caruvapaṭcaṇi. இ. கும்ப முனிக்கு உபதேசம் பண்ணிய சருவ சம்மாற பட்சணி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 4. 5. 18x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. நடு. 16. குறை. 17. 7 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பில்லி சூனியம் அணுகாது காக்கும் முறைகளைக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. அகத்தியர் சர்வ பட்சணி என்ற இந்நூலில் பலமாயா சால வித்தைகள் செய்யும் முறைகளுக்குரிய திலதம், அஞ்சனம், கரு, வெண்கரு ஆகியன கூறப்படுகின்றன. ஆறு, கடல்களில் கிடைக்கும் நண்டுகளைக் கொண்டு வந்து நெய்யில் வறுத்து மை செய்யும் முறை, ஆதிபரம், வாசி, மதி, பட்சணியைக் கண்டு கொள்ளும் முறை, நாதாந்தகுரு, திருநீறு போன்ற செய்திகளையும் இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. குருவாழ்க. குருவே துணை. ஆறுமுகவர் கும்பமுனிக்கு உபதேசம் பண்ணிய சருவசம்மாற பட்சணி.

5. சீர்மேவும் வாலைபிறாமி சூலி
திரிபுர சம்மாரி கவுமாரி வாமி
வார்மேவும் கிடசம் மாரி துர்கை
சாமுண்டி கங்காளி தந்த மைந்தன்
கார்மேவும் சுந்தரி முகனாற் றைக் கொம்பன்
கருணை திரு நயனமிரு கமல பாதம்
பார்மீதி லறுமுகவன் குருமுனிக்குச் சொன்ன
காச ருவபட் சணியின் காப்பு. 1

6. அண்டர்...............வல் பில்லி சூனியங்க ளணுகாது
நாவேரு கண.........கூடமிண்டான் பேர்களும்
மலைவார்த்தை சொல்வார் ஒரைந்து
விரைந்தேந்தி...
........வண்ணசிலம் வியாதி தீருமுன் றெழுத்திநானே. 47

7. —.

8. மூலம். 9. பாடல்கள் பரிபாசையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் பட்சணி, கொங்கணர் பட்சணி போன்ற நூல்களிலிருந்து வேறுபட்டு, அகத்தியர் சருவசம்மாரபட்சணி என்று சொல்லப்படுகிறது.

அகத்தியர் சரக்கு வைப்பு

I. 1. **817**. 2. அ. R. 6197. ஆ. T.R. 2618. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சரக்கு வைப்பு. ஆ. Akattiyar carakku vaippu. இ. அகஸ்தியர் சரக்குவைப்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 16. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 32; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. முதல், இறுதி. 17. காண இயலவில்லை.

ஆ. —.

III. 1. சுக்கு, மிளகு, திப்பிலி, மொச்சை, மணிப்பயிறு போன்றவற்றின் குணங்களைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சரக்கு வைப்பு என்ற இந்நூல் மருத்துவச் சரக்குகளின் குணங்களைப்பற்றி மிக விளக்கமாகக் கூறுகிறது. முதலாவதாக, சுக்கு, மிளகு, திப்பிலி என்பன மருத்துவச் சரக்குகளில் எந்த வகையில் பயன்படுகின்றன என்றும், அவற்றின் குணங்களையும் கூறுகின்றது. மேலும் உப்பு, வழலை, சுக்கு, திப்பிலி போன்றவற்றைப் பற்றியும் கூறுகின்றது. சுக்கு சருவ ரோகத்தையும், மிளகு வாதத்தையும், திப்பிலி சிலேத்துமத்தையும் கரியதிப்பிலி சுரத்தின் தன்மையையும், செவியம் திமிர் வாதத்தையும், சித்திரமூலம் சுரங்களையும் போக்கும் என்றும், மேலும், வரகு உணவு அதிகம் உண்டால் ஆண்மைத் தன்மை குன்றும் என்றும், செழுமொச்சைப்பயிறு அதிகம் உண்டால் வாதம் வரும் என்றும், மணிப்பயிறு உண்டால் பித்தம் போகும் என்றும், கறுப்புக்கடலை சாப்பிட்டால் உடம்பு நீண்ட நாள் வாழக்கூடிய ஆயுளைக் கொடுக்கும் என்றும், உளுத்தம் பயிறு உணவில் சேர்த்துக்கொண்டால் உடம்புக்கு நல்ல தோற்றத்தைத் தரும் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. ஹரிஓம். அகஸ்தியர் சரக்கு வைப்பு.

5. பார்த்திட்ட சுக்கினால் சர்வ ரோகம்
பண்பாகும் பண்பாகும் மிளகு வாதம்
ஏத்திட்ட திப்பிலிதான் சிலேத்துமத்துக் காதி
யெலிசான மூலந்தான் சுரத்துக் காதி
காத்திட்ட கரியதிப் பிலியி னாலே
கனமான சன்னிதனக் காதி யாகும்
சேத்திட்ட செவியந்தான் திமிருக் காதி
சித்திரமூ லந்தனக்குச் சுரங்கள் போமே. 1

6. அழுத்தமா மவன்தனக்கு ஆண்மை யாகும்
அதிகமாம் வாக்குக்கு ஆண்மை குன்றும்
செழுத்தமாஞ் சினைதனக்குச் சீரண மாகும்
செழுமொச்சைப் பயறுக்கு வாத முண்டாம்
பிழித்தமாம் மணிப்பயறு பித்தம் போக்கும்
பெறுகறுப்புக் கடலைக்குக் காய சித்தாம்
பழுத்தவண்ண முளுந்துக்குப் பாங்கா மேனி
பலபடவே சத்தறியா னுப்பைக் கட்டே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பட்டுள்ளன. பேச்சு வழக்கும், எழுத்துப் பிழையும் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1870. 2. த.ப.க. எண்கள். 988, 1157. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சரக்குகள் ஆண் சரக்கு என்றும், பெண் சரக்கு என்றும் பகுக்கப்பட்டுள்ளன. உப்பு, விந்து, வெடியுப்பு, கல்லுப்பு முதலியன ஆண் சரக்குகளாகவும், படிகாரம், பழம், புளி முதலியன பெண் சரக்குகளாகவும் கொள்ளப்படுகின்றன.

அகத்தியர் சவுக்காரத் திறவுகோல்

I. 1. **818**. 2. அ. R.4217. ஆ. T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சவுக்காரத் திறவுகோல் சூத்திரம். ஆ. Akattiyar cavukkārat tiravukōl. இ. —. 4. —. 5. —. 6. — 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 4. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 7; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிப்பதற்கு அடிப்படையாக அமையும் சவுக்காரத்தின் பண்புகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. பூநீறு 2 படி, கற்சுண்ணம் 2 படி எடுத்து இவற்றைப் பொடிசெய்து, இவற்றுடன் சூடன், நவச்சார சுண்ணம், வெடியுப்பு இவற்றைச் சேர்த்து இடித்து, அவற்றுடன் சிறிது நீரை விட்டுக் கலக்கவேண்டும். பிறகு அதனைச் சூரிய ஒளியில் காயவைத்து அதன் தெளிவை இறுத்து மீண்டும் ஒருமாத காலம் வெயிலில் வைத்தால் வெண்மையான உப்பு கிடைக்கும். இதைப் பீங்கானில் போட்டு இரண்டு மாதம் சூரிய ஒளியில் வைத்தால் சிவந்த வெண்மையில் அவ்வுப்பின் நிறம் மாறும். இதுவே சவுக்காரம் என்றழைக்கப்படும் என இந்நூல் கூறுகிறது. இதைக்கொண்டு முப்புவை எளிதாகத் தயாரிக்கலாம் என்றும், இம்முப்புவினால் தயாரிக்கப்படும் மருந்தை உண்போர் ஞானியாவர் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. —.

5. ஆதிநடு மூலத்தின் வெளிக்குள் ளான
ஐங்கரனை யடிதொழுது அரனைப் போற்றி
சோதிமணி வடிவான தேவி சொல்ல
சூத்திரந்தான் பதினாறுஞ் சுருக்கிப் பாட
வேதியா மாயிரத்திரு னூற்று சூத்திரம்
விளங்கியதோர் சவுக்காரக் குருவாம் சூட்சம்
நீதியாம் முன்னூலுக் கின்னூல் சூத்திரம்
நிச்சயமாய்ப் பதினாறுந் திறவு கோலே. 1

6. பகருவான் மூலிகையின் போக்கு ஞானம்
பண்பான சவுக்காரம் அட்ட சித்தி
பகருவான் குளிகையொடு எல்லாஞ் சுத்தி
பாராவிட்டால் சித்தியில்லை வாதிகளே சொன்னேன்
பகருவான் விட்டகுறை தவத்தோர்க் கல்லால்
பதினெண்பேர் னூல்பார்த்து வகைதோ ணாது
பகருவான் நிலைநின்று வாசி யூதில்
பலிக்குமடா சூத்திரந்தான் பதினாறு முற்றே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 192(m), R. 280(e-1), R. 261(j), R. 4219, R. 7719, R. 7880, R. 9226, R. 9628, R. 10660(c), R. 10877(a). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 302(h), 553(b), 1041(c), 1046(d), ஆ.நி.எண் 509(c), உ.த.நி.எண். 199:403. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் முப்பு சூத்திரம் 16,** அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், கொங்கணர் சூத்திரம் 41 (R. 4228), அம்பிகானந்தர் சூத்திரம் 25(R.4229) முதலான பல நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் சவுக்காரத் திறவுகோல்

I. 1. **819.** 2. அ. R.4219. ஆ.T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சவுக்காரச் சூத்திரம் 16. ஆ. Akattiyar cavukkārac cūttiram 16. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிப்பதற்கு அடிப்படையாக அமையும் சவுக்காரத்தின் பண்புகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 818ஐப் போன்றது.

4. —.

5. ஆதிநடு மூலத்தின் வெளிக்குள் ளான
ஐங்கரனை யடிதொழுது யரனைப் போத்தி
சோதிமணி வடிவான சோதி சொல்லச்
சூத்திரந்தான் பதினாறுஞ் சுருக்கிப் பாட
வேதிமாயி ரத்திருனூறு சூத்தி ரந்தான்
விளங்கியதோர் சவுக்காரக் குருவாஞ் சூட்சம்
மூதியாம் முன்னூலுக் கின்னூல் சூத்திரம்
முக்கியமாய்ப் பதினாறுந் திறவு கோலே. 1

6. பகருவான் மூலிகையின் போக்கும் ஞானம்
பண்பான சவுக்காரம் அட்ட சித்தி
பகருவான் குளிகையோ டெல்லாஞ் சித்தி
பாராட்டால் சித்தியில்லை வாதிகளே சொன்னேன்
பகருவான் விட்டகுறை தவிர்த்தோர்க் கெல்லாம்
பதினெண்பேர் னூல்பார்த்தும் வகைதோன் றாதே
பகருவான் நிலைநின்று வாசி யூதி
பலிக்குமடா சூத்திரந்தான் பதினாறு முத்தே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 192(m), R. 280(e-1), R. 261(j), R. 4217, R. 7719, R. 7880, R. 9226, R. 9628, R. 10660(c), R. 10877(a). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 302(h), 353(d), 1041(c), 1046(d), ஆ.நி.எண். 509(c), உ.த.நி.எண் 199:403. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் முப்பு சூத்திரம் 16,** அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், உரோம ரிஷி குறுநூல் 50, உரோமரிஷி சூத்திரம் 16 ஆகிய நூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் சவுக்காரத் திறவுகோல்

I. 1. **820.** 2. அ. R.7715(b). ஆ. T.R.2985. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūttiram. இ. அகஸ்த்தியர் சோடசம் பதினாறு சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பாலக்காடு நெல்லிச்சேரி என்.சி. அனந்தநாராயண அய்யர் பேரன் என்.எஸ். நாராயண மூர்த்தி அய்யரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடிக்கட்டு. 10. கி.பி.1962-63.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய முப்பு தயாரிப்பதற்கான அடிப்படை சவுக்காரத்தின் பண்புகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 818 போன்றது.

4. ஹரி ஓம்.

5. ஆதிநடு மூலத்தின் வெளிக்குள் ளான
ஐங்கரனை யடிதொழுது வரனைப் போற்றி
சோதிமணி வடிவான தேவி சொல்ல
சூத்திரந்தான் பதினாறுஞ் சுருக்கிப் பாட
வேதிமா யிரத்திரு னூறு சூத்திரம்
விளங்கியதோர் சவுக்கார கருவாம் சூட்சம்
நீதியா முன்னூலுக் கின்னூல்(ச்) சூத்திரம்
முக்கியமாம் பதினாறுந் திறவு கோலே. 1

6. பகருவான் மூலிகையின் போக்கு ஞானம்
பண்பாகச் சவுக்கார மட்ட சித்தி
பகருவான் குளிகையெல்லாச் சித்தி சித்தி
பாராட்டால்(ச்) சித்தியில்லை வாதிகளே சொன்னேன்
பகருவான் விட்டகுறை தவத்தோர்க் கல்லால்
பதினெண்பேர் னூல்பா(ர்)த்தும் வகைதோன் றாது

பகருவான் நிலைநின்று வாசி யூதி
பலிக்குமடா சூத்திரந்தான் பதினாறு முற்றே.

7. திருச்சிற்றம்பலம் முன்னிற்க.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. ற/ர, ழ/ள வேறுபாடு இல்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பேரில் பாடப்பெற்றுள்ள நூல். இந்நூல் 'சூத்திரம்', 'சாலத்திரட்டு' எனப் பலவாறு பெயர் பெறும். 11. இல்லை.

IV. 1.R. 192(m), R. 261(j), R. 280(e-1), R. 7719, R. 7880, R. 9226, R. 9628, R. 10660(c), R. 10877(a). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 302(h), 353(d), 1041(c), 1046(d), ஆ.நி.எண் 509(c), உ.த.நி.எண் 199:403. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் முப்பு சூத்திரம் 16,** அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் அகத்தியர் கழங்கு (R. 7715) என்ற நூலும் உள்ளது. இதைத் தவிர, 'சிந்தாமணி வைத்தியம்' என மலையாள எழுத்தில் எழுதப்பெற்ற ஒரு புது ஓலையும், வேறு இரு புது ஓலைகளும் உள்ளன. அவற்றில் மருத்துவக் குறிப்புகள் எழுதப்பெற்றுள்ளன.

அகத்தியர் சாத்திரம்

I. 1. **821.** 2. அ. R.6918(a). ஆ. T.R.2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாத்திரம். ஆ. Akattiyar cāttiram. இ. அகத்தியர் சாஸ்திரம் 306ல் சமுசார வழியிலிருக்க. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 2; இரண்டு இதழ்களிலும் ஒவ்வொரு பக்கம் எழுதப்பட்டுள்ளது.

13. பக்கத்திற்கு 4-8 வரிகள். 14. விருத்தம். 15. உண்டு. 16. குறை. 17. 4 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானி ஆவதற்குரிய செயல்முறைகளைக் கூறும் நூல். 2. தத்துவம். 3. ஞானியானவன் முதன்முதலாகத் தாய், தந்தை, அக்காள், தங்கை, அண்ணன், தம்பி போன்ற உடன்பிறந்தார்களுடனும் மற்றும் சுற்றத்தார்களுடனும் இருந்துதான் வருகின்றான். எந்த மனிதனும் பிறவியிலேயே ஞானிகளாக வந்துவிடமுடியாது. இப்படி மண்ணில் பிறந்த மனிதர்கள் சுற்றத்தார்களுடன் வாழும் காலத்தில் குருவை நாடி, உலக விவரங்களை அறிந்து முறையாகப் பயின்று குருவின் உபதேசங்களைத் தினமும் போற்றி அதன்படி நடந்தால் சிறந்த ஞானியாக முடியும் என்றும், அதற்குப் பிறகு காயசித்தி என்ற முறைகளைப் பின்பற்றிக் கற்பமுண்டு இவ்வுலகில் பிறப்பில்லாப் பெருவாழ்வு வாழலாம் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. அகஸ்தியர் சாஸ்திரம் 306ல் சமுசார வழியிலிருக்க.

5. ஆமடா பம்பரமாய் நின்ற ஞானி
அன்னையெனை.........யவனை யறிந்த யோகி
தாமடா ஒலகத்தி லிருந்து கொண்டு
தரணியோர்க ளுங்களுடன் சமுசா ரத்தில்
ஆமடா அன்னைதந்தை மக்காள் பெண்டீர்
மைத்துனருஞ் சூழ்ந்து சமைத்து முள்ளோர்
நாமடா யிருந்ததாலென் வாழ்ந்தா லென்ன
அடிதெரியாப் பாவிகளே அறிந்து கேளே.

6. தானென்ற காயசித்தி பண்ணித் தீர்ந்து
சிவந்தமாய் கைகட்டி காரனையோ செய்து
வானென்ற வீதியிலே ஆடிப் பார்த்து
வருமளவும்...........தெயிறுக் ஒன்று
வேனென்ற மலைகளிலே போனா றானால்
வேண்டாத சித்தரினால் விக்கினங்க ளுண்டு
பானென்று முண்டுகொண்டு ஆயியைக் காணபோற்றி
பதறாமல் கற்பமுண்டு யறிந்து பாரே.

7.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாரே என்பது பாறே என்றும் உலகத்தில் என்பது ஒலகத்தில் என்றும் வந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் சாத்திரம் என்ற இந்நூலின் பாடல்களுக்கு வரிசைஎண் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இந்நூலுக்குப்பின்னால் பகவதி தியானம், வாசல் திறக்க, சிவமணி வார மறிதல், அஷ்டகருமத்துக்கு விவரநூல்,. சவுமியம் 1200ல் அமுர்தம் உண்ணும் மந்திரம், வாணி மூலிகை குணம் போன்ற பகுதிகள் அமைந்துள்ளன.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. **822.** 2. அ. R.7059. ஆ. T.R.2852. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் இந்திரசாலம். ஆ. Akattiyar intira cālam. இ. அகஸ்தீசநாயனார் இந்திரசாலம் முதல் காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன் பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 60. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 120; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சூலை, மூலம், மேகம் முதலிய பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சாலத்திரட்டு 1200ல், இந்நூல் முதல் காண்டமாக அமைந்து விளங்குகிறது. இம்முதற்காண்டம் 300 பாடல்களைப் பெற்று 'வைத்திய காண்டம்' என

அழைக்கப்படுகிறது. இந்நூலில் முப்புவின் விவரமும், இரச சுன்னம், அரிதாரச்சுன்னம், துருசுச்சுன்னம், கற்பூரச்சுன்னம், காந்தச் சுன்னம் முதலிய பல்வேறு சுன்ன வகைகளும், இரசபற்பம், தாமிர பற்பம், கந்தக பற்பம், வீர பற்பம் முதலான பல்வேறு பற்ப வகைகளும், அரிதாரம், கல்லுப்பு, பொரிகாரம் போன்றவையும், கரிசாலை எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் முதலிய எண்ணெய் வகைகளும், வெள்ளை ஆவாரைத் தயிலம், சிவன் வேம்புத் தயிலம், வேப்பம் பட்டைத் தயிலம் முதலான தயில வகைகளும் அவற்றின் செய்முறைகளும் கூறப்படுகின்றன. மேற்கூறிய இம்மருந்துப் பொருள்களோடு இன்னும் பலவகை மருந்துப் பொருள்கள் குணப்படுத்தும் நோய்களாகச் சூலைநோய், காமாலை நோய், கண் நோய், மூலநோய், மேகவெட்டை, அரையாப்பு, புண்வகைகள், எண்வகைக் குன்மம், வாதநோய், காசநோய் முதலிய பல்வேறு நோய்கள் கூறப்படுகின்றன. இந்நூல் முழுதும் மருந்து செய்முறைகளையும், அம்மருந்துப் பொருள்கள் குணப்படுத்தும் நோய்களையும் மட்டுமே கூறுவதால் 'வைத்திய காண்டம்' என்றும் அழைக்கப்படுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தீசநாயனாரிந்திரசாலம் முதல் காண்டம்.

5. காரணமே மூலவட்டந் தன்னில் நிற்குங்
 கணபதியும் வல்லபையும் தேவர் காப்பு
....
 ....
வாரணமே தேறிவிளை யாடு மெந்தன்
 மன்னுகுரு வருள்சுரந்த குமரன் காப்பு
நாரணனும் நான்முகனும் அறியா நின்ற
 நலமான வேதாந்தங் காப்புத் தானே. 1

6. சிவயோகிக் காகுமென்று யிந்திர சாலம்
 செப்பினேன் சிவனாணை நூலீ யாதே
தவயோகங் கிடையாது சவிப்பார் சித்தர்
 தலைவெடிக்குஞ் சத்தியமே தரணி மீதில்
நவகோடி சித்தர்களு மறிய மாட்டார்
 நாதவிந்து வழலைவழி திறந்து சொன்னேன்
அவயோகி யாகாதே வெளியிற் போட்டு
 அலையாதே வயத்திகாண் டந்தான் முற்றே. 300

7. வயித்திய காண்டம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 4204, R. 4696, R. 4777, R. 4919, R. 6124, R. 6227, R. 9031. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 261, 789, 1026, 1085, த.ச.ம.நூ.எண் 417(a), த.ப.க.எண்கள் 288, 2349. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), **அகத்தியர் சால சூத்திரத் திரட்டு**, பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சாலத்திரட்டு நான்காம் காண்டம் (R.7059(a)) என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் சாலத்திரட்டு

I. 1. **823.** 2. அ. R. 7059(a). ஆ. T.R. 2852. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் இந்திரசாலம். ஆ. Akattiyar intira cālam. இ. இந்திரசாலத்திரட்டில் மாந்திரீகத் துறை நாலாங்காண்டம். 4. —. 5. —. 6. ஆதிமூலம். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன் பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 66. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 132; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 300 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அட்டகர்மங்கள், மாந்திரீகம் முதலானவற்றை விரிவாகக் கூறும் நூல். 2. மந்திரம் - மாந்திரீகம். 3. அகத்தியர் சாலத்திரட்டு 1200-ல் நான்காவது காண்டமாக இந்நூல்

அமைகிறது. இக்காண்டம் மாந்திரீகம் பற்றி முழுமையாகக் கூறுவதால், மாந்திரீகக் காண்டம் என்று பெயர் பெறுகிறது. இந்நூல், அட்டகர்மங்களான வசியம், தம்பனம், மாரணம் முதலான மந்திரங்களைப் பேசுகின்றது. இதில் கண்கட்டு வித்தை, வக்கணாதி வித்தை, சூனிய வித்தை முதலான பல்வேறு வித்தைகள் பற்றியும், மூதேவி மாரணம், அய்ங்கோண சக்கரம், அனுமார் மந்திரம், நவக்கிரக விஞ்சை, குட்டிச்சாத்தான் பிடிக்க மந்திரம், பிரமதேவர் பூசாவிதி, பத்திரகாளியம்மாள் மந்திரம் ஆகியவைகளும் பேசப்படுகின்றன. கண்கட்டு வித்தையில் மிருகத்தின் கண்கட்டவும், நாவடக்கவும், சத்துருவின் நாவை அடக்கும் விதம் பற்றியும் இந்நூல் உரைக்கின்றது. அஞ்சனங்கள் செய்தல், சத்தியை வசியம் செய்தல், கருங்கல்லை உடைத்துக் காட்டுதல், காகங்களை மயக்குதல், ஏவல், சூனியங்களைக் காட்டும் வித்தை, ஆண்பெண் வசிய முறைகள், நில ஊமத்தை, வெள்ளெருக்கு, கருஞ் சம்பை போன்ற மாந்திரீக மூலிகைகளின் பயன் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் முறை முதலியனவும் கூறப்படுகின்றன. சண்டாளக் கரு அதாவது கழுதையின் கொழுப்பை அகலில் போட்டு விளக்கேற்றி வைத்தால் அவ்விடத்திலுள்ள பூதம், பிசாசு, முனி, தெய்வம் இவை எல்லாம் அலறி ஓடிவிடும்படியான ஒருவகை வித்தையும் கூறப்படுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. இந்திர சாலத்திரட்டில் மாந்திரீகத்துறை நாலாங் காண்டம். மோடி வித்தை.

5. வேறுதுறை யறியாத சித்தர்க் கெல்லாம்
மெய்யான யிந்திரமாஞ் சால மாடக்
கூறுகிறேன் மாந்திரீக வரலா றெல்லாம்
குமரகுரு பரமுருகன் சரணம் போற்றி
யேறுமறு விரைதாண் டிப்பா லந்த
யெந்தாய்முன் கும்பேசுபரி யென்னைப் பெற்றாள்
ஆறுதலந் தன்னிலொரு படியில் நின்ற
ஆனைமுகன் காப்பாமென் றோதி னோமே. 1

6. சித்திபெறுந் தேவரிசி குகைகள் தோறும்
திருவருளா லடக்கிவைத்த யிந்த நூலை
பத்தியுடனே பூசைசெய்து வரைகள் தாண்டி
பலனான பரஞான மவுன மப்பா

முத்திபெறுந் தவயோகி யானா லிந்த
மொழிதப்பா துலகினிலே நடந்தா யானால்
சத்தியருள் சகலசித்துங் கைக்குள் ளாகும்
சத்தியந்தா னிந்தனூல் காண்ட முத்தே. 300

7. மாந்திரீகக் காண்டம் முகிந்தது முற்றும். ஆகக் காண்டம் நாலுக்கு விருத்தங் கூடியது 1200. குமரன்துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இந்த நாலு காண்டம் ஆயிரத்திருநூறு யெழுதினது ஆதிமூலம் கையெழுத்து. நீடூழிகாலம் வாழ்க வேண்டியது.

IV. 1. R. 6227(c). 2. த.ச.ம.நூ.எண் 417(d), சி.ம.மை.ஆ.நி. எண் 251(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. வே. ஆறுமுக முதலியார் & வே. கந்தசாமி முதலியார் (பதி.), **அகத்தியர் சால சூத்திரத் திரட்டு**, பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, திருவெண்காடு, 1873. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சாலத்திரட்டு முதல்காண்டம் (R.7059) என்ற நூலும் இடம்பெற்றுள்ளது.

அகத்தியர் சாலத்திரட்டு 32-ல் சில

I. 1. **824**. 2. அ. R.6895. ஆ. T.R.2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலத்திரட்டு 32-ல். ஆ. Akattiyar cālattiraṭṭu 32-l. இ. அகஸ்தியர் சாலத்திரட்டு 32ல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன் பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நாடிகளைப் பற்றிய பேசும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சாத்திரம் என்ற இந்நூல் சோடசம், அகாரம், உகாரம், நாடி, அக்கினி, மகாரம் போன்றவை பேசப்பட்டு நாடிகளின் இயக்கத்தையும் அவை உடம்பில் எங்கெங்கு அமைந்து இயங்குகின்றன என்பது பற்றியும், அந்நாடிகளைத் தெரிந்து கொள்ளும் முறைகளைப் பற்றியும் மிகச் சுருக்கமாகப் பேசுகின்றது.

4. அகஸ்தியர் சாலத்திரட்டு 32-ல்.

5. செப்புகிறேன் சோடசத்தின் கலையுள் ளாக
    தீபத்தை நோக்குதற்கு திறவு கோல்தான்
ஒப்புகிறேன் அகாரந்தான் மின்போல் மின்னி
    மூலமென்ற நாடியிலே முழங்கி நிற்கும்
நம்புகிறேன் உகாரந்தான் இருதயத்தி னுள்ளே
    நாடியே அக்கினிபோல் பிரபை வீசும்
அப்புகிறேன் மகாரந்தான் கண்டத் துள்ளே
    ஆதித்தன் கோடியைப்போல் காந்தி யாமே. 64

6. ஆமப்பா பூனைபோல புகுந்து ஓடும்
    அதினோடே சேர்ந்தாலும் ....
போமப்பா கூத்திநடு அதற்கு மேலே
    புகழாக மூன்றுவிரல் கடந்தா யானால்
ஓமப்பா ....தகலை மாணிக்கம் போலே
    ஒளிவீசுங் காலச்சினந்தான் உன்னிப் பாரு
நாமப்பா நாதந்த உச்சி மீதில்
    நண்ணுவார் பின்கோடி ஒளிபோ லாமே. 66

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. நாடிகளின் இயக்கங்களைப் பற்றிப் பேசும் 3 விருத்தப் பாடல்களால் ஆன மிகச் சிறிய நூலாக இந்நூல் காணப்படுகிறது.

அகத்தியர் சால நிகண்டு 200

I. 1. **825.** 2. அ. R.8795. ஆ. T.R.3114. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாலநிகண்டு. ஆ. Akattiyar cālanikaṇṭu 200. இ. சால நிகண்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 32. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 64; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 202 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சாலங்களுக்குரிய கருக்களையும் அவற்றைச் செய்யும் முறைகளையும் கூறும் நூல். 2. சாலம் - மாந்திரீகம், மருத்துவம். 3. இந்நூல், இந்திரசாலம், தந்திரசாலம், செப்பிடுவித்தை ஆகியவற்றைக் கூறுகின்றது. சாலங்களுக்குரிய கருக்களாகப் பலபெயர்கள் கூறப்படுகின்றன. நிகண்டாக நூறு தந்திரங்களுக்குரிய பெயர்கள் தரப்படுகின்றன. மேலும், தாது விருத்திக்கான மருந்துகள், வசியத்திற்கான மை வகைகள், அழிஞ்சில் தயிலம், தும்பைக் கற்பம் ஆகிய பல்வேறு மருந்துப் பொருள்களும், அட்டகர்மங்கள், தண்டு சுருங்க, பெருக்க அஞ்சனம், வாடை திலதம், பாவை வித்தை, குட்டி சாத்திரப் பூசை முதலியனவும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

4. நன்றாக. சாலநிகண்டு.

5. தானெனும் வழலை யாதி
   தருக திருவடி யீசன்
வானமும் புவியு மாகி
   மதிரவி வெளியில் நின்ற
ஞானமு மாகி அம்மை
   நாதமும் விந்து வாகி
மௌனமு மாகி நின்ற
   முடிவுமே காப்புத் தானே. 1

6. பாரினி லிந்த முறைப்படி பாத்து
தேருநீ பாவம் செய்யவும் வேண்டாம்
ஆருநீ பாரும் அறுபத்தி னாலும்
நேரிரு னூறு நிகண்றது முற்றே. 202

7. இந்திரசால முற்றும். குருவே நம.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 938(c), R. 6143, R. 7694, D. 1880. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 55(b), த.ச.ம.நூ.எண்கள் 248(c), 743(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் துடிநூல் (R.8795(b)) என்ற நூலும் இடம்பெற்றுள்ளது.

அகத்தியர் சால நிகண்டு 200

I. 1. **826**. 2. அ. R. 6134. ஆ. T.R.2585. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஜாலநிகண்டு. ஆ. Akattiyar jālanikaṇṭu. இ. அகத்தியர் ஜால நிகண்டு 200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தாரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே தெளிவு. 4. 32. 5. 30x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 64; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்திரசாலம், தந்திரசாலம் போன்ற சாலங்களுக்குரிய கருக்களை இந்நூல் கூறுகின்றது. 2. சாலம் - மருத்துவம். 3. இந்நூலில், செப்பிடுவித்தை போன்ற இந்திர தந்திர சாலங்களுக்குரிய பொருள்கள் கூறப்படுகின்றன. பாட்டுக்கொரு

சாலமும், கருவும், நூறு நிகண்டுகளும், பல தந்திரங்களும் விளக்கப்படுகின்றன. இவற்றுடன் தாது விருத்திக்கான மருந்துகள், வசியத்திற்கான மருந்துகளும் மை வகைகளும் கூறப்படுகின்றன. அழிஞ்சில் தைலம், குளிகை, தும்பைக் கற்பம் என்பனவும் சில பாவை வித்தைகளும் வந்துள்ளன.

4. —.

5. உன்னிய பொதிகை வாழும்
ஒருமுனி யருளை யோதி
யின்னிலை நிகண்டு பாடித்
தந்திர சாலமிரு நூறு
பன்னிய பாசை தோணப்
பண்டித வேத னாவுக்
கன்னியு முமையும் யீசன்
கந்தனுங் காப்புத் தானே. 1

6. பாரினி லிந்த முறைப்படி பாத்து
.... பாவஞ் செய்யவும் ....
ஆறிநீ பாரு அறுபத்தி னாலும்
நேரிரு நூறு நிகண்டது முற்றே. 200

7. —.

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடல்கள் உள்ளன. பிழைகள், பாடபேதங்கள் உள. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். சாலத்திரட்டு நூல்களிலிருந்து வேறுபடுகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1880, R. 938, R. 6143, R. 7694, R. 8795. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 55(b), த.ச.ம.நூ.எண்கள் 248(c), 743(i). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுள்ள சுவடிக்கட்டில் 1. சுப்பிரமணியர் தியானம், 2. அகத்தியர் தண்டகம், 3. நிதி நிட்சேப விசாரம் எனும் நூல்கள் உள்ளன.

அகத்தியர் சீதேவி எண்ணெய்

I. 1. 827. 2. அ. R. 4376(a). ஆ. T.R. 2089. இ. —. ஈ. —. 3. அ. நாடி நிதானம். ஆ. Nāṭinitāṉam. இ. தீராத சுரத்துக்கு சீதேவியெண்ணை. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருச்சி மாவட்டம், கவரைப் பட்டி, எல். பரமசிவம் பிள்ளையிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடிக்கட்டு. 10. கி.பி.1953-1954.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. ஓரங்கள் சிதைவு. 12. 6; 4வது இதழாக உதிரி இதழ் ஒன்றுள்ளது. இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 14 பாடல்களும் இறுதி ஏட்டில் உதிரிச் செய்திகளும் உள்ளன.

ஆ. —.

III. 1. தீராத காய்ச்சல் நோயைத் தீர்ப்பதற்குரிய சீதேவி எண்ணெய் என்ற மருந்துப் பொருளைத் தயாரிக்கும்முறை கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் காய்ச்சல் தோன்றும் விதமும் அதற்குரிய மருந்தும் கூறப்படுகின்றன. இந்துப்பு, மஞ்சள், தேவதாரம், நன்னாரி, காளி மூலம் போன்ற பொருள்கள் மூலம் தயாரிக்கும் மருந்தில், காசு எடை நிறுத்த, மோரில் கலந்து குடித்தால் சகலவிதமான சுரமும் நின்று போய்விடும். இவ்வாறே வெவ்வேறு வகையான மருந்துகளைத் தயாரித்து இவ்வகையான நோய்களைக் குணப்படுத்தலாம் என்கிறார்.

4. —.

5. இந்துப்பு மஞ்சளொடு தேவ தாரம்
மியல்பான நன்னாரி காளி மூலம்
சிந்துபுகழ் பெருங்குரும்பை தக்கோலப் பட்டில்
சீந்திவேரி லாமிச்சஞ் சிறுக்கீரை வேருஞ்
சந்தமுறு தகரமொடுகச் சோல மேலாஞ்
சாதிக்காய் லவங்கப்பட் டத்தி தானும்
பந்தமுறு சாரணைவேர் திப்பிலியின் மூலம்
பாகல்வகைக் கங்கொது தூக்கே. 1

6. ....லுட்டியே கலக்கியோர் தாளி சேர்த்து
அடுப்பேத்தி மூன்றுநாள் கொதிக்க வைத்து
துத்தியே நாலாநாள் வந்துக் காச்சி
சீதகும் பதங்கண்டு வடித்தி றுத்துப்
போட்டியில்லாமல் நாலுநாள்(க்) கொளுக்
கால்பூசியே முழுகிவரபோற நோய்கெளுடி...
யாய்வந்த பல சுரங்கள் வேட்டை
சூடும் மோடுமேகடலுரைத்த தயிலங் கேளே. 2

7. —.

8. மூலம். 9. பாடல்கள் . அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றுள்ளன. எழுத்துப் பிழைகள் மிகுதி. 10. இந்நூல் நாடி நிதானம் என்பதின் கீழ் அட்டவணைப்படுத்தப் பெற்றிருந்தாலும், இந்நூலடங்கிய 3 ஓலைகள் தனியான கையெழுத்தில் எழுதப்பட்டிருப்பதால் தனிநூலாகக் கொள்ளப்பட்டது. முடிவுப்பாடலுக்குப்பின் இடம் விடப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. நான்காவது ஏடாக மருத்துவக் குறிப்புகள் அடங்கிய வேறொரு நூலின் உதிரி ஓலை ஒன்றுள்ளது.

அகத்தியர் சுத்த ஞானம் 9

I. 1. **828.** 2. அ. R.6946. ஆ. T.R.2793. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சுத்த ஞானம் 9. ஆ. Akattiyar cuttañāṉam. 9. இ. அகத்தியர் நவரசம் ஒன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 26x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது.

13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 9 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானமார்க்கம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் நவரசம் என்ற இந்நூலின் முதல் பாடலில் 'சத்தியமே பராபரமே ஒன்றே தெய்வம்' எனவும், அதுவே அனைத்துயிர்க்கும் தலைவன் என்றும் கூறுகிறது. புத்தியுள்ள புண்ணியோர்கள் இப்பூமியில் கோடியில் ஒருவருண்டு. அவர்தான் பரமஞானி. அவர்கூறும் சுழிநிலை அறிந்தால் மோட்சம் கிடைக்கும் என்றும் இந்நூல் கூறுகின்றது. மேலும், மோட்சம் பெறுவதற்கு மோகமுடன் பொய், களவு, கொலை செய்யக்கூடாது. கோபம் கொள்ளக் கூடாது, புண்ணியம் செய்யவேண்டும் பல நல்ல நூல்களைப் படிக்கவேண்டும். ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேண்டும். நல்ல உத்தமனாய் இருக்கவேண்டும். இவை போன்று பல அறிவுரைகளை இந்நூல் பகருகின்றது.

4. அகத்தீசர் நவரசம் ஒன்பது.

5. சத்தியமே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலருக்குஞ் சீவனுயிர் தானே யாச்சு
புத்தியினா லறிந்தோர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்துக் கோடியிலே ஒருவ னுண்டு
பத்தியினால் மனமொடுங்கி நிலையில் நிற்பார்
பாலிலே மனதைவிடார் பரம ஞானி
சுத்தியே அறிவதில்லை சூட்சம் சூட்சம்
சுருக்கிலே நிலையறிந்தால் மோட்சம் தானே. 1

6. சத்தியமே வேணுமடா மனித ரானால்
சண்டாளம் செய்யாதே தவர்செய் யாதே
நித்திய கருமம் மறவாதே மறவாதே
நிஷ்டையுடன் சமாதிவிட்டு நிலைபெ றாதே
புத்திகெட்டுத் திரியாதே பொய்சொல் லாதே
புண்ணியத்தை மறவாதே பூசைமற வாதே
கத்தியதோ சள்ளிட்டு தரிக்கமி டாதே
கர்மியென்று நடவாதே கதிவேண்டுங் காலே. 9

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பட்டுள்ளன. ர/ற வேறுபாடின்றி அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 6089, R. 10666(g). 2. த.ச.ம.நூ.எண்கள் 509. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. இராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வாதசௌமியம் என்னும் சௌமிய சாகரம் 1200,** தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.

VI. சன்மார்க்கம், சுத்த சன்மார்க்கம் என்பதுபோல ஞானம், சுத்த ஞானம் என்பதாகும். சுத்தஞானம் என்பது பலவகையில் ஞானத்தைவிட மேலானதாகக் கருதப்படுகிறது.

அகத்தியர் சுத்தி

I. 1. **829**. 2. அ. R. 7906. ஆ. T.R. 2996. இ. R.No. 7926. ஈ. —. 3. அ. தட்சிணாமூர்த்தி பதின்மூன்று சுத்தி - முப்பத்தொன்று. ஆ. Tacināmūrtti patinmūnru cutti-muppattonru. இ. தெஷ்ணாமூர்த்தி பத்துமூணு சுத்தி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. சென்னை-6, புதுத்தெரு, எம். நடராசனிடமிருந்து பெறப்பெற்ற சுவடிக்கட்டு. 10. கி.பி.1962-1963.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 15x4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 24; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 31 பாடல்கள்.

ஆ. 1. 24x22 செ.மீ. 2. 11. 3. பக்கத்திற்கு 24 வரிகள். 4. தெளிவு. 5. 4.3.1962-63. 6. மு. நாராயணசாமி, 7. நாராயணசாமி. 8. நாராயணசாமி பிள்ளை, 4.3.1963.

III. 1. பலமருந்துகளின் சுத்தி முறைகளைப்பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல் 13 வகைப்பட்ட சுத்தி முறைகளைக் கூறுவது. மங்கிலியாள் சுத்தி, குடநீர் சவுக்கார

சுத்தி, ஆண்பிள்ளைவிந்து சுத்தி, சுன்னம், விந்து சுத்தி, சலம் தெளிய, ஓதம் தெளிய, கல்லுப்பு சுத்தி, கம்பி உப்பு சுத்தி, பாறை உப்பு சுத்தி, வெடியுப்பு சுத்தி, மாக்கரு சுத்தி, விழக்கல் துகை, விழக்கல் சுத்தி, விழச் சுன்னம் என்பன கூறப்பட்டுள்ளன.

4. —.

5. பதிமறைகள் வேதாந்த சூட்சா சூட்சம்
பசுபதி பாசத்தடங்கும் பூத னாதி
அதிவிதங்கா ணப்பின்னையாந் துரியா தீதம்
ஆதியந்த முதலான வாறாந் தியானம் குரு
மதிதான வரையா றுக்குள் நந்தி
யொளிபத மாகிலதி மதியா னஞ்சை
தன்னியந்தா ருக்கஞ்சடா தார மாகி
சண்முகவன் நந்திதான் காப்பு காப்பே. 1

6. ஆடுவதே அன்பதுக்கு ளதீதஞ் சொன்னோம்
அதைக்குறுக்கி முப்பதுக்குள் சுத்திமுறை சொன்னோம்
நாடவே இந்நூல்தான் சூட்சா சுண்ணம்
நாட்டினேன் முப்பதையும் பதனம் பண்ணு
வாடவே வேண்டாங்காண் புலத்தியனே அய்யா
வையகத்திலே மனிதற்கு இந்நூல்
பாடியே முப்பதையும் பாடி விட்டோம்
பதினெண்பேர் சித்தருக்குங் குருனூல் முற்றே. 31

7. குரு முன்னிற்கவும். திருச்சிற்றம்பலம் துணை.

8. மூலம். 9. 'அன்பது, 'அப்பா' எனும் வழக்குச் சொற்கள் வருதல் காண்க. 10. அகத்தியர் புலத்தியர்க்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இருவகை அளவு கொண்ட ஏடுகள் இணைக்கப்பட்டுள்ளன.

இச்சுவடிக்கட்டிலுள்ள பிற நூல்கள் வருமாறு.

1.	காலாங்கி நாதர் தீட்சை விதி	-	81
2.	காலாங்கி நாதர் பட்சிணி	-	51
3.	கைலாசச் சட்டைமுனிசூத்திரம்	-	10

இறுதியாக உள்ள இரு ஓலைகளில் ஒன்றில் சில மருத்துவக் குறிப்புகள் எழுதப்பெற்றுள்ளன.

அகத்தியர் சுரதோச சன்னிக் குளிகை

I. 1. **830.** 2. அ. R. 5836(a). ஆ. T.R. 2501. இ. —. ஈ. —. 3. அ. —. ஆ. —. இ. தெட்சணாமூர்த்தி வயித்தியம் ஆயிரத்திரு நூறில் பாடிய சுரதோஷ சன்னிக்குளிகை. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பொள்ளாச்சி உதயகுளம் தாமோதரனிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1955-1956.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 1. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்த நூலில் சுரதோச சன்னியைப் போக்குவதற்குரிய மருந்துகள் கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. காய்ச்சல் எனும் சுரம் அதிகமானால் அது சன்னியில் கொண்டுவிடும். இது வந்தால் கௌரிவெள்ளைப்பாசாணத்துடன், கொடிக்கள்ளியின் சாறை ஊற்றி மிளகுபோல் உருட்டிக் கொண்டு நிழலில் உலர்த்திப் பயன்படுத்தவேண்டுமென்கிறார். இதேபோன்று சிலேற்பனத்தால் ஏற்படும் சன்னிக்கும் இந்நூலில் மருந்துகள் கூறப்படுகின்றன.

4. —.

5. சரமென்ன சரிறாம் பானஞ் சொல்வேன்
தாரணியில் வயித்தியரே சன்னிக் கெல்லாம்

பரமென்ன கெவுரிவெள்ளைப் பாஷா ணமும்தான்
தானென்ன யிவைகழஞ்சி யவைக ழஞ்சி
யுரமென்ன கொடிகள்ளி வாட்டிச் சாரை
யூட்டியரை மிளகுபோ லுண்டை பண்ணி
வரமென்ன நிழலுணத்தி வைத்துக் கொண்டு
வருஞ்சன்னி சுரங்களுக்கு மருந்தி தாமே. 1

6. மருந்தென்ன சிலேற்பன சுரத்துக் கெல்லாம்
மைய்ந்தனே மிளகுநீரி லிட்டுத் தாக்கு
குருந்தென்ன பித்தசுரஞ் சன்னிக் குத்தான்
குஞ்சிச்சா ரிட்டதிலே முகித்துத் தாக்கு
விருந்தென்ன முலைப்பாலுந் தேனு மூட்டு
மூதண்ட வாதசுர முறிந்தே யோடும்
இருந்தென்ன விசசுக்கு வுள்ளி நெய்யில்
யிட்டிடவே கெட்டோடுஞ் சன்னி தானே. 2

7. சன்னியென்ற விஷசுரமு மிதுலே தீரும்
சகலபிணி யுடசுரமு மிதிலே தீரும்
வன்னியென்ற வீச்சஞ்சு மிதிலே தீரும்
மாறாத சன்னிபதி னெட்டு தீரும்
உன்னியடி முயலகனு மங்குமற கண்ட
உடனுதவி சன்னியுந்தா னிதிலே தீரும்
மின்னதென்றும் தெரியாத சுரத்தைக் கொல்லும்
யிலிறாம் பாணமென்ற யிடிய தாமே.

8. மூலம். 9. ற/ர வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது.
10. மொத்தம் 3 பாடல்களே பெற்ற இது ஓர் அரியநூலாகும்.
11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் 141, 142, 143 ஆம் ஓலைகளில் உரைநடையில் 'கற்பூர சிலாசித்து பற்பமுறை' (R.5836) என்ற நூலுக்குப் பின் ஒரே ஓலையிலேயே மேற்குறிப்பிட்ட 3 பாடல்கள் உள்ள நூல் உள்ளது. அதன் பின்னரே 'தட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம் 400' என்ற நூல் தொடங்குகிறது.

இச்சுவடிக்கட்டிலுள்ள பிற நூல்கள் வருமாறு.

1. தொடுகுறிசாத்திரம் (R.5830)
2. அகத்தியர் பராக்கிரம சூத்திரம் 300 (R.5831)
3. பிரம்மமுனி வைத்திய சூத்திரம் 380 (R.5832)
4. உரோமரிஷி வசிய சூத்திரம் 500 (R.5833)
5. அகத்தியர் குழம்பு 25 (R.5834)
6. தன்வந்திரி சூத்திரம் 31 (R.5835)
7. கற்பூர சலாசித்து பற்பமுறை (R.5836)
8. தட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம் 400 (R.5837).

அகத்தியர் சுருக்கம்

I. 1. **831**. 2. அ. R. 7056. ஆ. T.R. 2849. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரச் சுருக்கம். ஆ. Akattiyar cūttirac curukkam. இ. அகஸ்த்தியர் 205க்குச் சுருக்கம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன்பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-1958.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 13. 5. 21x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 26; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 32 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவம் தொடர்பான செய்திகளும் நோய்தீர்க்கும் முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 205 என்ற நூலின் சுருக்கமாக இந்நூல் திகழ்கிறது. இந்நூலில் மேகம், கண்ரோகம், சூலைரோகம், வாதரோகம், பித்தம், கிராணி, வாயுகுன்மம், சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு மருந்துகள் கூறுவதோடு பலவகை மருந்துகளைச்

சுத்தி செய்யும் முறைகளும் கூறப்பட்டுள்ளன. அவை இலிங்க சுத்தி, பாசாண சுத்தி, அரிதார சுத்தி, கருட பச்சை சுத்தி, படிகார சுத்தி முதலியன. மேலும், உலோக செந்தூரம், வெள்ளி செந்தூரம், தங்க செந்தூரம் போன்ற செந்தூர வகைகளும், கடுக்காய் இலேகியம், வெந்தய இலேகியம், தான்றிக்காய் இலேகியம், சுக்கு இலேகியம், மிளகு இலேகியம், திப்பிலி இலேகியம், உள்ளி இலேகியம், கடுகு இலேகியம் போன்ற இலேகிய வகைகளும், சிவன் வேம்புத்தயிலம், செங்கொட்டைத் தயிலம், சந்தனத் தயிலம், வேங்கைப்பட்டைத் தயிலம், வெட்டிவேர்த் தயிலம், வேப்பம்பட்டைத் தயிலம், சீரகத் தயிலம் போன்ற தயில வகைகளும் மற்றும் பற்ப வகைகளும் கூறப்படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்த்தியர் 205க்குச் சுருக்கம்.

5. பாரப்பா நீற்றுவகை யறிய வேண்டி
பாங்கான வழக்கமல்லோ தெரிய வேணும்
நேரப்பா செபம்வேணு திறமும் வேணும்
கன்மவினை தீர்ப்பதற்கு.............வேணும்
சீரப்பா நூல்வேணுந் தையரியம் வேணும்
செய்பாகங் கைபாகந் தீட்சை வேணும்
ஊரப்பா யேகமூலி கையின் போக்கு
உத்தமனே சொன்னேநான் யிருனூற் றைந்தே. 1

6. ....
.... யிருகிக் கொள்ளும்
அலையாதே சிலேற்பனத்தை யறுத்துப் போடும்
அகலாத உஷ்ணத்தை யறுத்துப் போடும்
.... யான நாளொன்றுக் கிருபோ துண்ணப்
பேரான சயரோகம் வறச்சி காசம்
நிலையான மந்தார காசம் யேறும்
நேரான தூதுவளைலே கியத்தில் கொள்ளே. 32

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், அகத்தியர் வைத்திய சூத்திரம் 205-ன் சுருக்கமாகும்.

அகத்தியர் சூத்திரம் 5

I. 1. **832.** 2. அ. R.4514. ஆ. T.R.1989. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūttiram. இ. தட்சிணாமூர்த்தி சுருக்கம் அஞ்சு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி மாகலிங்கம் பிள்ளை (சோதிடர், மாந்திரீகர்), வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம். 10. கி.பி.1954-1955.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 19x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி. 17. 4 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. அகத்தியர் சூத்திரம் ஐந்து என்ற இந்நூல் பரம்பொருள்தான் வெளியாகவும், ஒளியாகவும் பாய்கின்ற வாய்க்காலாகவும், வயல்களாகவும் ஆயிற்று என்றும், உரம்தான் புனலாகவும், மண்ணாகவும் உடம்பில் உள்ள உயிராகவும் உதிக்கலாச்சு என்றும், மரந்தான் புல்லு முதல் நான்கு வகையோனியாக ஆனது என்றும், சிரமான ஏழுவகை தோந்தமெல்லாம் தெளிந்தால் பூரணத்தின் செயல் ஒன்றுதான் என்றும் கூறுகின்றது. மேலும், யோகம், பூரணத்தின் உண்மை, வசிய முதல் எட்டு வித்தை, சரியை மார்க்கம், யோகம், ஞானம் போன்ற செய்திகளை இந்நூல் பரிபாசையில் கூறிச்செல்கின்றது.

4. ஹரிஓம் நன்றாக. தட்சிணாமூர்த்தி சுருக்கம் அஞ்சு.

5. **பரந்தானே வெளியாச்சு ஒளியு மாச்சு**
பாய்கின்ற வாய்க்காலாச்சு வன்னி யாச்சு

உரந்தானே புனலாச்சு மண்ணு மாச்சு
    உடலான சீவசெந்து உதிக்க லாச்சு
மரந்தானே புல்லுமுத லுண்டாக லாச்சு
    மார்க்கமென்ற நாலுவகை யோனி யாச்சு
சிரந்தானே யேழுவகை தோந்த மெல்லாம்
    தெளிந்தறியில் பூரணத்தின் செயல்தா னொன்றே. 1

6. ஆதியாம் ஞானத்துக் காக சூட்சம்
    ஆசையா அறிவல்லோ அறைக்கு மூலம்
சோதியென்ற யோகத்துக்கு ஆதி சூட்சம்
    சொல்லரிய நாக்குநுனி தொட்டால் சூட்சம்
வாதியென்ற வாதத்துக் காதி சூட்சம்
    மகத்தான பூவழலை வாய்த்தால் சூட்சம்
....
    4

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் 'அறை' என்பது 'அரை' என்று ர/ற வேறுபாடின்றி அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. சூட்சுமத்தைப் பற்றிக் கூறும் மிகச் சிறந்த நூலாக இந்நூலைக் கருதலாம்.

அகத்தியர் சூத்திரம் 8

I. 1. **833.** 2. அ. R. 4210(a). ஆ. T.R. 1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் பலதிரட்டு 8. ஆ. Akattiyar cūttiram palatiraṭṭu 8. இ. அகஷ்த்தியர் பலதிரட்டு எட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-1953.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 2. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை.

9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 8 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய பொருள்களைத் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. மருத்துவத்திற்கும் இரசவாதத்திற்கும் பயன்படும் வழலை உப்புக்களைத் தயாரிக்கும் முறையை இந்நூல் கூறுகிறது. அகாரம், வகாரம், சிகாரம், அப்பு, துருசு, சூதம், ஐந்தெரு, சுண்ணம், கெந்தி, குரு உப்பு, எருக்கம்பால் ஆகியவற்றைச் சேர்த்து புடம்போட்டு காய்ச்சினால் இரசவாதப் பொருள்கள் கிடைக்கும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. —.

5. பாடுகிறோம் பலதிரட்டுச் சூத்தி ரந்தான்
பாங்கான பார்வதித்தாய் பாதம் போற்றி
நாடுகிறோம் அகாரமுதல் வகாரந் தொட்டு
நலமான சிகாரமது அதற்குள் காணும்
தேடுகிறோம் மாதுமுத லப்புக் காச்சி
செகச்சால மாடுகிற துருசுங் கூட்டி
ஆடுகிறோம் குகைசெய்து சூதம் விட்டு
ஐந்தெருவில் புடம்போடச் சுண்ண மாமே. 1

6. உருவான கெந்திக்குச் சரியே சூதம்
உத்தமனே மூன்றெழுத்து மஞ்சுங் கூட்டி
குருவான ஆதியென்ற உப்புங் கூட்டி
குமுறவே யெருக்கம்பால் விட்டு ஆட்டி
எருவான ஐந்தெருவில் புடத்தைப் போட
இயல்பான ஐயிரண்டு காய்ச்சி யாச்சிப்
பருவான பலதிரட்டுச் சூத்தி ரந்தான்
பதினெண்பேர் பதம்நினைக்கப் பலிக்குந் தானே. 4

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சூத்திரம் 10 (R.4210), அகத்தியர் கலைஞானம் 12(R.4208) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் சூத்திரம் 10

I. 1. **834.** 2. அ. R. 10324(a). ஆ. T.R. 3944. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 10. ஆ. Akattiyar cūttiram 10. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 15x5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 5; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருந்து தயாரிப்பும், முப்பு செய்யும் முறையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 10 என்ற இந்நூல், முப்பு தயாரிப்பதற்கான வழிமுறைகளை முதற்கண் கூறுகின்றது. பூமியிலிருந்து நாதம் எவ்வாறு பெறுவது என்றும், அதைப் பிண்டம் என்று பரிபாசையில் கூறி, பிண்டத்தை மாங்கிசத்தோடு எடுத்துவந்து பொரிகாரம் சூத்தி செய்து அதனுள் போட்டால் நாதம் கிடைக்கும் என்றும், அதில் பலசரக்குகளைப் போட்டு எரித்தால் முப்பு கிடைக்கும் என்றும் இந்நூல் கூறுகிறது. மேலும், முப்புவோடு தொடர்புடைய செயநீர், வீரம், பூரம், துருசு, வெள்ளை, விந்து போன்ற பலவற்றின் குறிப்புகள் நுட்பமாக இந்நூலில் தரப்பட்டுள்ளன.

4. ஹரிஓம்.

5. காணப்பா யெரியிலே விளைந்த பிண்டங்்
கூடிதான மாமிசத்தோ டெடுத்து வந்து
பூணப்பா பொரிகாரம் பொரித்துக் கொண்டு
பிண்டத்தை வாய்பிளந்து அதினுள்ளே போட்டு
ஆணப்பா பெண்ணோடே கூடி னாப்போல்
அப்பனே நாதமங்கே யிறங்கும் பாரு
சாணப்பா லோகத்திற் சட்டி ஒன்றில்
சாதகமாய் இனங்களையும் அதினுள் போடே. 1

6. ஆடலா மிதுகொண்டு கோடா கோடி
அளவிறந்த வித்தையெல்லாம் யிதற்குள் ளாட்சு
ஓடலா மிதுநாலே குளிகை செய்து
ஓசத்தியுள்ள மலைகளெல்லா மேறிப் பாரு
நாடெல்லாந் திரிந்தாலும் யிந்த பேர்க்கு
நல்லமுறை யிதுபோலே யெங்கு மில்லை
பாடல்போல் சொன்னதென்று யெண்ண வேண்டாம்
பத்துமொரு சூஷ்த்திரந்தான் பாடல் முற்றே. 10

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 280(d), R. 9052, R. 10659, R. 10877. 2. ஆ.நி.எண் 509(d), உ.த.நி.எண் 199:404, சி.ம.மை.ஆ.நி.எண்கள் 1040(j), 1103(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன்(பதி.), பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. மாங்கீசம், பொரிகாரம், பிண்டம், குளிகை போன்றவற்றைப் பற்றியும் இந்நூல் பேசுகிறது.

அகத்தியர் சூத்திரம் 10

I. 1. 835. 2. அ. R. 4210. ஆ. T.R. 1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் கருமானம். ஆ. Akattiyar karumāṉam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5.

9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-1953.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 2. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 4; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் மற்றும் மந்திரம் முதலான செய்திகளைக் கூறும் நூல். 2. இரசவாதம், மந்திரம். 3. இந்நூல், வாதம், வழலை, பதினெண்பேர்கள் கண்ட வித்தை முறைகள் பற்றியும் கூறுகின்றது. மேலும், அண்டபிண்டம், பிண்டத் தயிலம், அட்ட கர்மங்களான தம்பனம், வசியம், மாரணம், வித்துவேசனம் ஆகியவை பற்றியும் அவற்றின் இயல்பு பற்றியும் கூறுகிறது. இந்நூலிற்கு 'அகத்தியர் கருமானம்' என்ற பெயர் உண்டு என்பதைச் சுவடியிலுள்ள தலைப்பு நமக்குத் தெரிவிக்கிறது. பத்துவிதமான வித்தைகளை இந்நூல் கூறுகிறது.

4. அகஷ்த்தியர் கருமானம்.

5. சீர்கொண்ட வாதமது யெட்டு ரெண்டும்
சிங்குவங்கா லெடுத்ததொரு ஆண்பெண் ணாச்சு
வார்கொண்ட அகாரம்ஆண் உகாரம் பெண்ணாம்
வாதமது பூமுலையாள் திரண்ட முப்பூ.
ஏர்கொண்ட நாதமது வழலை யாகும்
எண்ணரிய நாதவிந்து ஆதி யாகும்
கார்கொண்ட கொடிமாவுங் கருவ தாகும்
கன்னியென்ற ஆனதுவும் ஆதி யாமே. 1

6. பாரப்பா குருநந்தி சொன்ன வித்தை
பராபரந்தான் கேட்டெனக்குப் பகர்ந்த மார்க்கம்
பாரப்பா பதினெண்பேர் கண்ட வித்தை
பாங்கான வித்தையிது சொல்லி டாதே
ஆரப்பா யிப்படியார் சொல்லப் போறார்
அகத்தீசர் யான்சொன்ன கருவை நன்றாய்

நேரப்பா மெள்ளமெள்ளச் செய்தா யானால்
நிசமான தொழில்பத்துஞ் சொல்ல முத்தே. 10

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 6214(j). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் கலைஞானம் 12 (R.4208), அகத்தியர் 14(R.4211) முதலான பலநூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 12

I. 1. **836.** 2. அ. R. 4503(a). ஆ. T.R. 1988. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 12. ஆ. Akattiyar cūttiram 12. இ. ஆயிரத்திரு னூறுக்குச் சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி S. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1953-1954.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதமுறையில் செந்தூரம் தயாரிக்கும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல், இரசவாதமுறையில் செந்தூரம் தயாரிப்பதைப் பன்னிரெண்டு பாடல்களில் விளக்குகிறது. காரம், சாரம் என்ற வேதியக் கூறுகளை இணைத்து இரசவாத முறையில் செந்தூரம் செய்யும்பொழுது எடுத்துக்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை முறைகளையும், அப்படி வடித்தெடுத்த அப்பொருளை இரசம் என்ற பாதரத்தோடு எந்த அளவு கொண்டு கூட்டவேண்டும்

என்ற முறையையும், கொண்டு கூட்டியபின் கல்வத்திலிட்டு அரைத்தல், மற்றும் சுத்தி செய்தல் தொடர்பான செய்திகளையும் அம்மருந்தைக் கட்டுசெய்வதற்கு எத்தனைநாள் சமாதியில் (புடத்தில்) வைக்கவேண்டும் என்ற குறிப்பையும் விளக்கமாகக் கூறுகிறது. மேலும், இதன் பயனைச் சுட்டும்போது பாசாணங்களுக்கு இது எவ்வகையில் மருந்தாகிறது என்பதையும், துருசை எவ்வகையிலெல்லாம் செந்தூரமாக மாற்றி மருத்துவத் திற்குப் பயன்படுத்தமுடியும் என்பதையும், யார் யாருக்கு இதனைத் தரவேண்டும் என்பதையும், இம் மருந்தை, தயாரிக்கவும் உட்கொள்ளவும் என்னென்ன பூசைகள் செய்யவேண்டும் எனவும் கூறி அமைகிறது.

4. ஹரிஓம் நன்றாக. ஆயிரத்திரு னூறுக்குச் சூத்திரம்.

5. காரமென்றார் பல்லியுட கல்லே காரங்
காரத்திற் கடுங்கார மெத்த வென்றாற்
சாரமது பூமிநாதம் எடுத்து வந்து
சாதகமாய் சிலத்தாலே யேழு சுத்தி
வாரமுடன் சிறுநீரி லேழு சுத்தி
மகஷ்த்தான வஷ்த்துவிலே யேழு சுத்தி
சீராகத் தேசியுட அமுரி நீரிற்
சிறப்பாக யேழுசுத்தி செய்து பாரே. 1

6. செந்தூரங் கொடுப்பதற்கு வகையைக் கேளு
செயப்படுத்த வீரமொடு பூரங் கூட்டி
மந்தமாஞ் சரக்குரண்டு பொடித்துக் கூட்ட
அப்பனே கூடவிட்டுக் கலந்து கொண்டு
தந்திரமாய் வெள்ளிக்கோர் ஒருமாப் போடு
தாரணியிற் பதினாறு வயசுப் பிள்ளை
நந்துலவும் ஆத்தாளைப் பூசித் தாக்கால்
நாட்டுவாள் வேதையிட்டு நடத்திப் பாரே. 12

7. அகஷ்த்தியர் பாதார விந்தமே கெதி.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. ஆ.நி.எண் 656(e). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன்(பதி.), அகத்தியர் வாத சூத்திரம் 12, பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக்

கோவை, முதல்பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் கர்மகாண்டம் (R.4502), அகத்தியர் 16 (R.4501) முதலான பல நூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 16

I. 1. **837**. 2. அ. R. 1868. ஆ. T.R. 1050. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 16. ஆ. Akattiyar cūttiram 16. இ. முப்பு வழலை பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 22x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறைபற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் முப்பு வழலை என்ற இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடாமல் முப்பு பற்றி நேரடியாக விளக்குகின்றது. முதலாவதாக, வாதி இந்த முப்பு முறையை அறிந்திருக்கவேண்டும். அப்போதுதான் வாதமும் வயித்தியமும் சித்தியாகும். ஆதிவித்தையான 'வயித்தியம்தான் பிரம்ம வித்தை யாகும். ஆத்மாவை யார் இரட்சிக்கின்றார்களோ அவரே சித்தன். வாதி செய்பவன் நீற்றும் முறையை அறிந்து உலோகங்களை மடியச்செய்யும் முப்புவை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். பிறகு உலோகங்களைச் சுத்தி செய்யும் வகையையும், குருமருந்து செய்யும் முறையையும் அறியவேண்டும். எல்லாவகையான முறைகளிலும் குரு மருந்தைச் சேர்த்தால் பற்பம், சுண்ணம், செந்தூரம், மற்றும் வாதம் ஆகியவை சித்தியாகும். அடுத்து பூநீறு எடுக்கும் முறை, பூமிநாதம், ஆதியுப்பு, சுண்ணம், அமுரி, சூடன், பூரம், வீரம் போன்ற பலவகை மருந்துகளின் இயல்புகளையும் இந்நூல் கூறுகின்றது.

4. வழலை பதினாறு.

5. பூரணமாய் திரண்டகன்னி ஆளே றாமல்
புதுமையாய்ச் சொல்லுகிறேன் முப்பூ வப்பா
காரணமா யவள்விலக்கு மூன்று நாளும்
கனமான பீங்கானில் சேர்த்து வாங்கி
வாரணமா யதையெடுத்து வைத்துக் கொண்டு
வளமாக அவனவளும் யமுரி வாங்கி
காரணமா மூன்றுனாள் ஆன பின்பு
கனமான சட்டியிலே விட்டுக் காச்சே. 1

6. பாரப்பா யிப்படியே செய்தா யானால்
பதிவாக நீயுமொரு சித்த னாவாய்
யேரப்பா முப்பூவின் விவரஞ் சொன்னேன்
எளிதாக வாதத்தின் சுருக்குஞ் சொன்னேன்
தாரப்பா செய்பாகம் கைபா கத்தை
தவறவிட்டு நூல்தனையே பொய்யென் பார்கள்
காரப்பா யேழைகளுக் கன்ன மிட்டு
கண்டுகொள்வாய் முப்பூவின் கருத்தான் முற்றே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. சொற்கள் பரிபாசையில் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 6215. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. முப்புபற்றிக் கூறும் சிறந்தநூலாக இந்நூல் அமைந்துள்ளது. மேலும், இதில் சொல்லப்படுகின்ற செய்திகள் எளிதில் புரிந்துகொள்ளமுடியாத பரிபாசை சொற்களால் எழுதப்பட்டுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 16

I. 1. **838.** 2. அ. R.7066. ஆ. T.R. 2853. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 16. ஆ. Akattiyar 16. இ. அகஷ்த்தியர் சுருக்கம் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ.,

சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக்கவுண்டன்பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 16x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 12; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்கான மூலிகைகளும், இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் முறைகளும் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. 2. இரசவாதம். 3. அகத்தியர் பூரணசூத்திரம் பதினாறு என்ற இந்நூலில் இரசவாதம் செய்வதற்கான மூலிகைகள் பற்றியும், இழிந்த உலோகங்களைப் பொன்னாக மாற்றும் நிலைகளும் விளக்கப்பட்டுள்ளன. தாம்பிரத்தைச் சிவக்கக் காய்ச்சி, பொற்சீந்தில் சாற்றில் தோய்த்து, ஆறவிட்டுப் பிறகு மூசையில் வைத்து உருக்க ஈயம்போல் விரைவில் உருகிவிடும். கொடுக்காப்புளி இலை இரண்டு படி எடுத்து அரைத்து அதைத் தேங்காய்ப்பாலில் கரைத்துச் சூரியப் புடத்தில் இரண்டு நாள் வைத்து அதில் தாம்பிரத்தை உருக்கிப் பத்துமுறை சாய்க்க வெள்ளையாக ஆகும். துரிசுக்கு உத்தாமணிப்பால் தளும்ப ஊற்றி வெயிலில் நன்றாகக் காயவைத்து உலர்த்தி, பின்பு உத்தாமணி இலைச்சாறு விட்டரைத்து வில்லை தட்டி நன்றாய்க் காயவைத்து அதே இலையை அரைத்துக் கவசம் கட்டி, அகலில் வைத்துச் சீலைமண் செய்து குக்குடப் புடம்போட, செந்தூரம் கிடைக்கும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. அகஷ்த்தியர் சுருக்கம் பதினாறு.

5. **ஆதியென்ற மூலகண பதியின் பாதம்**
ஆடினதோர் சூஷ்த்திரம் பதினா றப்பா
தேடியே யண்டபிண்ட மெல்லாஞ் சேர்த்துச்
சீராகப் பாடியதோ ரென்னூ லப்பா

பாடினேன் பூரணசூஷ்த் திரத்துக் காகப்
பரிவாகப் பாடிவிட்டேன் சூஷ்த்திர னூலை
நாடியே நந்தீசர் சொன்ன வாக்கியம்
நன்றாக மூலகண பதியே காப்பு. 1

6. காணவே நூற்றிலே மெய்ய தாகும்
கருவதுதன் அம்பதிலே மெய்ய தாகும்
பூணவே யிந்தநூல் துறைகாண் பிக்கும்
பூட்டியதோர் பூட்டெல்லா மஞ்சில் காணும்
தோணவே கருக்குருவும் வழித்துறை யுமாகு
தொல்லுலகில் வேதையிது வழியோ டேறும்
பேணவே பதினாறு யிதுவே யாகும்
பிலமாகும் அகஷ்த்தீசர் வாக்கியந்தான் முற்றே. 16

7. அகஷ்த்தீசர் 16 முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 280(u), R. 193(c), R. 9227, R. 7878. 2. சி.ம.மை.ஆ.நி. எண் 920(a), த.ச.ம.நூ.எண். 432(o). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பூரண சூத்திரம் 216 என்ற நூலின் சுருக்கமாக இந்நூல் திகழ்கிறது.

அகத்தியர் சூத்திரம் 16

I. 1. **839.** 2. அ. R. 7088. ஆ. T.R. 2855. இ. —. ஈ. — 3. அ. தட்சிணாமூர்த்தி சூத்திரம் 16. ஆ. Taṭciṇāmūrtti cūttiram 16. இ. தெச்சணாமூர்த்தி பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 12. 5. 13x4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 23; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக மார்க்கத்தைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 16 என்ற இந்நூலில் யோக மார்க்கத்தின் கூறுகளான பிரணாயாமம், மூன்றெழுத்தின் பெருமை, ஐந்தெழுத்தின் பெருமை போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன. பிரணாயாமம் என்பது சுவாசப் பயிற்சியாகும். உள்ளே இழுக்கும் உயிர்க்காற்றான பிராணவாயு எனப்படும் சுவாசத்தை உள்ளுக்கு நிறுத்துதல், வெளியிடுதல் ஆகிய காற்று நடமாட்டத்தை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு ஒழுங்குமுறைப் படுத்தும் பயிற்சியாகும். இப்பயிற்சி செய்யும்போது மாயை, பொய், கோபம் மூன்றையும் தள்ளவேண்டும். ஐந்தெழுத்து மந்திரமான 'நமசிவய' என்ற எழுத்தை இடைவிடாது சிந்தித்தல் வேண்டும். ஓம் என்னும் பிரணவத்தை அறிந்து உச்சரிப்பதன் மூலம் மேன்மைமிக்க முக்தியும், சித்தியும் கிடைக்கும் எனவும் இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக. தெச்சணாமூர்த்தி பதினாறு.

ஆகமங்களு மாகம சாஷ்த்திரங் காரணங்களுங்
காண்கிலுங் காணொண்ணாப் பூரணந்தரும்
பொங்கொளி முன்மத வாரணந் தன்னை வாழ்த்தி
வணங்குவாம்.

5. பூரணமாய் நின்றதொரு அய்யர் பாதம்
போற்றியே யென்னாளும் புவியின் மீது
காரணமாய் நின்றதொரு ஆயி தன்னை
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாரு
ஆரணமா மாகாசம் பூமி லோகம்
அடுக்கடுக்காய் நின்றதொரு அறையைக் காண
வாரணத்தின் முகத்தோன்றன் பாதம் தன்னை
மனதில்வைத்து யென்னாளும் மகிழ்ந்திட் டேனே. 1

6. பூசிப்பாய் தீபமொடு தூபங் காட்டி
போக்கோடே யெட்டெழுத்தா லர்ச்சினை செய்து
நேசிப்பா யுவச்சாரம் அனேகங் கோடி
நெஷ்ட்டையுள்ள தாய்ப்பதத்தை நினைவில் வைத்து
வாசிப்பாய் தோத்திரங்கள் கோடா கோடி
மனோன்மணியே மாதாவே மலையின் கண்ணே

யோசிப்பாய் மந்திரங்கள் அனேகங் கோடி
யுத்தமியாள் பதம்பூசை யுகந்த தானால்
ஆசிப்பாய் அதின்பிறகு ஆத்தா ளாத்தாள்
ஆனந்த பூரணத்தின் அருள்தான் முற்றே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 280(q), R. 254(r). 2. சி.ம.மை.ஆ.நி. எண் 342(d), 378(b), 474(c), 751(r), த.ச.ம.நூ.எண் 700(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், 'அகத்தியர் ஞானம் 17' என்ற பெயரிலும் வழங்கப்படுகிறது. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையச் சுவடியில், 'அகத்தியர் சுருக்கம் 16' என்ற பெயரில் இந்நூல் காணப்படுகிறது.

அகத்தியர் சூத்திரம் 20

I. 1. 840. 2. அ. R. 1868(a). ஆ. T.R. 1050. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 20. ஆ. Akattiyar cūttiram 20. இ. அகத்திய மாமுனிவருடைய வியாதி 205க்கும் சோதிச்சுச் செய்த லோக மாரணச் சூத்திரம் 20. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனிச்சாமி கவுண்டர், புளியம்பட்டி, பழனி தாலுக்கா, மதுரை மாவட்டம். 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1+4. 5. 32x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 21 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் இருபது என்ற இந்நூல் நவலோக மாரணம் பற்றிப் பேசுகின்றது. மேலும் வயித்தியம் 205க்கு மருத்துவமுறைகளும், இரும்பு, தாரம், கெந்தி, வெள்ளி, வங்கம், வெடியுப்பு, வெள்ளை, சீனம், சூதம், துருசு, வெள்ளை போன்றவற்றையும் கூறுகின்றது. மருத்துவ முறைகளாகக் கூறுவது; ஏலம், கடுக்காய், கஸ்தூரி, மஞ்சள், சந்தனம் இவற்றை வகைக்குப் பலம் எடுத்து அரைத்துக் காச்சவேண்டும். தயில பதமாக வந்தவுடன் இறக்கி வைத்து ஆறிய தயிலத்தைத் தலையில் தேய்த்து முழுகி வந்தால் சகலபிணிகளும் போய்விடும் என்றும், மேலும், சங்கம்வேர், மிளகு, கருஞ்சீரகம், ஏலம், மாசிக்காய் இவற்றை வகைக்குப் பலம் வீதம் கூட்டி எண்ணெயில் அரைத்து மெழுகு பதமாகக் காய்ச்சினால் செம்முள்ளித் தயிலம் கிடைக்கும் என்றும் இதுவும் சகல விதமான பிணிகளுக்கும் தலைமுழுகி வரலாம் என்று கூறுகிறது.

4. ஹரிஓம். அகத்திய மாமுனிவருடைய வியாதி 205க்குச் சோதிச்சு செய்த லோக மாரண சூத்திரம் 20.

5. கேளப்பா நவலோக மார ணந்தான்
கெடியான வயித்தியம் யிருநூத் தஞ்சு
தேளப்பா கொட்டுதல்போ லிந்தச் சூட்சம்
சூத்திரஞ் சொல்லிவிட்டேன் இரும்புக்குத் தாரங் கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத் துக்கு
மால்தேவி வெடியுப்பு வெள்ளை சீனம்
சூளப்பா வெள்ளிக்குக் கெந்தி வங்கஞ்
சூதமொடு துருசுவெள்ளை சார முற்றே. 1

6. மஞ்சளுள் இருவகையும் பலவிதங் கூட்டி
பாங்குடனே அரைத்து எண்ணெயில் சேத்து
தஞ்சமுடன் எண்ணெய்தலைக் காய்ச்சி மூழ்கச்
சகலபிணி தீர்ந்துவிடுஞ் சஞ்சீவி யாமே. 20

நாமப்பா பற்பமுதல் தூலத் தாக்கு
நன்றாகக் கருக்கிடையின் பாகஞ் சொன்னேன்
நாமப்பா வெளிதோணச் சொன்னோம் பாரு
நலமான யிருபத்தி யொன்று முற்றே. 21

7. அகத்தியர் இருநூறுள் சுகலோக மாரணம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 7037. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பலவிதமான தயில வகைகள் பற்றிக் கூறும் சிறந்த நூலாக அமைந்துள்ளது.

அகத்தியர் சூத்திரம் 25

I. 1. **841.** 2. அ. R.4216. ஆ. T.R.1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 25. ஆ. Akattiyar cūttiram 25. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-1953.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 8. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 15; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 27 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாத முறைகளைப் பற்றி எடுத்துரைக்கும் நூல். 2. இரசவாதம். 3. அகத்தியர் சூத்திரம் 25 என்ற இந் நூல் இரசவாதம் தொடர்பான பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது. அகத்தியர், புலத்தியரிடம் கூறுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. நூலிற்கு 25 பாடல்கள் என்று இருப்பினும் 27 பாடல்கள் காணப்படுகின்றன. ஞானம், யோக மார்க்கம் பற்றிய செய்திகள், மகாரம் முப்பொருளாய் நிற்கும் சூட்சம், மவுனம் மேற்கொள்ளுதல், வேதாந்தச் சுழிமுனையின் நாட்டம் வேண்டி நிற்றல், புருவத்தின் மையத்தில் எண்ணத்தை

(கருத்தை) நிறுத்துதல், சிவசத்தி சூட்சம் ஆகிய பல்வேறு செய்திகள் இந்நூலில் விரிவாகப் பேசப்படுகின்றன.

4. முச்சுடராய் முப்பொருளாய் முன்னான்கு முன்னின்று
இச்சையுட னெட்டுமிரண்டு மேகமா - யச்சருவ
மாகிவெளி யொளியா யாதியந்தத் துட்பொருளாய்
யேகமுன துடையை யே.

5. ஏறுமது மூலாதா ரத்தில் நின்று
என்மகனே புலத்தியனே இசைந்து கேளு
மாறுமது யிடைபின்னா யிரண்டு மாறி
மகாரமது முப்பொருளாய் நின்ற சூட்சம்
வேறுதுறை யேதுமில்லை மவுனத் தாட்டு
வேதாந்தச் சுழிமுனையின் னாட்டத் தாலே
தேறுமப்பா கற்பமெல்லா மவுனத் தாலே
செகச்சாலச் சித்தரெல்லாம் மவுனந் தானே. 1

6. அனுப்பினபின் னூலையீய்ந்தோன் மனது நொந்தால்
அழிந்திடுவாய் நூலொன்றும் பலியா தப்பா
நினைப்பெல்லாம் புருவமய்யங் காணு மங்கே
நில்லடா சதாருத்த மஞ்ச மென்று
செனித்தவிடம் அழிந்தவிடம் ரெண்டு மங்கே
தெளிந்துகொள்ளும் சிவசத்தி சூட்ச மெங்கே
அனித்தமாய்ப் போகாதே சதாருத்த முன்னு
ஆதியாஞ் சுழிமுனையி லறிவு முற்றே. 27

7. தட்சிணாமூர்த்தி யருளிச்செய்த சூத்திரம் இருபத்தைந்து முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன.
10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் யோகம் 16 (R.4214(a)), அகத்தியர் கலைஞானம் 12(R.4214) முதலான நூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 30

I. 1. **842.** 2. அ. R. 6881. ஆ. T.R.2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūttiram. இ. அகஸ்தியர் சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II அ. 1. உட்கட்டு. 2. தமிழ் 3. தெளிவின்மை. 4. 6. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று 12. 2; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மூலிகைகள், தங்கம் விளையும் இடங்களைப் பற்றிக் கூறும்நூல். 2. மருத்துவம், பொது. 3. அகத்தியர் சூத்திரம் என்ற இந்நூலில் கிளிமூக்கு மாங்காய் மலையில் மூலிகைகள் இருக்குமிடம், முப்பு தயாரிப்பதற்கான பூமிநாதம் விளையும் பூமி, தங்கம் விளையும் பூமி ஆகிய பகுதிகள் அடங்கியுள்ளன. கிளிமூக்கு மாங்காய் மலையின் உச்சியில் ஒருசுனை ஒன்று உண்டு. அச்சுனைக்கு அருகில் கிணறு ஒன்றுண்டு. அக்கிணற்றின் அருகில் உள்ள இடத்தில் தயிலம் நிறைந்திருக்கும். அத்தயிலத்தை இரும்பு, செம்பு முதலான எட்டு வகை உலோகத்தில் தடவினால் சுத்தத் தங்கமாக ஆகிவிடும் என்று இந்நூல் கூறுகிறது. மேலும் மூலிகைகள் பற்றிக் கூறும்போது குமரிமலைக்கு மேற்கு நோக்கிச் சென்றால் மருந்து மலை ஒன்று வரும். அம்மருந்து மலையின் உச்சிக்குச் சென்றால், சுனை ஒன்று இருக்கும். அதற்குப் பக்கத்தில் மூலிகைச் செடிகள் நிறைய வளர்ந்திருக்கும். பூசைகள் செய்து அம்மூலிகைச் செடிகளைக் கொண்டு வர வேண்டும் என்றும் இவை போல் பல செய்திகளை இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் அகஸ்தியர் சூத்திரம்.

5. **ஆய்ந்திட்ட சொர்ப்பனத்தில் நடேச மூர்த்தி**
ஆண்டியொரு சன்னாசி அயர்ந்த போது

உயர்ந்திட்ட உங்கள்பக்கல் வந்த போது
உன்மனதுக் கிலேசத்தை நீக்கு வான்பார்
துயர்ந்திட்ட சொர்ப்பனத்தில் சொல்லிப் போட்டு
திருமூலர் தனையழைத்துக் கடுகநீ போடு
வியர்ந்திட்ட விக்கிரகம் வார்ப்ப தற்கு
விரைந்துநீ வார்த்திடென்றே சொன்னார் காணே. 335

6. இருக்கிறதோர் மூலிகையால் சூதங் கட்டும்
யிசைந்துநின்ற வாசனைக்கு பாஷாணஞ் சாகும்
செருக்கிறதோர் உபரசங்கள் சத்தை யாகும்
தின்றாக்கால் தேகமது பொன்போ லாகும்
மருக்கிறதோ ரிதனாலே கட்டுஞ் சூதம்
வாய்த்திறக்கப் போகாது மகத்தூல மெத்த
நெருக்கிறதோர் மூலிகைதான் உலகிற் கேயாம்
பேறான சித்தர்க்கும் எய்தும் பாரே. 364

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், ல-ள வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலில் கூறப்படும் தங்கம் விளையும் பூமி பற்றிய செய்திகள் ஆய்வுக்குரியன.

அகத்தியர் சூத்திரம் 31

I. 1. **843.** 2. அ. R. 6484. ஆ. T.R.2707. இ. —. ஈ. — 3. அ. அகத்தியர் சூத்திரம் 31. ஆ. Akattiyar cūttiram 31. இ. அகஸ்தியர் சூத்திரம் முப்பத்தொன்று. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ் 3. தெளிவு. 4. 1. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இரு

பக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. நடு, இறுதி. 17. 2 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பூசை முறைகளைப் பற்றிக் கூறும் நூல். 2. தத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் முப்பத்தொன்று என்ற இந்நூலில் உண்மையான குருபரனுக்கு பூசை செய்ய வேண்டும். வித்தை கற்றுக் கொடுத்தவரை நித்தம் போற்ற வேண்டும். ஞானம் கற்றுக் கொடுத்தவர், கருவை விளக்கிச் சொன்னவர், இவர்களை எல்லாம் மதித்து நடக்க வேண்டும் என்று கூறி, மதிக்காமல் புத்தி கெட்டுப் போய்விடக் கூடாது, பொய் பேசக்கூடாது என்று அறிவுரைகள் கூறப்படுகின்றன. நிறைவான பூசையைக் கடவுளுக்குச் செய்ய வேண்டும், அப்போதுதான் ஞானம் கிடைக்கும். ஆசையை அறவே ஒழிக்க வேண்டும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. ஹரிஓம் அகஸ்தியர் சூத்திரம் முப்பத்தொன்று.

5. மெய்யான குருபரனை பூசை பண்ணு
வித்தைதந்த குருபரனை நித்தம் போற்று
கைய்யான மனத்தாரை ஞானஞ் சொல்வேன்
காரணமாய்க் குருபரத்தை கருதிப் பாரு
வைய்யமெல்லாம் கொண்டாட கருவைச் சொல்வேன்
மதிகெட்டு விள்ளாதே மகிழ்ந்தி டாதே
பொய்பே சாதேஉப தேசங் குருவை
போற்றிப் புகழார் வறுசுருங் காதே. 1

6. பூசையென்ன மானிதமே பூசை யாகும்
புலத்.... தெளிக் கண்டா லதுவே போகும்
ஆசையென்ன அத்தயிடங் கடந்த ஞானம்
அம்பரத்தைச் சேருவது ஆசை யாமே
ஆசையது வாசியத்து மூலத் தாணி
உயர்ந்துநின்ற சில ....

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலில் உள்ள பாடல்கள் தத்துவ விளக்கமாக உள்ளன. நூலின் தலைப்பு அகத்தியர் சூத்திரம் 31 என்று இருந்தாலும் இச்சுவடிக்கட்டில் ஓர் இதழ் மட்டும் தான் இந்நூலைப் பற்றியதாக உள்ளது. மற்ற 12 இதழ்கள் வேறு நூல்களின் கலப்பு இதழ்களாக உள்ளன. மேலும் சுவடி ஒடிந்தும் சிதைந்தும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அகத்தியர் சூத்திரம் 36

I. 1. **844**. 2. அ. R. 4505(c). ஆ. T.R.1988. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரங்கி வைப்பு. ஆ. Akattiyar parañki vaippu. இ. அகஷ்த்தியரருளிச்செய்த பரங்கி வைப்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி S. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ் 3. தெளிவு. 4. 7. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 13; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 36 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாத முறைகளையும், மருந்துகள் தயாரிப்பையும் கூறும் நூல். 2. இரசவாதம், மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 36 என்ற இந்நூலுக்கு அகத்தியர் பரங்கி வைப்பு என்ற பெயரும் உள்ளது என்பதைச் சுவடியில் உள்ள நூற்தலைப்பின் மூலம் அறியமுடிகிறது. இந்நூல் பொரிகாரம், கல்சுண்ணம், கல்லுப்பு, பூரம், சூடன், வெடியுப்பு, உவருப்பு, வீரம், சவ்வீரம், வெள்ளை, கருவங்கம் முதலான இரசாயனப் பொருள்களின் தயாரிப்பினையும், அவற்றின் குணங்களையும் அவற்றினைக் கொண்டு மாற்றுப் பொருள்களைத் தயாரிக்கும் முறைகளையும் கூறுகிறது. ஏரெண்டைத் தயிலம், ஏரெண்டை எண்ணெய், பரங்கி இலைச் சாறு, கற்பூரவெள்ளிச் சாறு ஆகியவற்றின் தயாரிப்பு முறை மற்றும் பயன்பாடுகள் பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

4. ஹரிஓம் நன்றாக. அகஷ்த்திய சுவாமியரருளிய பரங்கி வைப்பு.

5. பூரணமாய் வந்தசர சோதி பாதம்
புகழான வாக்குடைய வாணி பாதம்
காரணமாய் வந்ததொரு ரிஷிகள் பாதம்
கயிலாசத் திருந்தருளுங் கடவுள் பாதம்
மாரணமாய் பரங்கிவைத்த சரக்கின் போக்கு
அய்யாறு ரெண்டையுந்தான் சுருக்கிச் சொல்வேன்
வாரணமாய் முகத்தானை இறைஞ்சி நித்தம்
வணங்கியே அன்பதுக்குள் வகுக்கு றேனே. 1

6. போமென்ற யிந்துப்பின் பிறவி கேளு
புகழான கரியுப்பு பொடித்துக் கொண்டு
தாமென்ற பானைக்குள் முக்க விட்டுத்
தருவான மடல்துத்துந் தன்னைக் கேளு
வாமென்ற சீனமது பலந்தா னொன்று
வர்ணளயுவ ருப்புவைப்புக் குருவாச் செய்ய
நீமென்ற துரையுமொரு கோடா கோடி
நிலைத்துதென்றால் கட்டினமோ கோடாகோடி
போமே. 36

7. வேதமுனி பாதார விந்தமே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் இந்நூலுடன், அகத்தியர் வழலை 30 (R.4503), அகத்தியர் 16 (R.4501), அகத்தியர் கர்மகாண்டம் (R.4502) முதலான நூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 48

I. 1. 845. 2. அ. R. 7054. ஆ. T.R.2848. இ. —. ஈ. — 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūttiram. இ. அகஷ்த்தியர் நடன சூத்திரம் நாற்பத்தி யெட்டு. 4. —.

5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி, அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ் 3. ஓரளவு தெளிவு. 4. 12. 5. 19x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 24; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், வாதநோய்கள், கர்ப்ப நோய்கள், கர்ப்பமுண்டாக மருந்துகள், முப்பு, அரிதாரம், பாசாணம், நாகம் முதலான மருந்துச் சரக்குகள் கட்டும் விதமும் அவற்றை நோய்களின் தன்மை அறிந்து பயன்படுத்தும் முறையும் கூறப்பட்டுள்ளன. செம்பு, துரிசு, மனோசிலை முதலான சரக்குகளைச் சுத்தி செய்யும் முறைகள், தாம்பிர பற்பம், இலிங்க செந்தூரம், பற்ப செந்தூரம் போன்றவை தயாரிக்கப்படும் முறையும் அவை அரையாப்பு, மேகப்புண் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் முறைகளும் கூறப்படுகின்றன. கர்ப்பம் தரிப்பதற்கான மருந்தாக அத்தி விதையைப் பசும்பாலில் காய்ச்சி மண்டல அரைக்காய் அளவு பெண்கள் சாப்பிட்டு வந்தால் கர்ப்பம் தரிக்கும். மேகப்புண் குணமாக: எட்டிப் பழம் இரண்டு கொண்டு வந்து நல்லெண்ணெய்யில் வறுத்து அல்லது நன்றாய் வேகவைத்து, பஞ்சில் துவட்டி மேகப் புண்ணில் போட, புண் ஆறிப்போகும், மேலும் நீர்க்கடுப்பு முதலிய பல நோய்களைக் குணமாக்கும் மருந்துகளையும் இந்நூல் கூறுகிறது.

4. அகஷ்த்தியர் நடனசூத்திரம் நாற்பத்தி யெட்டு.

5. நாடியதோர் பூரணமாய் வேதாந் தத்தில்
நாதாந்த திருநடன சூத்திரத்தைப் பாட
ஆடியதோர் கணபதியுங் கந்தன் காப்பு
அருள்பெருகுஞ் சித்தர்முதல் ரிசிகள் காப்பு
கூடியதோர் ஞானிபரை வாலை யாலே
கூறுவேன் அகாரமுடி சீரீங்கா ரத்தில்

பாடியதோர் பலனூல்தான் பொய்யாம் போக
பாலாகும் எந்தனுட நூல்தா னாமே. 1

6. தானென்ற லிங்கச்செந் தூரஞ் சொல்வேன்
தாம்பூரப்பொடி வெண்கருவா லரைத்துப் பூசி
மானென்ற தேன்வழகில் முலைப்பா லாலே
மடல்துத்தம் எருக்கம்பால் தாக்கு மேலே
நானென்ற சாம்பிராணி ....
நால்சீலை மண்செய்து காடைப்புடத்தில் மூன்று
வேனென்ற சாதிலிங்கம் வெகுநோய்க் காகும்
விளங்குகின்ற சூஷ்த்திரம்நாற் பத்தெட்டு முற்றே. 48

7. தெச்சணாமூர்த்தி துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 267(f), R. 3612, R. 3625, R. 4391, R. 6071, D. 1900, R. 10078(a), R. 10534. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 238(f), 305(d), 380(g), 404(c), 430(c), 558, 996(b), 1009(b), 1347(b), உ.த.நி.எண் 534:864. ஆ.நி.எண் 657. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் காரண சூத்திரம் 48,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, இரண்டாம் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் குருநாடி (R.7053), அகத்தியர் பலதிரட்டு (R.7055) முதலிய நூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 48

I. 1. **846.** 2. அ. R. 6071. ஆ. T.R. 2546. இ. —. ஈ. — 3. அ. தட்சிணாமூர்த்தி பூரணம் 48. ஆ. Taṭciṇāmūrtti pūraṇam 48. இ. தெட்சிணாமூர்த்தி பூரணத்தில் சூஸ்திரம் 48. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் 1956-57-இல் அன்பளிப்புச் செய்தது. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ் 3. ஓரளவு தெளிவு. 4. 16. 5. 27x3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 32; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் தோன்றும் பல நோய்களுக்குரிய மருந்துகளின் செய்முறை கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 844 போன்றது.

4. ஹரிஓம்.

5. நாடியதோர் பூரணமாய் வேதாந் தத்தில்
நாதாந்த திருநடன சூத்திரத்தைப் பாட
ஆடியதோர் கணபதியுங் கந்தன் காப்பு
அருள்பெருகுஞ் சித்தர்முதல் ரிசிகள் காப்பு
கூடியதோர் ஞானிபரை வாலை யாலே
கூறுவேன் அகாரமுடி ஸ்ரீவுங் காரத்தில்
பாடியதோர் பலனூல்தான் பொய்யாய்ப் போகப்
பாலாகு மெந்தனுட நூல்தா னாமே. 1

6. தானென்ற லிங்கச்செந் தூரஞ் சொல்வேன்
தாம்பூரப் பொடியைவெண்கரு வாலரைத்துப் பூசி
மானென்ற தேன்வழகில் முலைப்பா லாலே
மடல்துத்தம் எருக்கம்பால் லதற்கு மேலே
நானென்ற சாம்பிராணி ....
நால்சீலை மண்செய்து காடை மூன்று
வேனென்ற சாதிலிங்கம் வெகுநோய்க் காகும்
விளங்குகின்ற சூஷ்(த்)திரம்நாற் பத்தெட்டு முற்றே. 48

7. பரதேவதா சகாயம் தெட்சணாமூர்த்தி கிடாட்சம் உண்டாக வேணும் குருபாதம் துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியமைப்பைப் பெற்றுள்ளன. ற/ர வேறுபாடில்லை. பாட பேதங்கள் மிகுதி. 10. இந்நூல் தட்சிணாமூர்த்தி பூரணம் என்றும், அகத்தியர் பூரணம் என்றும்

பெயர்பெறும். இதைப் போன்ற பிற நூல்கள் 'அகத்தியர் சூத்திரம் 48' என அழைக்கப்பட்டதற்கு இணங்க இந்நூலும் அவ்வாறே பெயரிடப்பெற்றது. 11. இல்லை.

IV. 1. R. 267(f), R. 3612, R. 3725, R. 4391, D. 1900, R. 10078(a), R. 10534. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 238(f), 305(d), 380(g), 404(c), 430(c), 558, 996(b), 1009(b), 1347(b), உ.த.நி.எண் 534:864, ஆ.நி.எண் 657. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் காரண சூத்திரம் 48,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, இரண்டாம் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டிலுள்ள பிற நூல்கள் வருமாறு: 1. உரோம ரிஷிவைத்தியம் (R. 6068), 2. உரோம ரிஷி சூத்திரம் (R. 6069), 3. அகத்தியர் வழலை (R. 6070), 4. அகத்தியர் சூத்திரம் 48 (R. 6072), 5. தட்சிணாமூர்த்தி சூத்திரம் 80 (R. 6073), 6. அகத்தியர் வாதம் 111 (R. 6074), 7. அகத்தியர் பின் 80 (R. 6075).

அகத்தியர் சூத்திரம் 50

I. 1. **847.** 2. அ. R. 4500. ஆ. T.R. 1988. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் 50. ஆ. Akattiyar 50. இ. அகஷ்த்தியர் அன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி S. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ் 3. தெளிவு. 4. 9. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 17; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 50 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளையும் அவற்றின் பயன்களையும் கூறும் நூல்.

2. மருத்துவம். 3. சூலை, வாதம், மேகநோய், கண்டமாலை, சிரங்கு, அரையாப்பு, சரும நோய்கள் முதலிய பல்வேறு நோய்களுக்குப் பற்பம், எண்ணெய், இலேகியம், தயிலம் போன்ற பலவகை மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் முறையையும், பயன்படுத்தப்படும் முறையையும் இந்நூல் கூறுகிறது. இந்நூலிற்கு இதனால் வைத்திய சூத்திரம் 50 என்ற பெயரும் உண்டு எனத் தெரிகிறது. செந்தூரம், சவுக்காரம், வழலை, பூநீறு ஆகியவற்றின்மூலம் மருந்துகள் தயாரிக்கப்படும் முறையையும் கூறுகின்றது. மேகநோய் தீருவதற்கு வெள்ளீயம், பற்பம், வல்லாரை, வீரம், குமரிச்சாறு இவற்றைச் சேர்த்து அரைத்து வில்லையாகச் செய்து, புடம் போட்டு அதன்மூலம் உண்டாகும் பற்பத்தைப் பயன்படுத்தினால் அந்நோய் குணமாகும். இவ்வாறு பல மருந்து முறைகள் இந்நூலில் கூறப்படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. அகஷ்த்தியர் அன்பது.

5. நாடியதோர் அகண்டபரி பூரணமாய் நின்ற
நாதமுத்துக் கிணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரும் யென்னைப் பெத்த
ஆத்தாளும் நாவுதனில் குடிகொண் டேதான்
பாடியதோர் வயித்தியந்தான் யன்பதுதான் சொல்வேன்
பண்பான புலத்தியனே யின்னூ லோடே
தேடியதோர் பூரணசூஷ்த் திரத்தில் நன்றாய்
தீச்சையொடு கருக்குருவுந் திரமி தாமே. 1

6. கண்டாக்கால் வாதமெல்லா மடிகள் போற்றுங்
கருவான சவுக்கார மகிமை தன்னை
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கொ டாதே
வேதாந்த ஞானியென்றால் நிதானம் யாறு
தொண்டுசெயிது பதினாறு வருசங் காத்தால்
சோதித்துப் பின்புஅவர்க் கீய்வா யப்பா
சண்டமா ருதம்போலே வெளிய தாகச்
சாத்தினதோர் வயித்தியமன் பதுதான் முத்தே. 50

7. சிவமயம். தெச்சணாமூர்த்தி துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 945(d), R. 18672, R. 3672, R. 3702, R. 3731, R. 4694, R. 4716, R. 7877, D. 1898. D. 1899 2. ஆ.நி. எண் 495(f), உ.த.நி.எண் 487:744. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சூத்திரம் 36 (R. 4505 (a)), அகத்தியர் 16 (R. 4501), அகத்தியர் கர்மகாண்டம் (R. 4502) முதலான நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் சூத்திரம் 50

I. 1. **848.** 2. அ. R. 1867. ஆ. T.R. 1050. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 50. ஆ. Akattiyar cūttiram 50. இ. தட்சிணாமூர்த்தி அருளிச் செய்த நீலகண்ட வாலை 50. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனிச்சாமி கவுண்டர், புளியம்பட்டி, பழனி தாலுக்கா, மதுரை மாவட்டம். 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ் 3. தெளிவு. 4. 11. 5. 33x3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 22; இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 50 பாடல்கள்.

ஆ. —.

III. கரப்பான், கண்டமாலை, வாதம், கர்ப்பநோய் போன்றவற்றிற்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 847 போன்றது.

4. ஹரிஓம் தட்சிணாமூர்த்தி அருளிச் செய்த நீலகண்ட வாலை.

5. **நாடியதோர் அகண்டபரி பூரணமாய் நின்ற**
நாதமுத்துக் கிணேசனொடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனாரும் யென்னைப் பெத்த
ஆத்தாளும் நாவுதனில் குடிகொண் டேதான்
பாடியதோர் வயித்தியந்தான் யன்பதுதான் சொல்வேன்
பண்பான புலத்தியனே யின்னூ லோடே

தேடியதோர் பூரணசூஸ் திரத்தில் நன்றாய்
தீச்சையொடு கருக்குருவுந் திரமி தாமே. 1

6. கண்டாக்கால் வாதமெல்லா கீழே போட்டும்
கருவான சவுக்கார மகிமை தன்னில்
விண்டாக்கால் நசித்திடுவாய் நூல்கொ டாதே
வேதாந்த ஞானியென்றால் ஈயான் பாரும்
தொண்டுசெயிது பதினாறு வருசங் காத்தால்
சோதித்துப் பின்வீவார் சொன்னேன் சொன்னேன்
சண்டமா ருதம்போலே வெளிய தாகச்
சாத்தினதோர் வயித்தியம் ஐம்பது முற்றே. 50

7. ஐம்பது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. பேச்சு வழக்கும், வடமொழிச் சொற்களும் கலந்து எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1898, D. 1899, R. 373, R. 945(d), R. 3672, R. 4694, R. 4716, R. 7877. R. 4500. 2. ஆ.நி. எண் 495(i), உ.த.நி. எண் 487:744. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலில் சிறப்பாக ஒரே மருந்தில் வாயு, அரையாப்பு, மேகம், வெட்டை போன்ற பல நோய்களைக் குணமாக்கும் செந்தூரங்களும் கற்பமும் சொல்லப்படுகின்றன. இந்நூல் திருநடன சூத்திரம் போல் உள்ளது.

அகத்தியர் சூத்திரம் 69

I. 1. **849.** 2. அ. R. 6267. ஆ. T.R. 2649. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 69. ஆ. Akattiyar cūttiram 69. இ. அகத்தியர் வயித்தியத்தில் இருப்பு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்புச் செய்த சுவடி. 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 4.9. 5. 29x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை.

9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 18; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. முதல் 5 ஏடுகள் வேறிடத்தில் உள்ளன போலும். 16. குறை. 17. 25 ஆம் பாடல் முதல் 69 ஆம் பாடல் வரை.

ஆ. —.

III. 1. பலவகை மருந்துகள் தயாரிக்கும் முறைகளும் நோய்களும் இந்நூலில் குறிப்பிடப்படுகின்றன. 2. மருத்துவம். 3. குன்மம், காசம், மந்தாரம், வெள்ளைக் குன்மம், பாண்டுரோகம் போன்ற சரும நோய்கள் நீங்குவதற்கான மருந்துகளும், அனுபானங்களும் இந்நூலில் கூறப்படுகின்றன. இந்நூலின் பிற்பகுதியில், முயலகன் கிராணி, சன்னி, சுரம், சூலை, நீரிழிவு விசபாண்டு போன்ற பலவகை உள்நோய்களுக்குரிய மருந்துகளும் அவை செய்முறைகளும் விளக்கப்படுகின்றன. இம்மருந்துகளை இங்கே கூறப்பட்டுள்ள முறைப்படிச் செய்து, பயன்படுத்தினால் இந்நோய்கள் மீண்டும் ஏற்படாதென்றும், அது உண்மையே என உறுதியளித்தும் இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

4. ரவிதனிற் போடப் பற்ப மாமே. 24.

5. பற்(ப்)ப மிந்தப் பற்(ப்)பமிது அரோசிகமும் மில்லை(ப்)
பற்(ப்)பமிது சொற்(ப்)பமல்ல விதுசுகமும் மெத்த
....
மெத்த அனுப்பான மருந்து வுண்ணக்
காசி யெட்டு மகற்றவும்மிது துடங்கு குன்மம்
...... மெட்டும் போலக் கிசைமேல் (க்)
வீசை சிதைமப் பொருந்தூ மந்தார காசரோகம்
மாயத்தொரு காதமகலும் வண்மை கேளே. 25

6. வாங்கியே யுமைபதத்தைப் பூசைப் பண்ணி
மஞ்சாடி அனுப்பானத்திலுன்ன
வீங்கு பவுத்திரனேயை குறைநோய்
வெள்ளைக் குஷ்ட்ட மீளாதசத்திக் குன்மம் ரேத்த காசம்
னீங்காத விஷபாகம் பாண்டு ரோகம்
னீரழிவு சூலைசுரம் சன்னி தோஷம்
தாங்காத வளப்பு முயலகன் கிராணி
சகலரோக மும்போம் சத்தியந் தானே. 69

7. —.

8. மூலம். 9. பிழைகள் மலிந்த நடை. சாதாரண நடை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றாலும், உதிரி ஏடுகளால் ஆனதாகக் கொள்ளலாம். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், 6வது ஓலை எண் பெற்றுத் தொடங்குகிறது. சுவடியின் தொடர் ஓலை எண் 146 முதல் 154 வரை இந்நூற்பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. இதனால் இதற்கு முன்பிருந்த ஐந்தாம் ஓலையின், 24ஆம்பாடலின் இறுதி அடி 6ஆம் ஓலையில் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து 25ஆம் பாடல் முதல் 69 ஆம் பாடல் வரை முடிவதால், முதல் 24 பாடல்கள் பற்றி விவரம் தெரிந்திலது. அதுவும் அகத்தியர் வைத்தியம் என்ற பெயரிலுள்ள நூலாகலாம்.

அகத்தியர் சூத்திரம் அவிழ்தசாரம் 80

I. 1. **850.** 2. அ. R. 6073. ஆ. T.R. 2546. இ. —. ஈ. — 3. அ. தட்சிணாமூர்த்தி சூத்திரம் 80. ஆ. Taṭciṇā mūrtti cūttiram 80. இ. தெஷ்ச்சணாமூர்த்தி 600க்கு சூஷ்திரம் 60 வயித்தியம் 80. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் 1956-57இல் அன்பளிப்புச் செய்த சுவடி. 10. கி.பி. 1957.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 10. 5. 27x3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 67 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சூரணம், தைலம் போன்ற மருந்துகள் நம் உடம்பில் தோன்றும் பல நோய்களை நீக்குவது பற்றிக் கூறும் நூல்.

2. மருத்துவம். 3. வாதத்தின் பல வகைகள், பித்தத்தின் பல வகைகள், சிலேத்துமத்தின் வகைகள், மூல நோயின் வகைகள் இவற்றைப் போன்று வாய்வு, குன்மம், மேகம், காமாலை, பிற சரும நோய்கள், சன்னி வகை நோய்கள், கண் வகை நோய்கள் போன்ற பலவகையான நோய்கள் நம் உடம்பில் தோன்றும் என்பதும் அவற்றைப் போக்குவதற்கான மருந்துகளாக, சூரணங்கள், தைல வகைகள், இந்நூலில் கூறப்படுகின்றன. தாளிச பத்திரி சூரணம், கியாழம், நசிபேடு, எண்ணெய் வகைகளும், கிருதம், சாம்பிராணித் தைலம், தலைமுழுகுத் தைலம், மற்றும் செந்தூர வகைகள், சஞ்சீவி மாத்திரைகள், நெய் வகைகள் போன்றவை இந்நூலில் கூறப்படுகின்றன. இந்நூலின் இறுதிப் பாடல்களில் ஒன்றானது வயிரவன் சூரணத்தைப் பற்றி இயம்புகின்றது. கஞ்சாவினால் ஏற்படும் தீங்குகளும் வலியுறுத்தப்படுகின்றன.

4. ஹரிஓம்.

5. ஆதியாங் கணேசன் காப்பு
அறுநூற்றுக் கருவை யெல்லாம்
சோதியா மாயி பாதம்
துணையென உள்க்கொண் டேத்தி
நீதியாய்த் திரட்டுச் சூஷ்த்திரம்
நிலைத்தவா கடமாய்ச் சொல்வேன்
வாதியாம் பிணிகள் தீரும்
வந்ததின் குணத்தைக் கேளே. 25

6. கேளப்பா கஞ்சாவால் கெட்டோர் கோடி
கெட்டபுகை வெகுநாத்தம் தீதாம் பாதை
தேளப்பா கொட்டுதல்போல் நெஞ்சில்(க்) கட்டும்
சீசீசீ ககுமால சித்து மூலி
வேலைப்பா யெரித்தசிவன் யெனக்கு சொன்னார்
வேதனுக்கு சட்டைமுனி தானுஞ் சொன்னார்
வாளப்பா இதைவிட்டுக் கருப்பால் கொள்ளு
வானவனை நமஷ்க்கரித்து வணங்க முற்றே. 67

7. சூத்திரம் முற்றும்.

வாகை வித்துந் திரிகடுகும்
வலிதாயிந்து சமன் கூட்டி
பாக நிம்படிச் சாரதில்ப்
பதமா யரைத்துக்.......
விருத்த மான கண்ணிவிட
வெகுண்டே சன்னி விட்டோடும்
பாகர வயிரவன் சூரணமாம்
வலிய நாமமறிந்து கொள்ளே.

8. மூலம். 9. பிழைகள் மலிந்துள்ளன. ழ/ள, ற/ர வேறுபாடுகள் இல்லாமல் எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் அவிழ்தசாரம் என்றும் பெயர் பெறும் இவ்வகை நூல்களில் 60 பாடல்களிலும் 80 பாடல்களிலும், நூற்றுக்குமேலான பாடல்களிலும் மருந்து செய்முறைகள் கூறப்பட்டுள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 3411, R. 4488, D. 2320, R. 5429, (தாள்). 2. த.ச.ம.நூ.எண் 496(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. அருணாசல நாட்டார் (பதி.), **அகத்திய மாமுனிவர் அருளிய குணவாகடம் அவிழ்த சாரம் 60;** கல்விக் களஞ்சிய அச்சுக்கூடம், —, 1864. 3. இல்லை.

VI. இந்நூல் அவிழ்தசாரத்துக்குப் பதிலாகச் சூத்திரம் என்றும் பெயர் பெறும்.

அகத்தியர் சூத்திரம் 150

I. 1. **851.** 2. அ. R. 7021. ஆ. T.R. 2827. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பாடல் 150. ஆ. Akattiyar pāṭal 150. இ. அகஷ்த்தியர் வயித்தியம் நூத்தன்பது. 4. —. 5. —. 6. — 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 45. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு.

8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 90; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 150 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களுக்கான பற்பம், தயிலம், இலேகியம் முதலான பலவகை மருந்துகளின் தயாரிப்பினையும் அவற்றின் பயனையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் இலிங்கக்கட்டு, வீரம், பூரம், வெள்ளைப்பாசாணம், மனோசிலை, பவளம், அரிதாரம், கல்நார், சீனாக்காரம், பொரிகாரம், கெந்தி, இரசம், முடிதாரம், தாரசிங்கி, தொட்டிப் பாசாணம், மடல் துத்தம், துரிசு, அஞ்சனக்கல், நாகம், தாம்பிரம், கருவங்கம் முதலான 64 இரசாயனப் பொருள்களைச் (சரக்குகளை) சுத்தி செய்யும் முறையும், சுத்தி செய்யப்பெற்ற இப்பொருள்களால் செந்தூரம், பற்பம், இலேகியம் முதலானவைகள் தயாரிக்கப்படும் முறையும் கூறப்படுகின்றன. உலோக செந்தூரம், காந்த செந்தூரம், காரீய பற்பம், வங்க பற்பம், உலோக பற்பம், தாம்பிர பற்பம், வெள்ளி பற்பம், தங்க பற்பம் முதலான பற்ப வகைகளும், கடுக்காய் இலேகியம், நெல்லிக்காய் இலேகியம், தாணிக்காய் இலேகியம், சுக்கு இலேகியம், மிளகு இலேகியம், சீரக இலேகியம், கடுகு இலேகியம், வெந்தய இலேகியம், ஓம இலேகியம், பெருங்காய இலேகியம் முதலான இலேகிய வகைகளும், மற்றும் பல்வேறு தயில வகைகளும் தாயரிக்கப்படும் முறை மற்றும் அம்மருந்துகள் குணப்படுத்தும் நோய்களையும் இந்நூல் விளக்கமாகக் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஷ்த்தியர் வயித்தியம் நூத்தன்பது நன்றாக.

5. சீரணி கொன்றை சூடுஞ்
சிவனிரு பாதம் போற்றி
வாரண முகத்தான் பாதம்
வணங்கிநூத் தன்பது சொல்ல
பூரண வாலை ஞான
சரசுபதி போற்றி போற்றி
காரண மான செஞ்சொற்
கர்மசூத் திரங்காப் பாமே. 1

6. சொன்னது வகைதா னூற்று
யென்பது சூட்ச மாகும்
முன்னமே சொன்ன நூலில்
முக்கிய மின்னூல் சூட்சம்
வன்னமே வாரு லோக
மாரண மதிக சூட்சம்
அன்னமே சொன்னநூற்
றன்பதும் அறிவீர் முற்றே. 67

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1901, D. 2449, R. 275(b), R. 3611(a), R. 3679, R. R. 3730, R. 9044, R. 7690(a), R. 9873, R. 10423, R. 7712. 2. உ.த.நி. எண் 240:456, த.ச.ம.நூ.எண்கள் 269(b), 324(b), 385(a), 414(d), 440, 433(a), 443(j). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் சரக்கு சுத்தி என்னும் கன்ம சூத்திரம் 150,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூல், அகத்தியர் வைத்தியம் 150, அகத்தியர் 150, அகத்தியர் சரக்கு சுத்தி 150 ஆகிய பெயர்களிலும் வழங்கப்படுகிறது. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் வைத்திய செந்தூரம் 300 (R. 7022) என்ற நூலும் இடம் பெற்றுள்ளது.

அகத்தியர் சூத்திரம் 150

I. 1. **852.** 2. அ. R. 7712. ஆ. T.R. 2982. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சாப நிவர்த்தி 150. ஆ. Akattiyar cāpa nivartti 150. இ. அகத்தியர் சூத்திரம் நூற்றெண்பது-சாப நிவர்த்தி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பாலக்காடு நெல்லிச்சேரி என். அனந்த நாராயண அய்யர் பேரன் என்.எஸ். நாராயண மூர்த்தி ஐயர் 1962-63-இல் அன்பளிப்பாக வழங்கிய ஏடு. 10. கி.பி. 1962-63.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. இதழ்களின் தொகை தெரியவில்லை. 5. 16X4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. ஒடிந்தும், முறிந்தும், சிதைந்துமுள்ளது. 12. மொத்த பக்கங்கள் தெரியவில்லை. 13. பக்கத்திற்கு 8 முதல் 9 வரிகள் இருக்கலாம். 14. விருத்தம். 15. பின்பகுதி விடுபட்டுள்ளது. 16. குறை. 17. 20 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் ஞானமார்க்கம், இன்ப துன்பம், மருத்துவம் போன்றவற்றை விளக்கும் நூல். 2. ஞானம், மருத்துவம். 3. இலேகியம், துரிசு போன்றனவும், கரும நிவர்த்திக்காகச் செய்ய வேண்டியது போன்ற செய்திகள் இந்நூலில் உள்ளன. ஏடுகள் முறிந்தும் சிதைந்துமிருப்பதால் எவ்விதத்திலும் பாடல்களைத் தெரிந்து கொள்வது இயல்பில்லாததாக உள்ளது.

4. —.

5. சீரணி கொன்றை சூடும் ....
....

6. இருந்திடும் வினைக ளெல்லாம்
யேகிடும் மருந்து சித்தி
அருந்திடும் மணிக ளெல்லாம்
அகன்றிடும் அன்றைக் கேதான்
தெரிந்திடு மானா லஷ்சஞ்
சொல்லிய வுண்மை உண்மை
கரிந்திடுங் கசட ருக்குக்
காரணங் காட்டொண் ணாதே. 20

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1901, D. 2449, R. 275(b), R. 3611(a), R. 3679, R. R. 3730, R. 9044, R. 7690(a), R. 9873, R. 10423, R. 7021. 2. உ.த.நி. எண் 240:456, த.ச.ம.நூ.எண்கள் 269(b), 324(b), 385(a), 414(d), 440, 433(a), 443(j). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் சரக்கு சுத்தி என்னும் கன்ம சூத்திரம் 150,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணை (தொகுதி 25, எண் 7712)யில் சீரணி கொன்றை சூடும்' என்னும் முதல் பாடலும், 'ஆதியா முலகில் வாழும்' என்று தொடங்கும் இரண்டாம் பாடலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளன.

அகத்தியர் சூத்திரம் 200

I. 1. **853.** 2. அ. R. 2262. ஆ. T.R. 1285. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வகாரம், வாத சூத்திரம் 200. ஆ. Akattiyar vakāram, vātacūttiram 200. இ. அகஸ்த்தியர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய வகார தெரவியம் 200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. சென்னை மாம்பலம் போக் தெருவைச் சேர்ந்த ஏ.எம். கோபால அய்யரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக் கட்டு. 10. கி.பி. 1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 80. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 160; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 201 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்தில் வகாரம் பற்றியும் பிற நோய்கள், அவற்றுக்கான மருத்துவப் பொருள்கள் பற்றியும் கூறும்நூல். 2. மருத்துவம், இரசவாதம். 3. சுண்ண வகைகள், திராவக வகைகள், செயநீர் வகைகள், மெழுகு வகைகள், வழலை வகைகள் போன்ற மருந்துப் பொருள்களின் இயல்பும், செய்முறையும் அவை குணமாக்கக் கூடிய நோய்களும் கூறப்படுகின்றன. இரசவாதத்திற்கான வழலை, கரியுப்பு, வங்கம், இலிங்கம், செந்தூரம் என்பன கூறப்படுகின்றன. இந்துவை இரவியுடன் சேர்த்துப் புடம் போட்டு, பிற கருக்களையும் சேர்த்த பின்பு தீநிர் கூடுமென்று கூறப்படுகிறது. இந்துவைப்

போன்றே வழலையுடன் செந்தூரம், சேர்க்க வேண்டிய மருந்துப் பொருள்களைச் சேர்க்க வேண்டுமென்கிறார். இதைப் போன்றே, கரியுப்பு, வங்கம் என்பவற்றுடன் மருந்துகளைச் சேர்க்க வேண்டுமென்று கூறப்படுகிறது. வங்கமானது செம்பொன் உண்டாக்க உதவுமென்றும், இந்நூல் கூறுகிறது. சில மூலிகை மருந்துகளை உண்டு, பசியாமலிருக்கவும், சமாதியில் இருக்கவும் சித்தர்களால் கூடும் என்றும் கூறப்படுகிறது.

4. ஹரிஓம் நன்றாக.

5. **ஆதியாய் மணக்கோலஞ் செய்யு நாளி**
   லாதிமுதல்(த்) தேவரிஷி கூட்ட மாச்சு
   வேதியனு மாயோனுந் தானாய் நின்று
   விமலனார் விஷ்ணுக்கு வார்த்தை யீந்தார்
   நீதிபெற சாரதியாம் தெஷ்ச ணாயன்
   நிலையான சார்பொதிகை கிரியில்(ச்) சென்றேன்
   ஆதியொரு காரணத்தால்(ப்) பாறை தாண்டி
   ஆடகந்தா னம்பரமா னருளை(ப்) பாரே. 1

6. **யிந்தாலே யிரவிதனைக் கட்ட வேணும்**
   யெடுத்ததொரு அண்டத்தி லேற வேணும்
   மந்தாலே கருரெண்டு மறிய வேணு
   மகத்தான கருக்கிடத்தை யறிய வேணும்
   சந்திரனால் ரவியொன்றாய் முடிக்க வேணும்
   சாக(ா)ரத்தி னீரைக் காண வேணும்
   கொந்தான பூரணமே சார மாகும்
   கூடுகின்ற ரவிகோடா கோடி முற்றே. 201

7. முடிந்தது முற்றும். குருவே துணை. அகஷ்த்தியர் பாதார விந்தமே கெதி.

8. மூலம். 9. பாட பேதங்கள் மிகுதி ர/ற, ழ/ள வேறுபாடு இன்றி எழுதப்பட்டுள்ளது. வார்த்தை என்பது வாற்த்தை எனவும், கிரி என்பது கீறி எனவும், பாறை என்பது பாரை எனவும், இன்ன பிறவும் வருதல் காண்க. பிழைகள் மிகுதி. 10. இந்நூல் 'அகத்தியர் வாதம் 200' எனவும், 'அகத்தியர் வகாரம் 200' எனவும் அழைக்கப்பெறும். 11. இல்லை.

IV. 1. R. 8, R. 149(b), R. 262, R. 275(d), R. 275(i), R. 4696, D. 1894, D. 2394, R. 10698. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. தெய்வசிகாமணி. ந, (பதி.), **அகத்தியர் வகார சூத்திரம் 200,** அகத்தியர் பதிப்பகம், திருவத்திபுரம், 1991. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில், இந்த நூல் 11ஆம் எண் ஓலை முதல் 90ஆம் ஓலைவரை இடம் பெற்றுள்ளது. இதனுடன் 1. சுந்தரானந்தர் வகார சூத்திரம் 25 (R. 2260), 2. அகத்தியர் வழலை (R. 2281), 3. சட்டைமுனி சவுக்கார வைப்பு 200 (R. 2263), 4. அகத்தியர் திரிபுவனைக் கண்ணாடி (R. 2264), 5. அகத்தியர் தத்துவம் (R. 2265), 6. அகத்தியர் சூத்திரம் (R. 2266), 7. கொங்கணர் சரக்கு வைப்பு (R. 2267), 8. அகத்தியர் பல திரட்டு (R. 2268), 9. அகத்தியர் தர்க்க சாஸ்திரம் (R. 2269) எனும் நூல்கள் உள்ளன. இவ்விவரம் இச்சுவடிக் கட்டில் முதல் ஓலையிலும் மூன்றாம் ஓலையிலும் எழுதப்பட்டுள்ளது.

அகத்தியர் சூத்திரம் 200ல் சில

I. 1. **854.** 2. அ. R. 6872(b). ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 200ல் சில. ஆ. Akattiyar cūttiram 200 cila. இ. அகஸ்தியர் சூஸ்திரம் 200ல் சில. 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 3. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 5 பக்கம் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 13 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சதுரகிரி மலை, திரிகூட மலை போன்ற மலைகளின் வளப்பங்களும் மருத்துவ மூலிகைகள் இருக்குமிடம் பற்றியும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 200ல் சில என்ற இந்நூல் வான தீர்த்தங்கரை சதுர கிரி மார்க்கம்,

திரிகூட மலை வளப்பம், பூமிநாதம் விளையும் பூமி, ஆற்றின் கரை, பூமிவளமை, வெள்ளை அப்பிரக பூமி, வெண் நாவல், நீலக்கொடி வேலி, சதுரகிரி மகத்துவம், பூநீற்றுக்குரு, பாசாணக்கட்டு, பூத விலக்குத் தயிலம், கருமலையில் தயிலவைப்பு மெய் ஞானி மார்க்கம், சிவயோகம், யோகத்துக்கதிக்காரி, நாகக்கட்டு, கற்பம் உண்ண அறிவு, கருமலையில் மூலிகையிருக்குமிடம் போன்ற செய்திகளை விளக்கிக் காட்டுகின்றது.

4. ஹரிஓம் அகஸ்தியர் சூத்திரம் இருநூறில்.

5. கூடுகின்ற கற்பமொன்று சொல்லக் கேளு
கோலமிடு ....
ஓடுகின்ற தூரமப்பா மேற்கே சென்று
உசந்ததொரு பாறையுண்டு தெற்கே பார்த்தால்
னாடியதின் எட்டுவடங் கடந்து சென்றால்
நல்லகரு நெல்லிபோன்று அதின்மேல் நிற்கும்
பாடுகின்ற கட்டுக்குத் தோணா தப்பா
பரிவான பாறையின்மே லேறிச் செல்லே. 1

6. ஆட்டியே மெழுகுகாக்கிப் புடத்தில் போடு
அப்பனே செந்தூர மாகும் பாரு
ஓட்டமாய் நித்தமொரு மாவே கொன்று
நன்றாக மண்டலத்தில் லேறிக் கொண்டு
மூட்டியே........ லனப்பா சொல்லப் போனா
மூதண்டக் குளிகையுமாங் கெவுன சித்தி
வாட்டமுள்ள யோகசித்தி அட்டதிக்கு மார்க்கம்
.... பில்லை ஒரு ...... வாலை யாமே. 201

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், ல-ள வேறுபாடின்றி அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் சித்தர்கள் வசிக்கக் கூடிய இடங்களையும் அவர்கள் ஞான வாழ்க்கையில் அனுபவித்த தன்மைகளையும் கூறிச் செல்வது குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

அகத்தியர் சூத்திரம் 205

I. 1. **855.** 2. அ. R. 6445(a). ஆ. T.R. 2684. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 205. ஆ. Akattiyar cūttiram 205. இ. அகஸ்தியர் 205. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 57. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 104; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 204 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் சூத்திரம் 205 என்ற இந்நூலில் மும்மூலம், மேகம், கண்ரோகம், சூலை ரோகம், வாதரோகம், பித்தம், கிராணி, வாயு, குன்மம், சிலேற்பனம் போன்ற நோய்களுக்கு மருந்துகள் கூறுவதோடு, பலவகை மருந்துகளைச் சுத்தி செய்யும் முறையும் கூறப்படுகின்றன. அவை லிங்கசுத்தி, பாசாணசுத்தி, அரிதார சுத்தி, கருடபச்சை சுத்தி, படிகார சுத்தி ஆகியன. மேலும் உலோக செந்தூரம், காந்த செந்தூரம், காரீய செந்தூரம், தாமிர செந்தூரம், வெள்ளி செந்தூரம், தங்க செந்தூரம் போன்ற செந்தூர வகைகளும், கடுக்காய் லேகியம், வெந்தய லேகியம், தான்றிக்காய் லேகியம், சுக்கு லேகியம், மிளகு லேகியம், திப்பிலி லேகியம் போன்ற இலேகிய வகைகளும், சிவன் வேம்புத்தயிலம், செங்கொட்டைத் தயிலம், சந்தனத் தயிலம், வேங்கைப் பட்டைத் தயிலம், வெட்டிவேர்த் தயிலம், சீரகத் தயிலம், மேகவெட்டை, மேகநோய், வாதம், குன்மம் இவற்றுக்கு நற்சீரகத் தயிலம் மேலும் சொரி, கரப்பான் ஆகியவற்றுக்கும் தயிலம் செய்யும் முறைகள் இந்நூலுள் கூறப்படுகின்றன.

4. நன்றாக குருவாழ்க குருவே துணை. அகஸ்தியர் 205.

5. பூரணமாய் உள்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழுப்பி மேகமதாய் சிரசிற் சூடாம்
காரணமாம் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்தே வாயுவினால் சூலை ரோகம்
மாரணமா வாதத்தி லெழுந்த மேகம்
மதியதொரு பித்தத்தால் கிராணி யாச்சு
தாரணமா வாயுவினால் குன்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனங்கூடில் சயம தாமே. 1

6. ஈவதிந்த நூல்தொகைதான் யிருநூத் தஞ்சு
இகத்திலுள்ளோர் பிழைக்கவென்று இரங்கிச் சொன்னேன்
தாயிருந்த பிள்ளைக்குத் தவக்க மில்லை
தாயைப்போ லின்னூலைச் சாற்றி னேன்யான்
நோய்புகுந்து சாவில்லை யொருநா ளுந்தான்
நுண்மையாய்ச் சரக்கையெல்லாம் நீற்றிக் கொண்டு
வாயமுடன் எண்ணெயுடன் கிருதஞ் செய்து
வைத்திடுவா யனுபான வயித்திய முற்றே. 204

7. திருச்சிற்றம்பலம் அகஸ்திய மாமுனி அருளிச் செய்த வயித்தியம் 205, தேவி சகாயம் குருமுனி துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. பாடபேதங்களும் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 4676, R. 4197, R. 75(b), T.R. 8, R. 275(c), R. 1081, R. 3609, R. 3663, R. 3727, R. 6100, R. 6138, R. 6998, R. 7881, R. 2337, R. 6098, D. 1897, R. 10120, R. 10467, R. 10238, R. 10252, R. 10009(a), R. 9189, R. 6447, R. 1081. 2. த.ப. எண்கள் 989, 1053, 2171, 2213, 2234, 2392, 2414. த.ச.ம.நூ.க. எண்கள் 124(d), 205, உ.த.நி. எண்கள் 221:431, 493:751, 563:911. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலில் தீராத நோய்களையும் போக்கக் கூடிய பற்பம், தைலம், செந்தூரங்கள் தயாரிக்கும் முறைகள் மிக எளிய முறையில் கூறப்பட்டுள்ளன. காயகற்பம் என்னும் கற்பத்தை உண்டுதான் சித்தர்கள் நீண்ட காலம் வாழ்ந்ததாகச் சித்தர் இலக்கியங்கள் கூறுகின்றன.

அகத்தியர் சூத்திரம் 205

I. 1. 856. 2. அ. R. 6447. ஆ. T.R. 2684. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம். ஆ. Akattiyar vaittiyam 205. இ. அகஷ்த்தியர் 205. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 57. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 114; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 207 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல மருந்துகள் பற்றியும், அம்மருந்துகள் குணமாக்கக் கூடிய நோய்வகைகள் பற்றியும், அந்நோய்கள் தோன்றும் காரணங்களும், மருந்துகள் செய் முறைகள் பற்றியும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் பலவகைச் சுத்தி முறைகள், வாத நோய்கள், கண் நோய்கள், சரும நோய்கள், செந்தூர வகைகள் போன்றவை கூறப்படுகின்றன சுத்தி முறைகளில், இலிங்க சுத்தியே முதன்மையானது. மேலும் பாசாண சுத்தி, அரிதார சுத்தி, கருட பச்சை சுத்தி, படிகார சுத்தி என்பனவும் பேசப்படுகின்றன. இலேகிய வகைகளில், கடுக்காய் இலேகியம், சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, பூண்டு என்னும் இலேகியங்கள் கூறப்படுகின்றன. இவற்றைப் போன்று சிவன் வேம்புத் தைலம், செங்கொட்டைத் தைலம், கொடுவேலி வேர்த் தைலம், வெட்டி வேர்த் தைலம், சீரகத் தைலம், சந்தனத் தைலம் எனும் தைல வகைகள் இந்நூலில் அமைந்துள்ளன. செந்தூர வகைகள், சரும நோய்களுக்குரிய மருந்துகள், கற்பங்கள், பற்பங்கள் எனப் பல வகை மருந்துகள் செய்முறைகள் இந்நூலில் வந்துள்ளன.

4. —.

5. (பூரணமாம் மும்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாய்ச் சிர)சில் சூடாம்

காரணமாய் நீர்கலந்து கண்ணி ரோகங்
கனலெழும் பினால் சூலை ரோகம்
மாரணமாம் வாதத்தி லெழுந்த ரோகம்
மதியி........ரு பித்தத்தால் கிராணி யாச்சு
காரணமாம் வாயுவினால் குன்ம மாச்சு
காற்....... தசிலேற் பனங்கள் கூடில் ஷயமதாமே. 1

6. யீவ்வதிந்த னூல்வகைதான் யிரநூத் தஞ்சில்
யிகத்திலுள்ளோர் பிழைக்கவேண்டி யிரங்கிச் சொன்னேன்
தாயிருந்த பிள்ளைக்கி தவக்க மில்லை
தண்மைபோ லிந்நூலைச் சாத்தி னேனே
னோய்மிகுந்தாச் சாவில்லை யொருனா ளுந்தான்
நுண்மையாய் சரக்கைஎல்லாம் நீத்திக் கொண்டு
வாயமுடன் எண்ணையொடு கிருதஞ் சேத்து
வைத்திடுவாய் அனுப்பானம் வயித்தி முற்றே. 204

7. திருச்சிற்றம்பலம் அகஸ்த்திய மாமுனி அருளிச் செய்த வயித்தியம் 205 தேவி சகாயம் குருவே துணை.

8. மூலம். 9. பிழைகள் மலிந்துள்ளன, பாடபேதங்கள் மிகுதி, பேச்சு வழக்கு மற்றும் கொச்சை வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் வழங்கப் பெறும் நூல்களில் 205 பாடல்கள் பெற்ற இந்நூல் போன்றன மிக அதிகமாகப் பழக்கத்தில் உள்ளன. 11. யிது ஆரு எழுதின தென்றால் மயிசூர் கிஷ்ணராசுடைய தங்கசாலை யிலேயிருந்து வெங்கடாசலம் குமாரன்க்கு வருசம் 5 ஹனுக்கி டள்ள இசேனதி திருளிமுத்து கயியெழுத்து குருவே துணை ஸ்ரீமன்னாராயண மூர்த்தி சகாயம்.

IV. 1. D. 1897, T. R. 8, R. 75(b), R. 1081, R. 275(c), R. 2337, R. 3609, R. 3663, R. 3727, R. 4676, R. 4197, R. 6098, R. 6998, R. 6100, R. 6138, R. 9189, R. 7881, R. 10009(a), R. 10120, R. 10467, R. 10238, R. 10252, R. 6454(a). 2. த.ப.க. எண்கள் 989, 1053, 2171, 2213, 2234, 2392, 2414. த.ச.ம.நூ. எண்கள் 124(d), 205, உ.த.நி. எண்கள் 221:431, 493:751, 563:911. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் உள்ள பிற நூல்கள் வருமாறு: திருமூலர் திருமந்திரம் (R. 6446), 2. அகத்தியர் வைத்தியம் (R. 6447), 3. அகத்தியர் பூரண சூத்திரம் (R. 6448), 4. சீதேவி சக்கரம், 5. பிள்ளைப் பிறவியறிய (R. 6450), 6. விஷத்துக்கு மூலிகை (R. 6457) என்பன.

அகத்தியர் சூத்திரம் 205

I. 1. 857. 2. அ. R. 1081. ஆ. T.R. 798. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 205. ஆ. Akattiyar cūttiram 205. இ. அகஸ்திய மாமுனி யருளிச் செய்த காவிய சூத்திரம் இருநூத்தஞ்சு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மருத்துவர் எச்.எம்.ஏ. சாகீர் உசேன். எல்.ஐ.எம். புதுப்பேட்டை, சென்னை. 10. கி.பி. 1935-36.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 6. 5. 34x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 12; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. நடு, இறுதி. 17. 37 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பல வகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 856 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக அகஸ்திய மாமுனி யருளியச் செய்த காவிய சாஸ்திரம் இருநூத்தஞ்சு.

5. பூரணமா மும்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழுப்பி மேகமதாய் சிரசில் சூடாங்
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகங்
கனலெழும்பி வாயுவினால் சூலை ரோகம்
வாரணமாய் வாதத்தி லெழுந்த மேக
மதியதொரு பித்தத்தாற் கிராணி யாச்சு

தாரணியாம் வாயுவினால் குன்ம மாச்சு
சார்ந்தசிலேற் பனங்கூடிச் சயமி தாமே. 1

6. ஆமிந்த தேனிவிடு மண்ட லந்தான்
அகலாத நோய்களெல்லாம் நின்று போமே
ஓமிந்த தங்கபஷ்பம் சொல்லக் கேளு
உறுதியுண்ட தங்கமே தன்னை வாங்கி
தாமிந்த படிவாங்கி மூலி தன்னைச்
சாந்துபோல் அரைத்துப்பி ஒட்டி வைத்து
வாமிந்த சந்துவாய்ச் சீலை செய்து
வைத்திடுவாய் கெசப்புடத்தில் பற்ப மாமே. 37

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். 11. இல்லை.

IV. 1. R. 4676, R. 4197, R. 75(b), R. 8, R. 275(c), R. 3609, R. 3663, R. 3727, R. 6100, R. 6138, R. 7881, R. 2337, R. 6998, R. 10120, R. 10467, R. 10238, R. 10252, R. 10009(a), R. 9189, R. 6447, R. 6454(a), D. 1897 2. த.ப.க. எண்கள் 989, 1053, 2171, 2213, 2234, 2392, 2414. த.ச.ம.நூ. எண்கள் 124(d), 205, உ.த.நி. எண்கள் 221:431, 493:751, 563:911. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் மிகவும் சிதைந்து உள்ளது. 205 பாடல்கள் உள்ள நூலாக யிருந்தும் 37 பாடல்களே கிடைத்துள்ளன.

அகத்தியர் சூதகத்தில் வினோதம்

I. 1. 858. 2. அ. R. 6110. ஆ. T. R. 2568. இ. —. ஈ. — 3. அ. அகத்தியர் சூதகத்தில் வினோதம். ஆ. Akattiyar cutakattil vin̲ōtam. இ. தட்சிணாமூர்த்தி சூதகத்தில் வினோதம். 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5x22x3 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை.

9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 24; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. உரைநடை. 15. முழுமை. 16. இல்லை. 17. 192 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பில்லி சூனியம், குட்டிச் சாத்தான் ஏவல் போன்ற வினோத வித்தைகள் செய்யும் முறைகளைக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. அகத்தியர் சூதகத்தில் வினோதம் என்ற இந்நூலில் வினோத வித்தைகள் செய்யும் முறைகள், விரத முறைகள், மாந்திரீகம் செய்யும் போது அதற்குத் தேவையான பொருட்கள், மந்திரங்கள் செபிக்கும் முறை, சுருட்டு விடுவிக்க, யெட்சணி பகை வராமல் நாவு அடங்கி இருப்பதற்கான முறைகள், மோகினி மந்திரம், வாலைச் சக்கரம், பிண்டத்தின் விவரம், குட்டிச் சாத்தான் நறுக்குச் சல்லியத்துக்குச் சேரும் முறைமைகள், இதற்கு மந்திரம் செபிக்கும் முறைகள், குட்டிச் சாத்தான் வரவழைப்பதற்கு உரிய சக்கரம் எழுதும் முறைகள் போன்ற பலவகை மாந்திரீக முறைகள் இந்நூலில் சொல்லப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக தெட்சணாமூர்த்தி சூதகத்தில் வினோதம்.

5. கதலி வாழைப்பழம் 27, பசுவின்பால் வேளைக்கு ஒரு உழக்கு, சூடம் வேளைக்கு விராகனெடை 2. கோவை... தண்டுச் சாறு அரை உழக்கு ஆயிவளவும் ஒருமிக்கக் கலந்து நாலாம் சாமாம் விடியிறபோது குடுக்க மூனு நாளைக்கி குடுக்குற போது சூரியனை நோக்கி நசிந்து, நசி நசியென்று ஒன்பது திறஞ் சொல்லி உருச் செபித்துக் கொடுக்கவும் சூதகம் இறங்கும். அந்த சூதகத்தைப் பீங்கானில் வைத்துச் சூடம் அரைப்பலம் அரைத்து நுணுக்கிப் போட்டு பெண்களுடனே சினேகித்தவுடன் விந்து வருவதைப் பிடித்துக் கூட விட்டால் தண்ணீராகும், அதைப் பீங்கானில் இறுத்து வைத்துக் கொண்டால் வினோதத்துக்கும், வித்தைக்கும் ஆகும்.

6. செவ்வாய்க் கிழமை மத்தியானம் குளித்து முழுகி தலைச் சுருளி வேருக்கு உள்ள அரசு வேரைப் பாத்து கன்னிநூல் காப்புக்கட்டிப் பொங்கல் வைத்து தீபாதூபங்

கொடுத்து செஞ்சாவல் பெலிகொடுத்து வேர்ப் பிடுங்கி, கன்னி நூல் கொண்டு வேருக்குச் சாத்திக் காதுக்குள் வைத்துச் சூரிய உதையத்தில் முழுகி அருக்கன் திசையில் நோக்கி ஓங்கிலியூஞ் சக்கதேவி றா றா றா றா வென்று ஒரு முகூர்த்தம் செபிக்கச் சித்தியாகும். இப்படிக்கி அறுபது நாள் செபித்தால் தேவி பிரசன்னமாகிச் சித்தியாவாள் காளி, துர்க்கை, பிடாரி கோவில்களில் சோமவார நாள் விரதமிருந்து தேவிக்குத் தீபதூப நெய்வேத்தியஞ் செய்து சாத்தியன் மரணபச்சி வேளையிலாவாது, தூக்க வேளையிலாவது குருத் தோலையில் சாத்திய நாமன் பேரும் தலைமாரி யெழுதுகிற போது மூச்சடக்கி யெழுதி நம்மிட வலது காலிலே யெழுதின சீட்டை மிதிச்சு ஒருகைக் காலால் நின்று லூ லூ லீலீ நசி நசி மரண மரண மென்று உருவு லட்சஞ் செபிக்க சத்திய நாசமாவர்கள் அறியவும் முன்கருத்தொட்டுக் கொள்ள சல்லியத்தையும் சித்தியாகும்.

7. —.

8. மூலம். 9. எளிய உரைநடையில் அமைந்த நூல். வடசொல் மந்திர எழுத்துக்கள் கலந்த நடை. 10. அகத்தியர் பெயரில் எழுதப்பட்டநூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. ஏவல், பில்லி, சூனியம் போன்ற மாந்திரீகம் பற்றியதொரு சிறந்த நூலாக இந்நூலைக் கருதலாம். மாந்திரீகம் பற்றி அறிய விரும்பும் ஆய்வாளர்களுக்கு இந்நூல் பெரிதும் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம்

I. 1. **859.** 2. அ. R. 10226(a). ஆ. T. R. 3881. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம். ஆ. Akattiyar caumiya cākarac curukkam. இ. அகத்தியர் சுவாமியர் சவுமிய சாரம் 1200. 4. —. 5. —. 6. நரசய்யன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 18; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 34 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவித நோய்களுக்கான மருந்துகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல், 'அகத்தியர் சௌமிய சாகரம் 1200' என்ற நூலின் சுருக்கமாகும். இந்நூலில் தோசம், சுரதோசம், திரிதோசம், பிரம்ம தோசம் முதலான தோசங்கள் பற்றியும், அட்டகர்மங்களான மாரணம், தம்பனம், மோகனம், வசியம், வித்துவேசனம் முதலானவைகள் பற்றியும், வாலை பூசை, சக்தி பூசை, சிவபூசை முதலிய பல பூசை முறைகளும், மை வகைகள், வாயுத் தம்பன வகைகள், வைத்திய சரக்குகள், செந்தூர வகைகள், இரசவாத உப்பு வகைகள், பல்வேறு தயிலங்கள், சவுக்கார வகைகள், பல பாசாணங்கள் ஆகியவை பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

4. —.

5. பாரப்பா புலஷ்த்தியனே சொல்லக் கேளு
பதிவான மேகமென்ற துகைகள் கெல்லாம்
வீரப்பா தாளொடுங்கி திரிவ தற்கு
விபரமுள்ள கிருதவகை யொன்று கேளு
நேரப்பா பசுவின்நெய் படியொன் றுக்கு
நேர்மையுள்ள சாருவகை சொல்லக் கேளு
சேரப்பா சிலஷதம்ப மூலிச் சாருந்
திறமான ஒரித்தட்டா மறையின் சாரே. 1

6. போமடா மதிமயக்கம் விஷநீர் பித்தம்
பொல்லாத திரிதோசம் பிரம தோசம்
நாமடா சிலேற்பனத்தின் கருவ தோஷம்
நஞ்சுதின்ற தோஷமுடன் ருத்திர தோஷம்
ஆமடா நெஞ்சுவிஷ மென்ற தெல்லாம்
அகலுமே சுகசன்னி அதிக தோஷம்

ஓமடா மலக்கட்டுச் சலக்கட் டுப்போம்
வுமைக்கரனா ருரைத்தபடி உண்மை தானே. 34

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். 11. நரசய்யன் கையெழுத்து.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் சௌமிய சாகரம் 1200 என்ற நூலின் சுருக்கங்களாகக் காணப்படும் பிற நூல்கள் : 1. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 50, 2. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 150, 3. அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் 300 ஆகிய நூல்களாம். இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் ஞானவுலா (R. 10226(b)) என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் சௌமிய சாகரத்தில் பாசாணக்கட்டு

I. 1. **860.** 2. அ. R. 6868. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரத்தில் பாசாணக்கட்டு. ஆ. Akattiyar caumiya cākarattil pācāṉakkaṭṭu. இ. அகத்தியர் சவுமிய சாகரத்தில் பாஷாணக்கட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12; ஒரு பக்கத்தில் 4ஆவது வரி தொடங்கி 10 ஆவது வரியுடன் நூல் முடிகிறது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 2 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பாசாணப் புடம்போடும் முறையும், யோகமும் கூறும் நூல். 2. மருத்துவம், யோகம். 3. அகத்தியர் சௌமிய சாகரத்தில்

பாசாணக்கட்டு என்ற இந்நூல் இலுப்பைமரப் பாலைப் பாசாணங் கட்டி மேலே தடவி அதன் மேலே இலுப்பைக் காயை அரைத்துப் பொதிந்து புடம் போட்டால் பாசாணம் உருகி நிற்கும், இதைத் தாம்பிரத்தில் பத்திற் கொன்றாகச் சேர்த்துவுருக்கி மேலும் பத்துக்கொன்று வெள்ளி சேர்த்து உருக்கி எடுத்தால் நல்ல மாத்துள்ள வெள்ளி கிடைக்கும். இதை அனுபானம் அறிந்து சாப்பிட்டால் யோகம் தப்பாமல் சிவயோகம் சிறக்க வழிபிறக்கும். இம்முறைகளைக் குருவினுடைய அறிவுரைகளோடு செய்ய வேண்டும் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. சவுமிய சாகரத்தில் பாஷாணக்கட்டு.

5. நில்லென்ற நிலைதனிலே நின்று கொண்டு
நீமகனே யிலுப்பை யினுடைய பாலைச்
சொல்லென்ற பாஷாணக் கட்டி மேலே
செம்மையுடன் றானரவில் மைந்தா கேளு
உல்லென்று காயரைத்துப் பொதிந்து மேலே
உண்மையுடன் புடம்போட யுருகி நிற்கும்
சொல்லொன்றுந் தவறாமற் றாம்பு ரத்தில்
சுத்தமுடன் பாஷாணம் பத்துக் கொன்றே. 1

6. ஒன்றாகத் தான்குடுத்து வுருக்கி மைந்தா
வுண்மையுள்ள பத்துக்கு ஒன்று வெள்ளி
நன்றாகத் தான்குடுத்து உருக்கிப் பாரு
நல்லவெள்ளி மாத்ததிகம் நலமாய்க் காணும்
நின்றிடும் பொன்வெள்ளி கண்டா யானால்
நின்மனது அகலாது யோகந் தப்பாது
குன்றாது சிவயோகம் கூர்மை யாகும்
குருவசனம் மறவாமல் குறிகள் நாட்டே. 2

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன.
10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. மருத்துவமும், யோகமும் இணைந்து இரண்டு பாடல்கள் கொண்ட மிகச் சிறிய நூலாகக் காணப்படுகிறது.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200

I. 1. **861.** 2. அ. R. 6499. ஆ. T.R. 2710. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரம் 1200. ஆ. Akattiyar caumiya cākaram 1200. இ. அகஸ்தியர் சௌமிய சாகரம் ஆயிரத்திருநூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார் 10. கி.பி. 1956-57.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 209. 5. 34x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 418; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி. 17. தெரியவில்லை.

ஆ. —.

III. 1. மனிதன் பல்லாண்டு காலம் நோயின்றி வாழ்வதற்கான யோகம், ஞானம், மருத்துவம் போன்ற பல கலைகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. அகத்தியர் சௌமிய சாகரம் 1200 என்ற இந்நூல் முதலாவதாக மனோன்மணித்தாயை வணங்கிச் சுகமான சௌமிய சாகரத்தைப் பாடுவதாகக் கூறுகிறது. மேலும் சீவாத்மா, பரமாத்மாவின் தத்துவங்கள், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப் பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, இரவி தியானம், குரு தியானம், சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆதியந்த விளக்கம், உலகம் படைத்த வரலாறு, யுகம் பதினெட்டும் அறிய, பிரணவ மகிமை, அகார, உகார, மகார, சிகார, வகார தீட்சைகள், பஞ்ச கணதீட்சை, முப்புச் சுண்ணம், அட்டகர்ம விவரம், அட்டகர்மம், அட்டகணபதியின் மூலமந்திரம், அட்டாங்க யோகம், அறுவகை முத்திரை விவரம், மோகினி முத்திரை, திராவினி முத்திரை, அறுவகைச் சரக்குகளைக் கட்டும் முறை, சத்தியுப்புத் தயிலம், நவ கும்ப பூசை, அமாவாசி விவரம் தாமிர பற்பம், கெந்தகத் தயிலம், செயநீர், வெள்ளி பற்பம், தங்கபற்பம், நாகம், வீரம் கட்டும் முறைகள், சூதமணிச் செந்தூரம், நாகரசமெழுகு, செந்தூரம், யோகப் பெருமை, சின்மயத்தின் பெருமை, வல்லாரை, கடுக்காய் கற்பங்கள் நவகோணப் பூசை, பிராணவாயுவின் நிலை, சுவாச நிலை,

மவுனாதி, மந்திராதி இிராசாங்க யோக முறைகள், பூரண தரிசனம், சித்தி மூலம் போன்ற செய்திகளைக் கூறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக அகஸ்தியர் சௌமிய சாகரம் ஆயிரத்திருனூறு.

5. சோதியெனு மனோன்மணியைத் தியானம் செய்து
சுகமான சவுமியசா கரத்தைப் பாட
ஆதியென்ற கணபதியு வல்லபையுங் காப்பு
அயனான பிரமனொடு சரஸ்வதியுங் காப்பு
நீதியெனு மாலுடனே லெட்சுமியுங் காப்பு
நின்றிலங்கும் ருத்திரனு ருத்திரியுங் காப்பு
ஓதியதோர் மயேஷ்பரனு மயேஷ்பரியுங் காப்பு
உறுதியுள்ள சதாசிவனு மனோன்மணியுங் காப்பே. 1

6. நோக்குவதுக் கொருபோது......... கொள்ளும்
நுண்மையுடன் பின்கலையில் மவுன மூனிற்
நாக்குநுணி சுவைபாகம் அறிந்து கொள்ளும்
நலமாள உபி....... மதுவே யாகும்
மூக்குநுணி சுழினையிலே வாசி யேற
முத்திபெற யிப்படியே புத்தி சொன்னோம்
பாக்குடனே வெத்தியிலையை அக்....... ள்ளு
படுக்குமிடக் காத்திலந்தத் தலையைத் தாங்கே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. வடமொழிச் சொல்லும், ர,ற வேறுபாடின்றியும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 1249, R. 4837, R. 5816, R. 196, R. 7624. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 418, 750(c), 919(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வாதசௌமியம் என்னும் சவுமிய சாகரம் 1200,** தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.

VI. இந்நூலில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் கொள்கைகள் பேசப்படுவதன் மூலம் அக்கால மக்களின் ஞானமார்க்கம் பற்றித் தெரிந்து கொள்ள முடிகிறது.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் சில

I. 1. 862. 2. அ. R. 6910. ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல். ஆ. Akattiyar caumiya cākaram 1200- l cila. இ. அகஸ்தியர் சவுமிய சாகரம் 1200ல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. ஒரு பக்கம் மட்டும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள் மட்டும். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 2 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவயோகம் பற்றிக் கூறும் நூல். 2. யோகம். 3. அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் என்ற இந்நூல் சிவயோகிகள் உண்மையான போதனைகளை அறியாமல் இவ்வுலகில் யோகி என்று பேர் பெற்று வீணான மது மாங்கிசங்கள் கற்று மெய்மறந்து, வாய்புலம்பி மூச்சுக்கெட்டு, இல்வாழ்க்கையும் கெட்டு, அறிவும் கெட்டு அழிந்து போனார்கள் என்றும், இவர்கள் எல்லாம் அமுர்தரச பானங்கொண்டு தீர்க்கமுடன் இகபரத்தில் தெளிந்து நிற்க வேண்டும் என்றும் பின்பு காயாதி கற்பங் கொண்டு இல்லறத்தில் இனிது வாழ்ந்து தெளிந்த சுய அறிவினாலே சிவயோகத்தில் முழுமையாக நின்று பரத்திலேகி, தெளிந்து சிதம்பரத்தின் நடனங்கொண்டு வந்தால் தூய்மையான சிவயோகம் கிட்டும் என்றும் கூறுகின்றது.

4. அகஸ்தியர் சௌமிய சாகரம் 1200ல் சமுசார வழியிலிருக்க.

5. **தானான போதமய மறியா மற்றான்**
தரணிதனில் யோகியெனப் பேரெ டுத்து
வீனான மதுமாங்கி ஷங்கள் கொண்டு
மெய்மறந்து வாய்புலம்பி விசையுங் கெட்டு

ஊனான யில்வாழ்க்கை மயமுங் கெட்டு
உள்ளமதி கெட்டுஅறி வழிந்து போனார்
தேனான அமுர்தரச பானங் கொண்டு
தீர்க்கமுடன் இகபரத்தில் தெளிந்து நில்லே.

6. தெளிந்துறவாய் காயாதி கற்பங் கொண்டு
தீர்கமுட னில்லறத்தோ டிருந்து வாழ்ந்து
தெளிந்துமனத் தறிவாலே சிவயோ கத்தில்
தீர்க்கமுட னின்றுபரா பரத்தி லேகி
தெளிந்துநீ சிதம்பரத்தை நடனங் கொண்டு
தீர்க்கமுட னடனபத முடிவி லேகி
தெளிந்து பத்தன் மயமாய விண்ணு நோக்கி
சிவயகுருச் சின்மயமாய்த் தன்னைப் பாரே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். 11. இல்லை.

IV. 1. இல்லை 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —.. 3. இல்லை.

VI. இந்நூல் சிவயோகிகளுக்கு அறிவுரை கூறும் முறையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் சில

I. 1. **863**. 2. அ. R. 6922(a). ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் சில. ஆ. Akattiyar caumiya cākaram 1200-l cila. இ. அகத்தியர் சவுமிய சாகரம் 1200ல் தனித்திருந்து படிக்க. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள்

மட்டும். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம் பற்றிக் கூறும் நூல். 2. யோகம். 3. அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் என்ற இந்நூல் யோகியர்கள் கடைபிடிக்க வேண்டிய முறைகளைக் கூறுகிறது. மேலும் இவ்வுடம்பு நிலையாமை என்றும். வாழுகின்ற காலத்தில் யோகம் பயில வேண்டும் என்றும் வற்புறுத்துகிறது. யோகம் பயிலும் போது பல்வேறு இடையூறுகள் ஏற்படும். அதையெல்லாம் நாம் இலட்சியம் செய்யாமல் யோகம் பயில வேண்டும் என்றும் கூறுகிறது. கடலில் புயல் அடிக்கின்ற போது கப்பலுக்கு நங்கூரம் போட்டால் புயல் கப்பலை ஒன்றும் செய்யமுடியாது அதுபோல யோக நெறியில் நாம் இருக்கும் போது நம் உடம்பை எதுவும் ஒன்றும் செய்ய முடியாது என்றும் வலியுறுத்துகிறது.

4. சவுமிய சாகரம் 1200ல் தனித்திருந்து படிக்க.

5. அல்லாமாந் தேகத்தை அறிய வென்றால்
அடுத்தேரி உன்மனையில் நின்று பாரு
கல்லாமாங் கீழ்னோக்கிக் கண்டிப் பாத்து
கையினால் பிடித்துவிட மொன்று மில்லை
வல்லாமாம் லெட்சியங்கள் வழியாச் சானால்
வாராது நித்திரையும் பசியும் கேளு
புல்லாமா யுயிர்சத்தங் கேளாய் பக்கம்
பிறந்திருந்த லெட்சியத்தை பூட்டி முட்டே.

6. ஊணிப்போங் கப்பலுக்கு நங்கூரம் போட்டால்
உறுகின்ற வாசியைநீ உரைத்துக் காட்டி
ஆணிப்போம் அசையாமல் மனத்தை மாட்டி
அடியோடே அழுக்காறு தளத்தில் ஓட்டி
நாணிப்போம் புலன்தன்னைக் காட்டில் தாட்டி
நரிபரிக்கி கூடுவானம் பூட்டி காட்டி
மூணிப்போம் முளையடித்துக் குருப தத்தில்
பிடிக்கமுனிந்த நீராதரத்தில் மூட்டி ஓட்டே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் வாசியோகத்தை உவமை நயங்களுடன் எடுத்துக்காட்டியிருப்பது சிறப்பாக அமைந்துள்ளது.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் சில

I. 1. **864.** 2. அ. R. 6922. ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் சில. ஆ. Akattiyar caumiya cakaram 1200- l cila. இ. அகத்தியர் சௌவுமியம் 1200ல் தேவிபூசைச் சுருக்கம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. ஒரு பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள் மட்டும். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவபூசையைப் பற்றிக் கூறும் நூல். 2. தத்துவம். 3. அகத்தியர் சௌமிய சாகரம் 1200ல் சில என்ற இந்நூல் தேவிபூசை செய்து யோக மார்க்கத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறுகிறது. மனத்தை ஒருநிலைப்படுத்தி 'அங் மங் உங்' கென்று பதினாறு முறை உருச்செய்து வாசியை சுழிமுனைக்கு ஏற்றிச் சிவமாம் சோதியைக் காணலாம் என்றும் இதை அறியாமல் சிவ வேடர்கள் சக்கரம், யந்திரங்கள் வரைந்து வெகு நுணுக்கமாக உடம்மை வற்புறுத்தியும் யோகம் செய்வார்கள் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் சவுமியம் 1200ல் தேவிபூசைச் சுருக்கம்.

5. தானான வாலைசிவ பூசை கேளு
    தருவான ரூபமடா தாயார் வீடு
வாறான லாடமடா சிவமாஞ் சோதி
    மகத்தான சுழினையடா மவுனத் தந்தம்
கோனான ரிஷிகளுமோ யாருஞ் சொல்வார்
    கூர்மையுடன் அங்மங் உங்கென் றதோன்
ஊனான கேசரியில் மனக்கண் சாத்தி
    உத்தமனே பதினாரு உருவே செய்யே.

6. கூர்ந்துபா ருனதுமனங் கூர்ந்த போது
    கோடான கோடிபதம் பேர தாச்சு
தொந்தசட்ட மறியாம லுலகத் தோர்கள்
    சிவசிவா பூசைமடஞ் சிலைக்கா ரித்து
நொந்திசிவ சக்கரங்கள் யந்தி ரங்கள்
    நிலைநிறுத்தி வெகுநுணுக்கப் பூசை செய்வார்
சேர்ந்ததந்த பூசைவெகு சரிதை மார்க்கந்
    தனைநிறுத்திக் கிரிகையென்ற யோகம் பாரே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பிழைகளுடன் காணப்படுகின்றன. கிரிகை என்பது கிறிகை என்றும் மார்க்கம் என்பது மாற்க்கம் என்றும் வந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டநூல். 11. இல்லை.

IV. 1. இல்லை 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் வாத சௌமியம் 1200 என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட பாடலாக இருக்கலாம்.

அகத்தியர் ஞானம் 3

I. 1. 865. 2. அ. R. 4499. ஆ. T.R. 1988. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம். ஆ. Akattiyar cūttiram. இ. —. 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி S. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி. 1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 2. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 3; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானம் தொடர்பான செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. இந்நூல் மெய்ஞ்ஞானம், தியானம், தீட்சை முறைகள், மௌனவாழ்க்கை ஆகியவற்றைப் பற்றிக் கூறுகிறது. பேறுபெற வேண்டுமெனில் மௌனவாழ்க்கையில் வாழ வேண்டும் என்றும், சிவயோகம் பெற்றால் மோட்சம், ஞானம் ஆகியவை பெறலாம் என்றும் இந்நூல் கூறுகின்றது. இந்நூல், 'அகத்தியர் ஞானகாவியம் 1000' என்ற நூலின் சுருக்கமாகத் திகழ்வதை 'அருளினோம் ஆயிரத்தின் சுருக்க முற்றே' என்ற இந்நூலின் இறுதி அடிகளால் அறியமுடிகின்றது.

4. —.

5. ஆதியந்த மாதாரம் அகண்ட பாதம்
அடுத்துநின்ற நிராதாரந் துரத்துக் கப்பால்
சோதியந்த நகாரமடா பிரமன் வீடு
சுடரொளியால் ககாரமடா மாலின் வீடு
நீதிபெறு ஞானமொழி சிகார மப்பா
நிற்குணத்தி னுருத்திரனும் நிலைத்தார் பாரு
வாதியெனும் வகாரத்தில் மகேசன் தானும்
மனம்புத்தி யறிவுமதி விவேக முள்ளோன். 1

6. பேறுபெற வேணுமென்றால் மவுன வாழ்க்கை
பெறவேணும் சிவயோகம் பெற்றால் மோட்சம்
வாறுமென்ற வாயவடா ஞான மப்பா
மைந்தனே ஒன்றல்லோ மகத்தான வித்தை
தாறுமா றாகவல்லோ தீட்சை பெற்றால்
சாராது ஒருநாளுஞ் சாபம் போட்டோம்
ஆறுவரை கடந்துசரா சரங்கள் தாண்டி
அருளினோம் ஆயிரத்தின் சுருக்க முற்றே. 3

7. —.

8. மூலம். 9. பாட பேதங்கள் நிறைந்துள்ளன. 10. அகத்தியர் ஞானம் 1 என்ற நூலில் உள்ள 16 வரிகளாலாகிய ஒரே பாடலானது இங்கு 3 பாடல்களாக அமைந்துள்ளது. அகத்தியர், புலத்தியருக்கு ஞானஉபதேசம் செய்வது போலுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 193, R. 193(a). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் காவியச் சுருக்கம் 4,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சூத்திரம் 50 (R. 4500), அகத்தியர் 16 (R. 4501), அகத்தியர் கர்மகாண்டம் (R. 4502) முதலான பல நூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் ஞானம் 4

I. 1. **866.** 2. அ. R. 6441. ஆ. T.R. 2683. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம். ஆ. Akattiyar ñāṉam. இ. அகஷ்த்தியர் ஞானம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார் அன்பளிப்பாகக் கொடுத்த சுவடிக்கட்டு. 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 38x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. முதல் பக்கத்தில் 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 4 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் சித்தர் கொள்கைகளில் ஒன்றான ஞானத்தைக் கூறுவது. 2. ஞானம். 3. அண்ட பிண்ட தத்துவத்தை விளக்கும் 4 பாடல்கள் இந்நூலில் உள்ளன. பஞ்சபூதங்களான நிலம், நீர், காற்று, வாயு, தீ என்பனவற்றுள், பிருதிவியும் அப்பும் கூடினால் பெண்ணாகும் என்றும்,

ஆகாசமும் காற்றும் கூடினால் ஆணாகுமென்றும் முதல் பாடலில் கூறுகிறார். மேரு, எண் திசைகள், ஆடல், பூமி, இவற்றின் நீள அகலங்கள் இரண்டாவது பாடலில் பாடப்பெற்றுள்ளன. பூமியும் கடலும் ஒன்றுக்கு இருபங்காகும் என்றும் அதை எட்டெழுத்தால் அறிய முடியும் என்றும், மூன்றாம் பாடலில் கூறுகின்றார். இறுதிப் பாடலில், வானம், பூமி, இவற்றாலான அண்டம் சிவசக்தியினால் இருகூறாக உள்ளன எனவும் பேசப்பட்டுள்ளது.

4. கூறான அஞ்சு(ப்)பஞ்ச பூதந் தன்னில்(க்)
 குமரனென்றும் குமரியென்றும் பேருண் டோசொல்
தேறான தொன்றுமில்லை தெளிந்து பாரு
 தெளிவான ஆண்பெண்தான் யேதே தென்றால்
வீறான பிருதிவியும் அப்புங் கூடி
 மிகுந்திருந்தால்(ப்) பெண்ணாச்சு பின்பு கேளு
வாறான ஆகாசங் காத்துந் தீயு
 மலிவாக மிகுந்திருந்தால்(ப்) புருட னாமே. 1

5. வாறான மேருவுக்கு வீதி நீளம்
 வலுசமன மாயிரத்தெண் கோடி காதங்
கூறான திசையெட்டும் அகலம் நீளங்
 கோடிவேர் சினைதூரம் பாரு காண்டம்
மாறான சமுத்திரந்தா னதிலே ரெட்டி
 அப்பரத்தில் மண்கண்ட மிதிலே ரெட்டி
தேறான சமுத்ததிரந்தா னதிலும் ரெட்டி
 சென்றபின்பு பூமிரெட்டி தெளிந்து காணே. 2

6. காணப்பா சாகரந்தா னிதிலும் ரெட்டி
 கடந்தபின்பு பூமிரெட்டி சாகரமும் ரெட்டி
பூணப்பா பூமிரெட்டி புனல்தான் ரெட்டி
 பூமிரெட்டி அதுகடந்தால்(ச்) சாகரந்தான் ரெட்டி
னாமப்பா அப்பாலே பூமி ரெட்டி
 அதுக்கடுக்கச் சத்தசா கரமே யாச்சு
தோணப்பா கண்டறிநீ யெட்டெழுத்து னாலே
 தொல்லுலகமே னாலோகந் தோய்ந்து பாரே. 3

7. பாரப்பா வானமொன்று பூமி யொன்று
 பல்லாயி ரங்கோடி சுத்தி லண்டம்

நீரப்பா தீயப்பா காத்து னாலும்
நிலைதாங்கு மண்ணாலும் விண்ணா லும்சொல்
வாரப்பா யிவ்வளவும் சத்தி மூன்று
மகத்தான சிவமஞ்சுங் கலந்து கூடி
சேரப்பா அதினாலே பரியாக்கிச்
சிவசக்தி யிருகூறாய்த் தேக மாச்சே. 4

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்களான, பாரப்பா வாரப்பா, சேரப்பா, காணப்பா என்பன வந்துள்ளன. அந்தாதியில் பாடல்கள் உள்ளன. ழ/ள, ற/ர வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. 10. இப்பாடல்களை ஒத்த தனியொரு நூல் வேறொன்றும் அகத்தியர் பெயரில் கண்டறியப்படவில்லை. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் சுவடி மிகவும் சிதிலமாக உள்ளதால் அதிலுள்ள 4 பாடல்களும் இங்கே தரப்பட்டுள்ளன.

அகத்தியர் ஞானம் 5

I. 1. **867.** 2. அ. R. 8795(a). ஆ. T.R. 3114. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 5. ஆ. Akattiyar ñāṉam 5. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 3; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி 2 பாடல்கள். 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான, தீட்சை மார்க்கம் பற்றிய செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. இந்நூல் அப்பு, தேயு, வாயு பற்றியும், அகாரம், உகாரம் இவற்றை மேவி நின்று தீட்சையைப் பத்து மடங்கு செபித்தால் உலகம் அதற்குள்ளாகும்

என்றும், அண்டபிண்டம் நோக்குதல், இரவி மதியைக் காணுதல், குரு நிட்டைக்குள் புகுதல், பெரியோரைக்கண்டு தேறி அனுதினமும் வணங்கி மகிழ்ச்சியாக இருத்தல் வேண்டும் என்றும் பல செய்திகளைக் கூறுகிறது. யோகமும், ஞானமும், வாதமும், மருந்தும், தீட்சை முறையும் சித்தர்களின் இன்றியமையாத பாடுபொருள்கள் என்பது இந்நூலின் இறுதிப் பாடலிலிருந்து தெரிகின்றது.

4. —.

5. ஆதியந்த மிகநிறைந்த தீட்சை மார்க்கம்
அருள்பெற்ற புலத்தியனே சொல்லக் கேளு
சோதியந்தத் துள்ளிருக்கும் சுடரே போற்றி
சொல்லுகிறேன் அகாரமொடு உகார னோக்கி
வேதியந்தக் கமலத்தில் பொருளே யாகும்
வேதாந்தம் முடிந்ததுதான் யெட்டு ரெண்டும்
சாதியென்ற தீட்சையது அறிந்து பாரு
சத்தியந்தா னுந்தனுக்குத் தவறு வாறே. 1

6. ஆச்சென்ற பிண்டமது அண்ட மெல்லாம்
ஆச்சரியம் உன்மனையே என்ன சொல்வேன்
வாச்சென்ற அகண்டமதை நோக்கிப் பாரு
வாருதிபோல் ரவிமதியுந் தோணும் தோணும்
நீச்சென்ற குருநிட்டைக் குள்ளே புக்கி
நிலைச்சுதடா காயமாதில் ரூப மில்லை
லோச்சென்ற வயிவெல்லாம் மடலே புக்கி
அடங்கியேயுத் துப்பார்த்து யுண்மை தானே. 3

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. புலத்தியர்க்குக் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 280(o), R. 3631, R. 6214(e), R. 10658(a). 2. —. 3. இல்லை..

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் தீட்சைப் பாடல் 5,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை முதல்பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சாலநிகண்டு 200(R.8795), அகத்தியர் துடிநூல் (R. 8795(a) என்ற நூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் ஞானம் 6

I. 1. **868.** 2. அ. R. 10357(a). ஆ. T.R. 3969. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 6. ஆ. Akattiyar ñāṉam 6. இ. அகஸ்திய சுவாமிகள் ஞானம் 6. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 5; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 6 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான மார்க்கம், தியானம் ஆகியவற்றைப் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம். 3. இந்நூல் சிவன் உபதேசித்த செய்திகள், பஞ்ச பூதத்தின் இயல்புகள், ஆறாதாரத் தத்துவங்கள், குண்டலினி யோக நெறிமுறைகள், தியான முறைகளான சிவபூசை, சத்தி பூசை, சரசுவதி பூசை, சந்திரன் பூசை, சூரியன் பூசை முதலானவை பற்றியும் கூறுகிறது. மேலும், ஞானசித்தி, காயசித்தி பற்றிய செய்திகளும், வெளி (ஆகாயம்), மண் (பிருதுவி), அப்பு (நீர்), தேயு (தீ), வாயு (காற்று) என்னும் பஞ்ச பூதங்களின் சேர்க்கைகளும், ஞானயோக நெறிமுறைகளும் இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

4. அகஸ்திய சுவாமிகள் ஞானம் 6

5. பாரப்பா சீவன்விட்டுப் போகும் போது
பார்த்தவர்கள் பிணங்கிடக்குதென்பார் யுயிர்போச்
சென்பார்
ஆரப்பா லறிந்தவர்கள் ஆரு மில்லை
ஆகாய சிவத்துடன் சேரு மென்பார்

காரப்பா தீயுடனே தீச்சேரு மென்பார்
கருவறியா மானிடர்கள் கூட்ட மப்பா
சீரப்பா காமிகள்தான் னொன்றாய்ச் சேர்ந்து
தீயவழி தனைத்தேடிப் போவான் மாடே. 1

6. கழிந்திடுவார் பாவத்தா லென்று சொல்லும்
கட்டியானால் வேதனொடு ஆறுசாஸ் திரமும்
அழிந்திடவே சொன்னதல்லால் வேறொன்று மில்லை
அதர்மமென்றுந் தர்மமென்று மிரண்டுடன் தாக்கி
ஒழிந்திடுவா ரென்றுசொல்லி பிறப்புண் டென்றும்
உத்தமனாய் பிறப்பனென்று உலகத் தோர்கள்
தெளிந்திடுவார் குருக்களென்றுஞ் சீஷ ரென்னும்
சீவனதுக் கங்கேயல்லோ தெளிந்து காணே. 6

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் ஞானம் 16 (R. 10357(b) என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் ஞானம் 12

I. 1. **869.** 2. அ. R. 4214(a). ஆ. T.R. 1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானச் சுருக்கம். ஆ. Akattiyar ñāṉac curukkam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 5; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது.

13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான மார்க்கம் பற்றிய செய்திகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் ஞானம் 12 என்ற இந்நூலின் முதல் பாடலில் ஞானம் பயில வேண்டுமாயின் பன்னிரெண்டு விதமான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி, அடுத்துள்ள பாடல்களில் நம் உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறு தானங்களில் காற்றை உள்ளிழுத்து வெளிவிடும் முறைகள் கூறப்படுகின்றன. மேலும், பிரணாயாமம் செய்யும் முறையையும், குறிப்பாக ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'திருச்சிற்றம்பலத்தைக் கண்டு தெரிசிக்க அவர்க்கு முத்தி சித்தியாமே' என்றும் கூறுகின்றது.

4. —.

5. பன்னிரண்டு காலான புரவி யப்பா
பாங்கான மூலவெளி தன்னில் நிற்கும்
நன்னயமாய் வாசிதனி லேறிக் கொண்டு
நாடியந்த நடுவீடு தன்னிற் சென்றால்
முன்னின்ற முப்பாலுக் கப்பா லேகி
முகப்புண்டு முச்சந்தி வந்து கூடுஞ்
சின்னஞ்சிறு வாசல்கடந் தப்பால் சென்றால்
சிதம்பரமுங் காணமுத்தி சித்தி யாமே. 1

6. குருவான உமைப்பாக ரெனக்குத் தந்தை
கூறிய ஞானமது பன்னி ரெண்டும்
பொருளாகச் சொல்லிவிட் டே னப்பா நீங்கள்
பொருளறிந்தால் பூரணமும் பொருந்திக் காணும்
பெறுவார்க ளின்னூலைப் பழித்த பேர்கள்
பெருநரகிற் பிசாசாகப் பிறப்பிப் பாரே
அருளாக ஆராய்ந்து நோக்கும் போது
ஆகாயம் நின்றநிலை யறிய லாமே. 12

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 280(l), R. 10660, D. 2348. 2. ஆ.நி.எண்கள் 178(d), 477(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன், (பதி.), **அகத்தியர் சுத்த ஞானம்,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் கலை ஞானம் 12 (R.4208), போகர் சூத்திரம் 50 (R.4231) முதலிய பலநூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் ஞானம் 16

I. 1. **870**. 2. அ. R. 10357(b). ஆ. T.R. 3969. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 16. ஆ. Akattiyar ñāṉam 16. இ. அகஸ்தியர் ஞானம் 16. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 8. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 16; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானம், யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், யோகம். 3. இந்நூல், அகத்தியர் பூரண சூத்திரம் 216ன் சுருக்கமாகும். பூரணத்தைத் தெய்வமென்றுரைத்தல், வாரணத்தை மனம் வைத்துப் பூரணத்தைக் காக்க வேண்டுதல், வாசியோகம், சிவயோகம், ஆறாதாரங்கள், சிவதீட்சை பதினொன்றின் விவரம், கற்பம் உண்ணும் முறைமை, குளிகை செய்தல், பூசைவிதி, பிரணாயாமம், சமாதி கட்டும் வகை, முதலான பல செய்திகளை இந்நூல் தருகின்றது.

4. அகஸ்தியர் ஞானம் 16

5. **பூரணமே தெய்வமென்று ரைத்தா ரய்யா**
பூரணத்தை யின்னவென்று புகல வேணும்

காரணத்தைச் சொல்லுகிறேன் நினைவாய்க் கேளு
கலையான பதினாறும் பூரணமே யாகும்
மாரணமா முலகத்தில் மதிம யங்கி
மதிகெட்டு பூரணத்தை யிகழ்ந்தா ரய்யா
வாரணத்தை மனம்வைத்து பூரணத்தைக் காத்தான்
வாசியென்ற சிவயோக வாழ்க்கை யாச்சே. 1

6. பிரித்துரைத்தேன் சூத்திரமீ ரெட்டுக் குள்ளே
பித்தர்களே நன்றாகத் தெரிந்து பார்க்கில்
விரித்துரைத்த நூலினது மார்க்கஞ் சொன்னேன்
விள்ளாதே யிந்தநூலி ருக்கு தென்று
கருத்துடனே யறிந்துகொண்டு கலைமா றாதே
காரியத்தை நினைவாலே கருத்திற் கொள்ளு
சுருத்துட னவற்றையெல்லாம் சுருக்கிச் சொன்னேன்
சூஷிரம்போல் பதினாறுந் தொடுத்தேன் முற்றே. 16

7. அகஸ்தியர் ஞானம் 16ம் முற்றிற்று.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் ஞானச்சுருக்கம் 16,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, இரண்டாம் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் ஞானம் 6 (R. 10357(a)) என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் ஞானம் 30

I. 1. **871.** 2. அ. R. 4209. ஆ. T.R. 1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 30. ஆ. Akattiyar cūttiram 30. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 6. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 12; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானம், யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், யோகம். 3. சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் சித்தர்களின் தத்துவக் கொள்கைகளில் ஞான மார்க்கம் கூறுகிறது. அகத்தியர் ஞானம் 100 என்ற நூலின் சுருக்கமாகும். அயன், அரி, அரன் ஆகிய மும்மூர்த்திகளின் வரவு, பிரபஞ்சத்தை இறைவன் படைத்தது, சக்தி என்னும் தேவி எங்கும் நிறைந்து அருள் பாலிக்கும் செய்தி, முனிவர்களும் சித்தர்களும் தோன்றி, மனித வாழ்வுக்குரிய உபதேசங்கள் மற்றும் மருந்துகள், சிவபூசை, திருநீற்றின் பெருமை முதலான பல செய்திகளை இந்நூல் தருகின்றது.

4. —.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
    பூமியென்றுந் திகரியென்றும் படைத்து வாறும்
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறும்
    கற்பமுண்டு ரிஷிகள்சித்தர் கண்ட வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சீவன்
    மானிடர்கள் கூறுகின்ற குலத்தன் வாறும்
பாரணமாய் னால்வேதம் வகுத்த வாறும்
    பாடினேன் முப்பதுக்குள் பாடி னேனே. 1

6. ஓடுகின்ற வகைகளெல்லா முரைத்துப் போட்டேன்
    உலகமது மார்க்கமெல்லாஞ் சொல்லி விட்டேன்
தேடுகின்ற புராணமெல்லாம் பொய்யே யென்றேன்
    சிவன்பிரம்மா விஷ்ணுவின் பெயர்க ளென்றேன்
ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசுத்த மென்றேன்
    .... பண்ணுகிற அகத்தை சொன்னேன்
பாடுகின்றேன் முப்பதுக்குள் முடித்துப் போட்டேன்
    பரமசிவன் சொற்படிக்குப் பாடி னேனே. 30

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D.2390. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் ஞான விளக்கம் 34,** அகத்தியர் ஞான அமுதம், தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் ஞானம் 100 (D.4237), கடைப்பிள்ளை தண்டகம் 50 (D.4231) முதலான நூல்களும் உள்ளன.

அகத்தியர் ஞானம் 100

I. 1. **872.** 2. அ. R. 6994. ஆ. T.R. 2814. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 100. ஆ. Akattiyar ñāṉam 100. இ. அகஸ்தியர் நாயன் ஞானநூல். 4. —. 5. —. 6. முத்துராமலிங்கம். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 25. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 50; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 101 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம் பற்றிக் கூறி, சிவத்தை வழிபடும் முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. 'அகத்தியர் ஞானம் 100' என்ற இந்நூல் முதலாவதாக ஞான மார்க்கத்தில் எழுதுவோன் முதலில் நெடுநாள் வாழ்வதற்குரிய காயகற்பங்களைச் செய்து உண்ண வேண்டும் என்றும் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையும் கடைபிடித்த பின்னரே ஞானம் அடைய முடியும்

என்றும் கூறுகின்றது. ஞானம் பற்றிய பாடல்கள் மந்திரங்களாக இருப்பதால் இவற்றை உச்சரிப்போர்க்கு உடம்பிலுள்ள அனைத்து வியாதிகளும் போய்விடும் என்பதும் உணர்த்தப்படுகிறது. அதனால் ஞானமும் மருத்துவமும் கலந்த நூலாக இது உள்ளது. மேலும் மும்மூர்த்திகள் வரலாறு, பூமியையும் மலைகளையும் அவர்கள் படைத்தமை, சக்தி எங்கும் வியாபித்துள்ள நிலை, மூன்று கற்பங்கள், முனிவர்கள், பூரணத்துவம், உயிர்களின் பிறப்பு, புல், பூண்டு, மரம், செடி, கொடிகள் தோன்றியமை, பாதாளமும் கடலும் தோன்றியமை, அண்டகோள உற்பத்தி, தீட்சைகள் இயல்பு, பூசைவிதி, சக்கரம், இரேகையியல்பு, சிதம்பரச் சக்கரத்தின் இயல்பு, சிவசக்தி, அட்டாங்கங்கள், உபதேசவாதி, அனுட்டானம், ஞானசித்தி, காயசித்தி, புத்தி சித்தி, இரசவாத சித்தி, ஐம்பூதங்களின் சேர்க்கை, ஈரெழுத்துக்களின் கருக்கள் மூவெழுத்துக்களின் இயல்பு இவற்றின் தத்துவங்கள். சட்டைமுனி, போகர், திருமூலர், கொங்கணர், பிரமமுனி, மச்சமுனி, வாசமுனி, புண்ணாக்கீசர், நந்தீசர் போன்றோர் திறம்பட உரைத்த ஞானயோக நெறிமுறைகள், ஞான மார்க்கத்தார் இரசவாதம் செய்யும் முறைகள் ஆகியன இந்நூலுள் கூறப்பட்டுள்ளன.

4. அகத்திய நாயன் ஞானநூல்.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
  பூமியென்றுந் திகரியென்றும் படைத்த வாறும்
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறும்
  கற்பமுண்ட ரிஷிகள் சாகாத வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சென்மம்
  மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் வாறும்
பருவதமாய் விருட்சமாய் பல்ல தாகிப்
  பாதாள சாகரமும் படைத்த வாரே. 1

6. வெளியோடே வெளிசேரு மீறுந் தண்ணீர்
  விதமாக அப்புடனே சேர்ந்து போகும்
வெளியோடே தேயுவதில் சேர்ந்து போகும்
  உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்
அழியாத வாயுவிலே வாய்வு சேரும்
  அஞ்சுமொன்றா கூடினா லாற வாகும்

வளியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டு
மானிடரே காயசித்தி ஞான முத்தே. 101

7. குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பேச்சு வழக்குடன் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. பிரம்மமே நித்தியம் இந்த ஞானம் நூறு இராமனாதபுரஞ் சீமைக.....தாலுக்காச் செசல இறுகையாங் கோவில் கிராமங் குளத்தூர் முத்திருளப்பன் குமாரன் முத்துராமலிங்கம் கையட்சரம். ஷயான் சாஷ்த்திரம்.

IV. 1. R. 9, R. 254(i), R. 255(a), R. 943(j), R. 3678, ,R. 4200, R. 4755, R. 6099, D. 1829, R. 10753. R. 9413, R. 261(d), R. 261(c), D. 332(a), R. 4237, R. 7093, R. 7004, R. 6466, D. 1830, D. 1881, D. 2315. 2. த.ச.ம.நூ. எண்கள் 640(a), 708. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. ஞானமார்க்கம் பற்றிக் கூறும் சிறந்த நூலாக இந்நூலைக் கொள்ளலாம்.

அகத்தியர் ஞானம் 100

I. 1. **873.** 2. அ. R. 4237. ஆ. T.R. 1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 100. ஆ. Akattiyar ñāṉam 100. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 16. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 32; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம் பற்றிக் கூறி, சிவத்தை வழிபடும் முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. வரிசை எண் 872 போன்றது.

4. —.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
   பூமியென்றுந் திகரியென்றும் படைத்த வாறும்
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறும்
   கற்பமுண்டு ரிஷிகள்சா காத வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சீவன்
   மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் வாறும்
பருவதமாய் விருட்சமாய் பல்ல தாகிப்
   பாதாள சாகரமும் படைத்த வாரே. 1

6. வெளியோடே வெளிசேரு மீறுந் தண்ணீர்
   விதமாக அப்புடனே சேர்ந்து போகும்
ஒளியோடே தேயுவதில் சேர்ந்து போகும்
   உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்
அழியாத வாயுவிலே வாய்வு சேரும்
   அஞ்சுமொன்றா கூடினா லாற வாகும்
வளியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டு
   மானிடரே காயசித்தி ஞான முற்றே. 101

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 9, R. 254(i), R. 255(a), R. 943(j), R. 3678, R. 4200, R. 4755, R. 6099, D. 18, R. 10753. R. 9413, R. 261(d), R. 261(c), D. 332(a), R. 7093, R. 7004, R. 6466, D. 1830, D. 1881, D. 2315. 2. த.ச.ம.நூ. எண்கள் 640(a), 708. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், வியாக்கிரபாதர் சமாதி 8 (R. 4235), சுப்பிரமணியர் சுத்த ஞானம் 200 (R. 4236) முதலிய பலநூல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தியர் ஞானம் 100

I. 1. 874. 2. அ. R. 7093. ஆ. T.R. 2856. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 100. ஆ. Akattiyar ñāṉam 100. இ. அகத்தீசுரர் நாயன் ஞானம் னூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 39. 5. 21x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 76; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம் பற்றிக் கூறி, சிவத்தை வழிபடும் முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம், யோகம். 3. வரிசை எண் 872 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகத்தீசுரர் நாயன் ஞானம் னூறு.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகிரியென்றும் படைத்த வாறுங்
காரணமாய்த் தேவியெங்கும் நிறைந்த வாறுங்
கற்பமுண்டு ரிஷிகள்சா காதவாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சென்மம்
மானிடரா யூறுகின்ற கொலத்தின் வாறும்
பாரவதமாய் விருட்சமாய் புல்ல தாகிப்
பாதாள சாகரமும் படைத்த வாறே. 1

6. வெளியோடே வெளிசேரு மீறுந் தண்ணீர்
விதமாக அப்புடனே சேர்ந்து போகும்
வெளியோடே தேயுவதில் சேர்ந்து போகும்
உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்
அழியாத வாயுவிலே வாய்வு சேரும்
அஞ்சுமொன்றா கூடினா லாற வாகும்

வழியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டு
மானிடரே காயசித்தி ஞான முத்தே. 101

7. அகத்தீசுரர் நாயன் ஞானவுரை எழுதி முகிந்தது முற்றும். குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பேச்சு வழக்குடன் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. ராசு கவுண்டர் ஞான சாஷ்த்திரம் எடுத்தவன் கொடுக்கவும். குருவே துணை.

IV. 1. R. 9, R. 254(i), R. 255(a), R. 943(j), R. 3678, R. 4200, R. 4755, R. 6099, D. 1829, R. 10753. R. 9413, R. 261(c), R. 261(d), D. 332(a), R. 4237, R. 6994, R. 9413, R. 7004, R. 6466, D. 1830, D. 1881, D. 2315. 2. த.ச.ம.நூ. எண்கள் 690(a), 708. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், சட்டைமுனி 100 (R. 7094), கொங்கணர் வாக்கியம் (R. 7095), நந்தியுரை மவுனம் (R. 7096) முதலிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் ஞானம் 100

I. 1. **875.** 2. அ. R. 7004. ஆ. T.R. 2821. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 100. ஆ. Akattiyar ñāṉam 100. இ. அகத்தியர் பாடல் ஞானம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார் தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 32. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 64; இரு பக்ககமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம் பற்றிக் கூறி, சிவத்தை வழிபடும் முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. வரிசை எண் 872 போன்றது. 4. —.

5. பூரணமாய் மும்மூர்த்தி வந்த வாறும்
பூமியென்றுந் திகரியென்றும் படைத்த வாறும்
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கற்பமுண்டு ரிஷிகள்சித்தர் சாகாத வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சென்மம்
மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் வாறும்
பருவதமாய் விருட்சமாய் பல்ல தாகிப்
பாதாள சாகரமும் படைத்த வாறே. 1

6. வெளியோடே வெளிசேரு மீறுந் தண்ணீர்
விதமாக அப்புடனே சேர்ந்து போகும்
வெளியோடே தேயுவதில் சேர்ந்து போகும்
உத்தமனே மண்ணுடனே மண்ணுஞ் சேரும்
அழியாத வாயுவிலே வாய்வு சேரும்
அஞ்சுமொன்றா கூடினா லாற வாகும்
வளியோடே யிவ்வண்ண மறிந்து கொண்டு
மானிடரே காயசித்தி ஞான முற்றே. 101

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், பேச்சு வழக்கு, பரிபாசையுடன் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 9, R. 254(i), R. 255(a), R. 943(j), R. 3678, R. 4200, R. 4755, R. 6099, D. 1829, R. 10753. R. 9413, R. 261(c), R. 261(d), D. 332(a), R. 4237, R. 7093, R. 6466, D. 1830, D. 1881, D. 2315. 2. த.ச.ம.நூ. எண்கள் 640(a), 708. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. உயிர்களின் பிறப்பு, புல், பூண்டு மரம் செடி கொடிகள், பாதளம், கடல், அண்ட கோள உற்பத்தி பற்றிக் கூறும் இந்நூற் செய்திகள் ஆய்வுக்குரியன.

அகத்தியர் ஞானம் 100

I. 1. **876.** 2. அ. R. 6466. ஆ. T.R. 2965. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானம் 100. ஆ. Akattiyar ñāṉam 100. இ. அகஸ்தியர் ஞானநூல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1957-58.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 13. 5. 11x2 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இரு பக்ககமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 முதல் 6 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. நடு, இறுதி. 17. 14 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம் பற்றிக் கூறி, சிவத்தை வழிபடும் முறைகளைக் கூறும் நூல். 2. ஞானம். 3. வரிசை எண் 872 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக அகத்தியர் ஞானநூல்.

5. **பூரணமா மும்மூர்த்தி வந்த வாறு**
பூமியென்றுந் திகரியென்றும் படைத்து வாறு
காரணமாய் தேவியெங்கும் நிறைந்த வாறும்
கற்பமுண்டு ரிஷிகள் சாகாத வாறும்
வாரணமாய்ப் பறவையொடு நாற்கால் சீவன்
மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் வாறும்
பருவதமாய் விருட்சமாய் பல்ல தாகிப்
பாதாள சாகரமும் படைத்த வாறே. **1**

6. **சாகாம லிருப்பதற்கு யிந்தக் கல்வி**
தனையறிந்த காவலன்யோகி யவனே ஞானி
வேகாமல் வேகுமோ வமுதங் கொண்டால்
வெளியாகும் வேதாந்த சார மெல்லாம்
ஆகாச மாயிரத்தென் மவர்க்குள் ளாக
அமுர்தமங்கே யிருக்குதடா வறிந்து பாரு
தேகமெல்லாம் வச்சிரமிட்ட காய மாகும்
சீவனாங் கற்பத்தைத் தெளிந்து பாரே. **14**

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், சொற்கள் பிழைகளுடன், பரிபாசையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R.9, R. 254(i), R. 255(a), R. 943(j), R. 3678, ,R. 4200, R. 4755, R. 6099, D. 1829, R. 10753. R. 9413, R. 261(c), R. 261(d), D. 332(a), R. 4237, R. 7093, R. 7004, R. 6994, D. 1830, D. 1881, D. 2315. 2. த.ச.ம.நூ. எண்கள் 640(a), 708. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் மிகவும் சிதைந்துள்ளது. 100 பாடல்கள் கொண்ட இந்நூலில் பதினான்கு பாடல்களே கிடைத்துள்ளன.

அகத்தியர் ஞானவுண்மை

I. 1. 877. 2. அ. R. 4531. ஆ. T.R. 1998. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணா மூர்த்தி ஞானவுண்மை. ஆ. Akattiyar ñāṉavuṉmai 100. இ. தெட்ஷணாமூர்த்தி ஞானவுண்மை 100. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. வத்திராயிருப்பு, திருமதி மாகலிங்கம் பிள்ளை அன்பளிப்புச் செய்தது. 10. கி.பி.1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 70. 5. 17x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 133; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 134 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞானமார்க்கம் கூறும் நூல். 2. ஞானம். 3. ஞானத்தை அஞ்செழுத்து மந்திரத்தால் அறியவேண்டும் என்றும், தீட்சை பத்துவகை என்றும், வேதகுருக்களுக்கு உதவ வேண்டுமென்றும், வேத வியாசர் சொல் மதிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அடுத்து, பானம் என்பதன் இயல்பும், அதைத் தயாரிக்கும் முறைகளும், சோதியின் இயல்பும், பூசை முறைகளும், இரசவாத மருந்துகளும், கருக்குருவும், மந்திர எழுத்துக்கள் பற்றியும் பாடப்பெற்றுள்ளது. மண்ணும் விண்ணும் மனிதரும், வானவரும் பாடப்பெற்றுள்ளனர். கிரகங்களின்

பலன்கள், நாடிகளின் இயல்புகள், வேதாந்தக் கருத்துக்கள், சித்தாந்தக் கருத்துக்கள், நோய்தீர்க்கும் மருந்துகள், அவற்றின் செய்முறைகள், யோக மார்க்க விதிமுறைகள், மானிடர்கள் நோயின்றி நல்வாழ்வு வாழுதற்கான முறைகள் என்பன போன்ற செய்திகள் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன.

4. அரிஓம் நன்றாக.

5. சொல்லவு நிலையை உருவமோ யெனவோ
தோற்றிட ஆரேனு முண்டோ
யில்லையோ உண்டோ யென்றன்ன முன்னா
ளிருந்தது மொரு ருவாசி
வல்லியாய் விளங்கும் சீவ்வன் னெனவே
வந்ததே யுகமெவ் வாறும்
சொல்லிய விழியர் யாளு மெஞ்ஞானந்
தேர்த்துமே பூரண மாகும். 1

6. சூட்சமா யுஞ்சலிலே வொயிலா யாடிச்
சொறிகுழலில் மாதுளம்பூக் கொன்றை சூடி
ஆட்சியிவள் ஒருகாக மடித்து நீட்டி
யங்கையிலே வீணைகொண்டு கரத்தால் மீட்டித்
தாட்சியில்லா தறுபத்து னாலு ராகம்
சமத்தியவ ளனுராகம் பாடிப் பாடி
காட்சிபெற அரணாரு மாட்ட மாடக்
கன்னியிவள் திகம்பரமா யாடி னாலோ. 133

7: —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றுள்ளன. ற/ர, ழ/ள வேறுபாடு ஏட்டில் எழுதும்போது கடைப்பிடிக்கப்படவில்லை. 10. மருத்துவ நூல்களைப் போல் ஞான நூல்களும் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளன. பாடல்களில் அகத்தியர் பெயர் குறிப்பிடப் படவில்லை. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அ.கீ.சு.நூ. அட்டவணையில் இந்நூல் R. 175 ஐப் போன்றதே என்று குறிப்பிடப்பட்டுள்ளதாயினும் அவ்வாறானநூல் எதுவும் காணப்படவில்லை.

அகத்தியர் ஞானவுலா

I. 1. **878.** 2. அ. R. 10226(b). ஆ. T.R. 3881. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் ஞானவுலா. ஆ. Akattiyar ñāṉavulā இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 13. 5. 25x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 26; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. கலிவெண்பா. 15. குறை. 16. முதல் 21 ஏடுகள். 17.

ஆ. —.

III. 1. ஞானம் மற்றும் யோக மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம். 3. அகத்தியர் பெயரால் அமைந்த இந்நூல் ஞானமார்க்கத்தில் நிற்பதற்குரிய நெறிமுறைகளை வரன்முறைப்படுத்திக் கூறுகின்றது. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை எனப்படும் ஆறாதாரங்களின் மூலம் புத்தியைச் (மனத்தைச்) செலுத்தி ஞானம் பெறுவதற்குரிய நிலைகளைக் கூறுகின்றது. மேலும், இந்நூலானது பாசாணம், மாள்கெந்தி, உப்பு, துருசு, துத்தம், பூநீறு, செயநீர், வெள்ளைச் சுண்ணாம்பு, சுண்ணம், அண்டநீர் முதலான பலவகை இரசவாதப் பொருள்கள் பற்றியும் அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் கூறுகிறது.

4. —.

5. நன்றுநன்று யென்னுயிது னான்சொன்ன மனதிலுள்ளோர்

கேளுங்க ளின்னங் கெடுயோகி செய்தொழிலை
மாளுகின்ற பாசாணம் மாள்கெந்திச் - சூளுகின்ற

உப்புத் துருசு துத்தம் ஓங்குசெடி பூடுவனம்
குப்பை யைக்கிற வெகுகோடிகாண் - அப்பாகேள்

கொண்டுவந்து சுட்டலைந்து கூறுகெட்டுப் பெண் தேடும்
சண்டாள மூதேவி தப்பிள்தான் - கண்டானோ

வாய்க்காது ஞானம்வருமோ சிவதீட்சை.

6. கட்டிதனிலே திருகுகள்ளிப் பால்சாரணை வேர்க்
கெட்டியாய்ப் பூனீறால் கிண்டியே - திட்டமுடன்

தீய்தனிலே வாட்டச் செயநீராம் வாள்துரிசில்(த்)
தோய்த்திடவே சுத்தவெள்ளைச் சுண்ணாம்பாம் -
தீய்தனிலே

காச்சி அண்டநீரில் காசமொடு கல்லானை
வாச்சுதென்று சாகும் மதத்தினால் வாச்சு சுண்ணம்

சொல்லாதே யாவருக்குத் தோற்றாத பூனீரை
வல்லார் குருவாக பாட்டினால்க் - கல்லான

வன்மலையுமே பழுக்கும் வாதமொடு ஞானவுலா
உண்மை யிந்தநூல் காட்ட வொண்ணாது-நன்மைபெறுஞ்

சித்தருக்கு ஞானபரை தேசிகனார் தன்னிருதாள்
முத்தியிது யிருனூறு முற்றும்.

7. தெண்டபாணியுடைய கிறுகிடாஷத்தினாலே
ஞானவுலாயிருனூறும்.

8. மூலம். 9. பாடல்கள் உலா நூல் அமைப்பில் அமைந்துள்ளன. ற/ர, ழ/ள எழுத்துக்கள் வேறுபாடு இல்லாமல் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. விரோதிகிருது வருஷம் ஆனி மாதம் தோஷ்த்தானங்குப்பம் பாளையத்திலிருக்கும் கவரைப்பட்டி சாதி புட்டனாயக்கன் குமாரன் நரசய்யன் யெழுதினது முற்றும். பதினெண்பேருடைய பாதபங்கய கமலமே கெதி.

IV. 1. R.150(d). 2. சி.ம.மை.ஆ.நி.எண். 797(p). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் சௌமிய சாகரச் சுருக்கம் (R,10226(a)) என்ற நூலும் இடம்பெற்றுள்ளது.

அகத்தியர் தத்துவம்

I. 1. **879**. 2. அ. R. 2265. ஆ. T.R. 1285. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தத்துவம். ஆ. Akattiyar tattuvam. இ. அகஷ்த்தியர் சுவாமிகள் பாடிய தத்துவம் முன்னூறு.

4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. சென்னை மாம்பலம் போக் தெருவைச் சேர்ந்த ஏ.எம். கோபல அய்யரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டில் உள்ள நூல். 10. கி.பி. 1949-1950.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 40. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 80; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் 258 ஆம் பாடலுக்கு மேலானவை இல்லை. 16. குறை. 17. (1 முதல் 258 பாடல்கள் இருப்பதாகத் தோன்றினாலும் இடையிடையே பலபாடல்கள் எண்கள் தவறுதலாகவிடப்பட்டுள்ளன.) 116 பாடல்கள் உள்ளன.

ஆ. —.

III. 1. பல்வேறு சித்தர்கள் கூறிய மருந்தான மறைப்பு மற்றும், பற்பம், மெழுகு, இரசமணி, வாத மருந்துகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், சட்டைமுனி மறைப்பு, சுந்தரானந்தர் மறைப்பு, கொங்கணர் மறைப்பு, கருவூரார் மறைப்பு, மச்சமுனி மறைப்பு, திருமூலர் மறைப்பு, கமலமுனி மறைப்பு, கோரக்கர் மறைப்பு, பிரம்மமுனி மறைப்பு, ரோமரிசி மறைப்பு எனும் மறைப்பு மருத்துவ முறைகளும், கருவூரார் தயிலம், மச்சமுனி ரசமணி கட்டல், போகர் பற்பம், பிரம்மமுனி வீரமெழுகு முதலான பிற வைத்திய முறைகளும், கூறப்பட்டுள்ளன. மேலும், வாத மருந்துகளும் இடம்பெறுகின்றன.

4. ஓம் நன்றாக.

5. அத்தோ பதஞானமென்னுந் தத்துவ ஞானத்தை
சித்தி பெறுவார்(த்) தறவார் பித்தாரி யாரே. 1

தத்துவர் வதனையறிந் தெத்தொழிலுஞ் செய்வார்
கத்துச(ை)ம யங்கள்பல வித்தையறி வாரே. 2

ஆச்சப்பா யிருபத்து அஞ்சு சித்தும்
ஆதியென்ற திஷ்சைணா மூர்த்தி தானும்
பேச்சப்பா யென்னுடனே னால்வ ருக்கும்
பேராக ஆதியிலே யுபதே சித்தார்

நீச்சப்பா செல்வரினும் ஒன்பதுபே ராச்சி
நிலையான ஒன்பதிலும் நவகோடி யாச்சி
வாச்சப்பா சித்தியெல்லா மடைந்த பேர்க்கு
மனுஷனல்ல தெய்வமவன் மக்காள்(ப்) பாரே.

6. போச்சப்பா பதினெண்பேர் நூல்க ளெல்லாம்
பொய்யாகிப் போகாமல் தத்து வத்தில்(ச்)
நீச்சப்பா தத்துவனூ லுலகில் கிட்டில்
நிஷ்ஷையமா ரசபோக சித்த ராவர்
ஆச்சப்பா தத்துவத்தை யுணர்ந்தோன் சித்தன்
அறியாதான் சுட்டலைந்து அலைவான் பாரு
நீச்சப்பா தத்துவத்தில் நிலைக ளெல்லாம்
நிரைநிரையாய்ச் சொல்லுகிறேன் வாத முற்றே. 108

7. பலனூலில் வாத மருந்து

பாரப்பா சித்த ரெல்லாங் காயசித்தி
பாடினார்க் காயசித்தி பண்ணி யேற
நேரப்பா வாதசித்தி பண்ணச் சொல்லி
நிலைத்தபின்பு காயசித்தி பண்ண வேணும்
வாரப்பா வாதம் விட்டுக் காயசித்தி தானும்
....
....
சைமதுதா னரிதரிதான் செகத்தில(த்) தானே. 250

கொள்ளப்பா தேகமது அருணன் போலாம்
குழைந்தைமுகம் போலவுந்தான் சிவந்து மின்னும்
வள்ளப்பா நாடியெல்லாம் முறுக்கு மேலும்
விரைந்ததிரை சடமிறுகி நதைஉதிர்ந்து முளைக்கும்
தள்ளப்பா(க்) கண்ரெண்டும் சிவந்துப் போகும்
தந்தமெல்லாம் வச்சிரம்போ லிருகிப் போகும்
கள்ளப்பா மதியமுர்த்தம் தாரை யோடுங்
காமப்பால் வெகுவிருத்தி யாகும் பாரே. 258

8. மூலம். 9. ற/ர வேறுபாடின்மை காணப்படுகிறது. வடமொழி எழுத்துகள் பயின்று வருகின்றன. பேச்சு மொழிச் சொற்கள் வந்துள்ளன. 10. தட்சிணாமூர்த்தி அகத்தியர் உட்பட நால்வர்க்கு இந்நூலைக் கூறினார் என்பதும், பதினெண் சித்தர்கள் பற்றிய கருத்தும் கூறப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 2265, R. 3721. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 1370, த.ச.ம.நூ.எண் 387(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் தத்துவம் 300,** அகத்தியர் தீட்சா விதி முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.

VI. இந்நூல், 11ஆம் பாடல் முதல் தொடங்குகிறது. 12 முதல் 20 பாடல்கள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. பின்பு (1) 21 முதல் (1) 23 பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. மீண்டும் 24ஆம் பாடல் தொடங்கி 108 பாடல்கள் வரை உள்ளன. 108 ஆம் பாடலில் 'வாத முற்றே' எனவருகிறது. அதன்பின் இடைவெளிவிட்டு 157ஆம் ஏட்டின் மறுபக்கத்தில் 'பலநூலில் வாத மருந்து' எனத் தலைப்பிட்டு, 'பாரப்பா சித்தரெல்லாம் எனத் தொடக்கமுள்ள 251 ஆம் பாடல் தொடங்குகிறது. 258ஆம் பாடலுடன் முடிகிறது. இவற்றை வைத்துப் பார்க்கும் போது இந்நூல் ஒரு திரட்டு நூலாகத் தெரிகிறது. ஏடு எழுதியவர் குறிப்பாக, முகப்பு ஏட்டில் இச்சுவடிக்கட்டு 87-ஆம் எண்ணில் வருவது என்பதும் (87-நிம்பர் பொஷ்த்தகம்), அதனை அடுத்து, சுவடிக்கட்டுக்குள் இடம் பெறும் நூல்களில், கொங்கணர் சரக்கு வைப்பு 100 (R.2267) தவிர எட்டு நூல்கள் இடம்பெறும் விவரமும் உள்ளன. மூன்றவாது ஓலையில் "ஓம் நன்றாக சித்துப் புருஷாள் சாஸ்த்திரம் அட்டவணை" எனற தலைப்பைத் தொடர்ந்து கொங்கணர் சரக்கு வைப்பு 100 (R 2267) என்ற நூல் தவிர ஏனைய நூல்களின் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. நூல் முழுமையும் 204 ஏடுகளில் எழுதினதாகவும், 62 வெற்றேடுகள் உள்ளதாகவும் எழுதப்பட்டுள்ளது.

அகத்தியர் தர்க்க சாத்திரம்

I. 1. **880.** 2. அ. R. 2269(a). ஆ. T.R. 1285. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தர்க்க சாஸ்திரம். ஆ. Akattiyar tarkka cāṣtiram. இ. அகஸ்தியர் சுவாமிகள் திருவாய் மலர்ந்த தர்க்க சாஸ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. சென்னை மாம்பலம் போக் தெருவைச் சேர்ந்த ஏ.எம். கோபால் அய்யரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி. 1949-1950.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 7. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 14; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி 17ஆம் பாடலுக்குப்பின் இருபாடல்கள் எண்கள் இடப்படவில்லை. ஆனாலும், இறுதிப் பாடலுக்குப் பின் எழுதப்படாமல் வெற்றிடம் உள்ளது. 16. குறை. 17. 19 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவ முறைகளைச் சீடன் கேட்கும்முகமாகப் பாடப்பட்ட நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் சாத்திரமும் மருந்து முறைகளும் கூறுவதாகத் தொடங்கி, சாத்திரங்களைக் கூறும் குருவிடம் எதிர்க்க வேண்டாம் என்றும், அச்சாத்திரக் கருத்துக்கள் கிட்டாத நேரம் மருந்துப்பொருள்களை வாங்குக எனவும் நூலாசிரியர் கூறுகின்றார். எவருடனும் பகைக்க வேண்டாம் என்றும், யாரையும் எதிர்க்க வேண்டாம் என்றும், 12 வகைப் பிழைகளை நூலில் நீக்க வேண்டுமென்கிறார். எழுத்தாணி, ஓலை, நாராசம் என்பவற்றை, உண்மை, சத்தி, ஞான மூர்த்தி ஆகியவற்றுடன் முறையாக ஒப்பிடுகின்றார் இந்நூலாசிரியர். மேலும் செந்தூரத்தைச் சிவத்துடனும், கெந்திரசத்தை மூவருடனும், அரைக்கின்ற மண்ணையும், சீலையையும் சக்தியுடனும் ஒப்பிடுகின்றார். இவ்வாறு இந்நூலில், மருந்துகளும், ஓலைச்சுவடிகள் தொடர்பானவற்றுடனும் சிவன், சக்தி, பிறதெய்வங்களை ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

4. ஓம் நன்றாக.

5. சீர்பொருதுஞ் சாஷ்த்திரமு மருந்து வைப்புந்
 தேவியங்க மானபொருள்(ப்) பலதுஞ் சொல்ல
பேர்பொருது மெழுத்தாணி யோலை யம்மி
 யியல்பான கருவிமுதல்(ப்) பயனைக் கூறே
கூர்பொருதுஞ் சாஷ்த்திரங்கள் சொன்னா ரானால்
 குருவாகு மவருடனே யெதுக்க வேண்டாம்
தார்பொருதுஞ் சாஷ்த்திரங்கள் சொல்லா விட்டால்
 சண்டாள பையுடனே மருந்தை வாங்கே. 1

6. வாங்குகின்ற தாம்பூலம் ரோக நாசம்
 வணங்குகின்ற பொருளதுதான் சிவத்தின் கூறு

நீங்குகின்ற பிணிசாபம் மேது நாலே
நினவுதான் விசுவாச மான தாலே
யோங்குகின்ற சாஷ்த்திரங்கள் உண்மை ஞானம்
ஓயாத்தவத்தின் கூறாக நின்ற மூலம்
மேங்குகின்ற வைத்தியனா லுரைக்க வேண்டாம்
யென்னுடைய சீஷனாய்(ப்) பணிந்து கேளே. 19

7. —.

8. மூலம். 9. வடமொழி எழுத்துகளும், ஒற்றுமிகுதலும் காணப்படுகின்றன. நடை சற்றுக்கடினமானது. 10. அகத்தியர் பெயரில் ஞானம், யோகம் போன்றவை மருத்துவ நூல்களில் வருவது இயல்பு போல மருத்து நூல்களும் தர்க்கமும் இணைத்துப் பாடப்படுவது இயல்பு என்பது இந்நூலிலிருந்தும் தெரிந்து கொள்ள முடிகின்றது. 11. இல்லை.

IV. 1. R. 168(k), R. 1085, R. 2269, R. 9000. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் தர்க்க சங்கிரகம் 16,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகம், தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலுடன், 1. சுந்தரானந்தர் வகார சூத்திரம் 25, 2. அகத்தியர் வழலை, 3. அகத்தியர் வகாரம், வாத சூத்திரம் 200, 3. சட்டைமுனி சவுக்கார வைப்பு 200, 4. அகத்தியர் திரிபுவனைக் கண்ணாடி, 5. அகத்தியர் தத்துவம், 6. அகத்தியர் சூத்திரம், 7. கொங்கணர் சரக்கு வைப்பு 100, 8. அகத்தியர் பல திரட்டு, எனும் நூல்கள் உள்ளன. இவற்றின் பெயர்களில் சற்று வேறுபாடுகளிருப்பதை இத்தொகுதியிலுள்ள சில நூல்களிலிருந்து அறியலாம்.

அகத்தியர் திரட்டு 50

I. 1. **881.** 2. அ. R. 6249. ஆ. T.R. 2648. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம். ஆ. Akattiyar vaittiya rattinac curukkam. அ. அகத்தியர் ரத்தினச் சுருக்கம். இ. —. 4. —. 5. —. 6. —. 7. —.

8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தாரின் அன்பளிப்புச் சுவடி. 10. கி.பி. 1956-1957.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 13. 5. 20x2 செ.மீ. 6. ஒருதுளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பெருஞ்சிதைவு. 12. 25; இரு பக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 50 பாடல்களுக்கு மேல்.

ஆ. —.

III. 1. இந்நூலில், வாதம், பித்தம், சிலேற்றுமம் போன்றவற்றுக்கு மருந்துகள் செய்முறை கூறப்பட்டுள்ளது. 2. மருத்துவம். 3. 80 வகையான வாதநோய்கள் உடம்பில் ஏற்படுகின்றன எனவும், அவற்றுள் எந்தெந்த வாதம் எவ்வெவ் விடத்தில் ஏற்படும் என்றும், அவ்வாத வகைகளும் அவற்றைப் போக்கவல்ல மருந்துகளும் அவை செய்முறைகளும் இந்நூலில் முதலில் கூறப்பெறுகின்றன. மேலும், பித்தத்தால் ஏற்படும் பல நோய்களுக்குத் தயிலம், எண்ணெய்கள், அவிழ்தம் போன்ற மருந்துகள் செய்முறைகளும் விளக்கப்படுகின்றன. சிலேற்பனத்தால் ஏற்படும் நோய்கள் பலவற்றுக்கும் நெய்வகை மருந்துகள், முழுகுவதற்கான தயிலங்கள், இலேகியங்களும் அவற்றைத் தயாரிக்கும் முறைகளும் தரப்படுகின்றன. வேறுவகையான நோய்களான கண்நோய்கள், மூல நோய்கள், சுரநோய்கள், வலிப்பு நோய்கள் போன்றவற்றுக்கும் மருந்துகளும், அவை செய்முறைகளும் பேசப்படுகின்றன. இம்மருந்துகள் பல மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

4. —.

5. வாதந்தான் யெண்பம்ப தாக
 வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம்
 சிறந்திடு முடக்கு வாதம்
சூதமே யசந்த வாதம்
 தோன்றிய முகத்தில் வாதம்
பேதமாம் வாதந் தீர
 பொருந்திய மருந்து கேளே. 1

6. போமிது பொன்னாங் கண்ணி
புகழ்சிறு கீரை முத்து
ஓமிது சீந்தி நின்ன
உயருமா மரத்தை கோஷ்டம்
மாமது மதுர மேத்தும்
மட்டொரு செண்பகப்பூ யிலவங்கி
நாமிது சொன்னோ மெண்ணை
நயந்தேறி மூழ்கப் போமே. 50

7. —.

8. மூலம். 9. 'எண்பது' என்னும் சொல் 'எண்ம்பது' என வருதல் காண்க. பாடபேதங்கள் காணப்படுகின்றன. ற/ர, ழ/ள வேறுபாடுகளின்றி எழுதப்பட்டுள்ளது. 10. 'அகத்தியர் திரட்டு' எனும் நூல் 50 பாடல்கள், 80 பாடல்கள், 120 பாடல்கள் பெற்றுவருவது இயல்பு. 11. இல்லை.

IV. 1. R. 2497, R. 941, D. 1905, R. 10146. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. அருணாசல நாட்டார் (பதி.), **அகத்திய மகாமுனிவர் அருளிய குணவாகடம் - அவிழ்த சாரம் 60,** கல்விக் களஞ்சிய அச்சுக்கூடம், —, 1864. 3. இல்லை.

IV. அகத்தியர் திரட்டு 60 (R. 2267) எனவும் வருவதால் இவ்வகைத் திரட்டு நூல்கள் பல வகையின என அறியலாம். கேளப்பா எனும் தொடக்கமுள்ள பாடலும், சாரமொடு எனும் தொடக்கமுள்ள பாடலும், மற்றொரு பாடலும் உள்ள இரு ஏடுகள் இறுதியில் உள்ளன.

அகத்தியர் திரிபுரை காலாக்கினி செந்தூரம்

I. 1. 882. 2. அ. R. 7692. ஆ. T.R. 2974. இ. அ. அகத்தியர் வைத்திய செந்தூரம் 300. ஆ. Akattiyar vaittiya centūram 300. இ. திரிபுரை காலாக்கினி செந்தூரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. N.S. நாராயண மூர்த்தியார், இராமையா விலாஸ், நெல்லிச்சேரி, பாலக்காடு. 10. கி.பி. 1962-1963.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 44. 5. 32x4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 88; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 11 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 305 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களுக்கான பற்பம், செந்தூரம் முதலான பலவகை மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலானது, சயத்துக்கு அனுபானம், குன்மத்துக்கு அனுபானம், வாதத்துக்கு அனுபானம், காமாலைக்கு அனுபானம், பிரமேகத்துக்கு அனுபானம், நீரிழிவுக்கு அனுபானம், நீர்க்கட்டு, கருவங்க செந்தூரம், கரிய செந்தூரம், நாலு சரக்குச் செந்தூரம், காந்த செந்தூரம், மாத்திரை, நாவல் நெய், மேக வெள்ளைக்கு வல்லாரை நெய், பாண்டு, காமலைக்கு லேகியம், கண்டாத்திரி லேகியம், தாளிசபத்திரிச் சூரணம், மந்தாரகாசத் தயிலம், சோகை காமாலைக்குச் சூரணம், கலிக்கம், சஞ்சீவி மாத்திரை, கண்ணுக்கனுபானம், கரப்பானுக் கனுபானம், சன்னி, சூலை, சுரத்துக்கு, கோரோசினைக் குளிகை, கிராணிக்கு அனுபானம், இரத்த பித்தங்களுக்குச் சதரவேலிக் கிறுதம், தாதுபுஷ்டி, நீர்க்கடுப்பு, இருமல், பயித்தியத்துக்கு நெய், குடோரிக்கு உள்ளுக்கு மருந்து, உள்நாக்கு வளர்ந்தால் மருந்து, கபாலச் சன்னி வாய்வுக்கு எண்ணெய், புண்ணுக்கு களிம்பு மற்றும் எண்ணெய், நசியம் ஒரு தலைவலிக்குத் தயிலம், எலிவிசத்துக்கு மருந்து, இந்திரியக் கட்டு, நீரடைப்பு, கல்லடைப்புக்கு மருந்து, காதுமேல் தண்டு நோவுக்கு, சதை யடைப்புக்கு, ஏலாதிக்குளிகை, கபாலக்கட்டி, பீனிசந் தலையிடிக்குப் புகை முதலான பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது.

4. ஹரிஓம். திரிபுரை காலாக்கினி செந்தூரம்.

5. **பூரணமாய் நிறைந்தபர பொருளா யெங்கும்**
புற்புகமாய் வெளியிலொளி வான சோதி
தாரணியில் சீவசெந்து தனைய ழிந்து
சடலமெனும் சடாச்சரசோ டசத்தின் கூறாய்
வாரணமா முகத்தோனை முதலாரா தாரம்
மதியிரவி களெனுமண்ட லத்துக் கப்பால்

காரணமாய் மதியமுர்தம் உண்ட சித்தர்
கருத்தினில் நின்றிலங்குங் கரிமுகன் காப்பு. 1

6. ஆனதொரு உண்டைதனை யிஞ்சிச் சாற்றால்
அருந்தவே சீதசுரம் அகலு மப்பா
போனதொரு யெருக்கம்பால் கோதும்பை மாவில்
புகட்டியே புதைத்துவைத்து பின்னெ டுத்துக்
கானதொரு சதிரக்கள்ளிப் பாலா லாட்டி
கையடைபோல் தட்டியே நெய்யிற் பூசி
தானமாம் அடைசுட்டு வைத்துக் கொண்டு
சாப்பிடுவாய் கடலைப்பருப்பு வெல்லம் நெய்யே. 305

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், பிரமமுனி வாகடம் 700 என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் தீட்சை 16

I. 1. **883**. 2. அ. R. 6899. ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தீட்சை 16. ஆ. Akattiyar tītcai 16. இ. அகஸ்தியர் தீட்சையில். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 3. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 5; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பிராணாயாமம் பற்றிக் கூறும்நூல். 2. யோகம். 3. அகத்தியர் தீட்சை பதினாறு என்ற இந்நூல் மூச்சுவிடும் முறை. பிராண வாயுவை இரேசக பூரக கும்பகம் செய்தல் முறைகள் பற்றியும் கூறுகிறது. சாதாரணமாக மனத்தை நடத்தும் பிராணவாயும் பாண்டும் 12 வட்டமாகி இடகலையாகிய சந்திரபாகத்திலும், பிங்கலையாகிய சூரிய பாகத்திலும் ஐம்பூதப் பிரிவினையாய்ப் பிரித்துக் காட்டும்; அவ்விதம் பிரித்து நடக்கும் ஐம்பூதங்களானவை அந்தக்காரணங்களைக் கொண்டு அறிவாகிய ஞானத்தைத் தோற்றுவிக்காமல் ஆயுளை குறைவுபடுத்தி, நரை, திரை, மூப்பை எளிதில் வரக்கூடிய நிலையைச் செய்து விடும். ஆகையால் மனத்தையும் ஐம்புலன்களையும் அவ்வழிக்குச் செல்லவிடாமல் அறிவால் தடுத்து ஒருவழிப்படுத்தி வருதலே பிராணாயாம நெறியாகும். அந்த நெறியை விடாது பற்றிப் பயின்று வாசி தாரனைச் சித்திசெய்து கொள்வது அவசியமானது. இதற்குக் கற்ப முறைகள் தெரிய வேண்டியதும் அவசியாகும். மேலும் பிராணவாயுவின் அசைவு உள்ள போது சித்தம் அசையும், அசையாவிடில் சித்தம் அசையாது. ஆகவே மனம் அடங்குவதற்காகவே இதைச் செய்ய வேண்டும். இப்பிராணாயாமம் மனோலயமாவதற்குக் குரு மூலமாகப் பயில வேண்டும். இதனால் தவயோக ஞானங்கள் சித்தியாகும். அதனால் பிறப்பைத் தவிர்த்துப் பேரின்ப நிலையை அடையலாம் என்று இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் தீட்சையில்.

5. தேறவே பிராணாயக் கருவைச் சொல்வேன்
சதாசிவன்றா னென்றனுக் குபதே சித்தார்
ஆறவே முந்தமுந்த அப்பியா சிக்க
அடிதொழுது சொல்லுகிறே னப்போ கேளு
கூறவே மூலத்தில் வாசி ரெண்டுங்
கோழிமுட்டை போலிருக்கு முக்கோ ணத்தில்
மாறவே யிடைபின்னா யிரண்டு மாடும்
மற்றொன்று சுழிமுனைதான் மகிழ்ந்து கேளே. 1

6. யேசாதே யிருந்துகொண்டு சமாதி பாத்து
யிறிவான லெட்சியத்தைத் தொட்டுத் தொட்டு
யேசாதே பிராணாய மேத்தி யேத்தி
யிளுத்திளுத்த விடுவார்கள் மறவா மல்தான்

னோசாதே கற்பமுண்டு பிராணா யத்தை
யுறைத்திடுவார் பின்புதா னிந்த புத்தி
வாசாதே திசதீட்சை வந்திருந்தோ ரூரில்
வாராது வாராது வினைகள் தானே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ல-ள வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளன. சொற்கள் பரிபாசையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பிரணாயாமம் பற்றித் தெரிந்து கொள்ளும் அன்பர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த நூலாகும்.

அகத்தியர் தீட்சை நாடி

I. 1. **884**. 2. அ. R. 10246. ஆ. T.R. 3897. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தீட்சை நாடி. ஆ. Akattiyar tīṭcai nāṭi. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 20. 5. 32x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 40; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 133 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் உண்டாகும் நோய்களைக் கைபிடித்து, நாடி பார்த்தறிந்து அவற்றுக்கேற்ற வைத்திய முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் நாடி நிதானம், நாடிநிலைமை, வாதபித்த சிலேட்டுமங்களின் உற்பத்தி, சுரம், சன்னிகள், சோகை, காமாலை, நீர்க்கோர்வை, பீலிகை முதலிய நோய்களின் வரலாறும், சுரங்களுக்குக் கசாய பாகங்கள்

ஆகியனவும் அடங்கியிருக்கின்றன. மேலும், வைத்தியர் இலட்சண நாடி நிலையைக் கொண்டு நோய்களின் சாத்திய, அசாத்தியத் தன்மைகளை அறிதல், சுரங்களின் பேதங்கள், அவற்றிற்குக் கசாயங்கள், சன்னி வகை என்பனவும், பற்பல வாத ரோகங்களும் அவற்றிற்குரிய மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. மூலம், குன்மம், ஈளை, இருமல், காசம், நீரிழிவு, சூலை, பாண்டு, சித்தபிரமை முதலிய நோய்களுக்கு மருந்தும் இன்னும் பல செய்திகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

4. ஹரிஓம் நன்றாக. குரு வாழ்க.

5. **பாதிமா மாதுமை யாரருளிச் செய்த**
தீதிலா வாகடச் செந்தமிழ் னூல்தனில்
நீதியா யெங்கும் நிறைய வோதுவாம்
ஆதியே பகவனே யரகரா சிவசிவா. 1

6. **சாலது போல்வுந்தி தடித்துமெய் வீங்கு வாகில்**
.... சொலு மிகவே யுண்டாம்
சீலது போல்மய லாகி தினந்தோறுங் களித்தே
.... தோன்றிடில் துலைந்தா ரென்றே. 133

7. இந்த யேடு யெடுத்தவன் குடுக்கவும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன.
10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 149(d). 2. த.ச.ம.நூ.எண்கள் 13,14. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், அகத்தியர் நாடிநிதானம் என்ற நூலினின்று வேறானதாக அமைந்துள்ளது. நாடி சொல்லும் முறையில் இருநூல்களும் வெவ்வேறு செய்திகளைத் தருகின்றன.

அகத்தியர் தீட்சைவிதி 200ல் சில

I. 1. **885**. 2. அ. R. 6801. ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் தீட்சை விதி 200ல் சில. ஆ. Akattiyar tītcaiviti 200- l cila. இ. அகத்தியர் தீஷ்சை விதி 200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5.

9. திரு எம். பழனியப்ப முதலியார். தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 4; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 12 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மூதண்ட லேகியம் செய்யும் முறை பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் தீட்சை விதி 200ல் என்ற இந்நூல் மூதண்ட லேகியம் செய்யும் முறை பற்றிக் கூறுகிறது. அருகன் வேர் பத்து பலம் எட்டு படித் தண்ணீரில் போட்டு ஒரு படியாக வரும்வரை காய்ச்சி மாலை நேரத்தில் இறக்கப்பட்ட கள் ஒருபடி, தனிப்பசும்பால் ஒருபடி, பழச்சாறு ஒருபடி, சுத்த ஊமத்தன் சாறு ஒருபடி, ஆக எல்லாம் சேர்த்துச் சாராயம் ஒருபடி, வெள்ளை வேலமரத்துப்பட்டைச் சாறு ஒருபடி, சாதிபத்திரி, நறுக்கு மூலம், கருவாய்ப் பட்டை, பனைவெல்லம் பத்துபலம், சர்க்கரை பலம் பத்து, மிளகு, திப்பிலி பலம் அரை சேர்த்து மூதண்ட லேகியம் செய்யும் முறையையும் இதற்குக் குணமாகும் நோய்களையும் இந்நூல் கூறுகின்றது.

4. அகஸ்தியர் தீட்சைவிதி 200ல் மூதண்டலேகியம்.

5. **செய்யடா மூதண்ட லேகிய யந்தான்**
திகயாது தப்பாமற் செப்பு வேனே.
செப்புவேன் னறுகம்வேர் பலந்தான் பத்து
சிறப்பான பிளத்திலே பலந்தா னொன்று
யொப்புவேன் படியெட்டு சிலத்துக் குள்ளே
யுறவாகப் போட்டுநீ யொருபடிக் காச்சித்
தப்பாதே மாலைக்கள் ளொருபடிதான் விட்டு
சாதகமாய்த் தனிப்பசுவின் பால்படிதான் விட்டுத்
துப்பாகப் பழச்சாறு ஒருபடிதான் விட்டு
சுத்தவூ மத்தஞ்சார் படிதான் வாரே.

6. வாங்கியல்லோ சித்தரெல்லாம்............ யாட்டு
மட்டில்லா காடி......... யைப் பூசி
யோக்கியல்லோ லேகியத்தை பதனம் பண்ணு
யுத்தமனே......... ....படி யூட்டு
தாங்கியல்லோ லேகியத்தை யுனக்காகச் சொன்னேன்
சாதகமாய் வொத்........ கார பூசைவிதி யென்று
சாங்கமல்லோ செய்தார்கள் வெண்ணெய் வைத்து
சாராயந் தனைக்குடித்து சன்னி னாரே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ல/ள-ர/ற வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

IV. தீட்சைவிதி என்ற இந்நூல் தீட்சை பற்றிக் கூறாமல் மருத்துவம் தொடர்பாகக் கூறுவது அறியத்தக்கது.

அகத்தியர் தீட்சைவிதி 200

I. 1. **886.** 2. அ. R. 6928. ஆ. T.R. 2786. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் இராசிபலன். ஆ. Akattiyar irāci palaṉ. இ. அகத்தியர் னூலர்த்தம் இராசிப்பலன். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையக் கவுண்டன் பட்டி, எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி. 1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 8. 5. 34x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 16; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 11 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் சில பகுதிகள் இல்லை. 16. குறை. 17. 58 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நோயின்றி வாழ்வதற்கான மருந்துகள், யோக, ஞானக் கருத்துக்கள், இராசிகளின் இயல்பு என்பவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வாசியோகம், பன்னிரண்டு இராசிகளில் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டியவற்றையும், அவ்இராசிகளின் பலன்களையும், நட்சத்திரங்கள் பலன்களையும் இந்நூல் கூறுகின்றது. அடுத்த நிலையில் மருந்துகளைப் பற்றிக் கூறுகிறது.

4. —.

5. வானைத் தாவி(ய) பொதிகை
மகத்தான ரிஷியுட வாக்கில் நேர்மை
பானைத் தாவிய பூசை
பரிவான சிவயோக மன்போர் கேளு
மீனைத் தாவிய ராசி
விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லு மேஷம்
சேனைத் தாவிய துலாத்தின்
சென்மராசிக் கருவைச் செப்பி றேனே. 1

6. முயன்றுகொண்ட சீவிசனு குணத்தைப் பாரு
மூதண்டச் சித்தருக்கும் ராசி பாரு
வயன்று கொ........ னருண்டு
வார்ததையினால்...... யெல்லா மயக்கஞ் செய்வார்
சுயன்று கொண்ட பிரமருலக துதித்தோர்.....
.... கருவை யெல்லாம்........
ன்று கொண்டார் சகுளிதத்த தோர்..... காத்தைப் போத்தி
.... 58

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள், பேச்சுவழக்குச் சொற்கள் வந்துள்ளன. 'போற்றி' என்பது 'போத்தி' என வந்துள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூல், 'இராசிபலன்' எனப் பெயரிடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. D. 1816, D. 1817, D. 1818, D. 1885, D. 1886, R.149(a), R. 261(e), R. 4760, R. 6148, R. 9644, R. 10738(d), R. 10814. 2. உ.த.நி.எண்கள் 352;585, ஆ.நி.எண் 435. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமசந்திரன் (பதி.), **அகத்தியர் தீட்சாவிதி 200,** தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.

VI. சோதிடம் (இராசிபலன்) தொடர்பான செய்திகளை இந்நூல் கூறுவதாக அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணை தெரிவிக்கின்றது. அகத்தியர் மகாதிராவகம் 800 என்ற நூலில், இந்நூலின் தொடக்கப்பாடலான, ‘வானைத் தாவிய பொதிகை மகத்தான ரிஷிகளது வாக்கின் நேர்மை’ என்ற பாடல் தொடக்கமாக அமைந்திருப்பது அறியத்தக்கது.

அகத்தியர் துடிநூல் 16

I. 1. **887.** 2. அ. R. 8795(b). ஆ. T.R. 3114. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் துடிநூல் 16. ஆ. Akattiyar tuṭinūl 16. இ. அகத்தியர் துடினூல் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 5; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி 6 பாடல்கள். 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. உடம்பில் ஏற்படும் துடிப்பு நிலைகளை எடுத்துக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல், முன்கை, புறங்கை துடித்தால், இடமார்பு துடித்தால்; 18 வயதில் இறப்பு நிகழும்; வயிறு தொப்புள் துடிக்குமாகில் இந்திரகலை பிரிந்துபோகும்; முதுகில் துடிப்புண்டாகில் இடர்(துன்பம்) உண்டாகும்; முதுகின் இடப்பக்கம் துடித்தால் செல்வமுண்டாகும், முழங்கால் துடித்தால் வெற்றி உண்டாகும்; அரை துடிக்கில் பெண் உண்டு; இடக்கணுக்கால் துடிக்குமாகில் சொத்துக்கள் நாசம் ஏற்படும் என்று பல்வேறு செய்திகளைக் கூறுகின்றது.

4. அகத்தியர் துடினூல் பதினாறு.

5. **ஆதியென்ற கையிலாச பொதிகை வாழும்**
அகத்தியனா ரருள்செய்த துடினூல் தன்னை
சேதியென்ற நன்மையொடு தீனை சொல்லி
தேகத்தில் கண்டுவரும் துடிப்பைப் பாரு

நீதியென்ற சரநூல்போ லின்னூல் சொன்னோம்
....
.... சொல்லத் தப்பாதே
ஓங்காரக் கரிமுகவன் காப்புத் தானே. 1

6. காணவே யுடம்பொங்கும் துடிக்கு மாகில்
....
பூணவே வலதுதோள் துடிக்கு மாகில்
பொன்னோடு பொருள்சேரும் புகலக் கேளு
நாணவே யிடதுதோள் துடிக்கு மாகில்
பெருகியதோர் பொருளுமது கைக்குள் ளாகும். 10

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் ஞானம் 5 (R. 3795(a)), அகத்தியர் சாலநிகண்டு 200 (R. 3795) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் நாடி நிதானம்

I. 1. **888**. 2. அ. R. 6971(a). ஆ. T. R. 2803. இ. —. ஈ. —. 3. —. ஆ. —. இ. நாடி பரிச்சை. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையக் கவுண்டன் பட்டி, எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 11. 5. 36x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 22; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் இல்லை. 16. குறை. 17. 58 பாடல்கள், 59ஆம் பாடல் குறைப்பாடல்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் ஓடும் வாதம், பித்தம், சிலேத்துமம் எனும் நாடிகளின் இயல்பும் செயலும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. மனித உடம்பில் ஓடும் வாதம் பித்தம் சிலேத்துமம் எனும் நாடிகளை மணிக்கட்டின் பகுதியில், மூன்று விரல்களால் ஒரே மாதிரி அழுத்தி, நாடிகளில் விரல்களைச் செலுத்தி, பின்னர்த் தளர்த்தியும், மீண்டும் அழுத்தியும் பார்த்தால் நாடிகளின் நிதானம் தெரியவரும். ஆள்காட்டி விரல் வாதநாடி, நடுவிரல் பித்தநாடி, மோதிர விரல் சிலேத்தும நாடிகளை அறிய உதவும். சுண்டுவிரலும், மோதிரவிரலும் பூத நாடிகளை ஆராய்வன ஆகும். ஆண்களின் வாத நாடிகள் மயில், அன்னம், கோழி இவற்றின் நடையை ஒத்தும், பித்த நாடிகள் ஆமை, அட்டைகளின் நகரல்களை ஒத்தும், சிலேத்தும நாடி பாம்பு, தவளைகளின் தாவல்களை ஒத்தும் அமையும். பெண்களின் வாதநாடி பாம்பு போன்றும் பித்த நாடி தவளை போன்றும், சிலேத்தும நாடி அன்னம் போன்ற நடையையுடையது என்றும் கூறப்படுகிறது. இந்த நாடிகளின் வேறுபட்ட இயல்புகளால் நோய்களின் தன்மைகளை அறியமுடியும் என்றும், இதுபோன்ற பல செய்திகளையும் இந்நூல் கூறிச்செல்கின்றது.

4. சொல்லிய ....
யெழுத்தை யுரை....... எல்லை. லெழுந்த
னாடியெழுபத்து ஈராயித்துள்
பல்லிய...... னாடி பத்திலே யேழுநீக்கி
நல்லதோர் மூன்று நாடி
நயந்து நீருணர்ந்து பாரே.

5. கரிமுக னடியை வாழ்த்திக்
கைய்தனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்தில்
பிடித்துடன் நடுவே தொட்டால்
ஒருவிர லோடி வாதம்
ஒருவிர லோடி பித்தம்
திருவிரல் மூன்றி லோடில்
சேற்றும நாடி யாமே. 1

6. அங்கமும் மடைக்க வீங்கி
அறமெலிந் தாக மாகி

மங்கையர் தன்மேல் லாசை
வாய்னிர்(ச்) சிலமுது மூறும்
கங்குல் சேர்ந்தோ மானால்(க்)
கடியதோர் வாந்தி பண்ணும்
யிங்கிதல் குலாஅம் மாமே
மகோதரம் மெண்ணா லாமே. 58

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 149(e), R. 1197, R. 2533, R. 2538, R. 4736, R. 6440, R. 10317(a), D. 2341, D. 2318, D. 2340, D. 2349. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 319, 319(a), 376(a), 469, 600(a), 1040(a), 1040(n), 1382(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

IV. இந்நூல் சுவடி மிகவும் பழைமையானதாகக் காணப்படுகிறது. எடுக்கும் போதே முறிந்து விழுகின்ற நிலையில் உள்ளது.

அகத்தியர் நாடி நிதானம்

I. 1. **889**. 2. அ. R. 10317(a). ஆ. T.R. 3937. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நாடி நிதானம். ஆ. Akattiyar nāṭi nitāṉam. இ. அகத்தியர் குணவாகடம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 4.5. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. நடு மற்றும் இறுதி. 16. குறை. 17. 40 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் ஓடும் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய நாடிகளின் ஓட்டத்தையும் செயலையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 888 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவே துணை.

5. கரிமுக னடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்கு லத்தில்
பிடித்துடன் நடுவே தொட்டால்
ஒருவிர லோடில் வாதம்
மத்திரு விரலோடில் பித்தம்
திருவிரல் மூன்றி லோடில்
சிலேற்பன நாடி யாமே. 1

6. குணஞ்சேருந் தாம்பூலம் பாலே யன்னங்
கொள்முறிக் குழவுதுயில் போது மின்னே
குணஞ்சேருங் கபங்கள்வந்து கொள்கை யாகும்
....
பணஞ்சேரும் நிறம்புமின்னே பூரண ரூபம்
பத்தும்பல்லுப் பாழாம்யிரு விழியும் புகையும்
மணஞ்சேருங் குழலாளே மாற்ற யிது
மருந்துமில்லை மதுவுண்டார் வாச மாமே. 40

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1.R. 149(e), R. 1197, R. 2533, R. 2538, R. 4736, R. 6440, R. 6971, D. 2341, D. 2318, D. 2340, D. 2349. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 319, 319(a), 376(a) 469, 600(a), 1040(a) 1040(n), 1382(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. நாடிகள் உடம்பில் பல பாகங்களிலும் பின்னிப் பிணைந்துள்ளன. இவை மொத்தம் 72,000 எனக் கூறப்படுகிறது.

அகத்தியர் நாடி நிதானம்

I. 1. 890. 2. அ. R. 4736. ஆ. T.R. 2089. இ. —. —. 3. அ. நாடி நிதானம். ஆ. Nāṭinitāṉam. இ. வாதபித்த சேற்றுமத்தின் நிதானம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருச்சி மாவட்டம் கவலைப்பட்டி, எல். பரமசிவம் பிள்ளையிடமிருந்து 1953-54ல் அன்பளிப்பாகப் பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி.1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 11. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 22; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. முன்னும் பின்னும் ஓலைகள் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. 31 ஆம் ஓலை எண்ணில் பாடல் எண் 84 தொடங்குகிறது. 118ஆம் பாடல் ஒருபகுதியுடன் முடிகிறது.

ஆ. —.

III. 1. இந்நூலில் நம் உடலிலுள்ள முக்கிய நாடிகளான வாத, பித்த, சிலேற்றும நாடிகளில், பித்த நாடி இயல்புகள் பேசப்படுகின்றன. 2. மருத்துவம். 3. வாதம், பித்தம், சிலேற்றுமம் எனும் முக்கிய நாடிகளின் வகைகளில் பித்த நாடிகளின் இயல்புகள். இருதய ஓட்டம், மலம், சலம், விந்து, என்பவை கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும், பித்த நாடிகளின் நிறம், அவை இயங்கும் விதம், பித்த நாடிகள் தாக மோகத்தை உண்டாக்குவன என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. —.

5. வாதமே கதித்த போது
வாயுவும் மெழும்பி மீளு
மாதிமேவிடும் வாகில்
ஓடித்திடும் சன்னி வாதம்
பேதகஞ் சிறுணி வேறு
வயறுதான் தோஷ மாகும்
போதவே வருமீ தென்று
பொருந்தவே முனிவர் சொன்னார். 84

6. சந்துதா ளூளைந்து வற்றித்
    தழலெழ வற்றக்கை பற்றி
அய்ந்துகால் கரங்கள் தன்னி
    லதிசெயச் சரீர வாதை
வந்துதான் கொண்டு நாளில்
    ....

7. —.

8. மூலம். 9. பிழைகள் மிகுந்து எழுதப்பட்டுள்ளது. வடமொழி எழுத்துக்கள் பயின்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நாடிகளில் பல நிதானங்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. 11. இல்லை.

IV. 1. R. 149(e), R. 1197, R. 2533, R. 2538, R. 10317(a), R. 6440, R. 6971(a), D. 2341, D. 2318, D. 2340, D. 2349. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 319, 319(a), 376(a) 469, 600(a), 1040, 1040(n), 1382(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியிட்டுள்ள அட்டவணையில் **நாடிநிதானம்** என்ற தலைப்பில் அமைந்த சுவடிக்கட்டில் **அகத்தியர் வைத்தியம் 1500** என்ற நூலும், **அகத்தியர் சீதேவி எண்ணெய்** தயாரிக்கும் முறை பற்றிய நூலும் உள்ளன.

அகத்தியர் நிட்டைவிதி

I. 1. **891.** 2. அ. R. 6890. ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நிட்டைவிதி. ஆ. Akattiyar niṭṭaiviti. இ. அகஸ்தியர் காவியத்தில் நிஷ்ட்டை விதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார். தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 7. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 14;

இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. முழுமை 16. இல்லை. 17. 40 பாடல்கள்.

ஆ. —

III. 1. கணபதி, பிரம்மா போன்ற கடவுளர்களைக் காணுவதற்கான தியான முறைகளைக் கூறும் நூல். 2. யோகம். 3. அகத்தியர் நிட்டைவிதி என்ற இந்நூல் நிட்டைவிதிக்கு ஆதார மூலம் வாசியோகம் என்றும், இதை முறைப்படி செய்தால் மனம் ஒருமைப்படும் என்றும், அதன்பிறகு கணபதி தியானம், பிரம்மா தியானம், விட்ணு தியானம், ருத்திர தியானம், மயேச்சுவரன் தியானம், சதாசிவ தியானம், அஸ்வினி தியானம், மதியின் தியானம், சூரியன் தியானம் முதலியவற்றைச் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது. இத் தியானங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே இந்நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. இறுதியாக மந்திரத்தில்..... துறை விபூதி, உச்சத்தில் சஞ்சிரிக்க, சரீர வளமை, வாசி குணம் ஆகியவற்றோடு நூல் முற்றுப் பெறுகிறது.

4. ஹரிஓம் நன்றாக அகஸ்தியர் நிஷ்ட்டை விதி.

5. ஆச்சப்பா நிட்டைவிதி தன்னைக் கேளு
ஆதார மூலமதின் வாசி யாலே
பாச்சப்பா பதிவான புருவத் தேழு
பக்குவமாய் கற்பூரத் தீபம் பார்த்து
மூச்சப்பா முன்னிலையாம் முக்கோ ணத்தில்
முத்தியுள்ள ரீங்காரச் சந்தத் தாலே
காச்சப்பா கருவிகர ணாதி தன்னைக்
கசடர்க ளுள்ளமதால் கண்ணைப் பாரே. 1

6. அவத்தமாம் யோகங்கள் செயித்தா னாகில்
அறியாமல் பூரிக்கில் ஒதிங்கிச் சானால்
விவத்தமாம் விலாப்புரத்தே சொரிக்கிக் கொள்ளும்
முளியான கணம்போகும் முகம்கோ ணிப்போம்
யுவத்தமா யுடம்பெரிவு விக்க லாகும்
உடம்பெல்லாம் வேருவையாம் வலியே காணும்
கவுத்தமாம் அடையோகம் கர்ம யோகங்
கடிதான லயயோகங் கருமங் கேளே. 40

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பேச்சு வழக்கில் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் தியான முறைகள் பற்றி மிக விரிவாகப் பேசுகிறது. தியானம் கற்றுக் கொள்பவர்களுக்கு இந்நூல் பெரிதும் துணை செய்யும்.

அகத்தியர் நேத்திர வாகடம்

I. 1. **892**. 2. அ. R. 1803. ஆ. T.R. 1039. இ. —. ஈ. —. 3. அ. நயன விதி. ஆ. Nayana viti. இ. நயன விதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மிருதங்கம் சுப்பையர், சாத்தபுரம் கிராமம், கல்பதி அஞ்சல், பாலக்காடு. 10. கி.பி.1948-49.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 16. 5. 34x5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப் பனைஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 31 இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 14 முதல் 16 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 217 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் குறிப்பாக, கண்ணில் ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கு மருந்துகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், கண்ணில் நோய்வரும் விவரம், பீளைகள் ஏற்படக் காரணம், கண்ணுக்குப் பிறவாகடம், இமையில் போட மருந்து, கண்ணிலேதும் பட்டால் மருந்து, கண்புரைக்கு மருந்து, கண்ணுக்குக் கடைமருந்து, கண்பூவுக்கு உருண்டை, கண்ணில் வரும் 96 நோய்களுக்கும் உருண்டை, குந்த கண்ணுக்குக் கற்பூர உருண்டை, கண்ணில் முடத்திற்கு மருந்து, கண்ணில் புண்ணுக்குப் பாகுண்டை, கண்ணெரிவுக்கு மருந்து,

கண்ணில் சகல வியாதிக்கும் சங்கரனார் உருண்டை, பூப்படலம் காசத்துக்கு உருண்டை, மாலைக்கண், இருள் கண்ட கண்ணுக்கு உருண்டை, கண்ணில் சதை வளர்ந்தால் உருண்டை, கண்ணில் இரத்தம் போல் இருக்கிறதுக்கும் பூவுக்கும் உருண்டை போன்ற பல்வேறு கண்நோய்கள் அனைத்துக்கும் மருந்துகள் செய்து பயன்படுத்தும் முறை கூறப்படுகிறது.

4. ஹரிஓம் நயன விதி.

5. மாதுமை பாகர் தானும்
மாமறை முதலை ஆய்ந்து
தீதுகள் வாரா தென்று
திருவுளத் திருந்த போது
ஆதிமா முனிதான் சொன்ன
ஆயுரு வேதத் துள்ளே
னாதனார் தெரிந்து ரைத்த
நயனமாம் விதிதான் நன்றே. 1

6. இளநீர்ப் பாலும் நன்னாரி
யிலுமிச்சம் மதுரம் கெந்தம்
வளம்பெற நெய்நல் லெண்ணை
மருவும் நற்பதமாய்க் காய்ச்சி
மளையுங் கண்ணில் வாத்துவிடில்
வந்த சுக்கிர னோடிவிடும்
தெளியுங் கண்ணோய் தொண்ணூற்றாறும்
செய்ய யிளநீர் எண்ணெயிதோ. 217

7. வேறு.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 2516, R. 2542, R. 4520(a), R. 8828(a). 2. த.ச.ம.நூ. எண்கள் 10, 11, 143(b), ஆ.நி. எண்கள் 84(b), 655(a), 665(b), 665(c), கே.ப.க. எண்கள் 1451(b), 3239(b), 8867(a), 8873. 3. இல்லை.

V. 1. வே. மாதவன், (பதி.), கண் மருத்துவம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் குருநாடி (R. 1804), அகத்தியர் முப்பு (R. 1814), அகத்தியர் 5 (R. 1814(a)) முதலிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் நேத்திர வாகடம்

I. 1. **893.** 2. அ. R. 8828(a). ஆ. T.R. 3145. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நேத்திர வாகடம். ஆ. Akattiyar nēttira vākaṭam. இ. நயன விதி லச்சணம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 19. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 18; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. நடு மற்றும் இறுதி. 16. குறை. 17. 55 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் குறிப்பாக, கண்ணில் ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கு மருந்துகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 892 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குருவே துணை. நயனவிதி லச்சணம்.

5. மாதுமை பாகர் தானும்
மாமறை முதலை யாய்ந்து
தீதுகள் வாரா தென்று
திருவுளத் திருந்த போது
ஆதிமா முனிதான் சொன்ன
ஆயுரு வேதத் துள்ளே
னாதனார் தெரிந்து ரைத்த
நயனமாம் விதிய தென்றேன்.

6. சோதித்து பின்னை நீயுஞ்
சொக்கு பொடியைத் தூவி
போதித்துத் தேய்த்து பின்னை
மருந்துதிறம் போக்கி

வேதித்துப் புளியைக் காச்சி
மையினில் மேலே பூசி
யாதித்து மூன்று நாளும்
முடிந்துபின் மருந்தி டாயே. 55

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 2516, R. 2542, R. 1803, R. 4520(a). 2. த.ச.ம.நூ. எண்கள் 10, 11, 143(b), ஆ.நி.எண்கள் 24(a), 665(a), 665(b), 665(c), கே.ப.க. எண்கள் 145(b), 3239(b), 8867(a), 8873. 3. இல்லை.

V. 1. வே. மாதவன், (பதி.), **கண் மருத்துவம்** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் இந்நூலுடன், பூதநாடி சாத்திரம் (R. 8828) என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் நேத்திர வாகடம்

I. 1. **894.** 2. அ. R. 4520(a). ஆ. T.R. 1991. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் நேத்திர வாகடம். ஆ. Akattiyar nēttira vākaṭam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி S. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி.1953-1954.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 4; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. நடு மற்றும் இறுதி. 16. குறை. 17. 9 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் குறிப்பாக, கண்ணில் ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கு மருந்துகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 892 போன்றது.

4. —.

5. மாதுமை பாகர் சொன்ன
மாமறை முதலை ஆய்ந்து
தீதுகள் வாரா வண்ணத்
திருவுளத் தருளி னாலே
யாதிமா முனியு ரைத்த
ஆயுரு வேதந் தன்னைத்
தீதுறு தமிழி னாலே
திறம்பட வுரைக்க லுத்தேன். 1

6. அரும்புன லருவி நீரும்
அடிக்கும் பதிலச் சாறும்
விரும்பிய தயிர்நெய் பாலும்
விரவியே கொத்த பாருந்
திருந்திய தேனின் பாகுஞ்
சிறந்தயிவ் வாறும் நல்ல
குரும்பையின் முலையி னாள்கேள்
கெற்ப மென்றுபோகக் கூறே. 9

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 1803, R. 2516, R. 2542, R. 8828(a). 2. த.ச.ம.நூ. எண்கள் 10, 11, 143(b), ஆ.நி.எண்கள் 84(b), 665(a), 665(b), 665(c), கே.ப.க. எண்கள் 145(b), 3239(b), 8867(a), 8873 3. இல்லை.

V. 1. வே. மாதவன், (பதி.), கண் மருத்துவம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் இந்நூலுடன், அகத்தியர் வாகடம் (R. 4520) என்ற நூலும் அமைந்துள்ளது.

அகத்தியர் பச்சை விதி

I. 1. **895**. 2. அ. R. 6865. ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசைவிதி 200-ல். ஆ. Akattiyar

Pūccai viti 200- l. இ. அகஸ்தியர் பச்சைவிதி 200ல். 4. —. 5. —. 6. — 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார். தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. 1957-1958.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12; மொத்தம் 3 பக்கம் முழுமையாக எழுதப்பட்டு 4 ஆவது பக்கம் ஒருவரி எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8-9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. நடு, இறுதி. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பூசைவிதி முறைகள் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், யோகம். 3. அகத்தியர் பூசை விதி 200ல் என்ற இந்நூல் குருவை மதித்து நடக்கும் சீடர்களுக்கு யோக, ஞானமார்க்கங்களை உபதேசிப்பதுபோல் அமைந்துள்ளது. பொதுவாக, சீடர்கள் உபதேசம் பண்ணும் முறைகள், சாப நிவர்த்தி, அஷ்டநிகம், சிவயோக அனுட்டானம், வாசி, நிராதர மவுனம், பூசைவிதி, சிவதீட்சை, விந்து நிலை, சமாதி ஐந்து, மவுன வாலை, வழலை முறை, மவுன தீட்சை, போன்றவை கூறி இறுதியாக, சித்தர்கள் சீடர்களை அழைத்துத் தாம் கற்றுக் கொடுத்த யோக முறைகளைத் திரும்பிச் சொல்லுமாறு அமைந்துள்ளது.

4. அகஸ்தியர் பூசை வதி 200ல்.

5. தானான சீஷனுக்கு உபதேச சிக்க
காத்தடா மவுனத்தை முன்னே சொல்லு
கானான சாபத்தி நிவர்த்தி சொல்லு
கண்டுபார் பின்பங்கே அஷ்டநிகஞ் சொல்லு
கோனான சிவயோக அனுஷ்டானஞ் சொல்லு
கொத்தடிமை யானாக்கால் வாசி சொல்லு
வானான நிராதார மவுனஞ் சொல்லு
மானதமாம் பூசைவிதி கருவைச் சொல்லே. 1

6. கூடினதோர் சித்தரெல்லாம் அன்மரபே என்பார்
கூப்பிட்டுச் சுந்தரமே வைத்துக் கொண்டு

ஊடினதோர் கற்பமென்ன நூல்கொடுத் தாரு
உன்னுடைய சாதிஎன்ன என்று கேட்டு
ஆடினதோர் குளிகைஎன்ன கட்டினவ ராரு
ஆதியிலே யோகசக்தி லழுந்தி டாயே
மூடியதோர் மூலத்தீ ரொளியைத் தொட்டு
நிறையான ஆறுதரம் நிறையக் கேளே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ர-ற வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் சீடர்களை அழைத்து அவர்களுக்குப் பல போதனைகளைக் கூறி ஆற்றுப்படுத்துவது போல அமைந்துள்ளது.

அகத்தியர் பஞ்சபட்சி

I. 1. **896.** 2. அ. R. 7003. ஆ. T.R. 2821. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பஞ்சபட்சி. ஆ. Akattiyar pañcapaṭci. இ. அகத்தியர் சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார் தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 84; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 125 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பஞ்சபட்சிகளான காகம், வல்லூறு, ஆந்தை, மயில், கோழி இவற்றைக் கொண்டு மனிதனின் எதிர்காலப் பலா

பலன்களைக் கூறும் நூல். 2. மாந்திரீகம். 3. அகத்தியர் சூத்திரம் என்ற இந்நூலில் உச்சாடான முறைகள், பஞ்சபட்சி விவரம், பட்சிகளின் சாபம், அட்சரத்தின் மாறல், வடுகன் தியானம், வல்லூறுக்கு மூலிகை, ஆந்தைக்கு மூலிகை, அமர பட்ச விதிமுறைகள், தியானம், பலவகை எண்ணெய், முலைமறைய முலை எழும்ப வசிய முறைகள், புருச வசியம், ஆமணக்கு வசியம், காட்டேரி மந்திரம், சாமுண்டி மந்திரம் போன்ற பல்வேறு செய்திகளைக் கூறுகின்றன.

4. அகஸ்தியர் சூஸ்திரம்.

5. **திருமகள் கயிலை வாழும்**
சிகனாதர் தேவிக் கீந்த
கருவளர் மாந்தி ரீகங்
கக்ஷியின் பீடம் பாட
மருமக ளான சோதி
மலர்த்திரு பாதம் போற்றி
உருவினில் உருவு மில்லாள்
உமைமகள் காப்புத் தானே. 1

6. **தோஷமடா பெருநூலில் சொன்ன வித்தை**
துடிக்கட்சி பீடமது பணிந்து சொன்னேன்
தோஷமடா சலாகைவித்தை ஓம்பட்சி நேசா
சுருசுரு ஆங்காரி உருளு உருளு
தோஷமடா கொண்டுவா சுவாமி யானை
சொல்லக ருத்தடவ சுருக்கு மேத்த
தோஷமடா யிம்முறையை வெளிவி டாதே
சூஸ்திரந்தான் நூற்றியிருபத் தஞ்சு முற்றே. 125

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. வடமொழி எழுத்துக்கள் அதிகம் பயின்று வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 189(d), R. 927, R. 10802. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 575(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பஞ்சபட்சி என்பதற்கு மயில், காகம், ஆந்தை, வல்லூறு, கோழி என்ற ஐந்து பறவைகள் என்று விளக்கம் தருகிறது இந்நூல்.

அகத்தியர் பட்சணி 125

I. 1. **897.** 2. அ. R. 4212. ஆ. T.R. 1864. இ. —. ஈ. — 3. அ. அகத்தியர் பட்சணி 125. ஆ. Akattiyar paṭcaṇi 125. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 12. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 24; இருபக்கமும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 125 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக மார்க்கம், உணவு உண்பது, மை, கரு போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம், மாந்திரீகம். 3. இந்நூல், யோக மார்க்கத்தின் அடிப்படை நிலையான வாசியோகம் பற்றிக் கூறுகிறது. மேலும், துரிசு வாங்கும் முறை, திலதம், அஞ்சன மை, திருநீறு, வாசிதனில் யேற்றுதல், அஞ்சனக் கரு போன்றவற்றின் விளக்கங்களும், கடல் நண்டிலிருந்து தயாரிக்கும் மை வகைகளையும் இந்நூல் விளக்கமாகக் கூறுகின்றது.

4. —.

5. திருமகள் சோதி யாகுஞ்
 சிகதல வல்லி மாது
மருமக ளவளே புத்தி
 மவுனத்தி னந்தி தோணும்
கருவது தாமே சொல்வோங்
 கண்டதை விண்டி டாதே
பருவமாய் நந்தி தோண
 பட்சணி யறிந்து கொள்ளே. 1

6. தெளிந்துபா ரின்னூ......... ....
 சிவன்முதலாய் நவசித்தர் மெச்சிக் கொண்டு
தெளிந்திந்த னூலைவெளி விட்டோ மென்று
 செகமறியக் காட்டாம லொளித்தா ரய்யா
....

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 261(m), R. 9509. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 414(b), 1061. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் யோகம் 16 (R. 4213), அகத்தியர் பூரணசூத்திரம் (R. 4238) முதலான நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் பட்சணி

I. 1. **898.** 2. அ. R. 6245(b). ஆ. T. R. 2644. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பட்சணி. ஆ. Akattiyar paṭcaṇi. இ. அகஸ்தியர் பட்சணி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 4. 5. 31x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 8; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 51 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக மார்க்கம், உணவு உண்பது, மை, கரு போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம், மாந்தீரிகம். 3. அகத்தியர் பட்சணி என்ற இந்நூல் திருமகள், நந்தி ஆகியவர்களுக்கு வணக்கம் கூறி, யோக மார்க்கத்தின் அடிப்படை நிலையான வாசி யோகம் பற்றிக் கூறுகிறது. மேலும் துரிசி வாங்கும் முறை, திலதம், அஞ்சனமை, திருநீறு, வாசிதனில் யேறுதல், அஞ்சனக்கரு, போன்றவற்றின் விளக்கங்களும், கடல் நண்டு போன்றவற்றிலிருந்து தயாரிக்கும் மை வகைகளையும் இந்நூல் விளக்கமாகக் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக குருவாழ்க் குருவே துணை. அகஸ்தியர் பட்சணி.

5. திருமகள் சோதி யாகுஞ்
 செகதல வள்ளி மாது
 மருமக ளவளே வுந்தி
 மவுனத்தி னந்தி தோன
 கருவது தாமே சொல்வோங்
 கண்டதை விண்டி டாதே
 பருவமாய் நந்தி தோன
 பட்சணி யறிந்து கொள்ளே. 1

6. மதுபாயு மதுபோது கரையுமது தில்லாம்
 மதுரையுமி துவராறு பரையுமிது சபையே. 51

 சபையதில் நடுவே அபையமிடு பாரு
 உபைமிடு அறியாமல் அபையமிடு வாரே. 52

7. சுபகிருது வருஷம் மாசி மீ 25ந் தேதி பட்சணி எழுதி முகிந்தது முற்றும். நமசிவாயம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் கண்ணிகளாக அமைந்துள்ளன. அறியாமல் என்பது அரியாமல் என்பது போன்ற ர-ற வேறுபாடின்றிப் பாடல்கள் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. சுபகிருது வருடம் மாசி மாதம் 25ஆம் தேதி பட்சணி எழுதி முடிந்தது.

IV. 1. R. 9509. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 414(b), 1061. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பட்சணி என்றால் உணவு வகைகளைக் குறிக்கும். இதற்கு மாறாக இந்நூல் வசியம் மை போன்றவற்றைக் குறிப்பிடுகிறது.

அகத்தியர் பட்சணி

I. 1. 899. 2. அ. R. 6245(a). ஆ. T. R. 2644. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பட்சணி. ஆ. Akattiyar paṭcaṇi. இ. அகஸ்தியர் பட்சணி. 4. —. 5. —. 6. —. 7. —.

8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 18. 5. 31x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 36; இருபக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. முதல். 17. 4 முதல் 106 = 103 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக மார்க்கம், உணவு உண்பது, மை, கரு போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம், மாந்திரீகம். 3. வரிசை எண் 898 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை. அகஸ்தியர் பட்சணி.

5. வசியமா மாறுவகை கற்ப மாகும்
.... த்தில் ராசரலெல்லாம் வசிய மாகும்
....
மகத்தான புருஷரெல்லாம வசிய மாகும்
வசியமாம் மிருகமெல்லாம் வசிய மாகும்
....
வசியமா மிரவிமூன்றாள் வடவேர் வாங்கி
மைந்தனே கவுதும்மை வேரும் வாங்கே. 4

6. சொல்லடா யினமறிந்து வாசி யோகம்
சூட்டடா சகலகலை....... தி யெல்லாம்
கல்லடா காயசித்தி யோக மார்க்கம்
கருவங்கச் சவுக்கார மாதி ஆதி
அல்லடா யசுக்குணக்குப் பின்னூ லீந்தால்
அந்திரமாய் யிடிவிழுந்து தலைவெடிக்கும் பாரு
வெல்லடா ரவிகோடி சித்த மாகும்
வேதாந்த பட்சணியின் அதீத முற்றே. 106

7. குருபாதமே துணை, சர்குரு முன்னிற்கவும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், ர-ற வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலின் முதல் மூன்று பாடல்கள் கிடைக்கவில்லை. யோக மார்க்கம், காயசித்தி பற்றியும் இந்நூல் கூறுகின்றது.

அகத்தியர் பரிபாசை முதற் காண்டம்

I. 1. **900.** 2. அ. R. 6158(a). ஆ. T. R. 2601. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல். ஆ. Akattiyar kuru nūl. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே தெளிவு. 4. 20. 5. 37x3 செ.மீ. 6. இருதுளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 40; இருபக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 101 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகை மருந்தின் பெயர்களையும், சித்திகளின் பெயர்களையும் பரிபாசையில் இந்நூல் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. இந்நூலில், குரு முடிக்கும் கருமானங்கள், தீட்சைவிதிகள், தத்துவப் பஞ்சீகரணங்கள், யோகக் கூறுகள், சரக்குகளின் பெயர்கள், சித்திகளின் 25 வகைகள், பிரம வகைகள், படிக வகைகள், பூதவங்கிச் சவ்வீரம், பிரம உப்பு, சரியை, கிரியை, யோகம், ஞானம், இரசவாதம், வழலை போன்றவை தொடக்கத்தில் கூறப்படுகின்றன. கற்பங்களில் 600 வகைகள், 96 மருந்துகளின் பெயர்கள், பஞ்ச சுண்ணவிபரம், சுத்தகங்கை போன்ற செய்திகள் இக்காண்டத்தில் கூறப்படுகின்றன.

4. பரமஞா னோத யத்தின்
பரஞ்சுட ருலகுக் கெல்லாம்
சிரமென வுதித்த ஞான
தெய்வனா யகன்றாள் போற்றி

வரமென வாத யோகம்
 மறைப்புனூல் பாஷை யெல்லாம்
குருமுனி தமிழாற் செய்ய
 குமரனைங் கரற்றாள் காப்பே. 1

காப்பென வுரைத்த வாதங்
 கணக்கொரு லட்சந் தன்னை
சேர்ப்பது பாதி யாகத்
 திரட்டிய நூலை யெல்லாம்
நாற்பதும் மூன்றும் மொன்றாய்
 நாட்டிய காண்டந் தன்னில்
பார்ப்பது அஞ்ஞூ றாகப்
 பாசைநூல் படித்திட் டோமே. 2

5. செப்பியதோர் வகையென்ன நூலின் மேலாம்
 தீச்சையொடு கைப்பாகஞ் சேர்மா னங்கள்
தப்பிலாக் குருமுடிக்குங் கருமா னங்கள்
 தத்துவபஞ் சீகரண தர்க்க நோக்கும்
ஒப்புவமை யில்லாத மவுனக் கூறும்
 உறுதியுள்ள அஷ்ட்டாங்க யோகக் கூறும்
மெய்ப்புடைய காயகற்ப சமாதிக் கூறும்
 வெளியேறி யோடுமணி வேதைக் கூறே. 1

6. தாக்கிப்பா ரிந்தநூ லஞ்சு காண்டம்
 தான்பா(ர்)க்கில்(ச்) சமுசியங்க ளகண்டே போகும்
நோக்கிப்பா ரிந்தநூல் தனக்குச் சாட்சி
 ரோமன் அஞ்ஞூறும் நந்தி நாலும்
தேக்கிப்பா ரிதனாலே தெளியா துண்டோ
 சிவசிவா குருத்தேடித் திரிய வேண்டாம்
பாக்கியமாய் நூலினிலே ரெண்டாங் காண்டம்
 பாடுகிறேன் முதற்காண்டம் பரமா முற்றே. 10

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள் மிகுதி. ஒற்றுகள் மிகுந்துள்ளன. அந்தாதி அமைப்பில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் வழங்கும் இந்நூலில், பரிபாசையின் ஐந்து காண்டங்கள் சேர்ந்தும், தனித்தனியாகவும் உள்ளதைக் காணலாம். 11. இல்லை.

IV. 1. R. 265(b-1), R. 268(b), D. 2240, R. 8888(a), R. 10830, R. 10832(a). 2. சி.ம.மை.,ஆ.நி.எண் 745(g), த.ச.ம.நூ.எண்கள் 270(a), 445(c), 469(a), 32(a), 430(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பரிபாசை திரட்டு 500,** தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியிட்டுள்ள தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணையில் இந்நூல் 'அகத்தியர் குருநூல்' என்ற பெயரில் வழங்கப் படுவதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதன் சுவடிக்கட்டில், அகத்தியர் பரிபாசை முதற்காண்டம், இரண்டாங் காண்டம், 2 மூன்றாங் காண்டங்கள், 2 நான்காம் காண்டங்கள், ஐந்தாம் காண்டங்கள் என்பவை தனித்தனியே இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அகத்தியர் பரிபாசை இரண்டாம் காண்டம்

I. 1. **901.** 2. அ. R. 6158(b). ஆ. T. R. 2601. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல். ஆ. Akattiyar kuru nūl. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே தெளிவு. 4. 20. 5. 37x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 40; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதத்திற்குரிய சில மருத்துவப் பொருள்களைத் தயாரிக்கும் முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், வழலை, முப்பு பற்றிப் பேசப்படுகின்றது. சிவத்தின் பெயர், நல்வினை-தீவினைகள், அத்தீவினைகளை நீக்கும் மார்க்கங்கள் கூறப்படுகின்றன. வழலை நான்கு வகைப்படும்.

1. சிறுநீரால் காய்ச்சி ஏற்படுத்துகின்ற வழலை. 2. சுண்ணாம்பு சேர்த்துக் காய்ச்சுகின்ற வழலை, 3. சயித்தல்லணங்கள் கூட்டிக் காய்ச்சுகின்ற வழலை. 4. சளியவர் மாண் வரம் வெள்ளை உள்ளபடி காச்சுகின்ற வழலை என அவை நான்கு வகைப்படும். இந்நூலில் மேலும், கர்ப்பமூலம், பஞ்சீகரணம், யோக, ஞானக் கருத்துகள் என்பவை வருகின்றன. உப்பு வகைகளில், வெடியுப்பு, நிலஉப்பு, போன்றனவற்றையும் சில சவுக்காரத்தின் வகைகளையும் இந்நூல் கூறுகின்றது. சுண்ண வகைகளில் கிளிஞ்சற் சுண்ணம், அண்டச் சுண்ணம், வழலைச் சுண்ணம், சிவசுண்ணம் என்பன வருகின்றன.

4. —.

5. முத்தணி நகையாள் வேதம்
முத்துமை(ப்) பாகம் வைத்த
சுந்தமெஞ் ஞான தீபச்
சுடரெனும் சோதி பாதம்
நித்தமுந் தொழுது போற்றி
நீதிசேர் பாசை னூலின்
புத்தமு ரெண்டாங் காண்டம்
பொருள்தனைப் புகலு வோமே. 1

6. வாறான யிக்காண்டம் ரெண்டுக் குள்ளே
வழலை(க்)குஞ்ச் செப்புகின்ற மார்க்கஞ் சொன்னேன்
கூறான மூன்றினிலே கறுப்ப மூலம்
குணமான யிடைபஞ்சீ கரணஞ் சொல்லும்
தூறான நூலினிலே யோகம் சொல்வேன்
சுத்தஉப்பு யெடுக்கும்வகை அஞ்சில் சொல்வேன்
சீரான உப்பெடுக்கும் வகையைப் பாரு
தெளிவான ரெண்டாங்காண்டம் சிவனூல் முற்றே. 100

7. குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. ர/ற, ழ/ள வேறுபாடில்லை. பிறமொழிச் சொற்களும் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெறும் இந்நூலில், பரிபாசைகளாலான மூன்றாங் காண்டத்தைப் பற்றிப் பாடப் போவதாக இறுதிப் பாடல் கூறுகின்றது. 11. இல்லை.

IV. 1. D.2240, R. 265(b-2), R. 8888(b). 2. சி.ம.மை.,ஆ.நி.எண் 745(g), த.ச.ம.நூ.எண்கள் 270(a), 270(b), 445(b), 469(b), 321(a), 430(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பரிபாசை திரட்டு 500,** தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. பரிபாசை நூல்களில் 500 பாடல்கள் 5 காண்டங்களில் காண்டங்களுக்கு 100 பாடல்களாகக் கூறப்படுவது இயல்பு. ஒவ்வொரு காண்டமும் தனித்தனித் தொடக்கப் பாடலையும் முடிவுப் பாடலையும் கொண்டிருக்கும்.

அகத்தியர் பரிபாசை மூன்றாங் காண்டம்

I. 1. **902**. 2. அ. R. 6158(c). ஆ. T. R. 2601. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல். ஆ. Akattiyar kuru nūl. இ. பரிபாசை மூணாங்காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே தெளிவு. 4. 21. 5. 37x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது 11. பொடிந்துள்ளது. 12. 41; இருபக்கங்களிலும் எழுதட் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம் 15. இல்லை. 16. முழுமை. 17. 101 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல தெய்வங்களின் பூசை முறைகளோடு மருத்துவ முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. பஞ்சீகரணத் தீட்சை, கணபதி பூசை, பிரமன்பூசை, விட்டுணுபூசை, உருத்திரன் பூசை, மயேசுவரன் பூசை சதாசிவன் பூசை, என்பவற்றுடன் தொடங்கும் இந்நூலில் நாதவிந்து, அண்டம், பிண்டம், வல்லாரைக் கற்பம், வெண்சாரக்கற்பம், காயாதிக்கற்பம், மேன்மூலசுத்தி, கீழ்மூல சுத்தி, கருத்தயிலம், சுன்னம் எனும் மருந்துகளின் இயல்புகள் கூறப்படுகின்றன. மேலும் இந்நூலில் பலவகைச் சுத்தி முறைகள், சாப முறைகள், சாப நிவர்த்திகளும் பேசப்படுகின்றன.

4. ஹரிஓம்.

5. சொந்த....... வேதமிங்கே........
டுங்கய்யால் பாகம் வைத்த
வந்தமெஞ்ஞான..... ....
சோதிபாதம் ....
சொந்தமாய்த் தொழுது போத்தித்
துதிபெறப் பாசை னூலின்
கொந்தவே மூணாங் காண்டம்
...... தனைப் புகலு வோமே. 1

பொருளுறக் காண்டந் தன்னில்(ப்)
பூட்டினேன் வழலை நாமம்
அருள்பெற உப்பின்.........
அறிவித்தேன் ஞானந் தன்னை
யிருள்தனை வெளிய தாக
யியம்பினேன் ரெண்டாங் காண்டம்
குருவருள்............
குறியது வகைசொல் வேனே 2

6. .... மூன்றினிலே கருவை யெல்லாம்
.... கொட்டிவைய்த் தேன்.........
.... பின்னேமுன்றிலே தெளிந்துபாரு
.... அதுவாகும்ப் பரமகுரு நீயே யாவாய்
.... அடக்கி வைய்த்தேன்
.... மூன்றெனுங் காண்ட முற்றே. 101

7. முற்றும்.

8. மூலம். 9. பிழைகள், பாடபேதங்கள், காணப்படுகின்றன. ழ/ள, வேறுபாடின்றி ஏடு எழுதப்பட்டுள்ளது. 'போற்றி' என்பது 'போத்தி' எனப் பேச்சு வழக்கில் வருதல் காண்க. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூலில் அதிகமாகத் தெய்வ வணக்கம் கூறப்பட்டுள்ளது. 11. இல்லை.

IV. 1. D.2240, R. 265(b-3), 6158(f), 268(h), R. 8888(c). 2. சி.ம.மை.,ஆ.நி.எண். 745(g), த.ச.ம.நூ.எண்கள் 445(c), 430(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பரிபாசை திரட்டு 500,** தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்த நூல் மிகவும் சிதைந்துள்ளது. பரிபாசை நூல்கள் 500 பாடல்களாயினும், தனித்தனியாக 5 காண்டங்களில் பாடப்பெறுவதும் இயல்பாதலால் சுவடி விளக்கமும் தனித்தனியாக கொடுக்கப்படுகிறது.

அகத்தியர் பரிபாசை மூன்றாங் காண்டம்

I. 1. **903.** 2. அ. R. 6158(f). ஆ. T.R. 2601. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல். ஆ. Akattiyar kuru nūl. இ. பரிபாசை மூணாங்காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே படிக்க முடிகிறது. 4. 41ஆம் ஓலையிலிருந்து தொடங்குகிறது, 60ஆம் ஓலையில் முடிகிறது. 5. 37x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிக மிகப் பொடிந்துள்ளது. 12. 20; ஓலைகள் ஒட்டிக் கொண்டுள்ளன, இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15, 16, 17. பொடிந்துள்ளதால் அறிய முடியவில்லை.

ஆ. —.

III. 1. பல தெய்வங்களின் பூசை முறைகளோடு மருத்துவ முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 902 போன்றது.

4. —.

5. சிவமான பூரணமாம் நாத விந்து
சிவன்மயமா நிறையொரு பரமே யாதி
உவமான மில்லாத பரந்த னக்கே
உருவாகி நின்றவொரு நாத மந்த
நவமானந் தவிர்த்திரண்டு மோன மாய
நன்மைசெறி பரிதிமதி சுடர்சு ளான
பவமான மிந்நூல்மூன் றாங்காண் டத்திற்(ப்)
பராபர னுமைங்கரனே கார்ப்ப மன்றே. 1

6. சிதைவு.

7. மூன்றாங் காண்டம் முற்றும்.

8. மூலம். 9. ஒற்றுகள் மிகுந்துள்ளன. பாடபேதங்களும் உள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற இந்நூல் 'திரட்டு நூல்' என்றும் அழைக்கப்பெறும். இலட்சம் பாடல்களைப் பாதியாகத் திரட்டி, பின்பு நாற்பத்து மூன்று மொன்றாய் ஆக்கி, இறுதியில் 500 பாடல்களில் பரிபாசை நூல்கள் 5 காண்டங்களில் பாடப் பெற்றதாக ஒரு பாயிரப் பாடல் கூறுகின்றது. 11. இல்லை.

IV. 1. D.2240, R. 265(b-3), 6158(c), R. 8888(c). 2. சி.ம.மை.,ஆ.நி.எண் 745(g), த.ச.ம.நூ.எண்கள் 445(c), 430(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பரிபாசை திரட்டு 500,** தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இச்சுவடிக் கட்டில் பரிபாசை முதற்காண்டம் முதல் ஐந்தாங் காண்டம் வரை முற்றுப்பெற்ற பின் 41ஆம் ஓலை முதல் வேறொரு மூன்றாங் காண்டம் தொடங்கி 60ஆம் ஓலையில் முடிகின்றது. அதன்பின் மற்றொரு 'நாலாங்காண்டம்' 61ஆம் ஓலை முதல் தொடங்கி 80 ஆம் ஓலையில் முடிவடைகிறது.

அகத்தியர் பரிபாசை நான்காம் காண்டம்

I. 1. **904.** 2. அ. R. 6158(d). ஆ. T.R. 2601. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல். ஆ. Akattiyar kuru nūl. இ. பரிபாசை மூணாங்காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே தெளிவு. 4. 20. 5. 37x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 40; இருபக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 101 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம், ஆறாதாரம் போன்றவற்றைக் கூறும் பகுதியாக இந்நாலாங் காண்டம் உள்ளது. 2. மருத்துவம். 3. இந்நூலில், ஐம்மூலம், ஐங்காயம், கல்லுப்பு, இரசக் கட்டு, திகைப்பூண்டு எனும் மருந்து வகைகளும், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்திஎனும் ஆறாதாரங்களில் சிலவும் கூறப்படுகின்றன. பஞ்சபட்சி, சல்லிவேர், குருவண்டு, விடக்கல், சதகோடிகுளிகை எனும் மருந்துப் பொருள்கள் தொடர்பான செய்திகளும் வந்துள்ளன. இவற்றுடன், பதினெண்சித்தர்களின் பெருமை, மும் மண்டலங்களில் சூரியமண்டலம், சந்திர மண்டலம் என்பனவும் கூறப்படுகின்றன. சித்தர்களின் தர்க்க கருத்துகள், பூசைக்குறிப்புகள், சித்தர்களின் வாக்கு என்பனவும் விளக்கப்படுகின்றன. வாலைதேவி மந்திரம், கருக்கள், கருக்குருக்கள் என்பனவும் பேசப்படுகின்றன

4. ஹரிஓம்.

5. சுந்தர வடிவுள் ளானைத்
தொழுது கொண் டெந்தன்
....ந்துகில்........
.... வேதம் நாலும்
சொந்தமென் றாண்டு கொண்ட
தோகையைப் பாகம் வய்த்த
யெந்தனுக் குபதே சங்கள்
யியம்பினா யீச னாரே. 1

6. தானென்ற காண்டமது நாலில்(த்) தானும்(ச்)
சகலஉயிர் வாழ்வதற்கு யோககற்பஞ் சொன்னேன்
தோனன்ற.... உமை பாதங் காணச்
செப்பினேன் வுன்நிலை(த்) திறமாய்ச் சொன்னேன்
மானென்ற அஞ்சினிலே கருவை யெல்லாம்
வகைதோணைக் காண்பதற்கு ....
நானென்ற ஆணுவத்தைப் போக்கி நன்றாய்
நாலாங்காண் டம்யோக கற்ப முற்றே. 101

7. —.

8. மூலம். 9. பிழைகள் மலிவு; பேச்சுமொழிச் சொற்கள் வந்துள்ளன. ழ/ள, ற/ர, வ/வை வேறுபாடின்றி

எழுதப்பட்டுள்ளது. ஒற்றுகள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நாலாங் காண்டத்துப் பரிபாசையில், சித்தர்களின் கொள்கைகள் மிகுந்திருப்பதைக் காணலாம். 11. இல்லை.

IV. 1. R.268(i), R. 265(b-4), R. 6158(g), R. 8888(d), R. 10662, R. 10737(a), R. 10764, R. 10800. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 745(g), த.ச.ம.நூ.எண்கள் 445(f), 430(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பரிபாசை திரட்டு 500,** தாமரை நூலகம், சென்னை - 1996. 3. இல்லை.

VI. ஆயிரக்கணக்கான பரிபாசைப் பாடல்களை ஆராய்ந்து இறுதியில் 500ல் அடக்கியதாக இந்நூலின் இறுதியொருபாட்டில் கூறப்பட்டுள்ளது.

அகத்தியர் பரிபாசை நான்காம் காண்டம்

I. 1. **905.** 2. அ. R. 6158(g). ஆ. T.R. 2601. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல். ஆ. Akattiyar kuru nūl. இ. பரிபாசை நாலாங்காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே தெளிவு. 4. 20. 5. 37x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது.. 12. 40; இருபக்கங்களிலும் எழுதப்ப ட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15, 16, 17. ஏடுகள் பொடிந்துள்ளதால் அறிய முடியவில்லை; ஆயினும் முடிவில் 101 ஆம் பாடல் உள்ளது.

ஆ. —.

III. 1. ஆறாதாரங்களில் சிலவற்றையும், இரசவாத மருந்துளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 904 போன்றது.

4. —.

5. சிதைவு.

6. ஞாயிரும்ந் நூற்றிரு பலிக்குரு.......
நாதா......... நூல் குருநூலாமல்
ஆயிரமை யாயிரத்தை யாய்ந்து நேக்கி
னான்தொகையைந் நூற்றில டங்கிப் போமே
ஞாயிருபோல் விளங்குமென்றன் முதவாக் கா.......
நவரத்ன நால்வேத முழுதுஞ் சொன்னேன்
ஆயிரத்தி லரைகுருவின் சூட்சா சூட்ச
மாதியெலா நவினான்காங் காண்ட முற்றே. 101

7. நாலாங் காண்டம் முற்றும். குருதன் துணை.

8. மூலம். 9. பாடபேதங்கள் உள்ளன. கூட்டுமெல்லெழுத்துக்கள் (எ.டு: ஞாயிரும்ந்) வந்துள்ளன. 10. 'குருநூல்' என இந்நூலின் இறுதிப் பாட்டில் வந்துள்ளதால் இந்நூல் 'அகத்தியர் குருநூல்' எனவும் அழைக்கப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R.268(i), R. 265(b-4), R. 6158(d), R. 8888(d), R. 10662, R. 10373(a), R. 10800, R. 10764. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 745(g), த.ச.ம.நூ.எண்கள் 445(f), 430(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பரிபாசை திரட்டு 500,** தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. பரிபாசை நான்காம் காண்டங்களில் 'தானென்ற காண்டமது' எனும் தொடக்க அடிகொண்ட இறுதிப்பாடலும், 'ஞானம்ந் நூற்றிரு' எனும் தொடக்க அடிகொண்ட இறுதிப் பாடலும் வந்துள்ளன.

அகத்தியர் பரிபாசை ஐந்தாங் காண்டம்

I. 1. **906.** 2. அ. R. 6158(e). ஆ. T. R. 2601. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் குருநூல். ஆ. Akattiyar kuru nūl. இ. பரிபாசை ஐந்தாங் காண்டம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. சிறிதளவே தெளிவு. 4. 21. 5. 37x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது.. 12. 41; இருபக்கங்களிலும் எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவ முறைகள், தீட்சைவிதிகள், கைரேகைப் பலன்கள், போன்றவற்றை இந்த ஐந்தாம் காண்டம் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. இரசவாதத்திற்கான வழலை, பூமிநாத பிண்டம், சிவ உப்பு, சத்தி உப்பு, கேசரக் குளிகை, கற்பக் கரு, வெண்சாறை உப்பு, தேசிநீர், கம்பியுப்பு, பாறையுப்பு, சல்லிவேர், கொல்லிவேர் ஆகிய மருந்துப் பொருள்கள் இந்நூலில் கூறப்படுகின்றன. கைபாக செய்பாகங்கள், சாபநீக்கல் முறைகள், ஓமகுண்டவிதிகள், உலக வாதிகளின் குணம், பிரம கற்பம், குருநூல் ஐம்பதின் செய்திகள், மதிவெண்பாவின் செய்திகள், நந்தீசர் நிகண்டின் செய்திகள், துலாராசி, மச்சரேகை, பராபர தீட்சை, நிதாரதீட்சை, நிர்க்குண தீட்சை, நின்மல தீட்சை, பூரண தீட்சை, ஆதார தீட்சை, போன்ற செய்திகள் இந்நூலில் வந்துள்ளன.

4. —.

5. ஆதிநடு வந்தமில்லா பொருளே முக்கண்
யமலனை யெண்டோளாயம் பலத்தி லாடும்
சோதியை நின்மலனை நிராயயமே மேனாட்(ச்)
சுந்தர(ர்)க்காய் பரவைபால் தூது சென்ற
சோதியுமா பதியை பசுபதியைத்
தூயக்குண கருணையருளக் கடலேயிமல வெற்பு
மாதியு போகனை யன்போடுபேற்றி மாசில்
யந்தரங் காண்டமதை வாய..... டேனே. 1

வாதமெனும் னூல்களெல்லாம் குருனூ லாகும்
வருந்தியிந்த அஞ்னூறும் கருவாய்ப் பாடி
சாதகமாய்ப் பரிபாசை அனைத்துமே
மார்த்தாண்டனென லிங்க வைத்த அய்ந்தாங்
காண்டத்தில்

பூதமெனும் அய்ம்பூத நிலையைக் கண்டு
போதவே வாசியொட்டி யறிவி னாலே
காதவழி போகாமல்(க்) கருத்தே டாமல்
காலறிந்து நிலையில்நின்று கருதி னேனே. 2

6. வாழ்க்கைபெற்ற சிவன்வாழ்க்கை சித்தி வாழ்க்கை
வளமான மாலயனும் ருத்திர வாழ்க்கை
வாழ்க்கைபெற்ற பதினெண்பேர் வாழ்க்கை வாழ்க்கை
மதிரவியும் நின்றஉடல் வாழ்க்கை யாகும்
வாழ்க்கைபெற்றார் குரு(ச்)சீஷன் பெற்ற வாழ்க்கை
மகிழ்ந்து நான்சொன்ன கருவின் வாழ்க்கை
வாழ்க்கைபெற்ற கற்பமுண்ட பெரியோர் வாழ்க்கை
மனுநீதி பரிபாசை வாழ்க்கை முற்றே. 100

7. தானென்ற உள்(க்)கருவின் மூல வாழ்க்கை
தாயான வெளிக்கருவின் தலத்தின் வாழ்க்கை
தேனென்று ரெண்டினுட வாழ்க்கை யாலே
சித்தர்முனி தவசிரிசி பெற்ற வாழ்க்கை
மானென்ற சிவசத்தி யான வாழ்க்கை
வய்யகமும் பிரபஞ்ச மான வாழ்க்கை
கோனென்று யென்ங்குருவுஞ் சிவனுஞ் சொன்ன
குருமுடிக்கும் பரிபாசை வாழ்க்கை முற்றே. 101

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. ர/ற, ழ/ள வேறுபாடில்லாமல் கலந்து எழுதப்பட்டுள்ளது. ஒற்றுகள் பல இடங்களில் மிகுந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூலில், சுந்தரர்க்காகப் பரவையிடத்துச் சிவன் தூதுசென்ற செய்தி கூறப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R.268(e), R. 265(b-5), R. 8888(e), R. 10801. 2. சி.ம.மை.ஆ.நி.எண் 745(g), த.ச.ம.நூ.எண்கள் 321(a), 445(g), 430(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பரிபாசை திரட்டு 500,** தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. 'வாதமெனும் நூல்களெல்லாம் குருநூல் ஆகும்' என்று கூறுவதால் இந்நூலுக்குக் குருநூல் என்பது பெயர் என்றும்,

பரிபாசைக்கு500 பாடல்கள் உள்ள விவரமும், மனித வாழ்க்கை பற்றி இறுதிப் பாடல்களின் குறிப்பும் இவ்வைந்தாங் காண்டத்தை அலங்கரிக்கின்றன.

அகத்தியர் பரிபூரணம்

I. 1. **907.** 2. அ. R. 6918. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபூரணம். ஆ. Akattiyar pari pūraṇam. இ. அகஸ்தியர் பரிபூரணம் 400ல் சமுசார விழியிலிருக்க. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. ஒரு பக்கம் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள் மட்டும். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இல்லற வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றிக் கூறும் நூல். 2. தத்துவம். 3. இல்லறத்தில் இருப்பவர்கள் பாவமதைச் செய்யாமலிருந்தால் நன்றாய் இருக்கும், பலவேத நூல்களைப் படிக்க நன்றாயிருக்கும்; ஆனால் இவர்களுக்கு வருகின்ற சினத்தினால் தீய எண்ணங்களிலே மனத்தைச் செலுத்துவார்கள். மேலும் பெண்களின் மேல் ஆசை ஏற்படும்; ஆனால் தன் மனைவியின் மேல் ஆசைப்படுவது தவறில்லை. நல்ல எண்ணங்கள் ஒரு மனிதனுக்கு வர கோயில், குளங்கள் எல்லாம் தேடாமல் தன் மனத்தை நல்வழியில் செலுத்தினால் அவர்கள் நற்கதி அடைவார்கள்; இருந்தும் மனம் தேர்ந்து நதியில் மூழ்கி கமலமலர் கொண்டு சிவனைப் பூசை செய்து தண்டமென்ற பூரணத்தில் நின்று, பல சிவாலயங்களுக்குச் சென்று தன் மனக் குறைகளைக்கூறி வழிபட்டு வந்தால் எல்லாம் சித்தியாகும் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகஸ்தியர் பரிபூரணம் 400ல் சமுசார வழியிலிருக்க.

5. பாவமென்ற பாவத்தை செய்ய நன்றே
பலவேத சாஸ்திரத்தைப் பார்க்க நன்றே
தாவமென்ற தபசுக்குக் கே.......... மாகா
தன்மையுள்ள கோவமதால் தபசு பாழாம்
சோபமென்ற பெண்களின்மே லாசை யுண்டாஞ்
சொந்தமதா யிருந்ததினால் தோஷ மில்லை
கோவிலென்றுங் குளங்கலென்றுங் தேட வேண்டாங்
குணமாக வுண்ணிடத்திற் குரிதான் காணே.

6. கண்டுமனந் தேர்ந்தந்த நதியில் மூழ்கி
கமலமலர் சிவாக்கியத்தைப் பூசை பண்ணி
தண்டமென்ற பூரணத்தின் கீழ தாக
சபையான சிவாலயங்கள் நதியு முண்டு
கொண்டுநின்ற அளுகதமாம் யிறப்பால் தீர
கொண்டுநின்ற சிவாலயமும் நதிக ளுண்டு
வண்டெனவே வாசிமலந் தனையெ டுத்து
மகத்தான சிவாலயத்தைப் பூசை பண்ணே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில்அமைந்துள்ளன.
10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பரிபூரணம் 400ல் சமுசார விழியிலிருக்க என்ற இந்நூல் மூன்று பாடல்களே பெற்றுள்ளன. இப்பாடல்களில் இல்லறத்தார்களுக்கு அறிவுரைகள் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

அகத்தியர் பரிபூரணம் 1000ல் சில

I. 1. **908.** 2. அ. R. 6915. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபூரணம். ஆ. Akattiyar pari pūraṇam. இ. அகஸ்தியர் பரிபூரணம் 1000 புவனை சூட்சம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5.

9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 2; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8-9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 6 பாடல்கள்.

ஆ. —.

III. 1. கபால நோய், மலட்டின் குணங்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் பரிபூரணம் என்ற இந்நூல் கபால நோய்களுக்கு அயக்கணங்குச் செந்தூரம், பூரணநெய், அமுர்தரசக் கற்பம், சிங்கிச் சுண்ணம் போன்ற மருந்துகள் தயாரிக்கும் முறையையும் அதைப்பயன்படுத்தும் விதமும் கூறிப் பெண்களின் மலட்டு நோய்களைப் போக்குவதற்குச் சந்தான் காணி என்னும் மூலிகையைக் கொண்டு வந்து சுத்தம் செய்து மனம் ஒரே நிலையாய் இருந்து சாப்பிட்டு வந்தால் குணமடையும் என்றும் கூறுகிறது.

4. அகஸ்தியர் பரிபூரணம் 1000 புவனை சூட்சம்.

5. பாரப்பா வின்னமொரு சூட்சங் கேளு
பதிவாக அஞ்சுவரை நேரே கீறி
காரப்பா அஞ்சுவரை குறுக்கே கீறி
கருணையுடன் பதினாறு அறையு மாச்சு
நேரப்பா அறைதனிலே மைந்தா கேளு
நினைவாக ஓம்றீங் அங்உங் கென்று
சாரப்பா தானெழுதி கால்தலையாய் மாறி
சங்கையுடன் மஞ்சனத்தில் சாற்றிக் கேளே.

6. பாரப்பா மலடாக்கி யிருந்த தாலேன்
பக்குவமா யன்பதுக்குள் கெற்ப முண்டாம்
நேரப்பா மணிமந்திரம் யிதுதா னாகும்
நேர்மையுள்ள ரகசியமிது சந்தா.... விந்தை
ஆரப்பா அறிவார்கள் சந்தான் காணி
அறிந்துமன துருமையினா லடக்கம் பண்ணி

சாரப்பா சாகரத்தில் தபசு பண்ணி
சதாகாலம் பூரணத்தில் சார்ந்து வாழே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் சிறுசிறு பிழைகளுடன் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலில் 6 விருத்தப்பாடல்கள் உள்ளன. பாடல்களுக்கு எண்கள் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன. நூலின் தலைப்புக்கள் விளக்கமாக உள்ளன.

அகத்தியர் பரிபூரணம் 1200ல் சில

I. 1. **909.** 2. அ. R. 6909. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபூரணம் 1200ல் சில. ஆ. Akattiyar pari pūraṇam 1200- l cila. இ. கும்பமுனி அய்யர் பரிபூரணம் 1200ல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. ஒரு பக்கம் மட்டும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 5 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிவயோகம் கற்க வேண்டிய முறைகளும், நீக்க வேண்டிய முறைகளும் கூறும்நூல். 2. யோகம். 3. அகத்தியர் பரிபூரணம் என்ற இந்நூல் முதற்கண் சிவயோகம் பயில வேண்டியவர்கள் அணுவான தமர்வாசல் அறியாமல் நாடுவிட்டு நாடு அலைவார்கள் என்றும், கொலையான பாவச் செயல்களை

நீக்கி எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் மதித்து, மலையான மோகம் என்னும் வலையில் சிக்கி அறிவிழந்து நிற்காமலும், காம லீலைகளில் எண்ணங்களைச் செலுத்தாமலும், தாம்பூலம் தரிக்காமலும், மீன், இறைச்சி உண்ணாமலும், கோபம் கொள்ளாமலும், ஆனந்தமயமான அறிவில் நின்று சத்தி, சிவன் ஆகியோருக்குப் பூசை செய்து பிறகு பூரணம் செய்து அப்பூரணத்தை நெற்றியில் பூசி, தூய சிந்தனையுடன் சிவயோகத் துறையில் நின்று தியானம் செய்து வந்தால் சிவயோகம் சித்தியாகி, தில்லை நடராசரைக் காணலாம் என்று இந்நூல் கூறுகிறது.

4. கும்பமுனி அய்யர் பரிபூரணம் 1200ல்.

5. அலைவார்கள் தேசாதி தேசங்கள் தோறும்
    அணுவான தமர்வாசல் அறியாமல் தானே
கொலையான பாவங்கள் செய்வார்க ளய்யா
    குணமான தன்னுயிர்போல் மன்னுயிரைக் காணார்
மலையான மோகவலை தன்னிலுற வாகி
    மதிகெட்டு மாளுவார் மண்மிதில் தானே
கலையான யிருகலையும் ஒருகலையாய்ப் பாரார்
    காமவலை தன்னில்விளை யாடுவார்கள் பாரே.

6. தனித்துநின்று சத்திசிவம் பூசை பண்ணு
    தன்மையுடன் பானமுர்தம் தானே கொள்ளு
துணித்திருந்து பூரணத்தைச் சுகமாய்ப் பூசி
    சுகமாகச் சிவயோகத் துறையில் நில்லு
மணித்திருந்த தாள்கமலத்தி லமுர்தங் கொண்டு
    மயங்காத பூரணத்திற் தீபங் காணும்
அணிந்திருந்த சிவயோகத் தண்டத் துச்சி
    அம்பரமாம் சிதம்பரத்தில் அடங்கு முற்றே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு அகத்தியர் பரிபூரணம் என்று பெயரிடப்பட்டிருந்தாலும் யோக மார்க்கத்தைப் பற்றி மட்டும் சுருக்கமாகப் பேசுகிறது.

அகத்தியர் பரிபூரணம் 1200ல் சில

I. 1. **910.** 2. அ. R. 6885. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபூரணம் 1200. ஆ. Akattiyar pari pūraṇam 1200. இ. பரிபூரணம் ஆயிரத்திருநூறில் அஞ்சனா தேவி மந்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 2; இருபக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 7 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அஞ்சனாதேவி மந்திரம், தீட்சை, பூசைமுறைகள் ஆகியவற்றைக் கூறும் நூல். 2. யோகம், மந்திரம். 3. அகத்தியர் பரிபூரணம் என்ற இந்நூலுள் அஞ்சனா தேவி என்னும் தெய்வத்தைக் காணுவதற்கான மந்திர முறைகள், பூசை முறைகள், தீட்சை விளக்கங்கள், அஞ்சனாதேவி மூலம், பேசாத மவுன மூலம், நிறைந்தவெளி மூலாதாரம், முத்திதரும் ஆதாரம், மந்திர முறைகள், உண்மையென்ற பூரணம், மவுன பீடம், சூரியன் சந்திரன் இருக்குமிடம், நயன நாட்டம், ஓங்காரக் கம்பம், வாசி போன்ற செய்திகள் பேசப்படுகின்றன.

4. பரிபூரணம் 1200ல் அஞ்சனா தேவி மந்திரம்.

5. **ஆச்சப்பா யின்னமொரு தீட்சை கேளு**
அருளான அஞ்சனா தேவி மூலம்
பேச்சப்பா பேசாத மவுன மூலம்
பிலமான புலத்தியனே சொல்லக் கேளு
மூச்சப்பா நிறைந்தவெளி மூலா தார
முத்திதரு மாதார முடிவில் நின்று
காச்சப்பா ஓம்கிலி ரங்ரங் கென்று
கண்ணார நூறுருவில் காண லாமே. 1

6. உண்மையென்ற பூரணமே மவுன பீடம்
உற்றகலை ரவிமதியும் சென்றிருக்கும் வீடு
நன்மையென்ற வீடதிலே நயன நாட்டம்
நாட்டமுட னிருந்துநன்றாய் பார்த்தா லாகின்
சின்மயமாய் நின்றஓங் காரக் கம்பம்
திருவான கம்பமடா வாசி யாச்சு
தன்மையுட னின்றிலங்கும் வாசி யாலே
சாயுச்சியப் பதவியது தான்றா னாச்சே. 7

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதி அமைப்பில் சொற்களில் ர-ற வேறுபாடுகள் இல்லாமல் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அஞ்சனா தேவியைக் காணுவதற்கான மந்திரமும் தீட்சை விளக்கமும் கூறும் சிறந்த நூலாக இந்நூலைக் கொள்ளலாம்.

அகத்தியர் பரிபூரணம் 1200ல் சில

I. 1. 911. 2. அ. R. 6916. ஆ. T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபூரணம். ஆ. Akattiyar pari pūraṇam. இ. அகஸ்தியர் பரிபூரணம் 1200ல் அம்பிகா தேவி பூசை.. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 3; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8-9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. அம்பிகா தேவி மந்திரம், தீட்சை விளக்கம், பூசை முறைகள் ஆகியன கூறும் நூல். 2. யோகம். 3. அகத்தியர் பரிபூரணம் 1200ல் என்ற இந்நூலில் முதலாவதாக அம்பிகா தேவியைக் காணும் முறை கூறப்பட்டுள்ளது. தேவி என்று எல்லோராலும் சொல்லப்படும் அம்பிகா தேவியைக் கண்டு செம்மையுடன் சேவை செய்வதற்கு ஆவி என்ற மந்திரமாம் சூட்சந்தன்னை அருள் பெருகும் அகத்தியரின் மாணவராகிய புலத்தியர் சொல்வதாகவும், அவற்றை மனம் சிதறாமல் ஒரே நிலையாய் இருந்து அங் உங் ரங் கிலியும் ஓம் என்று கூவி மனம் அசையாமல் மவுனமாகக் கூர்மையுடன் நந்தி, சக்திக்கு ஒரு நூறு முறை செபம் செய்தால்அம்பிகா தேவி வசப்படுவாள் என்று கூறுகிறது. மேலும் அட்டகரும மார்க்கங்களாகிய பேதனம், உச்சாடனம், ஆகருசணம் ஆகியவைப் பற்றியும் இந்நூல் விளக்கிச் செல்கின்றன.

4. அகஸ்தியர் பரிபூரணம் 1200ல் அம்பிகா தேவி பூசை.

5. தேவியென்ற அம்பிகா தேவி தன்னை
செம்மையுடன் கண்டுபதஞ் சேவை செய்ய
ஆவியென்ற மந்திரமாஞ் சூட்சஞ் தன்னை
அருள்பெருகும் புலத்தியனே சொல்லக் கேளு
தாவிமனங் கொண்டுகே சரத்தில் நின்று
தன்மையுடன் அங்உங்ரங் கிலிஓம் என்றே
தான்கூவி மனமசையா மல்மவுன மாகக்
கூர்மையுடன் நந்திசத்தி ஒருநூறு செய்யே.

6. பாரப்பா புலத்தியனே சொல்லக் கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம் பண்ணு
நேரப்பா நின்றபிணி யாரைக் கையில்
நிச்சயமாய் ....
சாரப்பா சுரவாசம் வீக்க மெல்லாம்
சனத்திலே பெத்துவிக்கும் விரு........ பாரு
தேரப்பா மூலகண பதியி னாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மை யாமே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் சொற்கள் பரிபாசையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்திய மாமுனிவர் அருளிச்செய்த பரிபூரணம் 1200 என்ற நூல் ந.தெ. சிகாமணி முதலியார் அவர்களால் (திருவத்திபுரம்) செய்யாறிலிருந்து 1986ல் வெளியிடப்பட்டுள்ளது அந்நூலில் இப்பாடல்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அகத்தியர் பரிபூரணம் 1200ல் சில

I. 1. **912**. 2. அ. R. 6874. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபூரணம் 1200ல் சில. ஆ. Akattiyar pari pūraṇam 1200l cila. இ. கும்பமுனி அய்யர் பரிபூரணம் 1200ல் சில. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 15. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறுசிதைவு. 12. 30; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7-8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 226 பாடல்கள்.

ஆ. —.

III. 1. தியானம், மந்திரம் தொடர்பாகக் கூறும் நூல். 2. தியானம், மந்திரம். 3. அகத்தியர் பரிபூரணம் ஆயிரத்து இருநூறில் சில என்னும் இந்நூலில் இரத்தினகிரி ரகசிய சம்மாரம், மலைகளிலே சஞ்சாரம் பண்ண, வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரை, சதுர கிரி வளமை, சதுரகிரி கிழக்கில் குகைகள் முதலிய பகுதிகளில் செய்திகள் சொல்லப்படுகின்றன. மேலும் இந்நூலில் சிவ மலைகளின் பெயர்களும் அமைப்புக்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. அவை நம்பி மலை கஞ்சமலை, மேருமலை, குற்றால மலை, இராசகிரி

மலை, நாககிரி மலை என்பனவாம். மேலும் அளபட்டி நாகத்துக்கு மந்திரம், மருத்துவ மாமலையில் கெந்தகரிஷி, வியாகசிறுமரிசியிடத்தில் குருமுனிக்கு உபதேசம் போன்ற பகுதிகளும் இடம் பெற்றுள்ளன.

4. கும்பமுனி அய்யர் பரிபூரணம் ஆயிரத்து இருநூறில் இரத்தினகிரி ரகஷ்ய சம்மாரம்.

5. **காணவே யின்னமொரு கதையைக் கேளு**
கமலமென்ற ரெற்றினகிரி மலையில் மைந்தா
ஊணவே யதனிலொரு றாட்ச தன்றா
உண்மையுள்ள தேவாதி ரிஷிகள் தன்னைப்
பேணவே தபசுகளுக் கிடறு பண்ணிப்
பெரிதான கொடுமைகளைச் செய்தா னப்போ
கோணவே யானறிந்து மைந்தா கேளு
சுருக்கிலே ரெற்றினகிரி வலம்வந்த தேனே. 1

6. **காணவே புலத்தியமா ரிஷியே அய்யா**
கருணையுட னீருமிந்தப் படியே பார்த்து
பேணவே யானந்த விளையாட் டாடி
பெரிதான புத்தியினால் தன்னை னாடு
தோணவே வாசியென்ற சற்ப மேறி
சுத்தமுடன் னாட்டசித்துஞ் சுத்திப் பின்பு
பூணவே மனதுகந்த யிடத்திற் சென்று
புத்தியுட னாதரா மூலம் பாரே. 226

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ர-ற, ல-ள வேறுபாடில்லாமல் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். புலத்தியரிடம் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் பரிபூரணம் 1200 என்னும் நூலின் சுருக்கமாகும். 226 பாடல்களுடன் முற்றுப் பெற்றாலும் மேலும் மூன்று பாடல்கள் எண் கொடுக்கமால் எழுதப்பட்டுள்ளன. இந்நூல் கும்பமுனி என்னும் பெயரில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அகத்தியர் பரிபூரணம் 1200

I. 1. **913.** 2. அ. R. 7641. ஆ. T. R. 2955. இ. —. ஈ. —. 3. அ. கும்பமுனி பரிபூரணம் 1200. ஆ. Kumpa muni pari pūraṇam 1200. இ. கும்பமுனி பரிபூரணம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. L.A. வைத்தியநாதன், 13 கிழக்கு மடவாளத் தெரு, லால்குடி, திருச்சி மாவட்டம். 10. கி.பி.1961-62.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 214. 5. 38x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 428; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனிதர்களின் உடம்பில் உள்ள நோய்களை அகற்றி இறவாநிலை பெறுவதற்கான யோக, மருத்துவ முறைகளைக் கூறும் நூல். 2. யோகம், மருத்துவம். 3. கும்பமுனி பரிபூரணம் என்ற இந்நூல், முதலாவதாக மனோன்மணித்தாயை வணங்கித் தொடங்குகிறது. கைலாய மலையின் மகிமை, அகத்தியர் கும்பமுனி யானதன் விவரம், சைவத்தின் அடிப்படைக் கொள்கைகளான பசு, பதி, பாச விவரம், அவற்றின் தத்துவங்கள், அகார உகார மார்க்கங்களின் விவரம், ஆறாதார விளக்கம், சனி பகவானின் குணம், சிவதீட்சை, சக்தி தீட்சை பற்றிய செய்திகள், அட்டகருமங்களின் விவரம், குரு தியானம் போன்ற பல தியானமுறைகள் கூறப்பட்டுள்ளன. மேலும், வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரைக் கற்பம், மஞ்சள் நிற தும்பைச் செடியின் மகிமை, இத்தும்பைச் சாறுதனைப் பருகி யோகம் செய்து வந்தால் இறப்பு இல்லாமல் நிண்ட காலம் வாழலாம் என்றும் கூறுகிறது. அமுர்தரசக் கற்பம், அட்டகர்ம சவுக்காரம், முப்பு விவரம், கற்பூரச் சுண்ணம், பூரண மெழுகு, பிண்டத்தின் விவரம், தலைநோவுக்குப் பற்பம், தலைமுழுக நெய், வசிய முறையில் நோய்தீர்க்கும் முறைகள், சரக்குகளைக் கட்டும் விதம் போன்ற செய்திகளையும் பாடல்கள் கூறுகின்றன.

4. ஹரிஓம் கும்பமுனி பரிபூரணம்.

5. பூரணமாய் நிறைந்தபரி பூரணமே காப்பு
போதமய மானபூ ரணத்தைப் பாடக்
காரணமாய் கருவுருவா யெங்குநிறைந் திருந்த
கண்மணியின் நடுவாகி கருணைதரும் பொருளை
ஆரணமாய் முக்கோணத் தடியில்நடு வாகி
அசையாத பொருளாகி யருளுருவு மாகி
வாரணமாய் மூலமதில் நந்தியெனும் பிள்ளை
வாசியெனு பூரணமனோன் மணிகாப் பாமே. 1

6. முத்தான புலத்தியனே அய்யா கேளு
முழுதுமிதை ஆதியொடு அந்த மாக
சித்தாக நின்றபரி பூரணத்தை நீயும்
செம்மையுடன் பூரணமாய்ப் பார்த்தா யாகில்
வத்தாத பாக்கியமும் வயது சித்தி
மகத்தான யோகமொடு ஞானஞ் சித்தி
வித்தான யோகமொடு ஞானஞ் சித்தி
வேதபர வெளியில்மனம் வெளிசேர் முத்தே. 1200

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. லால்குடியில் கோவில் மடவாளத் தெருவில் சிதம்பர சாஸ்திரி குமாரர் சுப்புராயர் குமாரர் ராமசாமி பொஸ்தகம்.

IV. 1. R. 5825, R. 7643, R. 7621. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 61, 414(c), 750(e). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (அ) ந. தெய்வசிகாமணி முதலியார், (பதி.), **அகத்திய மாமுனிவர் அருளிச்செய்த பரிபூரணம் 1200**, திருவத்திபுரம், செய்யாறு, 1986. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்திய மாமுனிவர் அருளிச் செய்த பரிபூரணம் 1200**, தாமரை நூலகம், சென்னை, 1997. 3. இல்லை.

VI. இந்நூல், 'அகத்தியர் பூரண சூத்திரம் 1200' என்ற பெயரிலேயும் வழங்கப்படுகிறது.

அகத்தியர் பலதிரட்டு 60

I. 1. **914**. 2. அ. R. 2268. ஆ. T. R. 1285. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பலதிரட்டு 60. ஆ. Akattiyar palatiraṭṭu 60. இ. அகஷ்த்தியர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பலதிரட்டு அறுவது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. A.M. கோபால அய்யர், 28 போக்ரோடு, மாம்பலம், சென்னை. 10. கி.பி.1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 25. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 50; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 65 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவித நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல், தங்கவெள்ளை, வங்க பற்பம், சூத பற்பம், தாம்பிர பற்பம், தாளக பற்பம், நாக பற்பம், பவள பற்பம், கிளிஞ்சி பற்பம், கந்தக பற்பம் முதலான பற்ப வகைகள், செந்தூரம், சூத செந்தூரம், காந்த செந்தூரம், வழலைச் செந்தூரம், அண்டச் சுண்ணம், துருசு சுண்ணம், இரச குளிகை, இரவி தெரிசனம், வெடியுப்பு, செயநீர், செயநீர்ப் பாகம், இலிங்கக் கட்டு, கருவங்கக் கட்டு, அயச் செம்பு, சூதகக் கட்டு, நாகக்கட்டு, வெள்ளீயம் நீர் வாங்க முதலான பலவகை இரசாயன மருந்துப் பொருள்களின் தயாரிப்பினையும் அவற்றின் பயனையும். கூறுகிறது.

4. ஓம் நன்றாக. அகஷ்த்தியர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பலதிரட்டு அறுவது.

5. ஆதியந்த மில்லாத பொருளைப் போற்றி
அறையுறேன் புலத்தியனே அப்பா கேளு
வேதையுடன் வைத்தியமும் மறைவு நீக்கி
விள்ளாத கருவையெல்லாம் விளக்க மாக
னாதமென்ற பெருவெளியில் விந்துண் டாகி
நாலாறு ஆதார மதிலுண் டாகி

சாதியென்ற சாதியெல்லா மதிலுண் டாகி
 தத்துவங்க ளாகிநின்ற தனைத்தும் பாரே. 1

6. கொடுத்திட்ட நிலக்கோவைக் கிழங்கு தானும்
 கொடிதொரு முள்ளங்கி கிழங்குப் போலே
கிடைக்குமதை துவைத்துநன்றாய்ச் சாறு வாங்கி
 கீர்த்தியுள்ள வெள்ளீயம் உருக்கிச் சாய்ப்பாய்
நடத்திடுவாய் யிருவத்தூரு திரஞ்சா யப்பா
 நல்லவெள்ளிப் போலவே நீரை வாங்கும்
புடந்தனிலே போகாது வெள்ளி மார்க்கம்
 பொய்யல்ல சொன்னதெல்லாம் நிசந்தப் பாதே. 65

7. முடிந்தது முற்றும். குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. ள/ழ ஆகிய எழுத்துக்களிடையே வேறுபாடு பேணப்பெறவில்லை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. 1869ம் வருடம் ஆகஸ்டு மாதம் 21ஆம் தேதி.

IV. 1. R. 2267, R. 7055, R. 8868(b), R. 8868(c). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், சுந்தரானந்தர் வகார சூத்திரம் 25 (R. 2260), அகத்தியர் வழலை (R. 2261), அகத்தியர் வகார சூத்திரம் 200 (R. 2262), சட்டைமுனி சவுக்கார வைப்பு 200 (R. 2263), அகத்தியர் திரிபுவனக் கண்ணாடி (R. 2264), அகத்தியர் தத்துவம் (R. 2265), அகத்தியர் சூத்திரம் (R. 2266), கொங்கணர் சரக்கு வைப்பு 100 (R. 2267) முதலான நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் பலதிரட்டு 60

I. 1. **915**. 2. அ. R. 7055. ஆ. T. R. 2848. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பலதிரட்டு. ஆ. Akattiyar pala tiraṭṭu. இ. அகஷ்த்தியர் பலதிரட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு M. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி.1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 11. 5. 19x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 21; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை. 17. 46 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவித நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 914 போன்றது.

4. .... குருவாழ்க குருவேதுணை. அகஷ்த்தியர் பலதிரட்டு.

5. ஆதியந்த மில்லாத பொருளைப் போற்றி
அறையுறேன் புலத்தியனே அப்பா கேளு
வேதையுடன் வைத்தி............ நீக்கி
விள்ளாத கருவையெல்லாம் விளக்க மாக
னா............... பெருவெளியில் விந்துண் டாகி
நாலாறு ஆதார மதிலுண் டாகி
சாதியென்ற சாதியெல்லா மதிலுண் டாகி
தத்துவங்க .... தனைத்தும் பாரே. 1

6. கட்டியே முழுப்புடத்தில் மூன்று போடு
கலங்கவே வெண்கலம்போ லுடையும் பாரு
வெட்டியொன்று கட்டின லிங்க மொன்று
வியனாக வெண்கருவை விட்டு ஆட்டி
கட்டின லிங்கத்தில் கவருங் கட்டி
காயஒரு சீலைசெய்து சாண்புடத்தில் போடு
முட்டியே மணிபோலே யுருகி ஓடும்
முத்தறவே வெள்ளிரும்பில் முற்றி லேனே. 46

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 2267, R. 2268, R. 8868(b), R. 8868(c). 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் குருநாடி (R. 7053), அகத்தியர் சூத்திரம் (R. 7054) ஆகிய நூல்களும் உள்ளன.

அகத்தியர் பின்னூல் 80

I. 1. **916**. 2. அ. R. 6085(a). ஆ. T. R. 2554. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பின்னூல் 80. ஆ. Akattiyar pinnūl 80. இ. அகத்தியர் எண்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தாரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடிக்கட்டு. 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 21. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. பொடிந்துள்ளது. 12. 41; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 80 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகை மருந்துகளின் இயல்புகளையும், அவற்றைச்செய்யும் முறைகளையும், பயன்களையும், யோக மார்க்கங்களையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. யோகநிலை வழுவாது ஒருவன் ஒழுகினால் ஞானம் கிட்டும் என இந்நூல் முதலில் கூறுகிறது. அவ்யோகத்தை ஒழுங்காகச் செய்யாவிட்டால் மரண யோகமாகி விடும் என்றும், வானம் என நினைத்து இரசத்தை விட்டால் அது சுரபானம் ஆகிவிடும் என்றும் இந்நூலில் கூறப்படுகிறது. கிரந்தி, அரையாப்பு, மேகம், ஒற்றைத் தலைவலி போன்ற பலவகை நோய்களுக்குச் செந்தூரம் சிறந்த மருந்து என்பது இந்நூலிலிருந்து தெரிகிறது. அப்பிரகச் செந்தூரத்தின் செய்முறை விளக்கப்படுகிறது. இதை அனுபானம் அறிந்து பயன்படுத்தினால், பல சரும நோய்கள் தீரும் என்று கூறப்படுகிறது. அரையாப்புக்கு இச் செந்தூரத்தையன்றி மாற்று மருந்துகளும் அவற்றின் செய்முறைகளும் கூறப்படுகின்றன.

4. ஹரிஓம். குருவாழ்க. குருவே துணை.

5. முன்னூலெண் பதுசொன்னேன் முதலே ....
.... பதியே போற்றி
பின்னூலெண் பதுசொல்ல ....
.... ரான யென்குருமா முருகன் காப்........
....த் தாலே
அகத்தியநா மென்றென ....
பொன்னான வாதத்தி லட்சம் காப்பு
.... த்தைக் கேளே. 1

6. வெல்லமே .....யொன்று பலம்ரெண் டாக
விட்டதிலே கரைத்திடு யடுப்பி லேத்தி
சொல்லவே...... யேழுமகுபச்........ பார்க்கும்போது
சூரணத்துக் கெட்டிலொன்று கஞ்சாத் தூளும்
அல்லவே புடந்சீந்து லோட்டி யாச்சே
யதுவளமான பாகினிலேதூவிக் கிண்டி
யில்லவே.......... .... நெய்யே விட்டு
மடுவாய கால்(ப்)புடியு மிஞ்ச வாயே. 80

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளன. மெல்லின கூட்டெழுத்துக்கள் (எ.டு. லட்சம்ங்) வந்துள்ளன. பிழைகள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட இந்நூல் பின்னூல் எனக் குறிக்கப்படவில்லை. 11. இல்லை.

IV. 1. R. 192(i), R. 265(a), R. 2487, R. 2529, R. 3705, R. 4744, R. 6075, R. 6085, R. 7568(a), R. 10122. 2. த.ச.ம.நூ. எண்கள் 168, 262(b), 582, 586. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 235(n), 407(p), 458(a), 472(a), 546, 751(d), 786(f), 1347(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வைத்தியம் பின் 80,** பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை (முதல் பாகம்), தாமரை நூலகம், சென்னை, 1996. 3. இல்லை.

VI. இந்நூலின் இறுதி, 80ஆம் பாடலின் முதல் அடியுடன் முடிவடைகிறது. அதன்பிறகுள்ள அடிகள் இல்லை. ஆனால் மருத்துவக் குறிப்பு எழுதப்பட்ட ஒரு பக்கம் மட்டும் உள்ள ஓலை காணப்படுகிறது. இந்நூலின் முன்னும் பின்னும் பிரமமுனி வைத்தியக் கருக்கிடை 360 (R. 6084), 2. கமலமுனி சூத்திரம் 76 (R. 6086) எனும் நூல்கள் உள்ளன.

அகத்தியர் பின்னூல் 600

I. 1. **917.** 2. அ. R. 4548. ஆ. T. R. 2011. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பின்னூல் 600. ஆ. Akattiyar pinnūl 600. இ. தெட்சிணாமூர்த்தி வல்லாதி அறுநூறு வயித்தியம். 4. —. 5. —. 6. பொன்னம்பலராயர். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி மகாலிங்கம் பிள்ளை (சோதிடர் - மாந்திரீகர்), வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம். 10. கி.பி. 1954-55.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 187. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 374; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 621 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பல வகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் பின்னூல் 600 என்ற இந்நூலில் நம் உடம்பில் தோன்றும் நோய்களான கண்டமாலை, பிளவை, மேகம், கிராணி, புத்து இவைகளுக்கு மருந்துகள் செய்யும் முறைகளும், பத்தியங்களும், நோய்தீரும் முறைகளும் கூறப்படுகின்றன. மேலும், திமிர்வாதம், மண்டைச்சூலை, வெடிசூலை, குக்கிலபுத்து, குட்டம், கரப்பான், மூலம், பவுத்திரம், தண்டுசூலை, கபாலசூலை, கிரந்தி, நீரடைப்பு, உதிரச்சூலை, சலமடைப்பு, குன்மம், வாய்வு, அண்டவாய்வு இவைகளுக்கு வல்லாதிச் சூரணம் செய்யும் முறையும் கூறப்படுகிறது. மேலும் தசநாடி அறிய, தசவாய்வு அறிய, மரணக்குறி அறிய, நாடி தொந்திப்பு அறிய, அவத்தைக் குணம் விபரம் அறிய, கர்ப்ப உற்பத்தி விபரம் அறிய, பிறந்த பிள்ளைக்குப் பருவகாலம் உணர்த்தல் முறைகளும் விந்து கட்ட பூரண வல்லாதி செய்யும் முறையும், வாய்வு 26, குன்மம், பாரிச வாய்வு, பக்க வாய்வு இவைகளுக்குத் திரிலோக வாகடம் செய்யும் முறையும், மகோதரம், பாண்டு, கௌசிகம், காமாலை, குன்மம் இவைகளுக்குச் சந்தன வல்லாதித் தயிலம் செய்யும் முறையும், நேத்திர வியாதி 9க்கும் மகாநயன சஞ்சீவித் தயிலம் தயாரிக்கும்

முறையும், கண்புத்து, நார்ச்சூலை, மண்டைக் குத்து, பீனிசம், நாவில் சூலை, செவி நோய், வாய்வு, வாதம் இவைகளுக்கு மகாதிரிபிலாதித் தயிலம் தயாரிக்கும் முறையும், தலையில் வரும் நோய்களுக்கெல்லாம் மகாஏலாதித் தயிலம் தயாரிக்கும் முறையும், விடாத சுரங்களுக்கு அதிகரணத் தயிலம் தயாரிக்கும் முறையும், கபால குட்டம், மண்டையிடி, பீனிசம், கிரந்தி, நீர்ப்பாய்ச்சல், சீயமூலம், இரத்த மூலம், வெட்டை, நீர்க்கட்டு, எலும்புருக்கி, தாகசுரம் போன்ற பல வகையான நோய்களுக்கு மருந்து செய்முறைகளும் பயனும் இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக. தெட்சிணாமூர்த்தி வல்லாதி அறுநூறு வயித்தியம்.

5. ஆதியா மகண்டபரி பூரணமாய் நின்ற
அகண்டபரா பரத்திருஜங் கரனே காப்பு
சோதியா மறுமுகவன் பாதங் காப்பு
துரியவெளி தன்னில்நின்ற சுந்தரியே காப்பு
வாதியா யென்குருவின் பாதங் காப்பு
மகத்தான பெரியோர்கள் சரணங் காப்பு
பேதியாம் வயித்தியனூல் அறுநூ றாகப்
பேசுகிறேன் வாணிபதம் பேராங் காப்பே. 1

6. கூறினசொல் மறவாதே தாயைப் போற்று
குணமாக வயித்தியத்தைக் கூர்ந்து பாரு
வேறுமொரு பொருளில்லை அடிமுடிதா னப்பா
விளங்கிநின்ற காவியத்தில் விளங்கும் பாரு
மாறிநின்று திருடாதே மதம்பே சாதே
மற்றநூல் பொய்யென்று வசனிக் காதே
ஆறுமுகம் பதம்போற்றிக் கய்யில் நெல்லி
யருள்களிபோல் சொன்னதிந்த அறுநூறு முற்றே. 621

7. வல்லாதி அறுநூறு முற்றும், தெட்சிணாமூர்த்தி சகாயம், தெட்சிணாமூர்த்தி அருளிய வயித்திய வல்லாதி அறுநூறு எழுதினது முற்றிற்று.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், ர/ற வேறுபாடின்றி எளிய நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. பொன்னம்பலராயர் சுவடி.

IV. 1. R.9079. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெயரில் 160 பாடல்களை இரண்டாகப் பிரித்து அகத்தியர் முன்னூல் 80 அகத்தியர் பின்னூல் 80 என்று நூல்கள் எழுந்துள்ளன. அது போல் **அகத்தியர் பின்னூல் 600** என்ற நூல் இருப்பது போல் **அகத்தியர் முன்னூல் 600** என்ற நூலும் இருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது. அகத்தியர் பின்னூல் 600க்குப் பிறகு, இச்சுவடியில் மருத்துவக் குறிப்பு அடங்கிய இதழ் ஒன்று உள்ளது.

அகத்தியர் புதிய அகவல்

I. 1. **918.** 2. அ. R. 5451. ஆ. T. R. 2417. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் புதிய அகவல். ஆ. Akattiyar putiya akaval. இ. அகத்தியர் புதிய அகவல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி மகாலிங்கம் பிள்ளை (சோதிடர் - மாந்திரீகர்), வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம். 10. கி.பி. 1954-55.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 5. 5. 24x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 10; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. அகவல். 15. இல்லை. 16. முழுமை. 17. 100லிருந்து 120 அடிக்குள் அமைந்த அகவல் பாடல் உள்ளது.

ஆ. —.

III. 1. மருந்துண்ணும் முறையும் அம்மருந்தால் குணமாகும் நோயின் கால அளவும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் புதிய அகவல் என்னும் இந்நூல் அகத்தியரை ஆதி முனி என்று கூறுகின்றது. நீதியுள்ள வயித்தியம் செய்யும் மருத்துவருக்கு நோயும், மருந்தும், அம்மருந்தால் குணமாகும் நோயின் கால அளவும் கூறுவதாக அமைகிறது. நோய்களுக்குச் செந்தூரம் கொடுக்கும் முறையும், இலேகியம் கொடுக்கும் முறையும், பால், நெய், அகத்தியிலைச் சாறு, கஞ்சி, இஞ்சி, கடுக்காய், திப்பிலி, அதிமதுரம், வெந்தயம், ஈருள்ளி, நொச்சியிலைச் சாறு, காய், மொச்சை, பயிற்றம்பருப்பு, பழம்

போன்ற பலவகையான தானியங்கள், பழங்கள், மூலிகைகள் போன்றவற்றின் குணங்களும், இவற்றால் குணமாகும் நோய்களும் பத்திய முறைகளும் புளி, உப்பு சேர்க்காத பத்திய முறைகளும், பத்தியம் முடித்தபின் நல்மிளகு, சீரகம் கூட்டிச் சாப்பிட வேண்டும் என்பன போன்ற முறைகளையும் கூறி இறுதியாகத் தென்கயிலை முனிவர் சொன்ன இம் மருத்துவத்தைத் தன்னினைவாகக் கொண்டவர்கள் இவ்வுலகில் நீண்ட காலம் வாழ்வார்கள் என்று கூறி இந்நூல் முற்றுப் பெறுகிறது.

4. ஹரி ஓம். அகஸ்தியர் புதிய அகவல்.

5. ஆதிமுனி யுரைத்த ஆயுள்வே தப்படிக்கு
நீதிவயித் தியரே நீர்கேளும் - சாதிரெண்டுள்

மானிடர்க்குச் செய்யும் மருந்து பலவகைக்குத்
தானிடர் வாழுமற தற்காக்க - ஆனியாஞ்

செந்தூர மேகொடுத்தால் செமிக்கத்தச நாழிகையாம்
எந்தவித லேகியமு மேழரையாம் - மந்தமாம்

பால்நெய் மருந்துண்டால் பன்னிரெண்டு நாழிகையாம்
கோலசய னத்தைக் கொண்டக்கால் - வேல்விழிமாதர்

அஞ்சுகடிகை செல்லும் அகத்தியிலைச் சாறுகொண்டால்
தஞ்சமஞ்சு நால்கடிகைச் செல்லு - மிஞ்சவே

அன்னமொரு யேழரையா மதிற்கோடி - பத்தரையாம்
என்னவே கஞ்சிதிரி நாழிகையாம் - ....

6. மருந்துண்டாற் கேளுமறு பத்திய வரைக்கும்
யருந்து புளிஉப்பு மாகாது - பொருந்துப்

பத்தியத்தில் நல்மிளகு பசுஞ்சீரகங் கூட்டி
சித்தியாந் தாது சிதறாது - முத்திபெற்ற

தென்கயிலை மாமுனிவன் செப்பியதோர் பத்தியத்தை
தன்னினைவாய்க் கொண்டவர்கள் தான் வாழ்வார் -
அன்னையெனு

அகத்தீஸ் பரமுனிவர் ஆயுர்வேதப் படிக்குச்
செகத்தோ ரறிந்துணரச் செப்பு.

7. அகவல் முற்றும்.

8. மூலம். 9. பாடல் எளிய நடையில் அமைந்துள்ளது. சிறு சிறு எழுத்துப் பிழைகளைத் தவிர பாடல் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் அமைந்த நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இலக்கண விதிப்படி அகவல் பாவால் அமைந்த நூல். மருத்துவத்தையும், அகவல் பாவில் அமைத்து எழுத முடியும் என்பதற்கு இந்நூல் சான்றாக அமைகிறது.

அகத்தியர் புவனைக் கக்கிசம்

I. 1. **919.** 2. அ. R. 3634. ஆ. T. R. 1783. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் புவனைக் கக்கிசம். ஆ. Akattiyar puvaṉaik kakkicam. இ. அகத்தியர் புவனைக் கக்கிசம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. சி. முத்துசுவாமி, கோவில்பட்டி, திருநெல்வேலி மாவட்டம். 10. கி.பி. 1952-53.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 34. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 68; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 370 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பஞ்சபூத மந்திரம், அனுமார் மந்திரம், சுப்பிரமணியர் மந்திரம் போன்ற மந்திரங்களைக் கூறும் நூல். 2. மந்திரம். அகத்தியர் புவனைக் கக்கிசம் என்ற இந்நூல் சடாட்சர மந்திரம், சக்கர மந்திரம், பஞ்சபூத மாந்திரியப் பெருமை, இலக்கமாறல், காட்டேரி மந்திரம், மலக்குட்டி மந்திரச் சக்கரம், திருமாலுப தேசித்த மந்திரம், சுப்பிரமணியர் வசியம், மகாவிஷ்ணு சக்கரப்பிரணவம், இலக்க சக்கரம், அட்டாங்க

மந்திரம், வனத்து மிருக மந்திரம், சத்துருவை செயிக்க மந்திரம், பாதாள அஞ்சன மந்திரம், தேள்கடிக்கு மந்திரம், லோக வசிய மூலி மந்திரம், பிரணவபீடம், பஞ்சாட்சர மந்திரம், அட்டாங்க மூலயோகச் சுருக்கம், மாடன் வசிய சக்கர மந்திரம், பிடாரி மந்திரச் சக்கரம், பேதன மந்திரம், உயிர் பீசம் போன்ற பல வகையான மந்திர முறைகளையும் சக்கரங்களையும் விளக்கிச் செல்கின்றது.

4. ஹரி ஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை. புவனைக் கக்கிஷம்.

5. முட்டுற்ற யிம்மந்திரம் மூலம தாகும்
அடுத்த லக்கமும் ஆக்கந் தானும்
அடுத்திடும் வீச மறைபதி னாறு
மெடுக்குங் கருமம் இனிச்சொல்லு வோமே. 1

6. ஓதிய சக்கரத் துண்ணினார் சத்தியைச்
சோதி யென்றுள்ளே தொழுதிட நோக்கினா
வாதியு மந்தமுமாய் நின்ற சோதியை
பூதம தாகப் புனைந்துவைத் தாரே. 369

வைத்தார் புவனை திரிபுரை மந்திர
மெத்த பதினாலுடன் மூன்றெழுத் தாகும்
முத்தி முதல்கி முடிவிலா மந்திரம்
பத்தித் தலைதனிற் பன்னிரெண் டாகுமே. 370

7. தேவிசகாயம், சுப்பிரமணிய சுவாமி முன்னிற்க, வேலுண்டு வினையில்லை மயிலுண்டு மலையில்லை. மீனாட்சி துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் மந்திரச் சொற்களுடன் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 6114, R. 6126. 2. ஆ.நி.எண் 9(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. மந்திரங்கள் பற்றிக் கூறும் நூலாக இருப்பதால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே இது தொடர்பாக நன்கு கற்றவர்கள் இந்நூலைப் பயன்படுத்த முடியும்.

அகத்தியர் புவனைக் கக்கிசம்

I. 1. 920. 2. அ. R. 6114. ஆ. T. R. 2565. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் புவனைக் கக்கிசம். ஆ. Akattiyar puvanaik kakkicam. இ. அகஸ்தீசர் புவனைக் கக்கிஷம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 80. 5. 26x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 160; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 370 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பஞ்சபூத மந்திரம், அனுமார் மந்திரம், சுப்பிரமணியர் மந்திரம் போன்ற மந்திரங்களைக் கூறும் நூல். 2. மந்திரம். 3. வரிசை எண் 919 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக அகத்தீசர் புவனைக் கக்கிஷம்.

5. முட்டுற்ற மந்திரம் மூலம தாகும்
அடுத்த லிலக்கமும் அக்கர தானும்
அடுத்திடும் வீச மறைபதி னாறு
மெடுக்குங் கருமம் இனிச்சொல்லு வோமே. 1

6. வைத்தார் புவனை திரிபுரை மந்திர
மொத்தபதி னாலுடன் மூன்றெழுத் தாகும்
முத்தி முதல்வி முடிவிலா மந்திரம்
பத்தித் தலைதனிற் பன்னிரெண் டாகுமே. 370

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 3634, R. 6126. 2. ஆ.நி.எண் 9(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. முட்டுற்ற மந்திரம் பதினாறைப் பற்றிக் கூறுவதாக இந்நூலின் முதற்பாடல் கூறுகிறது.

அகத்தியர் புவனைக் கக்கிசம்

I. 1. 921. 2. அ. R. 6126. ஆ. T. R. 2580. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் புவனைக் கக்கிசம். ஆ. Akattiyar puvaṉaik kakkicam. இ. அகஸ்தீசர் புவனைக் கக்கிசம். 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடவூர் சமீன்தார். 10. கி.பி. 1956-57.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 34. 5. 15x4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 68; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 14 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 370 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பஞ்சபூத மந்திரம், அனுமார் மந்திரம், சுப்பிரமணியர் மந்திரம் போன்ற மந்திரங்களைக் கூறும் நூல். 2. மந்திரம். 3. வரிசை எண் 919 போன்றது.

4. அகஸ்தியர் புவனைக் கக்கிஷம்.

5. முட்டுற்ற மந்திரம் மூலம தாகும்
அடுத்த லிலக்கமும் அக்கர தானும்
அடுத்திடும் வீச மறைபதி னாறு
மெடுக்குங் கருமம் இனிச்சொல்லு வோமே. 1

6. வைத்தார் புவனை திரிபுரை மந்திர
மொத்தபதி னாலுடன் மூன்றெழுத் தாகும்
முத்தி முதல்வி முடிவிலா மந்திரம்
பத்தித் தலைதனிற் பன்னிரெண் டாகுமே. 370

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 3634, R. 6114. 2. ஆ.நி..எண் 9(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2 —. 3. இல்லை.

VI. திரிபுரைத் தேவியின் மந்திரங்களையும் கூறுவதாக இந்நூலின் கடைசிப் பாடல் அமைகிறது.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. **922.** 2. அ. R. 6966. ஆ. T. R. 2801. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pūcā viti 200. இ. அகஸ்தியர் சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 54. 5. 18x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 108; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன் பூசை, சந்திரன் பூசை போன்ற பலவகைப் பூசை முறைகளையும் அட்ட கருமம், யோகம், மருத்துவம் போன்றவைகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. அகத்தியர் பூசாவிதி இருநூறு என்ற இந்நூலில் சிவயோக சித்தர்களுக்கெல்லாம் பூசைவிதிகள் சொல்வதாகவும், இதை மவுனமாகக் கேட்டால் மேலான ஞானம் கிடைக்கும் என்றும், இது சித்தர்களுக்காகவே சொல்லப்பட்ட நூல் என்றும் கூறப்படுகிறது. முதல் பூசை, வினாயகப் பெருமானுக்கும் பிற பூசை எல்லாம் பின்பு செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது. மேலும், குகைவாசல் திறக்க, சிதம்பரச் சக்கரம், அட்டகர்ம சிதம்பர பூசை, சமித்து விவரம், கொங்கணருக்குக் கசாயமீய்ந்தது, இரசகற்பங் கொள்ள, யோகம், தம்பனம், மோகனம், மாரணம், உச்சாடனம், வசியம், ஆகர்சணம், பேதனம், வித்துவேசனம்,

பிரம்மன் பூசை, நவசாபம் தீர்க்க, விஷ்ணு பூசை, மயேச்சுவரன் பூசை, கொங்கணர் பெருமை, சித்தர்கள் குளிகை கொடுத்தது, இடகலை, சந்திர பூசை, குரு பூசை, நற்சீடன், சூரிய யோகம், சந்திர யோகம், மேல்வாசல், வான்பொருள், கைலாச தேகம், மவுனம், யோகதானம், ஈசன் குருவாய் வருவது, தசநாதம், சித்தர் பூசை, இரசலிங்க பூசை, சீடனுக்கு உபதேசிக்கும் முறை, பூசைமார்க்கம், மடையர் பூசை, அங்கநியாசம், சுரநியாசம், காமகளாநியாசம், சந்தி நியாசம், சிவநியாசம், சோடசநியாசம், சடாதரநியாசம், நிராதரநியாசம், மாதுகரநியாசம், நவமுத்திரை, சங்கமாண்டி, ஞானி, கன்ம தன்மம், மூடர்கள் அமாவாசை, புத்தி, நூலில் சொன்ன விவரம் ஆகிய செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் சூத்திரம்.

ஆதார மாறு மகண்டகுரு பாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கந் - நாதமுறும்
விந்துவே மூலம்விளங்கும் பூசா விதியால்
தந்திமுகத்தோன் கருணை தான்.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழாக யட்டாங்கம் நடன மாடும்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்த சித்தர்க் கெல்லாம்
வாரணமா முகத்தோனே முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒன்றான மனதுருமை சீஷ னுக்கு
உரைசொல்லி பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பும் மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டு
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைபெரும் பூசைவிதி கருவாம் முத்தே. 200

7. அகஸ்தியர் சூத்திரம் முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 1454(b), R. 3382, R. 4697, R. 4761, R. 9081, R. 10738, R. 943(i), R. 1485, R. 6993, R. 7011, R. 8838. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பூஜா விதி, தீட்சா விதி** முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. பூசா விதி என்பதற்குப் பூசைக்குரிய நியமங்கள் என்று விளக்கம் தருகிறது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. **923.** 2. அ. R. 6993. ஆ. T. R. 2814. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pūcā viti 200. இ. அகஸ்திய நாயனார் பூசை விதி. 4. —. 5. —. 6. முத்துராமலிங்கம். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 43. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 86; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன் பூசை, சந்திர பூசை போன்ற பலவகைப் பூசை முறைகளையும் அட்ட கருமம், யோகம், மருத்துவம் போன்றவைகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 922 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்திய நாயனார் பூசை விதி 200.

ஆதார மாறு மகண்டகுரு பாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கந் நாதமுறும்
விந்துவே மூலமாய் விளங்கும்பூ சாவிதியால்
தந்திமுகத்தோன் கருணை தான்.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழாக யட்டாங்கம் நடன மாடும்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்த சித்தர்க் கெல்லாம்
வாரணமா முகத்தோனே முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. ஒன்றான மனதுருமை சீஷ னுக்கு
உரைசொல்லி பூசைவிதி உரைக்கச் சொல்லு
விண்ணாட்டங் கண்ணாடி மேவச் சொல்லு
மேலான மவுனத்தைப் பத்தச் சொல்லு
சுண்ணாம்பும் மஞ்சளும்போல் குறிகள் நாட்டி
சுழினையிலே நாட்டமுறத் தொட்டுக் காட்டு
கண்ணாடிக் குள்குருவின் பதத்தைப் போற்றிக்
கருணைபெரும் பூசைவிதி கருவாம் முத்தே. 200

7. அகஸ்தீசுரமூர்த்தி............ செய்த பூசைவிதி யெழுதினேன்........நாத்திரஞ்......சீமை......சு.......பேர்த்தாலுக்கா செகாம ெ....ா மீசுங்கோவில் கிராமங் குளத்தூர் முத்திருளப்பன்குமாரன் முத்து ராமலிங்கம் கையெழுத்து. குருசாமியின் துணை. பிரமமே நித்தியம் ஷெயான் சாஷ்திரம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 1454(b), R. 3382, R. 4697, R. 4761, R. 9081, R. 10738, R. 943(i), R. 1485, R. 6966, R. 7011, R. 8838. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பூஜா விதி, தீட்சா விதி** முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூல் பூசைக்குரிய நியமங்களைக் கூறினாலும், சூரிய யோகம், சந்திரயோகம் போன்ற யோக மார்க்கங்களையும் கூறுவது ஆராயத் தக்கது.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. **924.** 2. அ. R. 7011. ஆ. T. R. 2825. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pūcā viti 200. இ. அகஸ்திய நாயனார் பூசை விதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அகீசு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 20. 5. 21x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 40; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. நடு இறுதி. 16. குறை. 17. 57 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன் பூசை, சந்திர பூசை போன்ற பலவகைப் பூசை முறைகளையும் அட்ட கருமம், யோகம், மருத்துவம் போன்றவைகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 922 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. குரு வாழ்க. குருவே துணை.
அகத்தியர் பூசா விதி

ஆதார மாறு மகண்டகுரு பாதம்
வேதாக மத்தின் விதிமார்க்கந்-நாதமுறும்
விந்துவே மூலம்விளங்கும் பூசா விதியால்
தந்திமுகத்தோன் கருணை தான்.

5. காரணமாஞ் சிவயோகி சித்தர் பூசை
களங்கமறச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பூரணமா மவுனமல்லோ ஞான வாழ்க்கை
புகழாக யட்டாங்கம் நடன மாடும்
சீரணமாய்ப் போகாமல் பூசை மார்க்கஞ்
செப்பினேன் மனந்தெளிந்த சித்தர்க் கெல்லாம்
வாரணமா முகத்தோனே முதலே பூசை
மத்ததொரு பூசையெல்லாம் பிறகு செய்யே. 1

6. எண்ணெயது உழக்கடா பொடிதா னாழி
யியல்பாக விட்டதனை மைபோற் கிண்டி
கண்ணான பீங்கானில் பதனம் பண்ணி
கனமான புண்ணாக்கை யளவு கொள்ளு
விண்ணதினை நித்தநித்தங் கண்ணோட் டம்பார்
வெளிநிற்குஞ் சுழினையிலே வாசி யேறுங்
கண்ணதனை முறுக்கியே யேறப் பாரு
கபாலத்தில் அமுர்தமது கனிந்து பாயும். 57

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1819, D. 1887, R. 9(b), R. 1454(b), R. 3382, R. 4697, R. 4761, R. 9081, R. 10738, R. 943(i), R. 1485, R. 6993, R. 6966, R. 8833. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் பூஜா விதி, தீட்சா விதி முதலிய நூல்கள், தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. 26 முதல் 34 பாடல்கள் வரையில் உள்ள 9 பாடல்களில் சிவ தீட்சை பதினொன்றினைப் பற்றிய செய்திகள் விளக்கமாக அமைந்துள்ளன.

அகத்தியர் பூசாவிதி 200

I. 1. 925. 2. அ. R. 8838. ஆ. T. R. 3152. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூசாவிதி 200. ஆ. Akattiyar pūcā

viti 200. இ. அகஷ்த்தியர் பூசா விதி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 45. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 90; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. முதல் இரு ஏடுகள் மற்றும் இறுதி. 16. குறை. 17. 180 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சிதம்பர பூசை, மயேச்சுரன் பூசை, சக்தி பூசை போன்ற பலவகைப் பூசை முறைகளையும் அட்ட கருமம், யோகம், மருத்துவம் போன்றவைகளையும் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம், யோகம், மருத்துவம். 3. வரிசை எண் 922 போன்றது.

4. —.

5. செல்லலாஞ் சிதம்பரத்தின் பூசை கொண்டு
செப்புகிறேன் சக்கரத்தி னியல்பு சொல்வேன்
வெல்லலாம் வாதமத்தி வாயி வாலை
வெகுகாமி வெகு........ ....சொரூபி
சொல்லலாம் இடகலையாம் தியாரு சத்தி
தொந்தி.... .... ராகி
மல்லலாம் யேசொரியான் விசித்தி ....
.... கண்டத்தே 17

6. உண்டான மாதாவும் பிதாவு மாண்டால்
உத்தமனே தற்பனங்கள் யெங்கே செய்வோம்
பண்டான சரிகையொடு கிரிகை யெல்லாம்
பரிசுகெட்ட நினவாக நீரிறைத்துக்
கொண்டாடித் தற்பனங்கள் செய்வோமென்று
.... 185

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 9(b), R.1454(b), R.3382, R.4697, R.4761, R.10738, R. 943(i), R. 1485, R.6966, R.6993, R.7011, R. 9081, D.1819, D.1887. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 47(g), 489(b), 508(a), 824(a), 1036. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் பூஜா விதி**, தாமரை நூலகம், சென்னை, 1997. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் 36 (R.8836), அகத்தியர் சக்கரவிதி (R.8837) முதலிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் பூரண காவியம்

I. 1. **926.** 2. அ. R. 6914. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண காவியம். ஆ. Akattiyar pūraṇa kāviyam. இ. அகஸ்தியர் பூரண காவியம் ஆயிரத்தில். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 4. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. மிகவும் சிதைவு. 12. 6; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 28 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும், பில்லி சூனியம் போன்ற ஏவலுக்கு மந்திரங்களும் கூறும் நூல். 2. மருத்துவம், மந்திரம். 3. அகத்தியர் பூரண காவியம் என்ற இந்நூலில் முக்கோணத் தியானம், வியாதிகள் தீர யெந்திரங்கள் நாட்டி விபூதி அணியும் முறைகள், பேய் பிசாசு பிடித்தால் அவற்றை ஓட்டும் முறைகள், சகல விதமான வியாதிகளையும் கட்டுப்படுத்தும் முறைகள், சுரம், குட்டம், காசநோய், கண்புகைத்தல் இவற்றுக்கு மருந்துகள்

செய்யும் முறைகள், பித்துப்பிடித்தல், பிசாசு பிடித்தலுக்கு திருநீறு இட்டுக் குணப்படுத்தும் முறைகள், கோசம், நீர் வியாதி, சிலந்தி, புடைக்குத்து, கண்நோவு, பவுத்திரம், சிலந்தி, கெர்ப்ப நோய் இவற்றுக்கு மருந்துகள் செய்யும் முறைகள் பிரசாவினை மந்திரம், தண்ணீர் தியானம், லேபன வித்தை, இந்திரசாலம் போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன.

4. அகஸ்தியர் பூரண காவியம் 1000த்தில் பேய் பிசாசு தீரும்.

5. தெளிந்துமனங் கொண்டுஅந்த தெளிவைப் பார்த்து
திருவான புருவமென்று சுழினைக் கேகி
அழிந்துஅந்த சக்கரத்தி னடுவி லேதான்
ஆதியிலே ஓங்காரக் கம்பம் நாட்டி
குளுந்துமனக் கண்ணிலே குருவைப் போற்றி
குருவான சுழிதனையே சுழிக்கு மைந்தா
தெளிந்தமனக் கசடகத்தி குருவைப் போற்றி
நேமமுடன் மதனமாய் பூசை செய்யே. 7

6. வசனியாள் வளவாசல் காத்தே நிற்பாள்
வாங்கினபொன் னத்தனையு முனக்கே யீவாள்
பசனியாள் வேறுதொழில் வா...... வேண்டாம்
பாக்கியம் மெல்லமுனது பக்கல் சேரு
யிசனியாள் யிந்தமுறை வேசை யற்கு
யிணங்குவாய் த...பிருந்த .... சேரு
உசனியாய் யின்னமொரு கருவைக் கேளு
உச்சரித்து[ப்] பச்சணியை ஒன்று வாங்கே. 28

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், ள/ழ வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் சிறப்பாக, பேய் பிசாசு பிடித்தவர்களின் நிலைகளையும், அவற்றைப் போக்க உதவும் திருநீறு மந்திர முறைகளையும் கூறுகின்றது.

அகத்தியர் பூரண காவியம் 1000-த்தில் சில

I. 1. 927. 2. அ. R. 6873. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண காவியம் 1000த்தில் சில. ஆ. Akattiyar pūraṇa kāviyam 1000 -ttil cila. இ. அகத்தியர் பூரண காவியம் ஆயிரத்தில் சில. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 9. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 18; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 100 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சித்தர்கள் கடைபிடிக்க வேண்டிய தவ நிலைகளில் யோகம் பற்றிக் கூறும் நூல். 2. யோகம். 3. அகத்தியர் பூரண காவியம் 1000-த்தில் சில என்ற இந்நூலில் பொதிகை மலையின் வளப்பம், மயேந்திர கிரியின் தன்மை, மயேந்திர கிரி மலையின் வேட விபரம், சதுரகிரி முடிபு, சதுரகிரி வளமை, இரத்தினகிரி வளமை, திரிகூட மலை வளமை, சுவேதகிரி வளமை, சஞ்சீவி மலையின் சித்தாயிரம், பதினெண்பேர் பீசம், பொற்சாரை, மலையின் வேட விவரம், பரங்கி மலைச் சர்க்குரு அவற்றின் மகிமை ஆகிய பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன.

4. —.

5. ஆமப்பா புலத்தியனே தங்க மான
அஷ்டகிரி பருவதத்தில் தபசு செய்ய
நாமப்பா சொல்லுகிறேன் மூல சூட்சம்
நாட்டமுடன் லுவகிறி வங்கிங் சிம்மென்று
தாமப்பா தன்மனமே சாட்சி யாக
தன்மையுடன் றியானமதா லுருவே செய்தால்
வோமப்பா அஷ்டகிரி தன்னில் வாழும்
உறுதியுள்ள கெணனாதா வாவென் பாரே. 1

6. கண்டபடி கும்பமுனி உமக்குச் சொன்னோம்
கருணையுடன் மணிகெவுன குளிகை செய்து
விண்டபடி சாரணைகள் தீர்த்துக் கொண்டு
விளையாடு யண்டவரை நின்று கொண்டு
என்றுசொல்லி அவிர்ப்பாகந் தன்னை யீந்து
இன்பமுட னுபசாரஞ் செய்தா ரப்போ
நின்றபடி அந்தரமாய்க் கெவுனங் கொண்டு
நிமிஷத்தில் சதுரகிரி வலம்வந் தேனே. 100

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாரப்பா, கேளப்பா என்ற முறையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல், பொதிகை மலை, சஞ்சீவி மலை போன்ற, பல மலைகளின் வளப்பங்களையும் அங்குத் தவம் செய்யும் முனிவர்களைப் பற்றியும் கூறுவது அறியத் தக்கது.

அகத்தியர் பூரண ஞான சூத்திரம்

I. 1. **928.** 2. அ. R. 6454. ஆ. T. R. 2687. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண ஞான சூத்திரம். ஆ. Akattiyar pūraṇa ñāṉa cūttiram. இ. அகத்தியர் அருளிச் செய்த பூரண ஞான சாஸ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி. 1956-57.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 8. 5. 22x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 16; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 32 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சித்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஞானம், யோகம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், யோகம். 3. அகத்தியர் பூரண ஞான சூத்திரம் என்ற இந்நூலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றைப் பற்றியும், அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம், சிவதீட்சை, சக்தி தீட்சை, சாப வரலாறு, சாப நிவர்த்தி, வயிரவர் தியானம், சுப்பிரமணியர் தியானம், பிரணாயாமம், தூலநிலையாமை, பிறவி வருதல், யோக நித்திரை, சயன மாய்கை, வாசிகுறி, சமாதி கட்டும் வகை, பூசை விதி, சித்தராகும் பருவம், சிவவேடவகை, மூலகுருவேடம், சித்தர்ரூபம், புத்தி, சுத்தி மார்க்கம், சோதி விருட்சம் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன.

4. அஞ்செழுத் தஞ்சுமுக மானபிரான் மனத்தே
நெஞ்செழுத்தை நேரே நிறுத்தவே - அஞ்செழுத்து
மீரெழுத்தா மூவெழுத்தா மிசைந்தசுழி யோடே
யோரெழுத்தாய் கணேசனரு ளோங்கு.

5. பூரணத்தைப் பத்தியிரு மதியி லூன்றில்
புகழான மூவரையு மூவரையிற் கண்டு
காரணத்தைக் கண்ணாலே கலந்து நோக்கிக்
கணபதியின் பதங்கூடிக் கீழ்முக் கோணம்
வாரணத்தைத் தொட்டுமே லாறு மாறு
மருவியே சிலம்பொலிக்குள் மணித்தாய் செல்ல
சீரணித்துப் போகாமல் ஞான மார்க்கஞ்
செப்புகிறே னாதிகொண்டு தெளிந்து காணே. 1

6. கூறப்பா திரிந்தாலு லங்கு தப்பா
கூடியதோர் சூஸ்திரந்தான் வைத்தி ருந்தோர்
நாளப்பா .... தான் ....
வாங்கி யாட்டியே ....
.... திரியாதே ஞானவழி யாகும்
மகத்தான முப்பத் திருனூல் முற்றே. 32

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் வடமொழி எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பூரண ஞான சூத்திரம் என்ற இந்நூல் சித்தர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஞானம் பற்றிய செய்திகளைக் கூறுவதால் இந்நூலை சித்தர்களுக்காகச் செய்யப் பட்ட நூலாகக் கொள்ளலாம்.

அகத்தியர் பூரண சூத்திரம் 200

I. 1. **929.** 2. அ. D. 2356. ஆ. T. D. 920. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 200. ஆ. Akattiyar pūraṇa cūttiram 200. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 36. 5. 45x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாத நீள ஓலைகள். 11. முதல் மூன்று ஓலைகள் முறிந்துள்ளன. 12. 72; இரு பக்கங்களிலும் இரண்டு அல்லது மூன்று பத்திகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. 13. பத்திக்கு 4 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஞான, யோக மார்க்கங்களையும், முப்புவிற்கான பூநீறு பற்றியும், சில மருந்துகள் குணப்படுத்தும் நோய்களையும் இந்நூல் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. பூநீறு சேகரிக்கும் முறை இந்நூலில் நன்கு விளக்கப்படுகிறது. பூநீறுக்கான காலம், நேரம், நிலம், செயற்கையாய்ப் பூநீறு தயாரித்தல் என்பன கூறப்படுகின்றன. பூநீறு சுத்தி முறைகளும் வந்துள்ளன. இப்பூரண நூலில் கூறப்பட்டுள்ள சில மருந்துகளைப் பயன்படுத்தி யோக முறைகளில் நின்றால் ஞானம் கிட்டும் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு இரசவாதத்தில் உதவும் முப்புவிற்கான பூநீறு வேறுபல மருந்துகள் தயாரிக்க உதவும் என்பதும், அம்மருந்துகள் யோகநெறி நிற்பதற்குப் பயனாகும் என்பதும் இந்நூற் கருத்துக்களாகும்.

4. சிவமயம்.
விதித்ததோர் வட்டத்தில் மேவும் திருவடி
பதித்ததோர் பிரமன் பதியிட மாதி
உதித்ததோர்(பூரணம்) அவ்விடம் ஓங்காரத் துள்ளே
சதித்ததோர் பூரணம் சர(கார)ண மதுவாமே.
(சதித்ததோர் சரணம்தான் பூரணமென்றே.)

5. **பூரண மெனவே போதித்தீ ரைய்யா**
காரண மான கருவதைச் சொல்லும்
வாரண மான வாலையடி பாதம்
தாரண மோகம் தான்தந்தருள் வீரே.

6. **நோக்குமப்பா புலத்தியனே யிருனூறும் பார்த்தால்**
நூல்போட்ட வெளிபோல் துலக்க மாகும்
வாக்குமப்பா யென்றனுக்காய் பூர ணத்தை
மருவியே சொல்லிவிட்டோம் தேறிக் கொள்ளு
போக்குவது வுயிரெழுத்து ஆக்கினையில் சொன்ன
பொதுவாகக் கருவறிந்து அடங்கி நீயும்
தாக்குவது வொன்றப்பா ஒன்றி நீயும்
சதாநித்தம் சிவயோகம் பூட்டிநீ வாழியே. 200

7. —.

8. மூலம். 9. இந்நூலில், ற/ர, ழ/ள வேறுபாடு இல்லாது எழுதப்பட்டுள்ளது. பாடல்கள் எளிமையானவை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இப்பூரண நூல் 200 பாடல்களைக் கொண்டிருந்தாலும், பிற பூரண நூல்களிலிருந்து வேறுபடுவதாகத் தெரிகிறது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடியில் ஏடுகளுக்குப் பக்க எண்கள் கொடுக்கப் படவில்லை. 149ஆம் பாடலுக்குப்பின் பாடல் எண்களும் இல்லை. பாடல்கள் அந்தாதியில் பாடப்பெற்றுள்ளதால், அம்முறைப்படியே பார்த்தால் 200 பாடல்கள் இந்நூலில் உள்ளன. இதைப் போன்ற பிற நூல்களில் தொடக்கப்பாடல் 'மேருவினி லுதித்த பூரணமதாகி' என்றுள்ளது. அப்பாடல் இந்நூலில் இல்லை. 3 பாடல்கள் இரசவாதம் தொடர்பாக அதிகமாகக் காணப்படுவதாகவும் அது வேறுநூலைச்

சார்ந்ததாகலாம்" என்றும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணையில் காணப்படுகின்றது. ஆனால் இச்சுவடி நூல் முதல் பாடல் முதல் 200 பாடல் வரை உள்ளது.

அகத்தியர் பூரண சூத்திரம் 200

I. 1. **930.** 2. அ. R. 4238. ஆ. T. R. 1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 200. ஆ. Akattiyar pūraṇa cūttiram 200. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி.1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 20. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 40; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு மருந்துகளை நோய்களுக்குப் பயன் படுத்துதலையும், யோகம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மருத்துவம், யோகம். 3. இந்நூல், பூநீறு தயாரித்தல், கல்லுப்பைச் சுத்தப் படுத்துதல், வெடியுப்பைச் சுத்தப்படுத்துதல், முப்பு தயாரித்தல், செயநீர் தயாரித்தல் ஆகிய பல்வேறு இரசாயன மருந்துப் பொருள்களைத் தயாரிக்கும் முறைகளையும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருள்களைப் பற்பம், செந்தூரம், தயிலம், கிறுதம் முதலான மருந்துப் பொருள்களுடன் கலந்து மருந்துகள் தயாரிக்கப்பட்டு, தீராத வியாதிகளுக்கு அம்மருந்துகளை அனுபானம் அறிந்து கொடுத்துக் குணமாக்கும் செய்திகளையும் கூறுகிறது. மேலும், யோகம் தொடர்பான பல்வேறு செயல்முறைகளையும் கூறுகின்றது.

4. —.

5. மெருவினி லுதித்தபூ ரணமாகி
வெளிப்படுஞ் சோதி யதனால்

கருவினில் றங்கினான் முகன்விதிக்க
கணபதி யுச்சியி னிடத்தே
உருவினில் தோன்றியமர்ந் திடபூரண
முதிக்கின்ற சோதி மணியே
திருவினி லுதித்தஞான வெளியாகத்
தெளிந்தவர் மதியெனக் காப்பு. 1

6. நோக்குமப்பா புலத்தியனே யினூறும் பாத்தால்
நூல்போட்ட வெளிபோல் துலக்க மாகும்
வாக்குமப்பா பூரணமும் மருவ வேதான்
வாய்திறந்து சொல்லிவிட்டோம் தேறிக் கொள்ளு
போக்குமுயி ரெழுத்து மாக்கிணையில் சொல்லிப்
பொதுவாகக் குருவறிந்து அடங்கி நீயும்
தாக்குவது மொன்றப்பா யூன்றி நீதான்
சதாநித்தம் சிவயோகம் பூட்டி வாழியே. 200

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. புலத்தியர்க்குக் கூறுவதாகப் பாடப்பெற்றுள்ளது 11. இல்லை.

IV. 1. R. 254(j), R. 10406, D. 2370, D. 1896, D. 2356, D. 2395. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 407(s), 1083, 1126(g). 3. இல்லை.

V. 1. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், திருவிளக்கச் செயல்விளக்கம் (R. 4239(a)), இராமதேவர் பட்சிணி அட்டாங்கம் (R. 4239), கொங்கணர் ஆனந்தக்களிப்பு (R. 4240) முதலான பல நூல்களும் அமைந்துள்ளன.

VI. இந்நூலில் தொடக்கப்பாடலில் 'மேருவினில்' என்பதற்குப் பதிலாக 'மெருவினில் உதித்த' என்று வருதல் காண்க.

அகத்தியர் பூரண சூத்திரம் 216

I. 1. **931.** 2. அ. R. 7008. ஆ. T. R. 2823. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216. இ. —. 4. —. 5. —. 6. மாரியப்பன்.

7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம்(வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 97. 5. 15x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 194; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 216 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஆறாதாரம், தீட்சை விளக்கம், யோகம், தத்துவம், மருத்துவம் போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. அகத்தியர் பூரண சூத்திரம் 216 என்ற இந்நூலில் முதலாவதாக மூல கணபதியை வணங்கி ஆறாதாரங்களான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றைப் பற்றியும், மேலாதாரம், அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திரமண்டலம், ஏகாட்சரம், சிவ தீட்சை, சத்தி தீட்சை, நூலின் மகத்துவம், சாப வரலாறு, நூல் சுத்தி, சாப நிவர்த்தி, வயிரவர் தியானம், பிரணாயாமம், தூல நிலையாமை, பிறவி வருதல், கற்பம் உண்ணும் முறைமை, வல்லாரை விவரம், காடிவைப்பு, யோகநித்திரை, கற்பத்துக்குப் பத்திய பாகம், கடுக்காய் கற்பம், நயனக்குறி, கபசுத்தி, மிளகு கற்பம், மூதண்டையின் மகத்துவம், சயனமாய்கை, வாசிகுறி, கற்பம் உண்ண அறிவு, காந்தபாத்திரப் பெருமை, இரசமணி, சமாதி கட்டும் வகை, சித்தராகும் பருவம், சிவவேடவகை, அகத்தியர் வேடம், மூல குரு வேடம், திக்கிலுண்ட சித்தர் பீடம், பூசைவிதி, புத்தி சுத்தி மார்க்கம், முப்புசுத்தி, வெடியுப்பு செயநீர், முப்புச்சுண்ணம், சூடச்சுண்ணம், துரிசிச்சுண்ணம், தாளகச் சுண்ணம், நூலின் பெருமை, நூல் வந்த வழி, சவுக்கார வைப்பு, சுந்தரானந்தர் முறை கற்பம், குளிகை செய்கை, இரச செந்தூரம், சித்தரைக் காணத் தியானம், சித்தர் மகத்துவம், யோகிகளுக்கு இருப்பிட விசேடத்தலம், பேதபூமி, பூமிநாதம் விளையும் பூமி, ஆற்றின் கரை, பூமி வளமை, சிவயோகம், மெய்ஞானி, மார்க்கம், யோகத்துக்கதிகாரி,

ஆக்கை நிலையாமை, பெரியோர் பெருமை, சமயக் கோள், கல்வியொழுக்கம், அன்பிலார் ஞானக்குறி, உலக ஆதியந்த முடிவு அறிதல், ஒடுக்கை உணர்வறிதல் ஆதிவஸ்து, அனாதி வஸ்து, நூலின் வகை தொகை இன்பம் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும், விளக்கங்களுக்கு தொகுதி இரண்டு வரிசை எண் 406ஐப் பார்க்கவும்.

4. ஹரி ஓம் பூரண சூத்திரம் 216.

5. ஒன்றான பூரணமு மாறா தாரம்
உரைப்பதற்கு மேலாறுந் தொண்ணூத் தாறு
பன்றான தீட்சைபதி னொன்று ரெட்டில்
பத்துடனே முப்பத்து ரெண்டு தீட்சை
ஒன்றான சமாதிகற்பம் வாசி நேர்மை
உரைப்பான சிவயோகம் பிரணா யாமம்
நன்றான வாதத்தின் தீட்சை யோடும்
நலமான சவுக்காரத் திறவு கோலே.

6. ஆமிந்த யிருநூற்றுப் பதினாறுக் குள்ளே
அடக்கிவைத்த பொருளெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
ஓமிந்த வுலகத்தில் யின்னூல் கிட்டில்
உலகத்தில் சித்ததிக முண்டாய்ப் போச்சு
தாமிந்த பூரணத்தைக் கெணியா தீந்தால்
தலைதெரித்துப் போகுமடா சத்தியம் சொன்னேன்
நாமிந்தப் படிச்சொன்னோம் யோகிக் கீவாய்
நலமான பூரணசூஸ் திரந்தான் முற்றே. 216

7. முற்றும். மீனாட்சி ரட்சிக்க வேண்டியது. ஞானாம்பிகையும் துணையுண்டாகவும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் பாரப்பா, கேளப்பா என்ற முறையில் முன்னிலையாரை விளித்துக் கூறும் பாங்கில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. ஆனைமலப்பன் பாடியிலிருக்கும் வாத்தியார் மாரியப்பன் சுவடி. குரோதி வருசம் பங்குனி மாதம் 29 ஆம் தேதி நிறைந்தது.

IV. 1. R.177, R.193(d), R.268(i), R.1454(a), R.3677, R.4493, R.4754, R.4910, T.R.1380, D.1888, D.1889, D.2314, D.2347, R.4192,

R.6141, R.7875, R.9652, R.10384, R.1484, R.10404(a), R.2068, R.2517, R.261(f), R.9650, R.2285, R.6244, R.3387, R. 6205, R. 9956. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 537, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன்(பதி.), **அகத்தியர் பூர்ணசூத்திரம் 216,** தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. அகத்தியர் பூரண சூத்திரம் 216 என்ற இந்நூல் பலபதிப்புகள் பெற்று வெளி வந்துள்ளது. அவற்றுள் சில: 1. சுப்பராய முதலியார், நாராயணசாமி நாட்டார் (பதி.), **அகத்தியர் பூரண சூத்திரம் 216,** ஆதி வித்வ மனோரஞ்சனி அச்சுக் கூடம், தண்டலம், 1874. 2. டி.இ. பரசுராம முதலியார் (பதி.), **அகத்தியர் பூரண சூத்திரம் 216,** பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலை, சென்னை, முதற் பதிப்பு, 1884.

அகத்தியர் பூரண சூத்திரம் 216

I. 1. **932.** 2. அ. R. 2285. ஆ. T. R. 1288. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216. இ. தெட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம் 216. 4. —. 5. —. 6. கி.பி. 1811. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எ.எம். கோபாலய்யர். 20, போக்ரோடு, மாம்பலம், சென்னை. 10. கி.பி. 1949-50.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 44. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 88; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 216 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஆறாதாரம், தீட்சை விளக்கம், யோகம், தத்துவம், மருத்துவம் போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. வரிசை எண் 931 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. தட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம் 216.

கார்செரி மெய்யன் வெம்மை
கடவுளும் காணாப் பாதம்
பேர்பெரு லுண்மை தன்னை
பூரண னூலி லோத
தார்சொறி கொன்றை சூடி
தாய்சர சோதி கந்த
னார்மத வானைப் பிள்ளை
யார்பத மறைகாப் பாமே.

5. ஒன்றான பூரணமு மாறா தாரம்
உரைப்பதற்கு மேலாறுந் தொண்ணூத் தாறு
பன்றான தீட்சைபதி னொன்று ரெட்டில்
பத்துடனே முப்பத்து ரெண்டு தீட்சை
ஒன்றான சமாதிகற்பம் வாசி நேர்மை
உரைப்பான சிவயோகம் பிரணா யாமம்
நன்றான வாதத்தின் தீட்சை யோடும்
நலமான சவுக்காரத் திறவு கோலே.

6. ஆமிந்த யிருநூற்றுப் பதினா றுக்குள்
அடக்கிவைத்த பொருளெல்லாம் வெளியாய்ச்
சொன்னேன்
வோமிந்த வுலகத்தில் யிந்நூல் கிட்டில்
உலகத்தில் சித்ததிக முண்டாய்ப் போச்சு
தாமிந்த பூரணத்தைக் கெணியா தீந்தால்
தலைதெறித்துப் போகுமடா சத்தியஞ் சொன்னேன்
நாமிந்தப் படிச்சொன்னோம் யோகிக் கீவாய்
நலமான பூரணசூத் திரந்தான் முற்றே. 216

7. தட்சிணாமூர்த்தி பாதார விந்தமே துணையாகவும். குருவே துணை.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் எளிய நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. 1811ஆம் வருடம் ....

IV. 1. R.177, R.193(d), R.268(i), R.1454(a), R.3677, R.4493, R.4754, T.R.1380, D.1888, D.1889, D.2314, D.2347, R.4192, R.6141, R.7875, R.9652, R.10384, R.1484, R.10404(a), R.2068, R.2517, R.261(f),

R.6205, R/9956, R.9650, R.6244, R.3387, R.7008. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 537, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன்(பதி.), **அகத்தியர் பூரண சூத்திரம் 216,** தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. ஆறாதாரம் என்பது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன.

அகத்தியர் பூரண சூத்திரம் 216

I. 1. **933.** 2. அ. R. 6244. ஆ. T. R. 2644. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216. இ. அகஸ்தியர் பூரண சூத்திரம் 216. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 29. 5. 31x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 58; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி. 17. 104 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஆறாதாரம், தீட்சை விளக்கம், யோகம், தத்துவம், மருத்துவம் போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், தத்துவம், மருத்துவம். 3. வரிசை எண் 931 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. தட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம்.

கார்சொறி மெய்யன் வெம்மை
    கடவுளும் காணாப் பாதம்
பேர்பெறு முண்மை தன்னை
    பூரண னூலி லோதத்
தார்சொறி கொன்றை சூடித்
    தாய்சர சோதி கந்த

னார்மத வானைப் பிள்ளை
யார்பத மறைகாப் பாமே.

5. ஒன்றான பூரணமு மாறா தாரம்
உரைத்ததற்கு மேலாறுந் தொண்ணூத் தாறு
பன்றான தீட்சைபதி னொன்று ரெட்டில்
பத்துடனே முப்பத்து ரெண்டு தீட்சை
ஒன்றான சமாதிகற்பம் வாசி நேர்மை
உரைப்பான சிவயோகம் பிரணா யாமம்
நன்றான வாதத்தின் தீட்சை யோடும்
நலமான சவுக்காரத் திறவு கோலே.

6. உண்டப்பா முன்சொன்ன தலத்துக் கப்பால்
யோசனைதா னொன்றுசென்றால் தலமொன் றுண்டு
நன்றப்பா யதின்பிறகு மேற்கே சென்றால்
நலமான கடிகைபத்து மலைசார் புக்குள்
சென்றப்பா பார்த்தாக்கால் தலமொன் றுண்டு
சித்தருட நடமாட்டஞ் சொல்லப் போக
இன்றப்பா சொல்லுகிறேன் விலாடபுரந் தன்னில்
வெகுவீதி யொருநலந்தான் விசாலமெத்த லாமே. 104

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் எளிய நடையில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.177, R.193(d), R.268(i), R.1454(a), R.3677, R.4493, R.4754, T.R.1380, D.1888, D.1889, D.2314, D.2347, R.4192, R.6141, R.7875, R.9652, R.10384, R.1484, R.10404(a), R.2068, R.2517, R.261(f), R. 6205, R. 9956, R.9650, R.2285, R.7008, R.3387. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 537, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன்(பதி.), **அகத்தியர் பூரண சூத்திரம் 216,** தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. இந்நூல் மிகவும் சிதிலமாக உள்ளது, மேலும் 104 பாடல்களே படிக்கக்கூடிய அளவிற்குக் கிடைத்துள்ளன.

அகத்தியர் பூரண சூத்திரம் 216

I. 1. **934.** 2. அ. R. 3387. ஆ. T. R. 1719. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 17. 5. 15x2 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 34; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. முதலில் 20 ஏடுகளும், பின்பு 22, 24, 25, 27, 29, 41, 43, 44 ஆகிய ஏடுகளும், இறுதியில் 45ஆம் ஏட்டுக்குப் பின்னுள்ள ஏடுகளும் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. 30 பாடல்களுக்கு மேல் 208 ஆம் பாடல்களுக்குள் இடையிடையே இல்லை.

ஆ. —.

III. 1. சித்தர்களின் தத்துவக் கொள்கைகளும், தீட்சை விளக்கங்களும், மருத்துவ முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம், தத்துவம். 3. வரிசை எண் 931 போன்றது.

4. —.

5. **சிதைவு.**

6. **னீயோ சாணு வண்ணக் கருப்பு வயிரப்பான**
னீலி கன்ன கிராணி காரகைய்
சோமனதனை னதனஞ்சியன
சந்திரன் மவுலி நீரன்னதேர் நில(ப்)
பாசாணப் பேரே. 208

7. —.

8. மூலம். 9. பிழைகள் மிகுந்துள்ளன. பாடபேதங்கள் கண்டறியப்படுள்ளன. ர/ற வேறுபாடு இல்லை. 'னீ'கரம் மொழி முதல் வந்துள்ளது. 10. இந்நூல் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 'கார் செறி மெய்யன்' எனும் முதல் அடி கொண்ட தொடக்கப் பாடலாலான "பூரண சூத்திரம்

216" நூல்களும், "மறை நாலு வேத முதல் சாத்திரமாக' எனும் தொடக்க அடி கொண்ட மற்றொரு வகைப் "பூரண சூத்திரம் 216" நூல்களும் ஆக இருவகை நூல்கள் கண்டறியப்பட்டுள்ளன. 11. இல்லை.

IV. 1. R.177, R.193(d), R.261(f), R.268(i), R.1454(a), R.1484, T.R.1380, R.2068, R.2517, R.2285, R.3677, R.4192, R.4493, R.4910, R.6141, R.6205, R.7008, R.7875, D.1888, D.2314, R.9650, R.9652, R.9956, R.10384, R.10404(a). 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 537, 751(z), 775, 1383(c), 370, 399, 455(a), 754, 352, 334(c), 1007, 5(a), 870. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன்(பதி.), **அகத்தியர் பூரண சூத்திரம் 216,** தாமரை நூலகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1997. 3. இல்லை.

VI. அகத்தியர் பூரண சூத்திரம் 216 பாடல்களைக் கொண்ட நூல்கள் பூசாவிதி நூல்கள், தீட்சா விதி நூல்கள் என இருவகைப்படும் எனத் தெரிகிறது.

அகத்தியர் பூரண சூத்திரம் 216ல் சில

I. 1. **935.** 2. அ. R. 6872(a). ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம் 216ல் சில. ஆ. Akattiyar pūraṇa cūttiram 216- l cila. இ. அகஸ்தியர் பூரண சூஸ்த்திரம் 216ல் உள்ளது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 9. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 18; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 51 பாடல்கள்.

ஆ. —.

III. 1. ஆறாதாரம், யோகத்தின் வாசிநிலை போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. அகத்தியர் பூரண சூத்திரம் 216 என்ற இந்நூல் சாப நிவர்த்தி, வயிரவர் தியானம், ரிசிகளைத் தெரிசிக்கும் முறை, தல விசேடம், சதுரகிரி வளமை, பொதிகைமலை, தடாகமலை, மகேந்திரமலை, நல்லிமலை, திரவியம் ஏகுகை, உச்சாடணத் தயிலம், குளிகை, திரவியம் இருக்குமிடம், அழகர்மலை, மயிலாடுமலை, மருதமலை, மாறாகமலை, கூலிக்கபடாமலை மேற்கு, கழுகுமலை மேற்கு, நம்பிமலை, மருந்துமலை, பாசறை வளவு, அனுமார் கொண்டு வந்த சஞ்சீவித்தயிலம் போன்ற செய்திகளைக் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகஸ்தியர் சூத்திரம் 216-ல் உள்ளது.

5. பொருளான சாபங்கள் நிவர்த்தி செய்ய
பூட்டுகிறேன் சாபமது பொய்யாய்ப் போக
அருளான சிவயநம அரிஓம் என்று
அப்பனே சீம்கிலிஓம் கிறீம்சீம் என்று
மருளாம லட்சமுரு மாட்டு மாட்டு
மைந்தனே சாபங்கள் எல்லாந் தீரும்
இருளான சாபங்கள் நிவர்த்தி யாக
ஏகமாய்ச் சொல்லிவிட்டேன் இயம்பக் கேளே. 1

6. ஆமிந்த தயிலத்தைப் பணவிடைதான் கொள்ள
ஆதிசதா சிவன்வரைந்து மிகுத்தும் பாரு
ஓமிந்த தயிலமதை ஆற்கு யிட்டு
வுறுதியுள்ள சித்தனென்றால் மிகுத்தும் பாரு
வாமிந்த சாஸ்திரந்தான் கிடைத்த பேர்கள்
மறுபிறவி யில்லையடா .... சித்தன்
சோமிந்த தயிலத்தை[ச்] சிவன்சொன்ன மார்க்கம்
சொல்லிவிட்டேன் வெட்டவெளி யாகத் தானே. 51

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் எளிய நடையில் பாடப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI அகத்தியர் பூரண சூத்திரம் 216 என்ற நூலின் சில பகுதியை மட்டும் எடுத்து நூலாக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

அகத்தியர் பூரண சூத்திரம் 400

I. 1. **936.** 2. அ. R. 5837. ஆ. T. R. 2501. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணாமூர்த்தி பூரண சூத்திரம் 400. ஆ. Taṭciṇāmūrtti pūraṇa cūttiram 400. இ. தெட்சிணாமூர்த்தி வயித்திய பூரண சூத்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பொள்ளாச்சி உடையகுளம் பி. தாமோதரனிடமிருந்து பெறப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி. 1955-56.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 80. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 160; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. 308 முதல் சில பாடல்கள் எழுதப் பெறாமலிருந்துள்ளன. 16. குறை. 17. 350க்கும் அதிகமான பாடல்கள் உள்ளன.

ஆ. —.

III. 1. உடம்பில் ஏற்படும் நோய்களுக்குரிய மருந்துகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. நோய்களை நாடி பார்த்து முதலில் கண்டறிவதும், பற்பம், செந்தூரம், இலேகியம் முதலான மருந்துகளின் செய்முறையைக் காட்டுவதும் இந்நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ளன. நாடிகள் பலவகை; ஆண்களுக்கும் பெண்களுக்கும் நாடிகளின் எண்ணிக்கையிலும் இயல்பிலும் வேறுபாடு உள்ளது. நாடிகள் பார்க்கும் விதம், அவற்றால் கண்டறியப்படும் நோய்கள் போன்ற செய்திகள் முதலில் கூறப்படுகின்றன. அட்டகருமங்கள் அடுத்துப் பேசப்படுகின்றன. மருத்துவப் பகுதியில், முப்பு, சவுக்காரம், வைப்புகள், பற்பங்கள் போன்றன வந்தள்ளன. வசியம் பற்றிய செய்திகளையும் இந்நூல் கொண்டுள்ளது. எல்லாவிதமான

சுரங்களுக்கும் சாம்பிராணிப் பதங்கம், தாளக பற்பம், செந்தூரங்கள் பேசப்படுகின்றன. இலேகிய வகைகள், சூரண வகைகள், தைல வகைகள் போன்றவை இந்நூலில் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம் நன்றாக. குரு வாழ்க. குருவே துணை.

5. **பூரணமாய் நிறைந்தபரி பூரணத்தைப் போற்றி**
புகழ்பெரிய வயித்திய பூரணத்தைப் பாடத்
தாரணமாய்க் கருவுருவாய் எங்குந் தானாய்
கண்மணியின் நடுவான கருணை தன்னை
ஆரணமாய் முக்கோணத்தடி நடுவில் நின்ற
அம்பரத்தை அனுதினமும் அறிவால்(ப்) போற்றி
வாரணமா முகத்தோனே அனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே.

6. **முத்தான புலஷ்த்தியனே புலஷ்யமகா ரிஷியே**
முச்சூடு மாதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான வயித்தியபூ ரணமீ தப்பா(த்)
தேசத்தில் கிட்டாது திறமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பூசி
பதிவான வாசியது சித்தி யாகும்
வித்தான பிரயாச ஞான சித்தி
வேதாந்தப் பூரணத்தின் வெளிசேர் முற்றே. 401

7. தெட்சிணாமூர்த்தி துணை.

8. மூலம். 9. ர/ற வேறுபாடு இன்றி எழுதப் பட்டுள்ளது. ஒற்று எழுத்துக்கள் மிகுந்துள்ளன. பாடபேதங்களும் உள. 10. அகத்தியர் தன் சீடன் மைந்தனான புலத்தியர்க்குக் கூறுவதாகப் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.190(c), R.192(a), D.1891. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 351, 380(c), 435(a), 491, 585, 751(p), 800, 831. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. இரத்தின நாயகர் & சன்ஸ் (பதி.), **அகத்திய முனிவர் அருளிய பரிபூரணம் 400,** திருமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை, 1964. 3. இல்லை.

VI. இந்நூல் தட்சணாமூர்த்தி பெயரிலும் அழைக்கப்படுகிறது.

அகத்தியர் பூரண சூத்திரம் 1200

I. 1. **937.** 2. அ. R. 7643. ஆ. T. R. 2957. இ. —. ஈ. —. 3. அ. கும்பமுனி பரிபூரணம் 1200. ஆ. Kumpamuni paripūraṇam 1200. இ. தெக்ஷணாமூர்த்தி சுவாமிகளருளிய பரிபூரணம் 1200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருச்சி மாவட்டம் லால்குடி, 13 கிழக்கு மாடவெளி வீதி L.A. வைத்தியநாதனிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடிக் கட்டு. 10. கி.பி. 1961-62.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 223. 5. 38X3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 446; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1202 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோக, ஞான மார்க்கங்களையும், நோய்களை நீக்குதற்குரிய மருந்து செய்முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம் - யோகம். 3. இந்நூல், மனோன்மணியை வணங்கித் தொடங்குகிறது. தொடக்கப் பகுதிகளில் கைலாயத்தின் மகிமை, சிவத்தின் மகிமை, அகத்தியர் மகிமை, சிவதத்துவம், சக்தி தத்துவம், தீட்சை முறைகள், ஆறாதாரங்களின் விளக்கம், பதிபசுபாச விவரம், அகார உகார மார்க்கங்களின் விவரம், குரு தியானம் போன்ற பொதுவான செய்திகளைக் கூறுகின்றது. மருத்துவம் தொடர்பான செய்திகள் பின்பகுதியில் உள்ளன. வெண்சாரை, கருஞ்சாரைக் கற்பங்கள், சிதம்பர சக்கரம், வாலை பூசை, தும்பைச் செடியின் மருத்துவ மகிமைகள், மஞ்சள் தும்பைச் சாற்றின் மகத்துவம், பற்பங்கள், வசிய மருந்துகள், முப்பு விவரம், அட்டகர்மங்களை நிவர்த்தி செய்வதற்கான மருந்துகள், மெழுகு வகைகள், தைல வகைகள், போன்றன கூறப்படுகின்றன. திருக்குற்றால மலையின் சிறப்புகள், வாசியோகத்தின் மகிமை போன்ற பல வகையான செய்திகளை இந்நூல் கூறுகின்றது.

4. ஹரி ஓம் நன்றாக.

5. **பூரணமாய் நிறைந்தபரி பூரணமே காப்பு**
போதைமய மானபூரணத்தைப் பாடக்
காரணமாய்க் கருவுருவாய் யெங்கரும்நிறைந் திருந்த
கண்மணியின் நடுவாகிக் கருணைதரும் பொருளே
ஆரணமாய் முக்கோணத் தடியில்நடு வாகி
அசையாத(ப்) பொருளாகி அருவுருவு மாகி
வாரணமாய் மூலத்தின் நந்தியெனும் பிள்ளை
வாசியெனும் பூரணம னோன்மணிக் காற்(ப்) பாமே. 1

6. **முத்தான புலத்தியனே அய்யா கேளு**
முழுதுமிதை ஆதிதொடுத் தந்த மாக
சித்தாகி நின்றபரி பூரணத்தை நீயும்
செம்மையுடன் பூரணமாய்[ப்] பார்த்தா யானால்
வத்தாத பாக்கியமும் வயதுஞ் சித்தி
மகஷ்தான யோகமுடன் ஞானஞ் சித்தி
வித்தான மாய்கையிது சுத்த மான
வேதபர வெளியில்மனம் வெளிசேரு முத்தே. 1202

7. பரிபூரண மாயிரத்திரனூறு யெழுதி நிறவேறியது. குருகடாக்ஷமுண்டாக வேண்டியது.

8. மூலம். 9. ர/ற, ழ/ள வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. பாடல்கள் அந்தாதி அமைப்பில் உள்ளன. வடமொழி எழுத்துகள் பயன்பட்டுள்ளன. ஒற்று மிகுந்தும், மிகாமலும் வந்துள்ளது. பாடபேதங்களும் மலிந்துள்ளன. 10. அகத்தியர்க்குத் தட்சணாமூர்த்தி என்ற பெயரும் உண்டு; அது போல் கும்பமுனி என்றும் அவரைக் குறிப்பர். ஆதலால் இந்நூல் அகத்தியர் பெயரில் இடம்பெற்றது. 11. இல்லை.

IV. 1. R.5825, R.7643. 2. சி.ம.மை.ஆ.நி. எண்கள் 61, 414(c), 750(e). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. ந. தெய்வசிகாமணி முதலியார் (பதி.), **அகத்திய மாமுனிவர் அருளிச் செய்த பரிபூரணம் 1200**, திருவந்திபுரம், செய்யாறு. 3. இல்லை.

VI. இந்நூலின் மற்றொரு படியைத் தாமரை நூலகத்தாரும் அச்சிட்டுள்ளனர். இறுதியில் சில வெற்றேடுகள் உள்ளன.

அகத்தியர் பூரண சூத்திரம் 1200ல் சில

I. 1. **938.** 2. அ. R. 6870. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரணம் 216ல் சில. ஆ. Akattiyar pūraṇam 216-l cila. இ. அகத்தியர் பூரணம் இருநூற்றுப் பதினாறில் பதிமூன்று. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம்(வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. ஒரு பக்கம் முழுமையாக எழுதப்பட்டு அடுத்தப் பக்கத்தில் 3 வரி மட்டும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. நடு இறுதி 17. 4 பாடல்கள்.

ஆ. —.

III. 1. குழிக் கல்லின் மார்க்கம், யோக வெட்டி அளவு போன்ற செய்திகளைக் கூறும் நூல். 2. யோகம். 3. வரிசை எண் 935 போன்றது.

4. அகஸ்தியர் பூரணம் 1200ல்.

5. **வாறான குழிக்கல்லின் மார்க்கம் கேளு**
மைந்தனே பிரம்மாவின் சிரசு போலே
கூறான அகலமது அணிவிர....... முப்பதுவா
கொருகையாம் நீளமது அணிவிரல் நாற்பதுமே
வீறான விளிம்பதுதான் விரலிரண் டாகும்
வீதியிலே ஆழமது விரலிரண் டாகும்
பேறான யிருபுறமும் மூத்து மாகும்
பெரிதான குழவியைத்தான் பேசு வேனே. 1

6. **நேரான வீதிக்கு நால்விரலே யாகும்**
நெட்டைக்குச் சுகாசனமும் புவியாசனமு மாகும்
கூரான கலிங்கம் பூசை யாகும்
கோமணந்தங் காவிக்கட கங்கை பாற

சீரான ரசகுளிகை சிவமா லைக்கச்
சிகத்திலே கிடையாது சிவவி சேஷம்
பேறான கைச்சாந்தான் னுப்புமணி யப்பா
பேசறிய கைலாச வர்க்கத் தோர்க்கே. 4

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும் சொற்கள் பரிபாசையிலும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் பூரணம் இருநூற்றுப் பதினாறில் பதிமூன்று என்று இருந்தாலும் மொத்தப் பாடல்கள் நான்குதான் உள்ளன.

அகத்தியர் பூரணம் 1200ல் சில

I. 1. **939**. 2. அ. R. 6869. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரணம் 1200ல் சில. ஆ. Akattiyar pūraṇam 1200 -l cila. இ. அகத்தியர் பூரணம் 1200ல் சில. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம்(வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. நடு, இறுதி 17. 6 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம் தொடர்பான நூல். 2. யோகம். 3. இந்நூல் வாசிநிலை, சிவயோகம், புலத்திய மகரிஷி,

மலையின்கண் குகை உண்டாக்கல், யோக ஒட்டியாணம், இகபரம் அறிய மந்திரம், பாகலோக மூலம், காய சித்தி போன்ற செய்திகளைக் கூறுகின்றது.

4. அகஸ்தியர் பூரணம் 1200ல்.

5. வாசிநிலை கண்டுசிவ யோகஞ் செய்ய
மகத்தான புலத்தியமா ரிஷியே கேளு
பேசவே ஒண்ணாதந் நாங்கவுண்மை தன்னைப்
பெரிதான தேக்கியமா முனிதான் சொன்னார்
நேசமுடன் மலைகளிலே குகைவுண் டாக்க
நீமகனே மனதுகந்து மலையிற் சென்று
பாசமுடன் நாற்புறமும் சுற்றிப் பார்த்து
பதிவான திடமதிலே குகைதான் செய்யே. 1

6. தானென்ற பாகலோக மூல மப்பா
தருவான மேலோக மண்டத் துச்சி
கோனென்ற மூலமதை முன்னே பார்த்து
குவிந்தமன துருமையினால் வுச்சி பார்த்து
வானென்ற வுச்சிதனை[ப்] பார்த்து மைந்தா
மார்க்கமுடன் னின்றதினால் வுண்மை கேளு
ஊனென்ற தேகமது சோதி போலே
ஒழிவிலாத காயந்தோணுமடா வுண்மை காணே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும் சிறு சிறு பிழைகளுடனும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. யோக மார்க்கம் பற்றி மிகச் சுருக்கமாகக் கூறினாலும் எல்லாம் பரிபாசையிலும் தத்துவமுமாகவே அமைந்துள்ளன.

அகத்தியர் பெருநூல் 1200

I. 1. **940.** 2. அ. R. 1896. ஆ. T. R. 1072. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பெருநூல் 1200. ஆ. Akattiyar

perunūl 1200. இ. அகத்தியர் பெருநூல் 1200. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு பொன்னுச்சாமி முதலியார், புளியம்பட்டி, பழனி தாலுகா, மதுரை மாவட்டம். 10. கி.பி. 1949-50.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 242; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9-10 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. அறிய முடியவில்லை. 17. அறிய முடியவில்லை.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் நோய்களுக்குரிய மருந்துகள், வசியத்திற்குரிய மூலிகைகள், சாலம் போன்றவற்றைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் பெருநூல் ஆயிரத்திருநூறு என்ற இந்நூல் அட்ட குன்மலேகியம், அரக்கெண்ணெய், அரிதார பற்பம், இருமலுக்குச் சண்டமாருத இலேகியம், மகாவாத சன்னிக்குத் தைலம், விக்கல், இருமலுக்கு இலேகியம், திப்பிலாதி இலேகியம், பாலாடைச்சூரணம், கற்ப முறை, சொர்ணதார வைரவம், வெட்டைச் சூட்டுக்கு குமரித்தைலம், மாறல் சுரத்திற்கு, பீனிசத்துக்குத் தைலம், விசய நாராயண பாணம், சடாட்சர குமரி விட்ணுராச பூபதி, கனகரத்தினாதி, பூரணசந்திரோதயம், நசியம், கர்ப்பக்கோள், மூலிகைப்பிரயோகம், திரிநாடித் தோந்தம் போன்ற பல்வகை மருத்துவ முறைகளையும் மருந்துகளையும் கூறுகின்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தியர் பெருநூல் ஆயிரத்திருநூறு.

5. ஆமென்ற பரிபூரண னந்த தேவி
ஆதியந்த சற்குருவி னறிவாய் நின்ற
ஓமென்ற னாதவிந்து மதிவீ டாக
யுற்றுநின்ற துரோதாய் மவுன மாக
மாமென்ற மகாமேரு ரவியின் கூறு
நடனவொலி யகண்டமுகப் படல மாக
வேயென்ற நந்திபதம் தன்னைக் கூர்ந்து
விளிம்பினின்ற விமலர்பதம் காப்புத் தானே. 1

6. இருக்கமுளை தனைப்பிடுங்கி சலத்திற் போட
 யேற்றபடி பூசையிட யிருக்கு முன்போல்
கொருக்குமுடி மடமாதர் கூந்தல் ரோமஞ்
 சூழ்ந்ததென்று ரோமமதிற் குருவைப் பூசி
நெருக்குருட்டு சிமினில்வைத்து வாவா வென்று
 நினைத்திடும் மோகினிவேடம் நினைக்கும் போது
கருக்குமடா யவளுடனே காய்ச்சல் மூட்டுங்
 கணப்பொழுதிற் சொன்னவெருங் கருவைப் பாரே.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. சொற்கள் ர/ற, ல/ள வேறுபாடின்றிப் பேச்சு வழக்கில் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. அகத்தியர் பெருநூல் 1200 என்ற இந்நூல் மிகவும் சிதிலமாக உள்ளது. பாடல்கள் முறையாக அடுக்கப்படவில்லை.

அகத்தியர் முப்பு 50

I. 1. **941.** 2. அ. R. 1814. ஆ. T. R. 1039. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணாமூர்த்தி முப்பூ 50. ஆ. Taṭciṇāmūrtti muppū 50. இ. தெஷிணாமூர்த்தி முப்பு 50. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 34x5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 17 முதல் 18 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 50 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறைகளையும், அதில் சேருகின்ற மருந்துகளையும், அம்மருந்துகளால் குணமாகும் நோய்களையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல், முப்பு தயாரித்தல் முறையை விரிவாகக் கூறுகிறது. மேலும், பூநீறு, செயநீர், சுண்ணம் முதலிய இரசாயனப் பொருள்களின் தயாரிப்பையும், அம்மருந்துகளை அனுபானம் அறிந்து உண்டால், குட்டம், பாண்டு வகைகள், வாய்வு, நீரிழிவு, கண்ரோகம், சன்னி, சயம், ஈளை, இளைப்பு, பித்தம், மகோதரம், பெரும்பாடு, சுரம், வெட்டை, சகல கழிச்சல், சயரோகம், சூலை முதலான பலவகை நோய்கள் குணமாகும் என்றும் இந்நூல் கூறுகின்றது.

4. தெக்ஷிணாமூர்த்தி முப்பு 50.

வாதமும் பித்தமொன்றாய் சூலைவகை கேளும்
வாகான கைகால்வத்தி தட்டும்வேதனைகள் செய்துடம்பில்
தத்திடும் சுத்திடும் புண்ணாய் வேதணிக்கும்
....
அதிகாச வாதம்ஆன வைத்தி யத்தில்
பொதிகை ஐம்பதில் புகலுவேன் முப்பூவை
துதிகை வாரணத்தான் பாதம் தொழுது
மென்னாளும் போத்தி கதிபெற வாணிபாதம் காப்பு.

5. மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை
வயித்தியம தாக்கியே விரித்துச் சொல்லி
சியமான கணபதியும் கந்தன் தானும்
சிவனுமையாள் பார்வதினிரு வாணி தானும்
நயமாக வெப்போதும் முன்னே நின்று
நாடறிய முப்பூவை நயந்து கேட்க
வயமாகச் சொல்லுகிறோ மைம்ப துக்குள்
வயித்தியரே எப்போதும் வணங்கிக் கேளே. 1

6. காலான வயித்தியத்தை உறுதி யாக
கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான நிறமுடைய பரம னாவாய்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருமகள் செயல்கள் பெத்து
சிந்தையிலே களங்கமற்ற சித்த னாவான்
நாலான மணிபோத்தும் பிரமன் சொன்னார்
நம்முடைய முனிவன்மொழி னாடி முற்றே. 50

7. பொதிகை அன்பது முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.172, R.249(k), R.267(e), R.1079(a), R.3606, R.4388, R.4693, R.4714, R.4775, R.7007, R.7020, R.7035, R.8998, R.2235, R.9339(a), R.10009, R.10121, R.10660(f), D.1872, D.2389, D.2398. 2. உ.த.நி.எண் 532:860, த.ச.ம.நூ.எண்கள் 312(g), 357(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் குருநூல் முப்பு 50, அகத்தியர் முப்பு சூத்திரங்கள்,** தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் 5 (R.1814(a)), அகத்தியர் நேத்திர வாகடம் R.1803 முதலான பல நூல்களும் உள்ளன.

அகத்தியர் முப்பு 50

I. 1. **942.** 2. அ. R. 7007. ஆ. T. R. 2822. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் முப்பூ 50. ஆ. Akattiyar muppū 50. இ. அகஸ்தியர் பாடல் வயித்திய முப்பு 50. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 22 முதல் 44, 47 முதல் 51. 5. 24x2 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 56; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 51 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறைகளையும், அதில் சேருகின்ற மருந்துகளையும், அம்மருந்துகளால் குணமாகும் நோய்களையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை 941 எண் போன்றது.

4. அகஸ்த்தியர் பாடல் வயித்திய முப்பு 50.

5. மயமான முப்புவின் மார்க்கந் தன்னை
வயித்தியம தாக்கியே விரித்துச் சொல்லி
சியமான கணபதியும் கந்தன் தானும்
சிவனுமையாள் பார்வதிநிரு வாணி தானும்
நயமாக யெப்போதும் முன்னே நின்று
நாட்டறிய முப்பூவை நயந்து கேட்க
வயமாகச் சொல்லுகிறேன் அன்ப துக்குள்
வயித்தியரே யெப்போதும் வணங்கிக் கேளே. 1

6. காலான வயித்தியத்தை உறுதி யாக
கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான நிறமுடைய பரம னாவாய்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருமகள் செயல்கள் பெத்து
சிந்தையிலே களங்கமற்ற சித்த னாவான்
நாலான மணிபோத்தும் பிரமன் சொன்னார்
நம்முடைய முனிவன்மொழி னாடி முற்றே. 50

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும், பாரப்பா, கேளப்பா என்று முன்னிலையாரை விளித்துக் கூறும் முறையிலும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.172, R.267(e), R.249(k), R.1079(a), R.1814, R.3606, R.4388, R.4693, R.4714, R.4775, R.7020, R.7035, R.8998, R.2235, R.9339(a), R.10009, R.10121, R.10660(f), D.1872, D.2389, D.2398. 2. உ.த.நி.எண் 532:860, த.ச.ம.நூ.எண்கள் 312(g), 357(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் குருநூல் முப்பு 50, அகத்தியர் முப்பு சூத்திரங்கள்**, தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு அகத்தியர் பொதிகை ஐம்பது, அகத்திய நாயன் ஐம்பது, அகத்தியர் வயித்திய வாகடம் 50, அகத்தியர் அருளிச் செய்த ஐம்பது போன்ற பெயர்களும் உள்ளன.

அகத்தியர் முப்பு 50

I. 1. **943.** 2. அ. R. 7020. ஆ. T. R. 2827. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் 50. ஆ. Akattiyar vaittiyam 50. இ. அகஸ்திய மாமுனி வயித்தியம் அன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 19. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 38; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 முதல் 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 50 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறைகளையும், அதில் சேருகின்ற மருந்துகளையும், அம்மருந்துகளால் குணமாகும் நோய்களையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை 939 எண் போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. அகத்திய மாமுனி வயித்தியம் அன்பது.

5. **மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை**
வயித்தியத்து காகவே விரித்துச் சொல்லச்
செயமான கணபதியுங் கந்தன் தானுஞ்
சிவனுனொடு உமைபார்வதி நிருவாணி தானும்
நயமாக யெப்போதும் முன்னே நின்று
நாடறிய முப்பூவை நயந்து காக்க
வயமாகச் சொல்லுகிறேன் அன்ப துக்குள்
வயித்தியரே யிப்போது வணங்கிக் கேளே. 1

6. **காலான வயித்தியத்தை உறுதி யாக**
கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலன்றித் திறமுடைய பிரம னாவான்
பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவான்
சேலான திருவுடைய செல்வ னாவான்
சிந்தையிலே களங்கமற்ற சித்த னாவான்

நாலான மணிபோற்றும் பரமனார் சொன்ன
நலமுடைய முனிவர்மொழி நாடி முத்தே. 50

7. குரு முன்னிற்க.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.172, R.249(k), R.267(e), R.1079(a), R.1814, R.2235, R.3606, R.4388, R.4693, R.4714, R.4775, R.7004, R.7035, R.8998, R.9339(a), R.10009, R.10121, R.10660(f), D.1872, D.2389, D.2398. 2. உ.த.நி.எண் 532:860, த.ச.ம.நூ.எண்கள் 312(g), 357(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் குருநூல் முப்பு 50, அகத்தியர் முப்பு சூத்திரங்கள்,** தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் 150 (R.7021), அகத்தியர் வைத்திய செந்தூரம் 300 (R.7022), முதலிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் முப்பு 50

I. 1. **944.** 2. அ. R. 7035. ஆ. T. R. 2835. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் முப்பூ 50. ஆ. Akattiyar muppū 50. இ. அகஸ்திய மாமுனி வயித்தியம் அன்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 20. 5. 16x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 40; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 50 பாடல்கள்.

ஆ. —.

III. 1. முப்பு தயாரிக்கும் முறைகளையும், அதில் சேருகின்ற மருந்துகளையும், அம்மருந்துகளால் குணமாகும் நோய்களையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 941 போன்றது.

4. —.

5. மயமான முப்பூவின் மார்க்கந் தன்னை
 வயித்தியத்துக் காதியாய் விரித்துச் சொல்வேன்
செயமான கணபதியுங் கந்தன் தானும்
 சிவனோடே பார்வதியும் நிருவாணி தானும்
நயமாக யெப்போதும் முன்னே நின்று
 நலமறிய முப்பூவை நயந்து காத்து
வயமாகச் சொல்லுகிறேன் அன்ப துக்குள்
 வயித்தியரே யெப்போதும் வணங்கிக் கேளே. 1

6. காலான வயித்தியத்தை யுறுதி யாகக்
 கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான நிறமுடைய பிரம னாவார்
 பாரிலே வாழ்வதற்குக் குருவு மாவார்
சேலான திருவுடைய செல்வ னாவான்
 சிந்தையிலே களங்கமற்றச் சித்த னாவான்
நாலான மணிபத்தும் பரமன் சொன்ன
 நலமுடைய முனிவர்மொழி நாடி முத்தே. 50

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R.172, R.267(e), R.249(k), R.1079(a), R.1814, R.2235, R.3606, R.4388, R.4693, R.4714, R.4775, R.7004, R.7020, R.8998, R.9339(a), R.10009, R.10121, R.10660(f), D.1872, D.2389, D.2398. 2. உ.த.நி.எண் 532:860, த.ச.ம.நூ.எண்கள் 312(g), 357(b). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), அகத்தியர் குருநூல் முப்பு 50, அகத்தியர் முப்பு சூத்திரங்கள், தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. தாமரை நூலகத்தார் வெளியிட்டுள்ள பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லறைக் கோவை, முதல் பாகத்தில் இந்நூலின் வேறொரு பிரதி வெளியாகி உள்ளது.

அகத்தியர் மூன்றில் வழலைக் குரு

I. 1. **945.** 2. அ. R. 6888. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் மூன்றில் வழலைக் குரு. ஆ. Akattiyar mūṉṟil vaḻalaik kuru. இ. அகஸ்தியர் மூன்றில் வழலைக் குரு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 2. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 3; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 9 பாடல்கள்.

ஆ. —.

III. 1. தியானம், யோகம் பற்றிக் கூறும் நூல். 2. ஞானம், யோகம். 3. அகத்தியர் மூன்றில் வழலைக் குரு என்ற இந்நூல் முதலாவதாக முப்புவிற்கான வழலைக் குரு செய்வதற்குக் கல்லுச் சுண்ணம் இருக்குமிடம், அதை எடுக்கும் முறை, அதைக் கொண்டு வழலைக்குரு தயாரிக்கும் முறைகளைக் கூறுகிறது. மேலும், தியானங்கள் பற்றியும் ருத்திர தியானம், சதாசிவ தியானம், மயேச்சுவரன் தியானம் ஆகியவை பற்றியும் யோக முறைகளாக மனோன்மணியைத் தியானம் செய்யும் முறையும் கூறி, இதற்குக் கோபத்தை அடக்க வேண்டும் என்றும் சாதினையாய்ச் சிற்றின்பம் திகழ வேண்டும் என்றும், உணவை அளவோடு உண்ண வேண்டும் என்றும், நல்ல யோக நிலையில் இருந்து சிதம்பர பூசை எய்ய வேண்டும் என்றும், அப்போதுதான் இறைவன் வந்துவந்து அருள் செய்வார் என்றும் இந்நூல் கூறுகிறது.

4. அகத்தியர் மூன்றில் வழலைக்குரு.

5. ஓங்்கார மூலகுரு சின்மயத்திய னாலே
ஓகோகோ வாதத்தைச் சுருக்கிச் சொல்வேன்
ஆங்கார மானதொரு கல்லுச் சுண்ணம்
அப்பனே வயிரம்போல் கல்லே யாகும்
நீங்காத மதுரையென்ற திட்டுக் குள்ளே
நிலைத்துதடா மலையாக வெளுத்த கல்லாய்
பாங்காக விதையறிந்தா லவனே வாதி
பரிசறியான் கழுதையென்ற பாவி மாடே. 397

6. வாதமப்பா யோகமே யிருக்க வேணும்
மனோன்மணியை யென்நாளுந் தியானம் வேணும்
நீதமுடன் ரோசத்தைத் தள்ள வேணும்
நிலையாகச் சிற்றின்பம் திகழ வேணும்
சாதினையாய்ப் போசனத்தைத் தள்ள வேணும்
தன்னிலே மதியமுர்தங் கொள்ள வேணும்
ஆதிசிதம் பரபூசை செய்ய வேணும்
அப்போது வந்துவந்து அருள்செய் வாரே. 405

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூல் யோகம் ஞானம் பற்றியே பேசினாலும், சிற்றின்பம் பற்றியும் பேசுவது ஆய்வுக்குரியது.

அகத்தியர் மெய்ஞானம் 1500

I. 1. **946.** 2. அ. R. 2317. ஆ. T. R. 1299. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் மெய்ஞானம் 1500. ஆ. Akattiyar meynāṉam 1500. இ. தெட்சணாமூர்த்தி வைத்திய மெய்ஞானம் ஆயிரத்தன்னூறு. 4. —. 5. —. 6. கி.பி. 1843. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். கோபாலய்யர், 28, போக்ரோடு, மாம்பலம், சென்னை. 10. கி.பி. 1949-50.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 293. 5. 25 x 3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 586; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6-9 வரிகள். 14. விருத்தம். 15. குறை. 16. இறுதி. 17. 1438 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம் - ஞானம். 3. அகத்தியர் மெய் ஞானம் 1500 என்ற இந்நூல் சிதம்பரச் சக்கரம், அர்ச்சனைக்கு மலர், கபாட வாசலெழுத்து, நவக்கிரக விவரம், சிதம்பரத்துக்கு மாலை, புஷ்பம், பூசை, பழனி மகத்துவம், அகத்தியர் வால்மீகருக்கு உபதேசம், கிரியை பூசை, கடம்ப வனம், சரீரத்தினிடை வாத பித்த சிலேத்துமத்தின் குணம், பூதநாடி விவரம், மூலிகையின் குணம், மூலிகைப்பால் வழலை, ஞானமறிதல், சர்க்குருவைக்காண, அகத்தியர்க்கு எழுத்துக் கற்பம், கெவுன சுடரெழுத்து, சாஸ்திரமெழுதிய எழுத்தாணி அளவு, குருவை வணங்கி மூல உபதேசம் பெற, தேவி கைவிடாமல் உபதேச சமாதி தினம்.... பித்த சுரம், வாத சுரம், சிலேத்தும சுரம், வாத பித்த சுரம், வாத சிலேத்தும சுரம் ஆகியவற்றுக்குக் கசாயம், வாதக்கதிப்புக்குக் கசாயம், மண்டையிடி பீனிசம், நீரடைப்பு, சதையடைப்பு, சூலை ஆகியவற்றுக்குச் சூரணம், விக்கலுக்குச் சூரணம், நீர்க்காமாலை, உள்வறட்சி, புகைச்சல், கண்மேகம், சோகை, வீக்கம், பெரும்பாடு, உட்காய்ச்சல், வண்டுகடி, பித்தவாய்வுகள் ஆகியவற்றுக்கு மருந்து, அவை செய்முறைகள் சாகாமலிருக்க கெவுணமணி போன்ற எண்ணிலடங்கா மருத்துவ முறைகளைக் கூறுகின்றது.

4. ஹரி ஓம். தெஷ மூர்த்தி சுவாமியார் அருளிச் செய்த வயித்திய மெய்ஞானம் ஆயிரத்தன்னூறு இரத்தினமான அமுதம்.

5. **சீரான முடைய காளை**
சிவன்மகன் தமிழி னாணை
வாரன முலையாள் பெத்த
மதகரி வல்லோரா யிந்த

தாரன மருகோன் செஞ்சொல்
தமிழ்நல் லுடையோன் பூசை
காரண முடைய தும்பி
கணபதி காப்புத் தானே. 1

6. வாழியாம் அண்டரெண்டம் புவனம் வாழி
மானிலத்தில் சீவசெந்து வோடு வாழி
காளியான வனதுர்க்கை யெல்லாம் வாழி
கடல்வாழி மலைவாழி குருவும் வாழி
ஆழியாம் சித்தர்கள் எல்லாம் வாழி
அகராதி தேவாதி வாழி முற்றே. 1438

7. முகிந்தது முற்றும். நன்றாக.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும் சில எழுத்துப் பிழைகளுடனும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. 1843 ஆம் வருஷம் துலா மாதம் 22ந் தேதி வெள்ளிக் கிழமையில் தெட்சிணாமூர்த்தி மெய் ஞானம் ஆயிரத்து அன்னூறு யெழுதி முகிந்தது முற்றும் குருவே துணை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **தட்சிணாமூர்த்தி மெய்ஞானம் 1500,** தாமரை நூலகம், சென்னை, 1993. 3. இல்லை.

VI. இந்நூல் மருத்துவம், மந்திரம் அறிந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்களுக்கு மிகச் சிறந்த முறையில் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

அகத்தியர் யோகம் 16

I. 1. **947.** 2. அ. R. 4213. ஆ. T. R. 1864. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சிவ சூத்திரம் 16. ஆ. Akattiyar civa cūttiram 16. இ. அகத்தியர் சிவ சூத்திரம் பதினாறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு D.N. லிங்கப்ப கவுண்டர், கருமார் தெரு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். 10. கி.பி. 1952-53.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 5. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 10; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 16 பாடல்கள்.

ஆ. —.

III. 1. யோகம், ஞான மார்க்கங்களைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம், ஞானம். 3. இந்நூல், ஞான, யோக முறைகள், யோகத்துள் மவுனயோகமே சிறந்தது, பத்துவகையான தீட்சைகள், கண்மூடித் தியானித்தல், இரசவாத முறைகள் செய்தல் முதலான பல செய்திகளைக் கூறுகின்றது. பலரும் நாசியுள் முறையற்று மூச்சினை இழுத்து அவதியுற்று, அதனால் கண் தெறித்துப்போனவரும், கபாலம் வெடித்து மாண்டோரும் உண்டேயொழிய, யோகநெறியில் ஞானம் அடையவில்லை என்றும், முப்பு என்பதை யோகம் எனக் கொண்டு ஞானம் அடைய முயற்சி செய்து தோல்வி அடைந்ததையும், உண்மையில் இராச யோகத்தில் நின்றவரே இறைவனை அடையத் தகுதியுடையவர் ஆவர் என்றும் இந்நூல் கூறுகின்றது. இந்நூல், அகத்தியர் ஞான காவியம் 1000 என்ற நூலின் சுருக்கம் என்பதை 'காவியத்துக்காக யிந்தக் கருப்பொருளைப் பதினாறில் கருதிச் சொன்னேன்' என்ற அடியால் அறிய முடிகின்றது.

4. —.

5. ஆதிமறை சாத்திரங்கள் பிறந்த வாறும்
அடிமுடியும் நடுவாகி பொருள்மூன் றாகி
வேதியனும் மாலயனும் நின்ற வாறும்
வேதமுடன் ஆகமங்கள் பிறந்த வாறும்
சாதிபல தொழில்முறைக ளான வாறும்
தன்னுக்குள் ளஷ்டாங்கம் செய்த வாறும்
ஓதியநூல் அவரவர்கள் கற்ற வாறும்
ஓங்காரக் கணபதி காப்புத் தானே. 1

6. காணப்பா காவியத்துக் காக யிந்தக்
கருப்பொருளைப் பதினாறுங் கருதிச் சொன்னேன்
வீணப்பா யென்றுசொல்லி யிந்த னூலை
வெளிவிட்டால் உங்களுக்கு என்மே லாணை

ஆணையப்பா முக்காலும் ஆணை ஆணை
அறிந்துணர்ந்த ஞானியனை யடுத்துச் சேரு
பாணமப்பா உண்டிருந்தார் பதத்தைப் போற்றி
பதினாறும் சிவசூஷ்சம் பொருள்தான் முற்றே. 16

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியிலும் சில எழுத்துப் பிழைகளுடனும் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 149(h), R. 175(i), R. 254(f), R. 280(j), R. 150(c), R. 3633(b), R. 8985, R. 9626, R. 10504, R. 10538. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 357(c), 408(e), 1008. ஆ.நி.எண் 384(c). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் ஞானச் சுருக்கம் 16, அகத்தியர் ஞான அமுதம்**, தாமரை நூலகம், சென்னை, 1995. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்தியர் ஞானம் 16, அகத்தியர் சிவ சூத்திரம் 16 ஆகிய பெயர்களில் வழங்கப்படுகிறது. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், பாம்பாட்டிச் சித்தர் பாடல் (R. 4243), மாணிக்கவாசகர் ஞானக் கலித்துறை (R. 4242), முதலிய பல நூல்கள் அமைந்துள்ளன.

அகத்தியர் வழலை 30

I. 1. **948.** 2. அ. R. 4503. ஆ. T. R. 1988. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணாமூர்த்தி சூத்திரம். ஆ. Taṭciṇāmūrtti cūttiram. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி. மகாலிங்கம் பிள்ளை, வத்திராயிருப்பு. 10. கி.பி. 1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 முதல் 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம் செய்வதற்கான முறையைக் கூறும் நூல். 2. இரசவாதம். 3. இந்நூலில், முப்புவின் இயல்பு, முப்புவுக்குரிய கருக்குருக்கள் முடிக்குங்காலம், அண்ட பிண்டத்தின் தோற்றம், அண்ட சக்தியின் இயல்பு, அம்பிகா யோகத்தின் சிறப்பு, சிவவுப்புவின் தன்மை, சிவதீட்சை, முப்புவின் நிறம், முப்புவின் முதல்-நடு-அடியுப்பின் பெயரும் இயல்பும், பஞ்சபூத உப்புகளின் இயல்பு, முப்புச் சுண்ணங்களின் இயல்பு போன்ற செய்திகள் கூறப்படுகின்றன. இறுதியில் இரசவாதத்தில், தாழ்ந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றுவதற்கு இம்முப்புவும், பிற பொருள்களும் பயன்படும் நிலைகள் கூறப்படுகின்றன.

4. —.

5. ஆதிபரா பரத்தினுட கிருபை போற்றி
அடிமுடியாம் மணக்கோலம் நந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் முகவன் காப்பு
நிர்மலமாஞ் சதாசிவத்தின் வடிவே காப்பு
பாதிமதி சடையணிந்த சிவன்தாள் காப்பு
பத்திமுத்தி சித்திவயி ரவனே காப்பு
ஓதியதோர் வாணியுடப் பாதம் காப்பு
ஓங்கார மூலவட்டத் தொளியே காப்பு. 1

6. ஆமப்பா யின்னூலில் துரிசு வெள்ளை
அவ்வெள்ளை சுன்னத்தால் ரசத்தை நீத்தி
ஓமப்பா பரித்தகட்டில் பூசிப் பாரு
உத்தமனே சொர்ணமது சுண்ணாம் பாச்சு
நாமப்பா சொல்லுகிறோம் தாம்பூரத்தில் கொடுக்க
நாட்டோர்க்குப் பிழைப்பதற்கு வழியு முண்டாம்
காமப்பா யதையெடுத்து வெள்ளிக் கீய
கனகமுமாங் கருமூன்று பத்து முற்றே. 20

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் சில எழுத்துப் பிழைகளுடன் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 175(h), R. 267(c), R. 267(h), R. 268(c), R. 280(z), R. 4720, R. 9052(b), R. 9223, R. 9244. 2. சி.ம.மை.ஆ.நி.எண்கள் 1019(j), த.ப.க.எண் 1194, த.ச.ம.நூ.எண்கள் 121(g), 321(b), 469(f). 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் முப்பு 30, அகத்தியர் முப்பு சூத்திரங்கள்**, தாமரை நூலகம், சென்னை, 1992. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் கர்மகாண்டம் (R. 4502), அகத்தியர் சூத்திரம் 12 (R. 4503(a)), முதலிய நூல்களும் உள்ளன. அகத்தியர் வழலை 30 என்ற இந்நூல், அகத்தியர் கலைஞானம் 30 என்ற பெயரிலும் வழங்கப்படுகிறது.

அகத்தியர் வாகடத் திரட்டு

I. 1. **949**. 2. அ. R. 6992(c). ஆ. T. R. 2814. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாகடத்திரட்டு. ஆ. Akattiyar vākaṭattiraṭṭu. இ. அகஸ்த்தியர் வாகடத்திரட்டு சூஸ்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன்பட்டி (அஞ்சல்), கம்பம்(வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 24. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 48; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. வெண்பா, விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 120 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மருத்துவமும், தத்துவமும் கூறும் நூல். 2. மருத்துவம், தத்துவம். 3. அகத்தியர் வாகடத்திரட்டு என்ற இந்நூலில் முதலாவதாக மருத்துவம் கூறப்படுகிறது. வாதத்துக்குத் தயிலம், பித்த வகைக்கு அவிழ்தம், சிலேற்பன வியாதிக்கு நெய், தலைமுழுகுவதற்குத் தயிலம், மூல வியாதிக்குச் சூரணம்,

கிராணி வகைகளுக்கு மருந்துகள் காமாலை வகைகள், கபால வியாதிக்குச் சூரணம், இரத்ததோசத்துக்கு அவிழ்தம், இரத்தபித்தம், வாந்தி, காசம் முதலியவற்றுக்குக் கசாயம், சன்னிக்கு அவிழ்தம், சுரம் சன்னி வகைகளுக்கு, வலிப்பு வகைகளுக்கு மருந்துகள், தைலங்கள் செய்முறைகள், கரப்பான், அரையாப்பு, கண்டமாலை, பவுத்திரம், விப்புருதி இவைகளுக்குத் தயிலம் கர்ப்பக்கோளுக்கு எண்ணெய், நீரடைப்பு, இரத்தபிரமியம், பாண்டுக் காமாலை வகைகளுக்கு மருந்துகளும் அவை செய்முறைகளையும் கூறி, தத்துவம் தொடர்பாக அத்வைத நிலை, அத்திரோதய அபாவாதம், ஆபனம் நீக்குதல், முக்தருக்குப் பிறப்பில்லாமை, சீவன்முக்தர் இலட்சணம், பரமபத நிராகரிப்பு, அவத்தை நிலைநிறுத்துதல், விலைக்குச்சொரூபம் ஆகிய முறைகளும் சொல்லப்பட்டுள்ளன.

4. ஹரிஓம். அகஸ்தியர் வாகடத்திரட்டு சூஸ்திரம்.

5. சீர்பெரு கணேசன் பாதம்
 சென்னியில் வணங்கிப் போற்றி
 பேர்பெரு வாக டத்தி
 னியல்பினை யாய்ந்து மாந்தர்
 பார்பெரு நோய்ம ருந்து
 பலவுமே திரட்டு நூலாய்
 தார்பெரு பொதிகை வாழுந்
 தவமுனி கூற்று முற்றே. 1

 வாதந்தா னெண்ப தாகும்
 வருகின்ற பக்க வாதஞ்
 சீதமே நடுக்கு வாதம்
 சிறந்திடு முடக்கு வாதஞ்
 சூதமே சந்து வாதஞ்
 தோன்றிய முகத்தில் வாதம்
 பேதமாம் வாதந் தீர
 பொருந்திடும் மருந்து கேளே. 2

6. சிருட்டிக்கி முன்பினி.......... மல்லா
 ....ன்றா யிருந்தசத்தே தினந்தே காதி
 விருத்திக்குஞ் சாட்சி யாகி
 நீயென்றே சாமவேதஞ் சொல்லு
 மருப்பிலா வபரோட்சப் பொருளி தென்றுஞ்
 செகச்சாட்சி யாற்மா வென்றும்

பொருத்தயில விளக்கமிதே பிரம மென்றும்
தருவனம் புகலுந்...... தேனே. 10

7. விபக்க சொரூபம் முற்றும். ஆக விருத்தம் 120 பிரம்மமே நித்தியம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இவ்வாகடத்திரட்டு பத்துப்பத்துப் பாடல்களாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பத்துப் பாடலிலும் மருத்துவமும், தத்துவமும் கலந்து சொல்லப்பட்டுள்ளன.

அகத்தியர் வாகடத்திரட்டு

I. 1. 950. 2. அ. R. 6445. ஆ. T. R. 2684. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாகடத்திரட்டு. ஆ. Akattiyar vākaṭattiraṭṭu. இ. அகஸ்த்தியர் வயித்தியம் நூறு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 18; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. வெண்பா. 15. குறை. 16. இறுதி. 17. 87 பாடல்கள்.

ஆ. —.

III. 1. சுரம், தலைவலி, நீரிழிவு போன்ற பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. பித்தம் தொடர்பான நோய்கள், தலைவலி, இருமல், ஈளை போன்றவை, வாத நோய்கள், குன்ம நோய்வகைகள், விசகடி நோய்கள், தோசம்

தொடர்பானவை, நீரிழிவு, நீர் கசிவு, வாய்வு தொடர்பான நோய்கள், சுர நோய்கள், காமாலை, கிராணி, கிரந்தி, கரப்பான் போன்ற பல வகை நோய்களுக்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன. வாகட நூல் என்பதால் நோய்களின் பெயர்கள் அகர வரிசையில் குறிக்கப்பட்டிருப்பதும், அந்நோய்களுக்குரிய மருந்துகள் வகைகளை அவ்வாறே 'இந்நூல் குறிப்பதும் காணப்படுகின்றன. மருந்துகளைத் தயாரிக்கும் முறைகளும், பயன்படுத்தும் முறைகளும், பத்திய முறைகளும் கூறப்படுகின்றன.

4. ஹரிஓம். அகஸ்தியர் வயித்தியம் நூறு.

5. **ஆரியமா வாடகத்தி னரும்பொ ளாராய்ந்து**
சீரியதாய்ச் செந்தமிழில் செப்புகின்ற - கூரியதாம்
உள்ள நிதானமதை யோதும் வினாயகனே
வள்ளலென் மனத்திலே வாழ்க.

6. **திண்ண மிரண்டுஞ் சிருகாமற் சிகாரமறா**
பெண்ணின்பா லாசைப் பெருகாமற் - உண்ணுங்கால்
நிரஞ்சி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பதன்பே
ருரைக்கப் போமே பிணி. **87**

7. —.

8. மூலம். 9. பாடல்கள் வெண்பாவில், அந்தாதியில் அமைந்துள்ளன. ர/ற வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. R. 3611, R. 4680, D. 2422, R. 6447, R. 9962. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வாகடம் என்பதற்கு வைத்திய அகராதி 'நூல்' என்று பொருள் தருகிறது. எனவே வாகடத்திரட்டு என்பதற்கு வைத்திய நூல்கள் பலவற்றிலிருந்தும் திரட்டிச் செய்யப்பட்ட நூல் என்று பொருள் கொள்ளலாம்.

அகத்தியர் வாகடத் திரட்டு

I. 1. 951. 2. அ. R. 6447. ஆ. T. R. 2684. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம். ஆ. Akattiyar vaittiyam. இ. (அகஸ்த்தி)யர் வயி(த்தி)யம் 100. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார். 10. கி.பி.1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 9. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 18; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. வெண்பா. 15. இல்லை. 16. முழுமை. 17. 87 பாடல்கள்.

ஆ. —.

III. 1. தலைவலி, சுரம், நீரிழிவு, சரும நோய்கள் தொடர்பானவற்றுக்குரிய மருந்துகளும், அம்மருந்துகள் செய்முறையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 947 போன்றது.

4. —.

5. **ஆரியமா வாகடத்தி னுட்பொருளை யானாய்ந்து**
சீரியதாஞ்ச் செந்தமிழில் செப்புகுறேன் - கூரியதாய்
உள்ள நிதானஞ் சீட்டை வினாயகனே
வள்ளலேன் என்மனதுள் வா. 1

6. **திண்ண மிரண்டுஞ் சிறுகாமற் சிகாரமற்**
பெண்ணின்பா லாசைப் பெருகாமற் - உண்ணுங்கால்
நிரஞ்சி மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பத்
தன்பேருரைக்கப் போமே பிணி.

7. —.

8. மூலம். 9. பாடல்கள் வெண்பாக்களில் வந்தாலும் அந்தாதி அமைப்புடன் உள்ளன. ர-ற வேறுபாடில்லாது எழுதப்பட்டுள்ளது. 10. 'வாகடத் திரட்டு நூல்கள்' 'வாகட நூல்கள்' என இருவகையான வாகட நூல்கள் அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளன. 11. இல்லை.

IV. 1. D. 2422, R. 3611, R. 4680, R. 9962, R. 6445. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்த நூலின் 41 ஆம் பாடலும், D. 2422ன் 39ஆம் பாடலும் ஒத்துப் போகின்றன. இவ்வாறு வாகடத் திரட்டு நூல்கள் எங்குப் பாடப்பெற்றிருப்பினும், யார் எழுதியிருந்தாலும் ஓரளவு ஒத்துப்போகும் பாடல்களாயிருப்பமை கண்டறியப்பட்டுள்ளது.

அகத்தியர் வாகடம்

I. 1. 952. 2. அ. R. 6262. ஆ. T. R. 2654. இ. —. ஈ. —. 3. அ. வைத்திய நூற்றிரட்டு. ஆ. Vaittiya nūṟṟiraṭṭu. இ. தெட்சிணா மூர்த்தி பாடல் வியாதிக்குணவாகடம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தாரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடி. 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. ஏடுகளைக் கணக்கிட இயலவில்லை. 5. 45x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. கணக்கிட இயலவில்லை. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 95க்கு மேலான பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகை நோய்களுக்கு மருந்துகளும் அவை செய்யும் முறைகளும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். இந்நூலில், வாதம், பித்தம், சிலேத்துமம் போன்றவற்றால் ஏற்படும் அனைத்து நோய்களுக்கும் மருந்துகள் கூறப்படுகின்றன. வாத வகைகள் பல: அவை, கைமுடக்குவாதம், கால் முடக்கு வாதம், குளித்தி வாதம், கன்னவாதம், அரைமேல் வாதம், பிடரி வாதம், நடுவுச்சி வாதம், பைத்திய வாதம், திருகு வாதம் போன்றன. இவற்றுக்கான எண்ணெய் வகைகள், அவை தயாரிக்கப் பெறும் முறைகள் கூறப்படுகின்றன. பித்தத்தால் ஏற்படும் மயக்கம், மந்தம், நச்சுத்தன்மை

போன்றவற்றுக்குரிய மருந்துகளும் வந்துள்ளன. அண்ட நரம்பு சுருட்டலுக்குத் தைலம், சுக்குத் தைலம், உள்குத்துக்குத் தைலம், சுவாசத்துக்கு மருந்து, போன்ற தைல வகைகளும் இந்நூலில் கூறப்படுகின்றன. இவ்வகை நோய்களும் மருந்துகளும் வரிசையாகக் கூறப்படுவது இந்நூலின் சிறப்பு.

4. ஹரி ஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.

5. **ஆதியாங் கடவு ளானை**
ளடியிணை தன்னைப் போத்தித்
தீதுறு வியாதி தன்னைத்
தெளிவுடன் அறிய வேண்டிக்
கோதிலா நல்லோர் பேசும்
குணமிகு பாடல் தன்னை
நீதிசேர் படியின் மீதே
நெறியுட னுரைக்க லுற்றார். 1

6. (ஏடுகளிலுள்ள பாடல்கள் பல நூல்களிலிருந்து திரட்டப் பெற்றதால் இந்நூலுக்குரிய பாடல்கள் எவை என அறுதியிட முடியவில்லை.)

7. —.

8. மூலம். 9. எளிய பாடல்கள், பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. 'போற்றி' என்பது 'போத்தி' என வருகிறது. 10. அகத்தியர் பெயரில் வந்தள்ள இவ்வாகட நூல் வகைகள் பலவகைப் பாடல்களாலும் உரைநடையிலும், வெவ்வேறு வகையாகவும் வருவது இயல்பு. 11. இல்லை.

IV. 1. R. 5415, R. 6262, R. 9179, R. 9962, R.10495. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடியில் 1. தன்வந்திரி நிகண்டு 300 என்பதும் (R. 145(a)), அகத்தியர் சூத்திரம் 10 (R. 308(b)) என்பதும் இருப்பதாக அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணை தெரிவிக்கின்றது. ஆனால், ஏடுகளின் முறை மாற்றத்தால் அவற்றை அறிந்து கொள்ள முடியவில்லை. இங்கே கூறப்பெற்ற நூலுடன் பிள்ளைப் பிணி வாகடம் என்ற நூலும் உள்ளது.

அகத்தியர் வாகடம்

I. 1. **953.** 2. அ. R. 9003. ஆ. T. R. 3249. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் காயம். ஆ. Akattiyar kāyam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவே தெளிவு. 4. 19. 5. 25x3 செ.மீ. 6. ஒரு துளை. 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 37; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. பலவகை யாப்பு. 15. இல்லை. 16. முழுமை. 17. 39ஆம் பாடல் முதல் 140 பாடல்களும், சில உரைநடைப் பகுதிகளும் உள்ளன.

ஆ. —.

III. 1. உடம்பில் தோன்றும் பலவகை நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. தலைவலி, சுரம், வாதம், வாய்வு, நீர் அடைப்பு, குன்மம், மேகம், அசீரணம், சுவாச காசம், மந்தகாசம், ஈழைகாசம், போன்ற பலவகை நோய்களின் வகைகள் கூறப்படுகின்றன. கரப்பான் வகை நோய்களுக்கு அவிழ்தம், மலசலம் அடைப்புக்கு மருந்து, கிரந்திப்புண்ணுக்கு, காமாலை, நீரிழிவு, பெரும்பாட்டுக்கு, தோசத்துக்கு, எரிவாய்வுக்கு, மூலத்துக்கு மருந்து வகைகள் கூறப்படுகின்றன. இந்நூலில், மருந்து செய்முறைக்கு ஒரு சான்று வருமாறு: ஆமணக்கு எண்ணெய் ஒரு நாழி அளவும், பசுவின் பால் ஒரு நாழியும், நெல்லிச் சாறு கால் நாழியும், கடுக்காய், தான்றி, சுக்கு, வேர்க்கரந்தை, துளசி, தூதுவளை எனும் இவற்றைப் பயன்படுத்தி மருந்து தயாரிப்பது பற்றி ஒரு பாடலில் கூறப்படுகிறது.

4. ஹரி ஓம் நன்றாக. குருவாழ்க குருவே துணை.

வேகமா வந்துனெறி சேரும் வினைகளும்
தாக போக விடாத் தளர்ச்சியும்
சோக வாரி யினால்வருந் துன்பமும்
போக யானைமுகத் தானைப் போத்துவாய்.

5. **மந்திரந் தானேது வென்று மயங்க வேண்டாம்**
மககேடு விழந்தீண்டி தூரதன் வந்தால்

வந்த.......... மென்ற......... ஞ் சொன்னால்
வாயிலே அடித்தால் .... வந்துநீ சொல்லு
எந்த .... டி னதிலத் தியானம்
ஊழியே பிசகாமல் எழுது வாயே.

6. கருகிமுகம் விழிகருகும் வேறாகி நிற்(க்)கும்
கடித்தவிடம் கசங்கிப் போகும்
சர்ப்ப வேகம் ஆறாகும் அறிவ ழிக்கும்
சடுதியிலே வளைந்து..... லோடிப் போகும்
விருவிருக்கும் மதலைநடுங்கும் விழியும் மூக்கும்
வேரும் பல்லே மெல்லும் துருசிய முட்டு
பெருகவே சரவேக மேழான வேகம்
பேசாமல் மதிமயங்கி மயங்குந் தானே. 1

7. .... நச்செலி அரணை சுத்தி கண்ங் காதடைப்பு சிலவிஷம் கடித்தால் ஒன்றுமில்லை.

8. மூலம். 9. பேச்சு வழக்குச் சொற்கள் பயன்பட்டுள்ளன. எளிய நடை. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்டுள்ள வாகட வெண்பா நூல்கள் ஆரியத்திலிருந்து தமிழுக்கு வந்ததாகச் சில பாடல்களில் காணப்படுகிறது. 11. இல்லை.

IV. 1. R. 169(a), R. 2496. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில், கீழ்க்காணும் நூல்களும் உள்ளதாக அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக விளக்க அட்டவணை (தொகுதி 30)ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவை: 1. துருபதை அம்மன் அகவல் (R. 8996)
2. காளி அகவல் (R. 8997)
3. அகத்தியர் 50 (R. 8998)
4. தன்மந்திரியார் நாடிச்சுருக்கம் (R. 8999)
5. வைத்திய தர்க்க சாத்திரம் (R. 9000)
6. சித்தராரூடம் (R. 9001)
7. குழம்பு வகைகள் (R. 9002)

ஆயினும், 8. காலம் அறியும் வகை,
9. ஊழிக்காற்று விபரம் முதலியன
10. அகத்தியர் அமுர்த சஞ்சீவிக் குழம்பு

எனும் மூன்று நூல்களும் அதிகமாக உள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

அகத்தியர் வாகடம்

I. 1. **954.** 2. அ. R. 5415. ஆ. T. R. 2496. இ. —. ஈ. —. 3. அ. வைத்திய வசனம். ஆ. Vaittiya vacanam. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பொள்ளாச்சி உதையகுளம் பி. தாமோதரனிட மிருந்து வாங்கப்பட்ட சுவடிக்கட்டு. 10. கி.பி. 1955-56.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 7. 5. 35x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 13; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது; நீட்டுக்கும், பத்தி பத்தியாகவும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகளும், 3 பத்திகளும். 14. உரைநடை. 15. இல்லை. 16. உதிரி ஏடுகளாக உள்ளதால் குறைச் சுவடியாகத் தெரிகிறது. 17. உரைநடையாதலால் 25 கிரந்தங்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆ. —.

III. 1. இந்நூலில் சில நோய்களுக்கான மருந்துகளும், செய்முறைகளும் உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. 2. மருத்துவம். 3. இந்நூலில் கிரந்திக்கு விளக்கெண்ணெய் வைக்கும் பட்டியல், பெண்கள் திரளுவதற்கான மருந்து, கருங்குழம்பு வகைகள், பீனிசத்துக்கு நசிய வகைகள், கருஉத்தியானம் பண்ணுவதற்குரிய மந்திரம், சுத்தி வகைகள் போன்றன கூறப்படுகின்றன. சந்தனாதி எண்ணெய், மோர் எண்ணெய், சீதேவித்தைலம், மதுகாதித் தைலம் போன்றவும், பரங்கிப்பட்டை, திரிகடுகு, திரிபலகை, ஏலம், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி போன்ற எளிதாக அறிந்து கொள்ளத் தக்க மருந்துப் பொருள்களும் கூறப்பட்டுள்ளன. இந்நூல் எளிமையாக அமைந்துள்ளது. யாவரும் படித்துப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் மருந்துப் பொருள்கள் தெரிந்தனவாக உள்ளன.

4. சகலமான வியாதி தீரும்.

5. **பரங்கிபட்டைப் பலம் 19.** திரிகடுகு திரிபலைகை ஏலம் இலவங்கப் பட்டை இலவங்கப்பத்திரி, கொடி வேலி, வேர்மா விலங்கம் வேர் சங்கம் வேர் வெள்ளருகு நன்னாரி

வேர் அமுலை கிராக்கிழங்கு நிலப்பனைக் கிழங்கு இலா மிச்சம் வேர் நற்சீரகம் கடுக சீரகம் கிராம்பு ஓமம்.

6. சந்தணாதி யெண்ணை சாறு – மு. மதுகாதித் தயிலம். பி. குளிர் காச்சலுக்க மோரெண்ணை சீதேவித் தயிலம் 65. ய. மாரலச்சுரத்துர மோரெண்ணை 66, மு. சுரக்குமோ ரெண்ணை.

7. —.

8. மூலம். 9. எளிய நடை ற/ர, ழ/ள வேறுபாடில்லாது ஏடு எழுதப்பட்டுள்ளது. 'இலாமிச்சம்' எனும் சொல்லாட்சியைக் காண்க. சில எடை அளவுகள் குறியீடுகளாகக் காட்டப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் உரைநடை, வெண்பா, விருத்தம், ஆசிரியப்பா எனப் பலவகை யாப்பில் வாகட நூல்கள் செய்யப்பட்டுள்ளன. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு முன்பாக அகத்தியர் சூத்திரம் 1500 (R. 5813), என்ற நூல் 1 முதல் 250 ஓலைகளிலும், அகத்தியர் குழம்பு என்ற நூல் (R. 5814) 4 ஓலைகளிலும் உள்ளன. அகத்தியர் குழம்பு என்ற நூல் 23 பாடல்களுடன், 'கேளாயிந்த வகைக்கெல்லாம்' என்ற தொடக்க அடி கொண்ட பாடலுடன் முடிவடைகின்றது. அதன்பின், தொடச்சியாக, 'கோடிவித்தை', 'ஆட்டியே வில்லை தட்டி' எனும் தொடக்கம் கொண்ட இருபாடல்களும், 'வேறு' என்ற தலைப்பின் கீழ், 'கேளப்பா நவலோக மார்க்கஞ் சொன்னேன்' எனத் தொடங்கும் பாடலொன்றும், 'சாரமொடு நாகத்தை' எனத் தொடங்கும் மற்றொரு பாடலும் உள்ள ஏடு ஒன்று உள்ளது. அதன் பிறகே, இங்கே கூறப்படும் உரைநடை நூல் உள்ளது.

அகத்தியர் வாதம் 300ல் சில

I. 1. 955. 2. அ. R. 6872(c). ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாதம் 300ல் சில. ஆ. Akattiyar vātam 300 -l cila. இ. அகத்தியர் நாலு காண்டம் 1200ல் வாத

காண்டம் 330ல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 7. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 13; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 35 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இரசவாதம், தீட்சை முறைகள் பற்றிக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்திய வாதம் 300ல் சில என்ற இந்நூல் இரசவாத வித்தைகள் பற்றிக் கூறி, பஞ்சபூதக் கூறு, பஞ்சபூதமாகாயம், பஞ்சபூத அட்சரங்கள், சடலமுற் பத்தியினடக்கம், ஆத்தும தத்துவம் முப்பது, வாத குணம், சிலேட்டுமக்கூறு, பிராணவாயுக் கூறு, சுவாசக்கூறு சிவதூபம், நாபின்கூறு, நாவின் வளமை போன்ற பகுதிகளைக் கூறுகின்றது. மேலும் விந்தை கிரி முடிவு, பீசத்தின் விருட்சம், சிலம்பாலே பூட்டு, சமுத்திரம் உண்டானது, விராலிமலை, இந்திரச்சித்து, நாகபூசத்துக்கு அனுமார் கொண்டு வந்த மூலிகை, கொல்லிமலை மேற்கு, பொன்னாகத்தாள் மூலிகை, நாகமலை மூலிகை, தசபாலை மூலிகை, ஒருமுகப் பச்சிலை ஆகியனவும் இதனுள் அடங்கும்.

4. அகஸ்தியர் நாலு காண்டம் 1200ல் வாத காண்டம். 300ல் உள்ளது.

5. நடக்கவே யின்னுமொரு கதையைக் கேளு
நடந்தசெய்தி திரேதா யுகத்தி லப்பா
அடக்கவே ஆதியா விந்தை வெற்பை
யாகாச முட்டிதென்று அழைத்தா ரப்பா
உடக்கைதனைக் கொண்டுசென்று பாதத்தைக் கண்டு
வுகந்துதுதி செய்தெனிப்பான் பாரா ரென்னை
விடக்கையே விந்தைகிரி பருப தத்தை
விஞ்சையா லகத்தியரே அடக்கென் றாரே. 1

6. சாரமுடன் ரசவாத கார சாரங்
   தான்சொன் னேன்துறை யறிந்து சாரு
வாரமுட னுயிர்[ப்]பவனே வாதங் காண்பான்
   மகாதேவர் விண்டரச வாதந் தன்னை
கூறுடனே கண்டறிந்து கொண்டோன் வாதி
   குவலயத்தில் வாய்பிதற்றி யலைந்த மாண்பர்
தாரமின்னா லிருக்கையிலே தாயைக் கூடி
   சம்பவித்த மாபாவி யாவார் பாரே. 35

7. —.

8. மூலம். 9. பாடல்கள் ர/ற வேறுபாடில்லாமல் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலுக்கு அகத்தியர் காண்டம் வயித்தியம் 1200ல் வாத காண்டம் 300ல் உள்ளது என்று தலைப்பு கொடுத்திருந்தாலும், அப்பகுதியில் இப்பாடல்களை முழுமையாகக் காண முடியவில்லை.

அகத்தியர் வாலை 30

I. 1. **956.** 2. அ. R. 4509. ஆ. T. R. 1989. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வாலை 30. ஆ. Akattiyar vālai 30. இ. தெட்சிணாமூர்த்தி வாலை முப்பது. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருமதி மகாலிங்கம் பிள்ளை (சோதிடர் மாந்திரீகர்), வத்திராயிருப்பு, இராமநாதபுரம் மாவட்டம். 10. கி.பி. 1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 8. 5. 14x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 16; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 10 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 30 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பல வகையான நோய்களுக்கு மருந்துகள் செய்யும் முறையையும், வசியம் தொடர்பான செய்திகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் வாலை முப்பது என்ற இந்நூலில் நம் உடம்பில் உண்டாகும் நோய்களுக்கு வழலைச் சுண்ணம், நாக சுண்ணம் தயாரிக்கும் முறையும், புலிகட்ட, பேய்கட்ட, வாய்வுவர மந்திரம், துருசு அரிதாரம், அஞ்சன மை, அஞ்சன மை மறைப்பு, மை அட்டகம் போன்ற வசிய மருந்துகள், மந்திரங்கள் செய்யும் முறைகளும் கூறப்படுகின்றன.

4. ஹரி ஓம். தெட்சிணாமூர்த்தி வாலை முப்பது.

5. ஆதியெனை யாண்டதொரு சோதி பாதம்
அம்பரத்தில் நின்றதொரு அய்யர் பாதம்
நீதியெனை யாண்டதொரு குகன்றன் பாதம்
நினைவாக முப்பதிலே நிறைந்து வாழும்
வாதியென்ற பேர்படைத்த புலத்தியனே அய்யா
வரிசையாய் வழலையுட கருவைக் கேளே. 1

6. புத்தியென்றா லிதுசரபுத்தி பார்க்கு மப்பா
புகழவே சொல்லிவிட்டேன் முப்ப துள்ளே
பத்தியென்றா லிதுபத்தி யிந்த நூல்தான்
பாதகர்க்கு[ச்] சொல்லாதே வழலை தன்னை
முத்தியென்ற யிந்தனூல் முப்ப துந்தான்
மூர்க்கமா யாதியென்றதா லிதைச் சொன்னேன்
சத்தியென்ற குண்டலியே சர்வ சக்தி
சகலருக்கு யென்னாளுந் தாயா ரானாள்
பத்தியென்றா லிதுபத்தி நினைவாய்ப் பாரு
பாலகனே வழலைதனைப் பகரு வாயே. 30

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன பேச்சு வழக்கும் பயின்று வருகின்றது. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இந்நூலைப் போன்றே தொகுதி இரண்டில் வரிசை எண் 484-ல் அகத்தியர் வாலை வாகடம் என்ற நூல் உள்ளது. ஆனால் அது இந்நூலிலிருந்து பல வகையிலும் வேறுபட்டுக் காணப்படுகிறது.

அகத்தியர் விநோதம் 43

I. 1. **957.** 2. அ. R. 1816. ஆ. T. R. 1039. இ. —. ஈ. —. 3. அ. தட்சிணமூர்த்தி விநோதம் 43. ஆ. Taṭcināmūrtti vinōtam 43. இ. தக்ஷிணாமூர்த்தி விநோதம் நாற்பத்தி மூணு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 3. 5. 34x5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப்பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 6; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 17 முதல் 18 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 43 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகைச் சால வித்தைகளைப் பற்றிக் கூறும் நூல். 2. மந்திரம், மாந்திரீகம். 3. இந்நூல், அகத்தியர் சாலத்திரட்டு 1200-ல் மூன்றாங் காண்டமாகிய மந்திரசாலம் 300 என்ற நூலின் சுருக்கமாக இருக்கலாம். இதில், உருமாற்றம், மோடி வித்தை, பாதாள மை, சொக்குப் பொடி, எரிமோடி, பூட்டுத்தெறிக்க, கூடுவிட்டுக் கூடுபாய, ஆகாசமோடி, வசிய மை தயாரித்தல், கண்கட்டு வித்தை, ஏவல் இலா சிங்கி முதலான பல்வேறு விநோத சாலவித்தைகள் கூறப்பட்டுள்ளன.

4. தக்ஷிணாமூர்த்தி விநோதம் நாற்பத்தி மூணு.

5. முத்தான முன்னூத்தில் வினோத மெல்லாம்
முதிர்ந்தபின்பு நாற்பத்தி மூணுஞ் சொன்னேன்
கர்த்தாவைத் தியானித்துக் கண்டு பா(ர்)த்து
கதிரவே மூலத்தில் மனதை வைத்து
விஷ்த்தார மாகவேதான் பாடி வைத்த
வினோதமதை சோதித்து விளையாடிக் கொண்டு

உத்தாரந் தந்திடுவான் தனக்குத் தாய்தான்
உண்மையாய்க் கண்டிந்த விந்தை பாரே. 1

6. வாறான திந்தமுறை வகையைக் கேளு
வைப்பான நாலுபத்து ரெண்டே யாகும்
காறான அதிலென்றும் தப்பே யில்லை
கைகடனென் றால்காணாது கருதிப் பாரு
தூறான யெருகொண்டு செய்து பாத்து
துடியான வேதமுனி சாஷ்த்திரத்தில் சொன்னார்
பேறான பெருகலையாய் ஆய்ந்து பார்த்து[ப்]
பேர்பெறவே சொன்னதிந்த பாடல் முற்றே. 43

7. முற்றும்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் 5, (R. 1814(a)), அகத்தியர் நேத்திர வாகடம் (R. 1804) முதலிய பல நூல்கள் அமைந்துள்ளன.

அகத்தியர் வைத்திய சிந்தாமணி

I. 1. **958.** 2. அ. R. 4681(a). ஆ. T. R. 2065. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய சிந்தாமணி. ஆ. Akattiyar vaittiya cintāmaṇi. இ. வயித்திய சிந்தாமணி. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. பரமசிவம் பிள்ளை, கவரப்பட்டி, நாகையநல்லூர் அஞ்சல், திருச்சி மாவட்டம். 10. கி.பி. 1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 7. 5. 20x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 14; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதி. 16. குறை 17. 20 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களுக்கான மருந்து செய்முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில், நாடி நிதானம், வாதம், பித்தம், சிலேத்துமம் முதலான நாடிநிலைகளின் தன்மைகள் மற்றும் குணம் ஆகிய செய்திகள் விரிவாகப் பேசப்படுகின்றன. இந் நாடிகளின் வேறுபட்ட இயல்புகளால் நோய்களின் தன்மைகளை அறியலாம். வாதநாடிகளின் வேறுபட்ட இயல்பால் வயிற்று நோய்களின் இயல்பும், பித்த நாடிகளின் இயல்பால் இருதய ஓட்டத்தையும், சிலேத்தும நாடிகளின் இயல்பால் தலைநோவுகளையும் இதுபோன்ற பல்வேறு செய்திகளை இந்நூல் தெரிவிக்கிறது.

4. ஹரிஓம் வயித்திய சிந்தாமணி.

5. அரனரி யடிவ ணங்கி
அன்புடன் மலரைப் போற்றி
திருவுமை சரசோதி துர்க்கை
தீரன் வயரவனைப் போற்றி
கரிமுகன் றாள்வ ணங்கிக்
காரிய நினைந்த வர்க்கு
சரிசன சாத்தி ரத்திற்
சிந்தா மணியெனச் சாற்றலாமே. 1

6. தும்மலு மிகவுண் டாகி
.... விழுந்து நெஞ்சு
நொந்துடன் தீனம் வாங்கும்
....ற் காசம்
வந்திடு மிதுதா னென்ன
....வர் சொன்ன
வன்மையே கண்டு சொல்லே. 20

7. திருச்சித்தம்பலம்.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், வான்மீகி நாடி சூத்திரம் (R. 4677), இராமதேவர் சூத்திரம் 36 (R. 4678), கடவுளந்தாதி (R. 4680) முதலிய நூல்கள் உள்ளன.

அகத்தியர் வைத்திய செந்தூரம் 300

I. 1. **959.** 2. அ. R. 6448. ஆ. T. R. 2684. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பூரண சூத்திரம். ஆ. Akattiyar pūraṇa cūttiram. இ. அகஷ்திய மகாமுனியருளிச் செய்த பூரண சூஷ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடி. 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 38. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 76; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் வேறு ஏடுகள் உள்ளன. 16. குறை. 17. 280 பாடல்களும் வேறு 3 ஏடுகளிலுள்ள பாடல்களும் உள்ளன.

ஆ. —.

III. 1. பல செந்தூர வகைகளையும், பிற மருந்துகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல், செந்தூர வகைகளில், அண்டச் செந்தூரம், இரசவங்கச் செந்தூரம், இலிங்கச் செந்தூரம், காந்தச் செந்தூரம், நாக செந்தூரம், நிமிகளச் செந்தூரம், பதங்கச் செந்தூரம், பவளவங்கச் செந்தூரம், முத்துச் செந்தூரம் போன்றவற்றைக் கூறுகிறது. இவற்றால் குணமடையக் கூடிய நோய்களும் கூறப்படுகின்றன. செந்தூரங்களையன்றி, பற்ப வகைகளில், நாகபற்பம், தாளக பற்பம், சூதபற்பம், வைரபற்பம், முத்துப் பற்பம் போன்றவற்றின் செய்முறைகள் கூறப்படுகின்றன. இலேகிய வகைகளில், ஆடாதோடை இலேகியம், வேப்பம்பட்டை இலேகியம் போன்றவை வந்துள்ளன. இவற்றைப் போன்றே, வாதம், பித்தம், சிலேற்றுமத்தால் ஏற்படும் நோய்களுக்குரிய தைலங்கள் விளக்கப்படுகின்றன.

4. ஹரிஓம் குரு நன்றாக. குருவே துணை.

5. **பூதலத்திற் தென்பொதிகை தன்னில் வாழும்**
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தா லஷ்ட்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வயித்தியனூல் வகையாய்ச் சொல்வேன்

போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட் டானைப்
புழுக்குழியில் வீழ்ந்தான் புதல்வன் றன்றை
சாதகமாய் மனமடங்கி அறிவிற் கூடித்
தற்பரமாய் நின்றகண பதிகாப் பாமே. 1

6. கேளடா சொல்ப மதி.......செய்கிறே னின்றால்(க்)
கெட்டுமடா சரக்கெல்லாம் செந்தூ ரந்தான்
ஆளடா பிலத்திருந்த தெது னாலே
.........நாட்டிப்பா ரெதினாலே கணதூ ணுக்கும்
வேளடா......................

7. —.

8. மூலம். 9. எளிய நடை. பேச்சு வழக்குச் சொற்கள், பாடபேதங்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரிலும் அவர்க்கு மற்றொரு பெயரான தட்சணாமூர்த்தி என்ற பெயரிலும் இத்தகு நூல்கள் தலைப்பிடப் பெற்றுள்ளன. 11. இல்லை.

IV. 1. D. 1893, D. 12424(a), R. 149(c), R. 3614(a), R. 3696, R. 3728, R. 4455(a), R. 4492, R. 4776(a), R. 6445(d), R. 7022, R. 7682, R. 8803, R. 9054, R. 9250, R. 9251, R. 10083, R. 10113, R. 10532. 2. ஆ.நி.எண் 416(c), சி.ம.மை.ஆ.நி. எண்கள் 187(a), 480, 517, 522(a), 569(a), 616(a), 616, 751(k), 786(a), 790(b), 864, 868(b), 958, 1133(b), 1377. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (i) கருணானந்த சுவாமி (பதி.), **அகத்தியர் செந்தூரம் 300,** பிரபாகர அச்சுக் கூடம், சென்னை, 1865. (ii) இரத்தின நாயகர் & சன்ஸ், **அகத்தியர் வைத்திய செந்தூரம் 300,** சென்னை, 1992. 3. இல்லை.

VI. இறுதியிலுள்ள மூன்று ஏடுகளிலும் சோதிடச் செய்திகள் எழுதப்பெற்றுள்ள பாட்டு மற்றும் உரைநடைப் பகுதிகள் வந்துள்ளன. இவை மூன்றும் உதிரி ஏடுகளாம்.

அகத்தியர் வைத்திய செந்தூரம் 300

I. 1. **960.** 2. அ. R. 6445(d). ஆ. T. R. 2684. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய செந்தூரம் 300. ஆ. Akattiyar vaittiya centūram 300. இ. அகஸ்திய மாமுனியருளிச் செய்த பூரண சூஸ்த்திரம். 4. —. 5. —. 6. —. 7. —.

8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. கடலூர் சமீன்தார் அன்பளிப்பாக நல்கிய சுவடி. 10. கி.பி. 1956-57.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 38. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 76; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் இல்லை. 16. குறை. 17. 279 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நம் உடம்பில் தோன்றும் பலவகையான நோய்களுக்குரிய செந்தூரங்கள் செய்யும் முறையும் பயனும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண். 959 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்திய மாமுனியருளிச் செய்த பூரண சூஸ்திரம்.

5. பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவனே அய்யா
மாதவத்தா லஷ்ட்சித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வயித்தியனூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானை[க்] கடைக்கோட் டானை[ப்]
புழுக்குழியில் விழுந்தான் புதல்வன் றன்னைச்
சாதகமாய் மனமடங்கி யறிவில் நின்று
தற்பரமாய் நின்றகண பதிகாப் பாமே. 1

6. நன்றான நாகமுதல் லோக நீறு
மனாதியோடு காந்தமேழும் கறையும் நீறும்
பண்டான நவரத்தின வெவ்வேறே நீறும்
பாசாணச் சரக்கெல்லாம் மாடுமு...... னீறுந்
தன்றான உரசங்கள் தாளக நீறும்
தறுக்கற்ற .... பத்தாள் வாரும்
....
மானே தள்ளக் கேளே. 279

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில், பேச்சு வழக்கும், பாட வேறுபாடுகளும் கொண்டு எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. D. 1893, R. 149(c), R. 3614(a), R. 3696, R. 3728, R. 4455(a), R. 4492, R. 4776(a), R. 6448, R. 8803, R. 9054, R. 9250, R. 9251, R. 10083, R. 10113, R. 10532. 2. ஆ.நி.எண். 416(c), சி.ம.மை.ஆ.நி. எண்கள் 187(a), 480, 517, 522(a), 569(a), 616(a), 616, 751(k), 786(a), 790(b), 864, 868(b), 958, 1133(b), 1377. உ.த.நி.எண்கள் 183:383, 562:908 த.ச.ம.நூ.எண்கள் 235(a), 251(b), 366(b), 433(c), 439(a), 455. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. இரத்தின நாயக்கர் & சன்ஸ் (பதி.), **அகத்தியர் வைத்திய செந்தூரம் 300**, சென்னை, 1992. 3. இல்லை.

VI. இந்நூல் அகத்திய மாமுனி அருளிய பூரண சூத்திரம் 300, அகத்தியர் வைத்திய சூத்திரம் 300, அகத்தியர் வாகடம் 300 என்னும் பல பெயர்களில் வழங்கப்படுவதை மேற்கண்ட நூல் தலைப்புகளின் மூலம் அறியமுடிகிறது.

அகத்தியர் வைத்திய செந்தூரம் 300

I. 1. **961.** 2. அ. R. 7022. ஆ. T. R. 2827. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் 300. ஆ. Akattiyar vaittiyam . இ. அகஷ்த்தியர் பாடல் முன்னூத்தி ரெண்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி அஞ்சல், கம்பம் வழி, மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 9. 5. 23x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 18; இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. நடு மற்றும் இறுதி. 16. குறை. 17. 19 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல செந்தூர வகைகளையும், பிற மருந்துகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 959 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. அகஸ்தியர் பாடல் முன்னூத்தி ரெண்டு.

5. பூதலத்தில் பொதிகைதன்னில் பொருந்தி வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத்தா லஷ்டசித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வயித்தியநூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட் டானை[ப்]
புழுக்குழியில் விழுந்தவும் புதல்வன் றன்றைச்
சாதகமாய் மனமடங்கி நினவிற் கூடித்
தற்பரனா நின்றகண பதிகாப் பாமே. 1

6. ஆகாதென்று சொன்னேன் ஏதென் றாக்கால்
அபமிறுத்துத் தட்டுதற்கு [ப்]பத்தியம் வேணும்
வாகான செந்தூரம் நேர்கொண் டாற்கு
வளமான அனுப்பானம் மறிந்து கூட்டி
தாகான மண்டலமே குன்றி வீதஞ்
சாதித்தால் நோய்களெல்லாந் தவறுண் டேபோம்
போகாகப் பத்தியங்கள் காக்க வேண்டாம்
பத்தியமாம் புகையிலையும் புளியுந் தானே. 19

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. R. 149(c), R. 3614(a), R. 3696, R. 3728, R. 4455(a), R. 4492, R. 4776(a), R. 8803, R. 9054, R. 9250, R. 9251, R. 7682, R. 10113, R. 10532, R. 10083, R. 6448, R. 6445(a), R. 2424(a), D. 2419. 2. ஆ.நி.எண் 416(c), சி.ம.மை.ஆ.நி. எண்கள் 187(a), 480, 517, 522(a), 569(a), 616(a), 616, 751(k), 786(a), 790(b), 864, 868(b), 958, 1133(b), 1377. உ.தநி.எண்கள் 183:383, 562:908. த.ச.ம.நூ.எண்கள் 235(a), 251(b), 366(b), 433(c), 439(a), 455. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (அ). கருணானந்த சுவாமி (பதி.), '**அகத்தியர் செந்தூரம் 300**, பிரபாகர அச்சுக்கூடம், சென்னை, 1865. (ஆ). இரத்தின நாயகர் & சன்ஸ் (பதி.), **அகத்தியர் வைத்திய செந்தூரம் 300**, சென்னை, 1992. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், 'அகத்தியர் சூத்திரம் 150 (R. 7020), அகத்தியர் முப்பு 50 (R. 7021) ஆகிய நூல்களும் அமைந்துள்ளன.

அகத்தியர் வைத்திய செந்தூரம் 300

I. 1. 962. 2. அ. D. 2424(a). ஆ. T.D. 947. இ. R.No 1781. ஈ. —. 3. அ. அகத்தியர் வாகடம் வசனம். ஆ. Akattiyar vākaṭam vacaṉam. இ. அகஸ்தியர் 300. 4. —. 5. —. 6. சுப்பராயலு. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 3. 5. 39x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 6; 304 ஆம் ஓலையின் பிற்பக்கத்திலும், 307 ஆம் ஓலையின் முற்பக்கத்திலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் பாடல்கள் எழுதப்படாமலே சுவடி முடிக்கப் பெற்றுள்ளது. 16. குறை. 17. 10 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பலவகைச் செந்தூரங்கள் பற்றியும், அவற்றால் தீரக்கூடிய நோய்கள் பற்றியும், பிற மருந்துப் பொருள்கள் தீர்க்கக் கூடிய நோய்கள் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. வரிசை எண் 959 போன்றது.

4. ராமசெயம். வயித்திய சூஸ்த்திரம் அகஸ்த்தியர் முன்னூறு.

5. பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவனே அய்யா
மாதவத்தால் அஷ்ட்டசித்தி எட்டும் பெத்த
வரி[ஸை]சயினால் வயித்தியனூல் வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானை[க்] கடைக்கோட் டானைப்
புழுக்குழியில் வீழ்ந்தானைப் புதல்வன் தன்னை
சாதகமாய் மனமடங்கி யறிவிற்(க்) கூடித்
தற்(ப்)பரமாய் நின்றகண பதிகாப் பாமே. 1

6. போச்சப்பா மேகமென்ன தெல்லாம் போகும்
பூண்ட தொருநீ றெறக்கம் தீரும்
ஆச்சப்பர சிந்தியுட சக்கரையி னாலே
ஆச்சரியம் அதேதி சுரதோஷம் போகும்

போச்சப்பா னாடிதனில் தோஷ மில்லை
பிரபலமாய் திரேகத்தைக் குளிர்ச்சி பண்ணும்
வாச்சப்பா வயித்தியத்தில் சக்கரையைச் சொல்வார்
வாய்ப்போச்சோ வயித்தியந்தான் வணங்கிக் கேளே.10

7. —.

8. மூலம். 9. ர/ற, ழ/ற, வேறுபாடில்லாமல் ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. வடமொழி எழுத்துகளும் பயன்படுத்தப் பெற்றுள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ள இந்நூல் வேறு சில பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. 11. பருத்தித் தோட்டம் சுப்பராயலு கையெழுத்து.

IV. 1. R. 149(c), R. 3614(a), R. 3696, R. 3728, R. 4455(a), R. 4492, R. 4776(a), R. 8803, R. 9054, R. 9250, R. 9251, R. 7682, R. 10113, R. 10532, R. 10083, R. 6448, R. 6445(a), R. 6448, D. 2419. 2. ஆ.நி.எண் 416(c), சி.ம.மை.ஆ.நி. எண்கள் 187(a), 480, 517, 522(a), 569(a), 616(a), 616, 751(k), 786(a), 790(b), 864, 868(b), 958, 1133(b), 1377. உ.த.நி.எண்கள் 183:383, 562:908. த.ச.ம.நூ.எண்கள் 235(a), 251(b), 366(b), 433(c), 439(a), 455. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. (அ). கருணானந்த சுவாமி (பதி.), '**அகத்தியர் செந்தூரம் 300**, பிரபாகர அச்சுக்கூடம், சென்னை, 1865. (ஆ). இரத்தின நாயகர் & சன்ஸ் (பதி.), **அகத்தியர் வைத்திய செந்தூரம் 300**, சென்னை, 1992. 3. இல்லை.

VI. இச்சுவடிநூல், **அகத்தியர் வாகடம்** (D. 2424) என்ற வசன நூலின் இறுதியில் காணப்படுகின்றது. முதல் பாடல் **அகத்தியர் வைத்திய செந்தூரம் 300** பாடல்கள் கொண்ட நூலில் வந்துள்ளதே ஆதலால், இதை மேற்சொன்ன வசன நூலிலிருந்து பிரித்துத் தனி நூலாகக் கருதப்பட்டது. இறுதியில் 10ஆம் பாடலுக்குப்பின் சுவடிக் குறிப்பு (colophon) இருப்பதாலும், அதில் இந்நூலை எழுதியவர் "பருத்தித் தோட்டம் சுப்பராயலு கையெழுத்து" எனக் குறிப்பிட்டிருப்பதாலும் இப் பத்துப் பாடல்களுக்குப் பின் இந்நூல் தொடரவில்லை எனத் தெரிகிறது. அதன் பின்னர் **தாளிசப்பத்திர சூரணம்** முதலான பல தலைப்புகளில் வசனத்தில் எழுதப்பட்ட பல ஏடுகள் உள்ளன. அவற்றைத் தனி நூல்களாகக் கொள்ளலாம்.

அகத்தியர் வைத்திய நூல்

I. 1. **963.** 2. அ. R. 1808. ஆ. T. R. 1039. இ. —. ஈ. —. 3. அ. வைத்திய நூல். ஆ. Vaittiya nūl. இ. —. 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. —. 10. —.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 34. 5. 34x5 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. தாளிப் பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. நன்று. 12. 35; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 15 முதல் 17 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 200 பாடல்கள்.

ஆ. —.

III. 1. பல்வேறு நோய்களுக்கான மருந்து முறைகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூல், வைத்திய சம்பந்தமான செந்தூரம், கட்டு, மாத்திரை முதலான மருந்துகளைக் கூறி, அவற்றைத் தயாரிக்கும் முறைகளையும் கூறுகின்றது. அப்பிரகச் செந்தூரம், இரச செந்தூரம், உலோக செந்தூரம், செயக்காந்த செந்தூரம், சண்டமாருதச் செந்தூரம், இராமபாணச் செந்தூரம், மண்டூர செந்தூரம், அக்கினி குமார செந்தூரம் முதலான பலவகைச் செந்தூரங்கள் பற்றியும், தாளக பற்பம், பவளபற்பம், வங்கபற்பம், சண்டமாருதக் குழம்பு, பூநீறுக்குரு, சவ்வீர வைப்பு, கண்ணுக்கு மை, வெடியுப்புச் செயநீர், பாசாணக் கட்டு, இலிங்கக் கட்டு, வங்கார சஞ்சீவி, அண்டவாதத்துக்கு உதயாதி சஞ்சீவி, வாய்வுச் சூலைக்குக் கசாயம், சன்னிக்குக் கசாயம், சகல சுரத்துக்கும் சுரபான உருண்டை முதலான பல செய்திகளையும் கூறுகிறது.

4. —.

5. தெளிவான அப்பிரகச் செந்தூரங் கேளு
திறமான அப்பிரகம் சுத்தி செய்து
வழியான செப்புனெரிஞ்சிச் சாத்தி லாட்டி
மைந்தனே சட்டிக்குள் ளடைபோல் தட்டி
நெழியாக அப்பிரகம் மேலே வைத்து
நேராக அடைதன்னை மேலே வைத்து

அழியாத சட்டிதான் கொண்டு மூடி
அப்பனே கெசபுடந்தான் போடு போடே. 1

6. போட்டெடுக்க செந்தூரம் அருண்மை போலும்
புகட்டிடவே நவலோகம் பத்து மாத்து
பாட்டெடுத்து நாளொன்றுக் கனுபா னத்தில்
பணவிடைதான் நாள்தோறு கொண்டா யானால்
காட்டெடுத்த நோயெல்லாம் ஓடிப் போகும்
காயசித்தி கருதொட்டுச் செய்து பாரு
ஆட்டெடுத்த யிடையன்போல் திரிய வேண்டாம்
அறையுறேன் இன்னமொன்று ஆண்மை தானே. 200

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்றுள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் இந்நூலுடன், அகத்தியர் நேத்திர வாகடம் (R. 1803), அகத்தியர் குருநாடி (R. 1804) முதலான நூல்களும் உள்ளன.

அகத்தியர் வைத்தியம்

I. 1. **964.** 2. அ. R. 7718. ஆ. T. R. 2987. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் பரிபூரணம். ஆ. Akattiyar paripūraṇam. இ. வயித்திய பூரணம் 400. 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பாலக்காடு நெல்லிச்சேரி என். அனந்த நாராயண அய்யர் பேரர் என்.எஸ். நாராயண மூர்த்தி ஐயர் அன்பளிப்பாகக் கொடுத்த ஏடு. 10. கி.பி. 1962-1963.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 109. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 218; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 6 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 400 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூலில் மருத்துவம் தொடர்பான செயதிகள் கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. நாடிகள், தைலங்கள், பற்பங்கள் போன்ற பலவகைச் செய்திகளை நூலாசிரியர் பாடியுள்ளார். மரணநாடி, தம்பனம், வசியம், மோகனம், ஆகிருசனம், முப்பூவின் பேறு, உப்பின் பேறு, வசியம், கொடி வசியம், திலத வசியம், மாத்த மைய், பேய்-பூதங்களுக்கு உப்பு, பீசக் குழம்பு, வீரவைப்பு, வாலைரசம், தாதுப்பிடிக்குக் குளிகை, பாசாணந்தின்றால் மாற்று, சுரகுளிகை, சன்னி, சுரத்துக்குக் குளிகை, சுரத்துக்கும் பேதிக்கும் குளிகை, குழந்தைகளுக்கும், பேதிக்கும் சன்னி சீதசுரம், யிழுப்பு வலிக்கும் குளிகை விபரம், சாம்பிராணிப் பதங்கம், சாம்பிராணிக் குளிகை, கபாடக் குளிகை, சருவவிசத்துக்கும் குளிகை, இரச கற்பூரக்கட்டு, தாளக சாபரம், சலாசத்து பற்பம், மூலரோக மேகத்துக்குக் கர்மநோய் விபரம், கர்மந்தீர, காமந்தீர, சொர்ண பற்பம், வெண்குட்டம், வெள்ளி பற்பம், நாக பற்பம், கெந்தகத் திராவகம், இரசப்பதங்கம், வாலைச் செந்தூரம், அப்பிரக செந்தூரம், காந்த செந்தூரம், அய செந்தூரம், நாக செந்தூரம், தாமிர செந்தூரம், மிளகு இலேகியம், மேகத்துக்கு இலேகியம், மேக நோய்க்கு இரசம், திரிகடுகு இரசாயனம், வாய்வுக்கு, சேற்றும, சளி இருமலுக்கு மிளகு இரசாயனம், முப்பூ விபரம், வாலை ரச செந்தூரம், சவ்வீர வைப்பு, மேக வெட்டைக்குச் சூரணம், இஞ்சிச் சூரணம், திருச்சாதிச் சூரணம், பித்தத்துக் கெல்லாம் சூரணம், உள்ளிக்குச் சன்னி வைசூரி சூரணம், சூலைப் புண்ணுக்குப் பரங்கிப்பட்டைச் சூரணம், காட்டுக் கருணைச் சூரண மூலத்துக்கெல்லாமாகும், சீந்திசூரணம், வாத சுரத்துக்குக் கசாயம், பித்த சூரணத்துக்குக் கசாயம், சேற்றும சுரத்துக்கு, குளிர் சுரத்துக்கு பீனிசத்துக்குத் தயிலம், பூரணத்தின் மகிமை, மூதண்ட இலேகியம், சன்னி, உப்பு, பாரிச வாய்வு, கால் முடங்களுக்குத் தயிலம், தாது நோய்க்கு எண்ணெய், பல் வலிக்குக் காதிலிட மருந்து போன்றவை இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

4. 'வைத்ய பூரணம்' என மலையாள எழுத்தில் முதல் ஏட்டில் எழுதப்பட்டுள்ளது. இரண்டாவது ஏட்டில் 'வயித்ல்த்ய பூரணம் 401' என்றும் ஸ்ரீராம செயம் என்றும் எழுதப்பட்டுள்ளது.

5. பூரணமாய் நிறைந்தபூர ணத்தைப் போற்றிப்
புகழ்பெரிய வயித்தியபூர ணத்தைப் பாடக்
காரணமாக் கருஉருவாய் யெங்குந் தானாய்
கண்மணியின் நடுவான கருணை தன்னை
ஆரணமாய் முக்கோணத் தடிநடுவில் னின்று
யம்பரத்தை யனுதினமு மறிவால்(ப்) போற்றி
வாரணமாய் முகத்தோனை யனுதினமும் போற்றி
மகத்தான வேதியனை வணங்கி னேனே. 1

6. வெளியான வெளியதுதான் பர சொரூபம்
வேதாந்த ரூபமடா சுரூபா னந்தம்
வழியான வயித்திய பூரண மானந்தம்
மகத்தான பூரணத்தி னந்தம் கண்டு
நெழிவான ஆதாரங் கடந்து மேலே
நெருப்பாற்றில் மயிர்ப்பால் வழியே சென்று
அறியாத பரமவெளி யொளியோடே வெளியாய்
மருமா னந்தபூர ணந்தான் முற்றே. 400

7. சம்பூரணம்.

முத்தான புலத்திய மாமுனியே கேளாய்
முச்சுடரு மாதியந்தம் நன்றாய்ப் பாரு
சித்தான வயித்திய பூரண மிதப்பா
தேசத்தில்(க்) கிட்டாது திறமாய்க் கேளு
பத்தான பதிதனிலே வைத்துப் பேசி
பதிவான வாசியது சித்தி யாகும்
வித்தான பிறவியற ஞானம் பா[ர்]த்து
வேதாந்தப் பூரணத்தின் வெளிசேர் நன்றே. 401
பூரணம்.

8. மூலம். 9. ற/ர, ழ/ள எனும் எழுத்துக்கள் வேறுபாடின்றிப் பயன்பட்டுள்ளன. பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளன. 10. அகத்தியர் புலத்தியர்க்குக் கூறுவதாக உள்ளது. 400 பாடல்கள் கொண்ட இந்த ‘அகத்தியர் வைத்திய நூல்’ மிகவும் அரிதானது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில் அளவால் சிறிய மற்றொரு நூல் அகத்தியர் பெயரில் உள்ளது (R. 7719). அது அனுபவ வைத்தியமாவது என அ.கீ.சு. நூலக விளக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்றிலும் உரைநடையிலான நூல். முற்றுப் பெறாத குறைப்பிரதி.

அகத்தியர் வைத்தியம்

I. 1. **965.** 2. அ. R. 5806. ஆ. T. R. 2493. இ. —. ஈ. —. 3. அ. வைத்திய நூல். ஆ. Vaittiya nūl. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பொள்ளாச்சி உதையகுளம் பி. தாமோதரத்திடமிருந்து வாங்கப்பட்ட சுவடி. 10. கி.பி. 1955-56.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 12. 5. 35x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. முதல் ஓலை முறிந்துள்ளது. 12. 22; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 5 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. முதல் 7 பாடல்கள் இல்லை. 16. குறை. 17. 48 பாடல்கள்.

ஆ. —.

III. 1. இந்நூல் மருத்துவம் தொடர்பான சில செய்திகளைக் கூறுகின்றது. 2. மருத்துவம். 3. நோயின் இயல்பு, நோயாளியின் இயல்பு, மருத்துவன் இயல்பு இவற்றையும், உத்தம குணத்தான், பக்தியுள்ளோன், புத்தியுள்ளவன், பொருள்களை ஆயவல்லோன், சத்திய வார்த்தை உள்ளவன், தரும சிந்தனை கொண்டவன், தீய வார்த்தைகளைப் பேசாதவன், கருணையுள்ளவன் ஆகியோர் இயல்பும் கூறப்பட்டுள்ளன. மருந்தாலும், மந்திரத்தாலும் மகாதேவன் அருளாலுமே நோய்கள் குணம் ஆகும் என்கிறார். மேலும், சில மருந்துகளின் செய்முறைகளும், அவற்றின் இயல்புகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. குருவை நினைத்து, நோயின் குணம் கண்டு, பின் பிணியைத் தீர்க்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இந்நூலின் 22ஆம் பாடலிலிருந்து தொடங்கும் **தர்க்க சங்கிரகம் 16** என்ற பகுதியில், சாத்திரம், மருத்துவம், தெய்வீகம் பற்றிய பலவற்றையும் கூறப்புகுவதாக எழுதப்பட்டுள்ளதைக் காணலாம்.

4. தந்தி முகநாடி வந்து பணிபவர்
சிந்தை யோடு தொழ
விந்தை பெறுவரே.

5. ....யை பிடித்திழுத்து வார்த்தை சொல்வார்
ஆகடிய மாகவே நல்லோ தட........... று
அறைந்து போவார்
போகிடக்கப் பேர்சொல்வார் வியாதி கட்குப்
பி.....................க்கமாட்டார்
ஓகோடு காவைத் திப்பர் தாமென்று சொல்வார்
ஒருக்காலும்................ 8

6. கூறிடவே பித்தமது சீறிற் றானால்
குடல்கால் வரக்ஷியுமே நடுக்க முண்டாம்
பீறிடவே வறோசியந் தானா வரக்ஷி
மேலான சோபமது விக்கல் மூர்ச்சை
தூறிடவே கிறுகிறுப்பு காத டைப்பு
தொந்தமாங் கசப்புடனே மண்டை குத்து
மாறிடவே நெஞ்செரிவு அக்கினி மந்தம்
மகத்தான குளிர்காமங் காந்த லாமே. 56

7. —.

8. மூலம். 9. இருவகையான கையெழுத்து. அந்தாதி அமைப்பில் அமைந்த பாடல்கள். ன/ந, ற/ர, ழ/ள வேறுபாடு இன்றி எழுதப்பட்டுள்ளது. 10. அகத்தியர் பெயருக்குப் பின் பாடல் எண்ணிக்கை பெற்று வருவது போல அகத்தியர் வைத்தியம் 56 என்றும் வருதல் காண்க. இந்த நூலைப் போன்று 'அகத்தியர், வைத்தியம் 100, 'அகத்தியர் வைத்தியம் 600' எனப் பாடல்கள் பெற்ற நூல்கள் உள்ளமை காண்க. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. பாடல்கள் 8 முதல் 56 வரை தொடர்ச்சியாக உள்ளன. ஆனால் 22ஆம் பாடலிலிருந்து **'தர்க்க சங்கிரகம் 16'** என்ற நூலும் எழுதப்பட்டுள்ளது. இறுதிப் பாடலுக்கு முன் பாட்டில் 'மலைய முனி', இந்நூலைக் கூறினார் என உள்ளதால் 'அகத்தியர் வைத்தியம் 56' எனப் கொடுக்கப்பட்டுள்ளது.

அகத்தியர் வைத்தியம் பின்னூல் 80ல் சில

I. 1. **966.** 2. அ. R. 6913. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் பின்னூல் 80ல் சில. ஆ. Akattiyar vaittiyam pinnūl 80-l cila. இ. அகத்தியர் வயித்தியம் பின்னூல் 80. 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 2; இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. குறை. 17. 6 பாடல்கள்.

ஆ. —.

III. 1. வாசியோகம், குளிகை சித்தியைப் பற்றிக் கூறும் நூல். 2. யோகம். 3. அகத்தியர் வைத்தியம் பின்னூல் 80ல் சில என்ற இந்நூல் வாசியோகம் பற்றிக் கூறுகிறது. மனித உடம்பினுள்ளே ஓடிக்கொண்டிருக்கும் உயிர்க் காற்றானது இயங்கும் விதம் பற்றியும் கூறுகின்றது. சிவயோகம் தான் வாசி யோகம் என்றும், இவ்வாசியை இரேசகம், கும்பகம் இவற்றில் கொண்டு வரும் நிலைகளைக் கூறி, குளிகை செய்யும் முறைகளையும் கூறுகின்றது.

4. அகஸ்தியர் வயித்தியம் பின்னூல் 80. படிக்கி யேளை எளியவனுக்கு கருமம் தீர்க்க சாந்தி வயித்தியம்.

5. பாரப்பா புலத்தியனே மச்ச கெந்தி
   பாடுகிறேன் யெண்பதிலே குளிகை யெல்லாம்
நேரப்பா நோய்ப்பெருக்க கனு.... ....
   நிரைப்படிக்கி ஆர்முடியார் யுலகத் துள்ளே
சீரப்பா மக்களெல்லாம் ராச னாமோ
   திரவியனா மாயிரத்தி லொருவ னுண்டு
யூரப்பா எளியவர்க்காய் யெமனுயிர் கொடுக்க
   ....யிந்தனூ லுரைசெய் தோமே. 1

6. வானான ஆகாச அண்டத் தேதான்
வணக்கமுடன் வாசியென்ற குதிரை யேறி
கோனான குருபதியில் நின்று கொண்டு
குருவான சக்கரத்தி ளூட்டை....... யித்து
தானான தன்மையினால் தானே நின்று
சகலகுரு வல்லவனாய்த் தானதன் றாகி
தேனான அமுர்தரசச் செயில்தன் னாலே
சிவசிவா சக்கரத்தில் தெளிந்து நில்லே. 6

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் சிறு சிறு பிழைகளுடன் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். புலத்தியிரிடம் கூறுவதாக உள்ளது. 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. வாசி யோகம் பற்றி மிகச் சுருக்கமாகப் பரிபாசையில் கூறுகின்ற நூலாக உள்ளது.

அகத்தியர் வைத்தியம் 300ல் சில

I. 1. **967**. 2. அ. R. 6908. ஆ. T. R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் 300ல் சில. ஆ. Akattiyar vaittiyam 300- l cila. இ. அகத்தியர் நாலு காண்ட வயித்தியம் 1200ல் வயித்தியம் 300ல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 1. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. ஒரு பக்கம் மட்டும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 9 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. குறை. 17. 3 பாடல்கள்.

ஆ. —.

III. 1. நரைமுடி மாறத் தயிலமும் பல நோய்களுக்கான மருந்துகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் வயித்தியம் 300ல் சில என்ற இந்நூல் கிராமிச்சோடு, சந்தனம், ஆவாரைப்பட்டை நறு நீண்டி வேர், பரசிப்பட்டை இவற்றைக் கொண்டு செய்யும் மேகவகைத் தயிலம் செய்யும் முறையையும், நரைமுடி மாறுவதற்கான தயிலம் செய்யும் முறைகளையும் கூறுகிறது.

4. அகஸ்தியர் நாலுகாண்டம் 1200ல் வயித்திய காண்டம் 300ல் நரைமாறத் தயிலம்.

5. ஓடவே மேகவகைத் தயிலங் கேளு
உற்பனமாம் சந்தனமாம் கிராமிச் சோடு
வாடவே ஆவாரையின் பட்டை யோடு
வகைபத்துப் பலமாக வாங்கி யேதான்
நாடவே தூணிநீ ரெண்டொன் றாக்கி
நலமான கஷாயத்தி லெண்ணெய் நாழி
பாடவே நறுநீண்டி வேருங் கூட்டி
பறசியுட பட்டைபல மரைத்துப் போடே. 1

6. அங்கமதில் நோய்புகுந்தால் லெண்ண மீற்கு
அப்பவல்லோ சூடுகொண்ட மேகந் தீரும்
சங்கையென்ன கொடுப்பைவேர் கிசாயங் கொள்ளு
சதாவெறி நறுஞ்சீந்தித் துண்டும் திண்ணு
பங்கமில்லை யித்தனையும் மேகத் துக்கு
பயித்தியமே கத்துக்கு வில்லை வேரே. 3

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் சிறு சிறு பிழைகளுடன் எழுதப்பட்டுள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. மருத்துவமுறை விளக்கமாக அமையவில்லை. மேலும் சுவடியும் மிகவும் சிதைவாக உள்ளது.

அகத்தியர் வைத்தியம் 1200ல் சில

I. 1. **968.** 2. அ.R. 6875. ஆ.T.R. 2784. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வயித்திய காண்டம் 1200ல் சில. ஆ. Akattiyar vayittiya kāṇṭam 1200-l cila. இ. அகத்தியர் வயித்தியம் நான்காம் காண்டம் 1200ல் வயித்திய காண்டம் 300ல். 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவின்மை. 4. 4. 5. 30x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 8; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. குறை. 17. 23 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மலைகளின் மகிமைகளும் மருத்துவ முறைகளையும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. அகத்தியர் வயித்தியம் நான்காம் காண்டம் 1200ல் வயித்திய காண்டம் 300ல் 23 பாடல்கள் மட்டும் இங்கே பாடப்பட்டுள்ளன. இவற்றில் நல்ல தண்ணீர் கடலுக்கப்பால் என்ற பகுதி நல்ல தண்ணீர் பற்றிக் கூறுகிறது. அடுத்து கஸ்தூரிப்பட்சி என்ற பகுதியில் கஸ்தூரிப் பட்சி மூலம் செய்யப்படும் மருந்துகளைக் கூறிச் செல்கிறது. மேலும், பாவனாசமலை, நிடதகிரிமலைகளின் மகிமைகளும், வளமைகளும் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

4. அகஸ்தியர் வயித்தியம் 4 காண்டம் 1200ல் வயித்திய
காண்டம் 300ல் நல்ல தண்ணீர் கடலுக்கப்பால்.

5. போகுமடா மகத்தான கிரிகள் தீவு
புனமிகுந்த நல்லதண்ணீர் கடலுக் கப்பால்
வேகுமடா கஸ்தூரிப் பிள்ளை யுண்டு
யிருனாவிப் பிள்ளையுண்டு யாளி யுண்டு
தாகுமடா சதாவேரிப் பட்சி யுண்டு
சருவமூ லிகையுண்டு புருடாமி ருகமுண்டு

மீகுமே அண்டரண்டப் பட்சி யுண்டு
அன்னமுண்டு வெள்ளானை யதிலே யுண்டே. 227

6. சொர்ணமதா மதிலிருந்து வாதஞ் செய்யச்
சுடர்பிறையை யொளிபோலே பசுமாற் றேறும்
வின்னமில்லை கருநாபி நிரம்ப அப்பா
வெயில்பட்டால் கட்டிக்கட்டிக் கிழங்குங் காணும்
முன்னமே சித்தருக்கு நல்ல ஷாணம்
மூண்டவிட மதுதாண்ட முற்றி ரொம்ப
என்னசொல்வேன் ரத்தினங்க ளிட்ட காடு
யிடையிடையே சந்தனத் தடாகக் காடே. 249

7. —.

8. மூலம். 9. பாடல்கள் அந்தாதியில் ர/ற வேறுபாடின்றி அமைந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பட்ட நூல். 11. இல்லை.

IV. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. —. 3. இல்லை.

VI. தீவுகள், மலைகள், பறவைகள், மூலிகைகள் பற்றி இந்நூல் மிகவும் சிறப்பாகக் கூறுகிறது.

அகத்தியர் வைத்தியம் 1500

I. 1. **969.** 2. அ. R. 6951. ஆ. T. R. 2795. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் 1500. ஆ. Akattiyar vaittiyam 1500. இ. அகத்தீச வய்த்தியம். 4. — 5. —. 6. சீறாடிக் குளுவன். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திரு. எம். பழனியப்ப முதலியார், தமிழகம், கொம்மையக் கவுண்டன் பட்டி (அஞ்சல்), கம்பம் (வழி), மதுரை மாவட்டம். 10. கி.பி. 1957-58.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 211. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11 சிதைவு. 12. 422; இரு பக்கங்களிலும் முழுமையாக

எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகளும் இறுதியில் சில பக்கங்களில் பத்தி பத்திகளாக உரைநடைப் பகுதிகளும் எழுதப்பட்டுள்ளன. 14. விருத்தமும், உரைநடையும். 15. இல்லை. 16. முழுமை. 17. 1500 பாடல்களும் உரைநடையும் அத்தியாயங்களின் பட்டியலும் உள்ளன.

ஆ. —.

III. 1. பலவகை நோய்களும், அவற்றைப் போக்குதற்குரிய மருந்து வகைகளும், அவற்றைச் செய்யும் முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. இந்நூலில் நாடிகளின் இயல்புகளும் வகைகளும், அந்நாடிகளைக் கண்டறிந்து உடம்பில் ஏற்பட்டுள்ள நோய்களை அறிந்து கொள்ளும் முறையும், அந்நோய்களுக்குரிய மருந்துகளும் கூறப்படுகின்றன. மேலும், சித்தர்களின் கொள்கைகளான யோக, ஞான மார்க்கங்களும் கூறப்படுகின்றன. நாடிகளில் வாத நாடிகள், பித்த நாடிகள், சிலேத்தும நாடிகள் முதன்மையானவை. அவற்றை எவ்வாறு பார்த்து அறிவது என்ற விளக்கமும் கூறப்படுகின்றது. நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் எனும் பஞ்ச பூதங்களின் இயல்புகள் அவற்றால் மனித உடம்பில் ஏற்படும் பாதிப்புகள் விளக்கப்படுகின்றன. உடம்பில் ஏற்படும் தோசக்குறிகள், மரணக் குறிகள் அறியப்பட்டு அவற்றை நீக்கவல்ல மருந்துகளும் கூறப்படுகின்றன. மந்தம், மேகம், வாயு, சன்னி, மூலம், கழிச்சல், குன்மம், சூலை, கர்ப்ப நோய்கள், கண் நோய்கள் போன்ற நோய்கள் இந்நூலில் பேசப்படுகின்றன. இரசசுத்தி, கந்தகச் சுத்தி, தாளகச் சுத்தி, சாதிலிங்கச் சுத்தி, நாக சுத்தி எனும் சரக்குகளின் சுத்தி முறைகள் வந்துள்ளன. எலிப் பாசாண சுத்தி, நாவி சுத்தி, அயப்பொடி சுத்தி, அப்பிரகச் சுத்தி, தாமிர சுத்தி, காந்த சுத்தி, நமிளை துத்த சுத்தி, குக்கில சுத்தி போன்ற சுத்தி முறைகளும் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் சிந்தூர வகைகள் அதிக அளவில் வந்துள்ளன. காந்த சிந்தூரம், உலோக சிந்தூரம், அப்பிரகச் சிந்தூரம், மண்டூரச் சிந்தூரம், உருக்குச் சிந்தூரம் என்பவை தயாரிக்கும் முறைகளும் இயல்புகளும் குறிக்கப்பட்டுள்ளன. இதைப் போன்று எண்ணெய் வகைகள் தைல வகைகள், கற்ப வகைகள், பற்ப வகைகள், பலவகைக் குளிகைகள், பல வகை இரசங்கள், நெய் வகைகள், சூரண வகைகள், குடிநீர்கள், நசியங்கள், கசாயங்கள் போன்றவையும் இந்நூலில் குறிக்கப்படுகின்றன.

4. ஹரிஓம் நன்றாக. குருவே துணை.

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீத்திருப்பாள் - வெள்ளை
யரியா சனத்தில் அரசரோ டென்னைச்
சரியாச னத்தில்வைய்த் தாயே.

குருவே துணை. சரசுபதி துணை.
ஆறுமுகவனை னாறு மலற்றோடு
கூறாயடிவரு பேறுபெறுவரே.

5. தோணவே சரக்கினுட அதிகங் கண்டு
சுத்திகண்டு அரைப்பினுடச் சூட்சங் கண்டு
ஊணவே(ப்) புடபாக மேறிப்புப் பாக
முத்தமனே செந்தூரம் முசரும் பாகம்
நாணவே யிடைபாக னோயிப் பாகம்
நலமான குணபாகம் நாட்டந் தானே. 101

6. ஆமப்பா வாகட சூஷ்த்திரத்தை யெல்லா
மறைந்திட்டோம் நாமமென்று மடக்க மில்லை
வேமப்பா நோயெல்லாம் தந்தீய பித்தும்
வேறுள்ள னூல்க ளெல்லாம் விபர மில்லை
சோமப்பா யிந்தநூல்(த்) துகையே தென்றால்(ஞ்)
சொல்லுகிறே னாயிரத்தியஞ் ஞூறுஞ் சொல்லும்
நாமப்பா வுள்ளபடி சொல்லி வைய்த்தோம்
நாதாக்கள் கடாச்சத்தால்(ச்) சூஷ்க்கிரந்தான் முற்றே.
1498

7. —.

8. மூலம். 9. பாடபேதங்கள், பேச்சு வழக்குச் சொற்கள் வந்துள்ளன. 10. அகத்தியர் பெயரில் பாடப்பெற்ற நூல்களில் அதிகப் பாடல்களைக் கொண்ட நூல் இதுவாகும். 11. யிவ்வா வருசம் தையி மாதம் 14ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை இந்த சுவடி எழுதத்துடங்கினது. யிவ்வா வருசம் சித்திரைமாதம் 20 ஆம் தேதி வியாழக் கிழமை பூருவ பச்சம் நச்சேத்திரம் அகத்தீசரு வய்த்தியம் ஆயிரத்தியஞ்ஞூறு எழுதி முகிந்தது முற்றும். சீறாடிக்குளுவன். சுவடி யெடுத்தவன் வாசித்துக் குடுக்கவும். நீடுழி காலம் வாழ்க.

IV. 1. D. 1896, D. 2351, R. 1077, R. 1198, R. 2253, R. 3676, R. 3686, R. 3694, R. 3733, R. 4495, R. 4418, R. 4736(c), R. 5813, R. 6219, R. 7018, R. 7670, R. 8913, R. 8937, R. 9042. 2. த.ச.ம.எண் 301(h), த.ப.க.எண்கள் 740, 797, 1344, 1873, 2002, 2264, 2395. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500,** தாமரை நூலகம், சென்னை, 1992; இரா. மாதவன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1994. 3. இல்லை.

VI. முதல் ஏட்டின் பின்புறம் மருந்துப்பட்டியல் ஒன்று உளது. 'விசயம்' என்ற தலைப்பிட்டு, முதல் ஏட்டிலிருந்து உள்ளடக்கத்தின் பட்டியல் எழுதப்பட்டுள்ளது. 8ம் ஏட்டின் பின்புறம் 'அகத்தீசர் பள்ளு' என்ற தலைப்பில் 1 பக்கம் எழுதப்பட்டுள்ளது. 8 ஆம் ஏட்டில், "217ல் மேகத்துக்கு அமுத சஞ்சீவி லேகியம் அட்டவணை முற்றும் நீடுழி கால வாழ்க குருவே துணை" என எழுதப்பட்டுள்ளது. இந்நூல், 9 ஆம் ஏட்டிலிருந்து 'ரச சுத்தி' என்ற தலைப்பில், 101 ஆம் பாடலிலிருந்து தொடங்குகிறது. இறுதி இரு ஏடுகளில் மருத்துவக் குறிப்புகள் உள்ளன.

அகத்தியர் வைத்தியம் 1500

I. 1. **970.** 2. அ. R. 7670. ஆ. T. R. 2963. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் 1500. ஆ. Akattiyar vaittiyam 1500. இ. அகத்தியர் வயித்திய 1500 யிது அறியவும். 4. — 5. —. 6. தம்பா பண்டிதர். 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. பாலக்காடு நெல்லிசேரி என்.சி. அனந்தநாராயண அய்யர் பேரன் என்.எஸ். நாராயணமூர்த்தி அய்யரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடி. 10. கி.பி. 1962-63.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 384. 5. 30x4 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 768; இரு பக்கமும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. இல்லை. 16. முழுமை. 17. 1507 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் ஏற்படும் பலவகை நோய்களுக்கு மருந்துகளும் அவை செய்முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 969 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக. குரு வாழ்க.

5. பா.......... ....
....ந்து முக்குணங் களாய
வாகடத் தொகுதி யெல்லாம்
வகுத்துச் சூத்திரம தாக்கி
ஆகம விதியி னூலாம்
யடர்ந்திடும் வியாதிக் கெல்லாம்
போக நல்மருந்து சொல்வோம்
புலத்தியா பொருந்தக் கேளே. 1

6. ஆமப்பா வாகடசூத் திரத்தை யெல்லா
யரைந்திட்டோ மிதிலொன்று யடக்க மில்லை
வேமப்பா நோயெல் லாம்படுந் தீய்ப்பதும்
வேறுள்ளனூ லெல்லாம் விபர மில்லை
சோமப்பா யிந்தநூல்(த்) துகையோ வென்றால்
சொல்லடங்கா ஆயிரத்தஞ்ஞூறுஞ் சொல்லும் வேதம்
நாமப்பா வுள்ளபடி சொல்லி வைத்தோம்
நாதாக்கள் கடாஷ்சத்தால்(ச்) சூத்திரந்தான் முற்றே. 1507

7. அகத்தியர் ஆயிரத்தி அஞ்ஞூறு வயித்தியம் சம்பூரணம்.

8. மூலம். 9. ர/ற வேறுபாடில்லாது ஏட்டில் எழுதப் பெற்றுள்ளது. 'ர்' வுக்குப் பதிலாக 'ற்' பயன்படுத்தியிருப்பதால், வாசிக்கும் பொழுது ர/ற மயக்கம் தெரியவில்லை. சான்றாக 'புலத்தியற' என எழுதப்பட்டுள்ளதிலிருந்து அச்சொல்லைப் 'புலத்தியா[ர்]' எனப் படிக்க முடிகிறது. அந்தாதியில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடபேதங்கள் மிகுதி. ஒற்று அதிக இடங்களில் மிகுந்துள்ளது. 10. 11. காவல்(ப்)பாடு சுப்பிரமணியர் பண்டிதர் மகன் தம்பா பண்டிதர்க்கு யெழுதி முகிந்தது முற்றும்.

IV. 1. D. 1896, D. 2351, R. 1077, R. 1198, R. 2253, R. 3676, R. 3686, R. 3694, R. 3733, R. 4495, R. 4418, R. 4736(c),

R. 5813, R. 6219, R. 6951, R. 7018, R. 8913, R. 8937, R. 9042. 2. த.ச.ம.எண் 301(h), த.ப.க.எண்கள் 740, 797, 1344, 1873, 2002, 2264, 2395. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500**, தாமரை நூலகம், சென்னை, 1992; இரா. மாதவன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500**, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1994. 3. இல்லை.

VI. சில வைத்திய நூல்கள் 'வாகட நூல்கள் எனவும் கொள்ளப்படும் என்பது இந்நூலின் இறுதிப் பாடலாலும் தெரிகிறது.

அகத்தியர் வைத்தியம் 1500

I. 1. **971.** 2. அ. R. 7018. ஆ. T. R. 2826. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் சூத்திரம் 508. ஆ. Akattiyar cūttiram 508. இ. அகஷ்த்தியர் அஞ்ஞூத்தி எட்டு. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. மதுரை மாவட்டம், கம்பம், கொம்மையக் கவுண்டன் பட்டி எம். பழநியப்ப முதலியாரிடமிருந்து வாங்கப்பட்ட சுவடி. 10. கி.பி. 1957-58.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. தெளிவு. 4. 66. 5. 32x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 132; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. இறுதியில் விடுபாடுள்ளது. 16. குறை. 17. 409 பாடல்கள்.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் ஏற்படும் பலவகை நோய்களுக்கு மருந்துகளும் அவை செய்முறைகளும் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 969 போன்றது.

4. ஹரிஓம் நன்றாக குரு வாழ்க. குருவே துணை.

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் வாழ்மலராள்
நோக்குண்டாமேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பாத திருமேனி தும்பிக்கையான் பாதந்
தப்பாமல்(ச்) சார்வார் தமக்கு.

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசன த்தி லரசருட னென்னைச்
சரியாசனத்தில் வைத்த தாய்.

5. **பாகுடன் கெணேசன் பாதம்**
பணிந்து முக்குணங்க ளாய
வாகடத் தொகுதி யெல்லாம்
வகுத்தொரு சூத்திர மாக்கி
ஆகம விதிநூ லாலே
அடைந்திடும் நோய்க ளெல்லாம்
போகவே மருந்து சொல்வோம்
புலத்தியா புகழ்ந்து கேளே. 1

6. **போமப்பா பாகுருணி நெல்மரக் களஞ்சிரண்டு**
பொதிந்தூட்டு செந்தூர நீரடைப்புத் தீரும்
வேமப்பா ஊர்(க்)குருவி முட்டைக் குள்ளே
விரைந்தூட்டு மாங்கிட்டி அடைப்பு வாங்கும்
நாமப்பா யிப்படியே நிசத்தைச் சொன்னோம்
நாலாயிரத்து னானூற்றி னாற்பத் தெட்டு
ஆமப்பா வியாதிக்கு மார்பி லாணி
யறிந்தவனே யருளோகி பண்டிதனு மாமே. 409

7. பண்டிதனு பறியாரி வயித்திய னென்றும்
பகருகிற மொழியெல்லாம் பழுதுக் காகுங்
தண்டிதமாய் முகம்பார்த்து நோயைப் பாத்துக்
காக்காதே தெளுந்தனாடியுட கலக்கம் பார்க்க
முண்டிருக்கு மூன்றுக்குள் நவதாது பார்த்து
முனைகண்டு மருந்தினுட முடுக்குங் கண்டு
அண்டி சளந்திரு மிர்த செந்தூர...........

8. மூலம். 9. பாடல்களில் பாட பேதங்கள் மிகுதி. பாடல்கள் அந்தாதி அமைப்பிலுள்ளன. பிழைகளும், ற/ர வேறு பாடின்மையும் வந்துள்ளன. பேச்சு வழக்குச் சொற்கள் பயின்றுள்ளன. 10. அகத்தியர் பெயரில் அமைந்த 508

பாடல்களைக் கொண்ட நூலாக இருந்தாலும் பாடல்களின் அமைதி நோக்கி இதுவும் 'அகத்தியர் வைத்தியம் 1500' எனக் கொள்ளப்பட்டது. ஒரு வேளை இது திரட்டு நூலாக இருக்கலாம். 11. இல்லை.

IV. 1. D. 1896, D. 2351, R. 1077, R. 1198, R. 2253, R. 3676, R. 3686, R. 3694, R. 3733, R. 4495, R. 4418, R. 4736(c), R. 5813, R. 6219, R. 6951, R. 7670, R. 8913, R. 8937, R. 9042. 2. த.ச.ம.எண் 301(h), த.ப.க.எண்கள் 740, 797, 1344, 1873, 2002, 2264, 2395. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500**, தாமரை நூலகம், சென்னை, 1992; இரா. மாதவன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500**, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1994. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டுடன் 'அகத்தியர் கர்ம காண்டம் 300' எனும் நூலும் உள்ளது.

அகத்தியர் வைத்தியம் 1500

I. 1. 972. 2. அ. R. 3686. ஆ. T. R. 1797. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்தியம் சூத்திரம். ஆ. Akattiyar vaittiyam cūttiram 1500. இ. —. 4. —. 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. வத்திராயிருப்பு சோதிடர் எஸ். மகாலிங்கம் பிள்ளை அன்பளிப்பாகக் கொடுத்த சுவடிக்கட்டு. 10. கி.பி. 1952-53.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 167. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிதைவு. 12. 234; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 முதல் 8 வரிகள். 14. விருத்தம். 15. முதலிலும் இறுதியிலும் ஏடுகள் விடு பட்டுள்ளன. 16. குறை. 17. 21ஆம் பாடல் முதல் தொடங்கி 1145 ஆம் பாடல் வரை உள்ளது.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் உளள நாடி வகைகள், அதில் ஏற்படும் நோய் வகைகள், அவற்றுக்கான மருந்து வகைகள் போன்ற பல செய்திகளைக் கூறும் நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 969 போன்றது.

4. —.

5. **நீட்டியே............ கிராணிவகை யாமே**
நின்றுபோ மின்னமொரு பணவிடை செந்தூரம்
காட்டியே.........ளர் கர்ணக் கிழங்க லத்திப் பொடியுங்
கடுஞ்சுக்குத் திப்பிலியின் பொடி..............
மூட்டியே வெருகடி யிற்றேன்ஞ் சேர்த்துண்ண
மூலவகை யென்பது..............
..போமே. 21

6. **இன்னமொரு கஷாயங்கேள் விஷபாக சுரத்துக்**
இயம்பிறே னீர்முள்ளி சிறுபூளை வேரும்
பின்னமில்லா லாமிச்சு மமுக்கிரா நன்னாரி
வேருங்குமிழவேர் சீந்தியொடு முன்னை பாதிரியும்
சன்னயில வங்கமொடு வீழ்குறுந் தொட்டி
தாமரையின் வளையமொடு நெரிஞ்சி முத்தக் காசு
நன்னயஞ்சேர் கறிமுள்ளி சிறுகாஞ் சோரி
நல்லசிற்றா மணக்கும்வேர்க்கற் றாளைஞ் சருகே. 1145

7. சருகுடனே மலைதாங்கி பற்படாகஞ்........
சாரணை வேர்த்தோடை வேர்கூவிளை வேரோடு
மருவு சித்தமல்லி வேர் போரமல்லி வாத்ததை மடக்கி.....

8. மூலம். 9. அந்தாதி அமைப்பில் பாடப்பெற்றுள்ளது. ற/ர, ழ/ள வேறுபாடில்லை. 10. இந்நூலை அகத்தியர் புலத்தியருக்குக் கூறியதாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. 11. இல்லை

IV. 1. D. 1896, D. 2351, R. 1077, R. 1198, R. 2253, R. 3676, R. 3694, R. 3733, R. 4495, R. 4418, R. 4736(c), R. 5813, R. 6219, R. 6951, R. 7018, R. 7670, R. 8913, R. 8937, R. 9042. 2. த.ச.ம.எண் 301(h), த.ப.க.எண்கள் 740, 797, 1344, 1873, 2002, 2264, 2395. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.) **அகத்தியர் வைத்திய காவியம் 1500**, தாமரை நூலகம், சென்னை, 1992;

இரா. மாதவன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500,** தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1994. 3. இல்லை.

VI. அகத்தியர் பேரில் பாடப்பெற்ற வைத்திய நூல் அதிக அளவில் கிடைப்பதிலிருந்து இந்நூற் கருத்துக்கள் அதிக அளவில் பயன்பாட்டிலுள்ளன எனத் தெரிகிறது. இந்நூலில் பல (மூலிகை) மருந்துச் செடிகளின் பெயர்கள் வந்துள்ளன.

அகத்தியர் வைத்தியம் 1500

I. 1. **973.** 2. அ. R. 3733. ஆ. T. R. 1819. இ. —. ஈ. —. 3. அ. அகத்தியர் வைத்திய சூத்திரம். ஆ. Akattiyar vaittiya cūttiram. இ. —. 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. வத்திராயிருப்பு சோதிடர் எஸ். மகாலிங்கம் பிள்ளை அன்பளிப்பாகக் கொடுத்த சுவடிக்கட்டு. 10. கி.பி. 1952-53.

II. அ. 1. தனிக்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 112. 5. 25x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. சிறு சிதைவு. 12. 224; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப் பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 8 வரிகள். 14. விருத்தம். 15. விடுபாடு தெரிய வில்லை. முதல் நான்கு பாடல்கள் இல்லை. இறுதிப் பகுதியை அறியவியலவில்லை. 16. குறை. 17. மொத்தப் பாடல்கள் அறியக்கூடவில்லை.

ஆ. —.

III. 1. மருத்துவம் தொடர்பாகவும், நாடிநிதானங்கள் பற்றியதாகவும், குணவாகடம் கூறுவனவாகவும், சுத்தி முறைகள் உரைப்பனவாகவும் உள்ள நூல். 2. மருத்துவம். 3. வரிசை எண் 969 போன்றது.

4. —.

5. கருவுண்டு காயமாய்த் திரண்ட வாறும்
கருவியதில் வளர்ந்தெடுந்த கருத்தின் வாறும்
உருத்திரண்டு கால்கையாய் வகுத்த வாறும்
உடம்புக்கு தசநரம்பு வுகுத்த வாறும்

திருவிருந்து மண்டபங்கள் சமைத்த வாறும்
சிறுபிள்ளையாய்ப் புவியில் பிறந்த வாரும்
அறிவறிந்த நாதாக்கள் பாதம் போற்றி
ஆதியிலே சாதிகுலம் உரைப்பே னாண்டே. 5

6. **சிதைவு.**

7. —.

8. மூலம். 9. ற/ர, ழ/ள வேறுபாடின்றி எழுதப்பட்டுள்ளது. பாடபேதங்கள் மிகுதி. 10. அகத்தியர் பெயரில் பாடப் பெற்றதாயினும், அங்கொன்று மிங்கொன்றுமாகப் பாடல்களைத் திரட்டி எழுதியிருப்பது போல் தெரிகிறது. 11. இல்லை.

IV. 1. D. 1896, D. 2351, R. 1077, R. 1198, R. 2253, R. 3676, R. 3686, R. 3694, R. 3733, R. 4495, R. 4418, R. 4736(c), R. 5813, R. 6219, R. 7018, R. 8913, R. 8937, R. 9042. 2. த.ச.ம.எண் 301(h), த.ப.க.எண்கள் 740, 797, 1344, 1873, 2002, 2264, 2395. 3. இல்லை.

V. 1. இல்லை. 2. எஸ்.பி. ராமச்சந்திரன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500,** தாமரை நூலகம், சென்னை, 1992; இரா. மாதவன் (பதி.), **அகத்தியர் வைத்திய காவியம் 1500,** தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1994. 3. இல்லை.

VI. இச்சுவடிக்கட்டில், பக்க எண்கள் இல்லாத காரணத்தால் பாடல் எண்கள் கொண்டே அறிய முடிகின்றது. ஆயினும் ஏடுகள் முறை மாறிக் கிடப்பதாலும், நூல் முழுமை யின்றி யிருப்பதாலும் மொத்தப் பாடல்களின் இயல்புகளை அறிய முடியவில்லை.

அகத்தியர் வைத்தியம் 1500

I. 1. **974.** 2. அ. R. 4736(c). ஆ. T. R. 2089. இ. —. ஈ. —. 3. அ. நாடி நிதானம். ஆ. Nāṭiniṭaṉam. இ. அகஷ்த்தியர்............ ஆயிரத்தஞ்ஞூறு. 4. — 5. —. 6. —. 7. —. 8. அ.கீ.சு.நூ., சென்னை-5. 9. திருச்சி மாவட்டம் கவரைப்பட்டி, எல். பரமசிவம் பிள்ளையிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடிக் கட்டு. 10. கி.பி. 1953-54.

II. அ. 1. உட்கட்டு. 2. தமிழ். 3. ஓரளவு தெளிவு. 4. 9. 5. 28x3 செ.மீ. 6. இரு துளைகள். 7. கயிறு. 8. மரக்கட்டை. 9. பனை ஓலை. 10. நரம்பில்லாதது. 11. ஓரங்கள் சிதைந்துள்ளன. 12. 18; இரு பக்கங்களிலும் முழுமையாக எழுதப்பட்டுள்ளது. 13. பக்கத்திற்கு 7 வரிகள். 14. விருத்தம். 15. பல ஓலைகள் விடுபட்டுள்ளன. 16. குறை. 17. 64 பாடல்கள் உள்ளன.

ஆ. —.

III. 1. மனித உடம்பில் தோன்றும் பலவகை நோய்களுக்கு மருந்துகளும், உடம்பில் ஓடும் பலவகை நாடிகளின் வகை தொடர்பான பிற செய்திகளும் இந்நூலில் கூறப்படுகின்றன. 2. மருத்துவம். 3. வரிசை எண் 969 போன்றது.

4. ஹரி ஓம் நன்றாக. குரு வாழ்க. குருவே துணை.

5. பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்து முக்குணங்க ளாய்ந்து
வாகடச் சுவடி யெல்லாம்
